T.A.R.C. 323
R.R. No. 331-1-11

Q6 DIGITIZED
N10
119458

# TWELVE SERMONS

BY

JOHN WESLEY

---

ஜான் உவெஸ்லி ஐயர்

செய்த

# பன்னிரண்டு பிரசங்கங்கள்

[stamp] 4 FEB 1910

THE CHRISTIAN LITERATURE SOCIETY
MADRAS, COLOMBO AND LONDON
1910

119958
Q6
M10

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS

# PREFACE.

JOHN WESLEY was born in 1703 and died in 1791, aged eighty-eight. He records that he attained saving faith on May the 24th, 1738, and from that day onward all his long life he travelled throughout England, Scotland, Wales, and Ireland 'doing the work of an evangelist.' But he was a theologian as well as a preacher, and in a series of one hundred and forty-one sermons he set forth the teaching of the Gospel of Christ. Several years ago twelve of these sermons were selected and published under the quaint title *The Marrow of Methodism.* They fully represent the teaching of one who based his most earnest exhortations to godly and ungodly alike on the sober and accurate exposition of Holy Scripture. There is nothing sectarian in them and it is remarkable how they touch our thoughts and lives to-day, though preached a century and-a-half ago. It is these twelve sermons that are translated into Tamil in this volume.

Wesley's English, without being pedantic or difficult to understand, is curiously involved, containing parenthesis within parenthesis. His constant use of scriptural quotations, sometimes from 'Cranmer's Bible', used in the Psalter of the *Book of Common Prayer*, sometimes from the Authorized Version and sometimes from the original; his frequent references to the Greek; and his habit of linking together passages of Scripture have also occasionally embarrassed the translators. But they trust that this translation presents Wesley's thought accurately and plainly.

Great care has been taken to insure this. Some years ago prizes were offered for the best translation of these sermons, and the first was awarded to Mr. P. Suviseshamuthu, of North Tinnevelly. Two other competitors also received prizes. But the judges did not accept any of the

three translations then sent in as final. The Rev. N. Devasagayam, B.A., prepared a rendering of the first sermon in this volume; but weakening eyesight prevented him from doing more. The work was afterwards put into the hands of the Rev. Solomon David and the Rev. A. C. Clayton by whom a final translation was made.

The numbering of the sections and paragraphs throughout corresponds to the English edition, but occasionally the paragraphs are broken up so that the argument may appear more clearly.

May this translation bring home Christ's Teaching more fully to the hearts of all who read it.

A. C. C.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
4 - FEB 1910
MADRAS.

# முகவுரை.

ஜான் உவெஸ்லி ஐயர் 1703-ம் ௵ பிறந்து 1791-ம் ௵ எண்பத்தெட்டு வயதுள்ளவராய் மரித்தார். தாம் குணப்பட்ட தினம் 1738-ம் ௵ மேமீ 24௳ என்று அவரே சொல்லியிருக்கிறார். அந்த நாள்முதல் தமது ஆயுசு காலமெல்லாம் இங்கிலாந்து ஸ்கொட்லாந்து உவேல்ஸ் ஐர்லாந்து என்னும் நாடுகளிலெல்லாம் திரிந்து சுவிசேஷ ஊழியத்தை விடா முயற்சியாய்ச் செய்துவந்தார்.

அவர் வாக்கு சாதுரிய பிரசங்கியா யிருந்ததுமல்லாமல், வேத சாஸ்திரத்தில் தேறினவராயும் இருந்தார். தாம் பிரசுரம்செய்த நூற்று நாற்பத்தொரு பிரசங்கங்களிலும் வேத சாஸ்திர உபதேசத்தைத் தெளிவாய்ப் போதித்திருக்கிறார்.

சில வருஷங்களுக்குமுன் இவைகளிலிருந்து பன்னிரண்டு பிரசங்கங்கள் பிரித்தெடுக்கப்பட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டன.

அப்புஸ்தகத்திற்கு The Marrow of Methodism என்று பெயர். அப்பிரசங்கங்களைக்கொண்டு விசுவாசிகள் அவிசுவாசிகள் ஆகிய எல்லாருடைய மனதிலும் வேத சத்தியத்தைப் பதிப்பதே உவெஸ்லி ஐயரின் பிரசங்க முறை என்பது யாவருக்கும் விளங்கும்.

அந்தப் பன்னிரண்டு பிரசங்கங்களும் இப்புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன.

இந்தப் பிரசங்கங்களில் உவெஸ்லி ஐயர் தமது சொந்த வார்த்தைகளுடன் வேத வாக்கியங்களை அடிக்கடி இணைத்திருப்பதினாலும், கிரேக்க பதங்களைப் பல விடங்களிலும் உரைத்திருப்பதினாலும், ஒரு வேத வசனத்தோடு இன்னொரு வேத வசனத்தைச் சேர்த்திருப்பதினாலும், இவைகளைத் தமிழில் மொழிபெயர்ப்பது எளிதன்று.

சில வருஷங்களுக்குமுன் தமிழில் இப்பிரசங்கங்களை மொழிபெயர்ப்பவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்று செய்த ஏற்பாட்டின் பிரகாரம் மூன்று பேர் இவைகளை மொழிபெயர்த்தார்கள். இவர்களில் கனம்: P. சுவிசேஷமுத்து உபாத்தியாயருக்கு முதல் வெகுமதி கொடுக்கப்பட்டது. இந்த மூன்று மொழிபெயர்ப்புகளையும் துணையாகக்கொண்டு, பிரசுரஞ் செய்

வதற்குத் தகுதியான ஒரு மொழிபெயர்ப்பு உண்டாக்கும்படி பிரசங்க விசாரணைக் கர்த்தாக்கள் கேட்டுக்கொண்டதின்படி சென்னை சங்: N. தேவ சகாயம், B.A. முதலாம் பிரசங்கத்தை மொழிபெயர்த்து முடித்தார். ஆனால் தமது கண் பலவீனத்தினால் மற்றப் பிரசங்கங்களை ஆரம்பிக்கவில்லை. சங்: S. டேவிட் ஐயரும், சங்: A. C. கிலேத்தன் ஐயரும் இவ்வேலையை முடித்திருக்கிறார்கள்.

அவர்கள் உவெஸ்லி ஐயரின் தாற்பரியத்தைத் துலாம்பரமாய்க் காட்டும் பொருட்டுச் சில பிரசங்கங்களின் உட் பிரிவுகளை (paragraphs) வகுத்துக் கொண்டபோதிலும், இங்கிலிஷ் புஸ்தகத்திலுள்ள பிரிவுகளுக்குரிய எண்களை மாற்றவில்லை.

விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைகொள்ளவும், அவிசுவாசிகள் இரக்ஷணிய வழியை யடையவும், கருணைநிறைந்த ஆண்டவர் இப்பிரசங்கங்களை ஆசீர்வதிப்பாராக.

A. C. C.

# பொருள் அட்டவணை.

OFFICE OF THE REGISTRAR ... 9 - FEB 1910

பக்கம்.

1. விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு.—Salvation by Faith... 1

'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.' எபே. 2: 8.

2. விசுவாசத்தினாலாகும் நீதி.—The Righteousness of Faith... 21

'மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக்குறித்து: இவைகளைச் செய்கிற மனிதன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான். விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப் பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறதென்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.' ரோம. 10: 5–8.

3. தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் வழி. — The Way into the Kingdom of God ... ... ... 42

'தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.' மாற். 1: 15.

4. ஆவியின் முதற் பலன்கள்.—The First Fruits of the Spirit... 60

'ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.' ரோம. 8: 1.

5. அடிமைத்தனத்தின் ஆவியும், புத்திரசுவிகாரத்தின் ஆவியும்.—The Spirit of Bondage and Adoption ... ... 80

'அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.' ரோம. 8: 15.

6. ஆவியானவரின் சாட்சி. (1–ம் பாகம்.)—The Witness of the Spirit—I ... ... ... ... ... ... 106

'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.' ரோம. 8: 16.

7. ஆவியானவரின் சாட்சி. (2–ம் பாகம்.)—The Witness of the Spirit—II ... ... ... ... ... 127

'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.' ரோம. 8: 16.

பக்கம்.

8. விசுவாசிகளினிடத்திலுள்ள பாவம்.—On Sin in Believers... 150

'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்.' 2 கொரி. 5: 17.

9. விசுவாசிகளின் மனந்திரும்புதல். — The Repentance of Believers ... ... ... ... ... 174

'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.' மாற். 1: 15.

10. நமதாண்டவர் செய்த மலைப்பிரசங்கம். (2—ம் பாகம்.)—Upon Our Lord's Sermon on the Mount—II ... ... 201

'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.' (மத். 5: 5–7.)

11. நியாயப்பிரமாணம்: அதின் உற்பத்தி, தன்மை, லட்சணம், உபயோகம். — The Original, Nature, Pfoperty and Use of the Law ... ... ... ... ... 229

'ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.' ரோம. 7: 12.

12. சாத்தானின் தந்திரங்கள்.—Satan's Dovices ... ... 254

'அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.' 2 கொரி. 2: 11.

REGISTERED 9 FEB 1910 MADRAS

# முதலாம் பிரசங்கம்.

## SALVATION BY FAITH.

## விசுவாசத்தினால் வரும் இரக்ஷிப்பு.

ஆக்ஸ்போர்டு கலாசாலையார் முன்பாக 1738—ஆ ஜூன்மீ 18—உ செய்த பிரசங்கம்.

'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரக்ஷிக்கப்பட்டீர்கள்.'
எபே. 2: 8.

தேவன் மனுஷனுக்குச் செய்த சர்வ நன்மைகளும் சுத்த கிருபையினாலும் தயவினாலும் அருளினவைகளே. அவைகளைப் பெற்றுக்கொள்ள அவனுக்கு எவ்வித யோக்கியமுமில்லை. அவனுக்குத் தேவன் தருகிற அற்ப நன்மைக்குப் பாத்தியமில்லை. அவர் மனுஷனை மண்ணினாலே உருவாக்கினதும், அவனுக்குள் ஜீவாத்துமாவை ஊதினதும் அவருடைய சுத்தக் கிருபையே சகலத்தையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினதும் தேவனுடைய சுத்தக் கிருபையே தவிர வேறென்ன? இற்றைநாள்வரையில் ஜீவனும், சுவாசமும், மற்ற எல்லா நன்மைகளும் நமக்கு இடையறாமல் கிடைத்துக்கொண்டிருப்பதும் அந்தச் சுத்தக் கிருபையினாலேயேயொழிய வேறல்ல. தேவனுடைய கரத்திலிருக்கிற சிறிய நன்மையையாவது உரிமை பாராட்டிக் கேட்பதற்கு நாமும் ஒன்றும் இல்லை, நம்மிலும் ஒன்றும் இல்லை, நாம் செய்த கிரியையிலும் ஒன்றும்

இல்லை. 'கர்த்தாவே, எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்திவருகிறவர் நீரே' என்று வேதவசனம் சொல்லுகிறது. ஆகவே நம் புண்ணியங்களுங்கூட தேவன் நமக்கு இலவசமாய் அருளின நன்மைகளுள் அடங்கும். மானிடனிடத்திலுள்ள புண்ணியங்கள் அடங்கலும் ஒன்றும் தப்பாமல் தேவன் அவனுக்குக் கொடுத்த பிச்சா தானமே.

2. பாவியானவன் தான் செய்யும் எல்லாப் புண்ணியங்களாலும் சிறிய பாவத்திற்காகிலும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள ஏது உண்டா? அவன் தன் புண்ணியங்களினால் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளலாம் என்போமா? அது கூடாது. அவைகள் எத்தனை மிகுதியும் தூய்மையும் உடையனவாய் இருந்தாலும் அவை அவனுடையவையல்லவே. அவைகளெல்லாம் தேவனுடையவைகள். அவன் செய்திருக்கிற புண்ணியங்களைச் சோதித்துப் பார்க்கப்போனால் அவையெல்லாம் அசுத்தமும் பாவமும் நிரம்பியிருக்கக் காண்போம். அவை ஒவ்வொன்றும் பிராயச்சித்தம் பெறவேண்டிய கிரியைகளாகுமேயொழிய வேறல்ல. கெட்டமரத்திலிருந்து கெட்ட கனிகளே பிறக்கும்; அவனுடைய உள்ளம் சமூலம் கெட்டு அருவருப்பாயிருக்கிறது. ஏனெனில் ஆதியில் அவனுடைய ஆத்துமாவின் மேல் மகிமையான புண்ணிய சொரூபம் பதிப்பிக்கப்பட்டிருந்தது, இந்தத் தேவ மகிமையை அவன் இழந்திருக்கிறான். ஆதலால் அவன் தனக்கு ஆதாரமாகக் காட்டக்கூடிய திவ்விய தன்மையும் அவனுக்கு இல்லை. இதினிமித்தம் அவன் தேவ சந்நிதியில் வாயடைபட்டவனாய் நிற்கவேண்டும்.

3. அப்படியிருக்கப் பாவிமேல் தேவன் தயவு வைத்தால் அது 'கிருபையின்மேல் கிருபை.' புதுப்புது நன்மைகளையும், நன்மைகளிலெல்லாம் பெரிதாகிய இரக்ஷிப்பையும் நம்மேல் மழைபோல் சொரிவேன் என்று தேவன் நமக்கு உறுதிமொழி சொன்னால் அதைக்குறித்து: 'தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்' என்று மாத்திரமேதவிர நாம் வேறென்ன சொல்லக்கூடும்? அதுதான் சரி. நாம் பாவிகளாயிருக்கும்போதே கிறிஸ்து நம்மை இரக்ஷிக்கும்பொருட்டு நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் அன்புடையவர் என்பதை ரூபிக்கிறார். ஆகையால் 'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரக்ஷிக்கப்பட்டீர்கள்' என்பது மெய்யே மெய். நம் இரக்ஷிப்பு ஊற்றாகிய கிருபை; அது நமக்கு வழிகிற வாய்க்காலாகிய விசுவாசம்.



தேவனுடைய கிருபை நமக்குத் தப்பாமல் கிடைக்கும்படிக்கு நாம் பின்வரும் விஷயங்களைக் கூர்ந்து கவனித்துக்கொள்ளவேண்டும்:—

I. நம்முடைய இரக்ஷிப்புக்குக் கருவியாய் உதவுகிற விசுவாசத்தின் தன்மை என்ன?

II. விசுவாசத்தினால் வரும் இரக்ஷிப்பின் தன்மை என்ன?

III. சில ஆக்ஷேபங்களுக்கு எவ்வாறு உத்தரம் சொல்லலாம்?

## I. நம்முடைய இரக்ஷிப்புக்குக் கருவியாய் உதவுகிற விசுவாசத்தின் தன்மை என்ன?

1. அது புறமதஸ்தரின் விசுவாசமல்ல. 'தேவன் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும்' விசுவாசிக்கிற கடமை புறமதஸ்தருக்கும் உண்டு. அவரைத் தேவனாக மகிமைப்படுத்துவதினாலும், தான் அனுபவிக்கிற சகல நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துவதினாலும், தன்னோடொத்த மானிட சிருஷ்டிகளுக்கு நீதிதவறாமை, இரக்கமுடைமை, சொல்லுண்மை முதலிய கடமைகளைச் செய்வதினாலும் ஒவ்வொருவனும் தம்மைத் தேடவேண்டும் என்று தேவன் கற்பிக்கிறார். ஆதலால் புறமதஸ்தன் கிரேக்கனோ, ரோமனோ, இந்தியனோ யாராயிருந்தாலுஞ் சரி, அவன் தேவன் இருக்கிறதையும், அவருக்குள்ள தேவ இலட்சணங்களையும் தான் இம்மையில் செய்த பாவபுண்ணியங்களுக்குத் தக்க சுகதுக்கங்களை அனுபவிக்கவேண்டிய மறுமையையும், தரும ஜீவியம் செய்வது தன் கடமை என்பதையும் அறிந்து விசுவாசியாயிருந்தால், அதற்காக அவனை ஆக்கினையிடுகிற தேவனுக்குமுன் சொல்லிக்கொள்ளத்தக்க நியாயமே அவனுக்கில்லை. இது புறமதஸ்தனுக்கும் இருக்கவேண்டிய விசுவாசம்.

2. இரண்டாவது, அது பிசாசானவனுக்கு இருக்கிற மாதிரியான விசுவாசமல்ல. பிசாசின் விசுவாசம் புறமதஸ்தரின் விசுவாசத்தைவிட இன்னும் சற்று விசாலமுள்ளது. ஏனெனில், பிசாசானவன் புற

மதஸ்தர் விசுவாசிக்கிறதுபோல ஞானமும் வல்லமையுமுள்ள கடவுள் நல்லோருக்குக் கைம்மாறு அளிக்கிற கிருபையுள்ளவரும், தீயோருக்கு ஆக்கினை விதிக்கிற நீதியுள்ளவருமாய் இருக்கிறார் என்பதும் அல்லாமல், இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்பதையும், அவரே உலக இரக்ஷகர் என்பதையும் விசுவாசிக்கிறான். இப்படி அவரை வெளிப்படையாய் வாய்விட்டுப் பிரஸ்தாபிக்கிறான் (லூக். 4: 34.). 'உம்மை இன்னாரென்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்.' அந்தப் பரிசுத்தருடைய திருவாயிலிருந்து பிறந்த சகல வார்த்தைகளையும் அந்த நிர்ப்பாக்கியமுள்ள ஆவியானவன் விசுவாசிக்கிறான் என்பதற்குச் சந்தேகமில்லை; அதுவும்தவிர, பூர்வகாலத்துப் பரிசுத்த மனுஷரால் எழுதப்பட்டிருக்கிற எல்லாவற்றையுங்கூட அவன் விசுவாசிக்கிறான். அவர்களில் இரண்டுபேரைக் குறித்து, 'இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரக்ஷிப்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறவர்கள்' என்கிற மாட்சிமையான சாக்ஷி சொல்ல அவன் உள்ளமே அவனைக் கட்டாயம் பண்ணிற்று. ஆகவே, 'தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார்;' அவர் 'எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடுவார்;' 'வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது' என்கிற இவ்வளவு சத்தியத்தையும் அந்தத் தேவ விரோதியும் மானிட விரோதியுமானவன் நம்புவதும்தவிர, நம்பி நடுங்கிக்கொண்டும் இருக்கிறான்.

3. மூன்றாவது, இரக்ஷிக்கிற விசுவாசம் கிறிஸ்து பூமியில் வாசம் செய்த காலத்தில் அப்போஸ்தலருக்கிருந்த மாதிரியான விசுவாசமுமல்ல. எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றக்கூடிய விசுவாசம் அவர்களுக்கு அப்போது இருந்தது. அற்புதங்களைச் செய்யவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அப்போது வல்லமையிருந்தது. மேலும் சகல பிசாசுகள்பேரிலும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. இதெல்லாந்தவிர 'தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கும்படி' அவர்களுடைய ஆண்டவர்தாமே அவர்களை அனுப்பியிருந்தார்; ஆயினும் அவர்களுக்கு அப்போதிருந்த விசுவாசம் இனி நாம் விளக்கப்போகிற இரக்ஷிக்கிற விசுவாசமல்ல.



4. அப்படியானால், இரக்ஷிக்கிற விசுவாசத்தின் தன்மை என்ன? அது கிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசம் என்று பொதுப்பட முதலில் சொல்லலாம். அது கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனையும் நேரே இயல்பாய்ப் பற்றுகிறது. இதிலேதான் அதற்கும் பூர்வத்தாரும் தற்காலத்தாருமாகிய புறமதஸ்தர்களுடைய விசுவாசத்திற்கும் போதுமான வித்தியாசம் தீர்க்கமாய் எற்படுகிறது. அது பிசாசின் விசுவாசத்திற்கு முற்றும் வேறுபடுவது எவ்வாறெனில்: பிசாசின் விசுவாசத்தைப்போல் அது புத்தி வல்லமையால் நியாய இசைவுடன் அனுமானிக்கப்படுகிற விஷயமாயாவது, சங்கதி நடந்தது உண்மைதான் என்று மனதினால் ஒத்துக்கொள்ளுகிற கொள்கையாயாவது, மனதில் எழும்புகிற பொருத்தமுள்ள நினைவுத்தொடராயாவது இராமல், இருதயத்தினால் விரும்பி அங்கீகரிக்கிற அங்கீகரிப்பாயிருக்கிறது. வேதமும் இப்படியே சொல்லுகிறது: 'நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும்.' 'கர்த்தராகிய இயேசுவை உன் வாயினால் அறிக்கையிட்டுத் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரக்ஷிக்கப்படுவாய்.'

5. இரக்ஷிக்கிற விசுவாசத்திற்கும் நம் ஆண்டவர் புவிவாசியாயிருந்தபோது அப்போஸ்தலருக்கு இருந்த விசுவாசத்திற்கும் வித்தியாசம் எதினாலே என்றால்: இரக்ஷிக்கிற விசுவாசம் ஆண்டவர் மரிக்கவேண்டியது அவசியமே என்றும், அவருடைய மரணத்திற்கு இரக்ஷிக்கிற புண்ணிய வல்லமையுண்டு என்றும், அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் அவ்வாறே வல்லமையுண்டு என்றும் நம்புவது. இரக்ஷிக்கிற விசுவாசமானது மானிடனை நித்திய மரணத்திலிருந்து மீட்டுவிடுவதற்கு ஆண்டவருடைய மரணம் போதுமான தனிச்சாதனம் என்றும், நாமெல்லாரும் இழந்துவிட்ட ஜீவனையும் அழியாமையையும் திரும்பச் சம்பாதித்துக் கொடுப்பது அவருடைய உயிர்த்தெழுதலே என்றும் அறிந்து ஒத்துக்கொள்ளுகிறது. ஏனென்றால் அவர் 'நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டுமிருக்கிறார்.' ஆகவே கிறிஸ்தவ விசுவாசம் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி உண்மைதான் என்று மனதினால் ஒத்துக்கொள்ளுதலும் அல்லாமல், கிறிஸ்துவின் இரத்தத்திற்கு

இருக்கிற வல்லமையை உள்ளத்தினால் உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுதலாயு மிருக்கிறது. அது கிறிஸ்துவின் ஜீவியம், மரணம், உயிர்த்தெழுதல் இவற்றின்மேல் ஊன்றி நின்று, அவைகள் நமக்காகச் செய்யப்பட்ட நம் பிராயச்சித்தமென்றும், கிறிஸ்து நமக்குள்ளே வாசஞ்செய்கிற நம் ஜீவனாயிருக்கிறார் என்றும் நம்பி அவரைச் சார்ந்துகொள்ளுகிறது. இதினிமித்தம் அது அவரையே நம் 'ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமாக,' அதாவது, அவரையே நம் இரக்ஷிப்பாக உறுதிப்பிடியாய்ப் பிடித்து அணைத்துக்கொள்ளுகிறது.

## II. விசுவாசத்தினால் வரும் இரக்ஷிப்பின் நன்மை என்ன?

1. இரக்ஷிப்பு என்பதற்கு வேறென்ன அர்த்தம் இருந்தாலும் எல்லாவற்றிற்கு முந்தி அதற்கு இந்த அர்த்தமுண்டு எந்த அர்த்தமென்றால், அது இப்போதே கிடைக்கிற இரக்ஷிப்பு. இரக்ஷிக்கிற விசுவாசத்தை உள்ளத்தில் உடையவர்கள் இரக்ஷிப்பைப் பூவுலகிலேயே அடையக்கூடும், உண்மையாக அடைந்து மிருக்கிறார்கள். ஏனெனில், அப்போஸ்தலன் எபேசுவிலிருந்த விசுவாசிகளுக்கும் அவர்கள் மூலமாய் சகலகாலத்து விசுவாசிகளுக்கும் இப்படியே சொல்லுகிறான்: 'விசுவாசத்தைக்கொண்டு இரக்ஷிக்கப்பட்டீர்கள்.' நீங்கள் இரக்ஷிக்கப்பட்டீர்கள் என்றே தவிர **இரக்ஷிக்கப்படுவீர்கள்** என்று அவன் சொல்லவில்லை. (ஆயினும், இரக்ஷிக்கப்படுவீர்கள் என்பதிலும் உண்மை யிருக்கிறது.)

2. எல்லாவற்றையும் ஒரு சொல்லில் அடக்கிச் சொன்னால், **பாவத்திலிருந்து நீங்கள் இரக்ஷிக்கப்பட்டிருக்கிறீர்கள்.** இதுவே விசுவாசத்தினால் கிடைக்கும் இரக்ஷிப்பு. தேவன் தமது முதற்பேறானவரைப் பூவுலகில் கொண்டுவருமுன் தேவதூதன் மூலமாய் முன்னறிவித்தது இந்த மகா இரக்ஷிப்பே:—'அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரக்ஷிப்பார்.' இந்தச் சுருதி மொழியிலாவது, திருவசனத்தின் வேறிடங்களிலாவது இரக்ஷிப்பு இவ்வளவே செல்லும் என்று அளவுவரையறையும், இன்னாருக்கே செல்லுமென்று ஆள் வரையறையும் கூறப்படுகிறதில்லை. அவர் தம் சனங்கள் யாவரையும் இரக்ஷிப்பார், அல்லது, வேறோரிடத்தில் சொல்லியிருக்கிறபடி,



'அவரை விசுவாசிக்கிற **எல்லாரையும்**' அவர்களுடைய **எல்லாப் பாவங்களிலு**மிருந்து இரக்ஷிப்பார். அவர்களுடைய மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான ஜென்ம பாவத்திலிருந்தும் கர்ம பாவத்திலிருந்தும், முற்காலப் பாவத்திலிருந்தும், சற்காலப் பாவத்திலிருந்தும் அவர்களை இரக்ஷிப்பார். அவர்கள் அவர்மேல் வைக்கிற விசுவாசத்தினால் தங்களைப் பிடித்த பாவத்தின் குற்றத்திலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுதலையடைவார்கள்.

3. முதலாவது, சகல முற்காலப் பாவத்தினாலும் வந்த குற்றத்திலிருந்து அவர்கள் இரக்ஷிக்கப்படுகிறார்கள். ஏனெனில், மானிடர் செய்யும் பாவங்களைத் தேவன் இரக்கமில்லாமல் தண்டிக்கப் புகுந்தால் அதற்குத் தப்பக்கூடியவன் எவனும் இல்லை. இப்படிச் சொல்லத்தக்கவிதமாய் சர்வ உலகமும் அவருக்குமுன் குற்றமுள்ளதாயிருக்கிறது. மேலும் பாவத்தையறிகிற அறிவுமாத்திரமேதவிர அதிலிருந்து விடுதலை நியாயப்பிரமாணத்தினால் வராது. ஆகையால் 'எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.' இதினிமித்தம் 'இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே புலிக்கும் தேவநீதி விசுவாசிக்கிற யாவருக்கும் வெளியாக்கப்பட்டிருக்கிறது.' 'அவர்கள் இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.' 'தேவன் முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகக் கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.' ஆகையால், இப்பொழுது 'கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்தை' நிவிர்த்தி செய்திருக்கிறார். அவர் 'நமக்கு விரோதமாக இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, தம் சிலுவையின்மேல் ஆணியடித்துவிட்டார்' (கொலோ. 2: 14.). ஆதலால், 'கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு இப்பொழுது ஆக்கினைத் தீர்ப்பில்லை.'

4. அவர்கள் குற்றத்திலிருந்து நீங்கியிருக்கிறதினாலே, பயத்திலிருந்தும் நீங்கியிருக்கிறார்கள். தேவனை விசனப்படுத்தலாகாது என்று

அவர்கள் உள்ளத்திலிருக்கிற பிள்ளைக்குரிய பயத்திலிருந்தல்ல, பின்னே எந்தப் பயத்திலிருந்து என்றால்: அடிமைத்தனத்துக்குரிய சர்வ பயத்திலுமிருந்து; எந்தப் பயம் வேதனையுள்ளதோ அந்தப் பயத்தினால் தண்டனை வருமே என்று நடுங்குகிற பயத்திலிருந்து, தேவனுடைய கோபம் வருமே என்று கலங்குகிற பயத்திலிருந்து நீங்கியிருக்கிறார்கள். அவரை இனி அவர்கள் வன்னெஞ்சமுள்ள எஜமானைப்போல் அல்ல, அன்பு நிறைந்த பிதாவைப்போல் நினைப்பார்கள். 'திரும்பவும் பயப்படுகிறதற்கு அவர்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றார்கள் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் என்று ஆவியானவர் தாமே அவர்களுடைய ஆவியுடனே கூடச் சாக்ஷி கொடுக்கிறார்' (ரோ. 8: 15.). மேலும் தேவனுடைய கிருபையை இழந்துபோவதும் அவர் அருளியிருக்கிற அரிய பெரிய வாக்குகள் தங்களுக்குப் பலிக்காதிருப்பதுமாகிய மோசம் சம்பவிக்கக்கூடியதேயானாலும், அது தங்களுக்குச் சம்பவிக்கும் என்கிற பயத்திலிருந்து அவர்கள் இரக்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறார்கள்' தேவன் கொடுக்கப்போகிற மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையினாலே அவர்கள் மேன்மை பாராட்டுகிறார்கள். மேலும் அவர்களுக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு அவர்களுடைய இருதயங்களில் மழைபோல் பொழிந்திருக்கிறது. அதினாலே அவர்களுக்குள் ஒரு நிச்சயம் வந்திருக்கிறது. அந்த நிச்சயம் அவர்களுக்குள் எல்லாக் காலத்திலும் ஒரு தன்மையாய்க் குறையாமல் நிறைந்திருக்குமென்று சொல்லக்கூடாதாயினும் அது அவர்களுக்குள் இருக்கவே இருக்கும். எந்த நிச்சயமென்றால் 'மரணமானாலும் ஜீவனானாலும், நிகழ் காரியங்களானாலும் வருங் காரியங்களானாலும், உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானாலும் கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு அவர்களைப் பிரிக்கமாட்டாது' என்கிற நிச்சயம்.

5. மேலும் பாவத்தினால் வந்த குற்றத்திலிருந்து எப்படியோ அப்படியே பாவத்திற்கு இருக்கிற வல்லமையிலிருந்தும் அவர்கள்



இரக்ஷிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படியே அப்போஸ்தலனும் நமக்கு அறிவிக்கிறான். 'அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் என்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவம் இல்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை' (1 யோவா. 3: 5, 6.). இன்னொரு முறையும் அப்படியே சொல்லுகிறான். 'பிள்ளைகளே, நீங்கள் வஞ்சிக்கப்படாதிருங்கள். பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். விசுவாசிக்கிறவன் தேவனால் பிறந்திருக்கிறான். தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்.' வேறொரு தடவையிலும் அப்படியே தெரிவிக்கிறான். 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.' (1 யோவா. 5: 18.)

6. விசுவாசத்தினாலே தேவனால் பிறந்தவன் (1) பழக்கத்தினால் இயற்கையாகி நடைபெறுகிற பாவஞ் செய்யான; ஏனெனில் பழக்கத்தினால் ஒருவனுக்கு இயற்கையாய்ப் போன பாவமே அவனையாளுகிற பாவம். விசுவாசியையோ ஒரு பாவமும் ஆளாது. (2) மனோரதமான பாவஞ் செய்யான். ஏனெனில், அவன் விசுவாசத்தில் நிலைத்திருக்கிற காலமெல்லாம் அவனுடைய மனது பாவத்தை முழுப்பகையாய்ப் பகைத்து அதைக் கொடிய விஷமென்று அருவருக்கிறது. (3) ஆசாபாசங்களால் பாவஞ் செய்யான். ஏனெனில் அவனுடைய ஆசாபாசங்களெல்லாம் இடையறாமல் தேவனுடைய பரிசுத்தமும் உத்தமமுமான சித்தத்திலேயே நாட்டம் வைத்திருக்கும். அவன் தன்னுள் அசுத்த ஆசைக்கு ஏதேனும் இணக்கத்தைக் கண்டால் தேவசகாயத்தால் அது பிறக்கும்போதே அதைக் கொன்றுவிடுவான். (4) மனம் வாக்கு காயம் என்னும் திரிகரண சம்பந்தமான பலவீனங்களால் பாவஞ் செய்யான். ஏனெனில் அவனுடைய பலவீனங்களுக்கு அவனுடைய சித்தம் சம்மதிக்கவே சம்மதிக்காது. சித்த சம்மதம் பெறாத பலவீனங்களைப் பாவம் என்று சொல்வது சரியாகாது. இவ்வாறு 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்.' நான் பாவஞ் செய்ததில்லை என்று அவன் சொல்லக்கூடாதாயினும் இனி 'அவன் பாவஞ் செய்யான்.'

**7.** பூவுலகிலேயே ஒருவன் அடைந்துகொள்ளக்கூடியதும் விசுவாசத்தினால் அவனுக்குக் கிடைக்கிறதுமான இரக்ஷிப்பு அதுதான். அது பாவத்திலிருந்தும், அதினால் விளைந்த சாபத்திலிருந்தும் ஒருவன் அடைந்துகொள்ளுகிற விடுதலை. விசுவாசி பெற்றுக்கொள்ளுகிற இந்த இரண்டு வரங்கள் நீதிமானாக்குதல் என்கிற ஒரே சொல்லால் வழக்கமாய் சொல்லப்படும். கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைக்கிறவன் அவருடைய பிராயச்சித்தத்தை வாஸ்தவமாகவே பிரயோகஞ்செய்து அதினால் தன் குற்றத்திலிருந்தும் அதின் தண்டனையிலிருந்தும் கரையேறுவதும், தன் ஆத்துமாவில் உருவாக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துமூலமாய்ப் பாவத்தின் வல்லமையிலிருந்து மீட்பு அடைவதும் ஆகிய இவ்விரண்டுமே நீதிமானாக்குதல் என்பதற்குள்ள விரிவான அர்த்தம். இப்படி நீதிமானாக்கப்பட்டவனே, அதாவது, இப்படி விசுவாசத்தினால் இரக்ஷிக்கப்பட்டவனே மெய்யாய் புதிதாய்ப் பிறந்தவன். அவன் தான் 'தேவனுக்குள் கிறிஸ்துவுடனே மறைந்திருக்கிற' புதிய ஜீவனுக்கு ஆவியினால் **மறுபடியும் பிறந்தவன்.** அவன் புதிதாய்ப் பிறந்த குழந்தையைப்போல 'திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை வாஞ்சையாய் ஏற்று அதினால் வளருவான்.' அதனால் அவன் தன் தேவனாகிய ஆண்டவருடைய வல்லமையைக்கொண்டு விசுவாசத்தின்மேல் விசுவாசத்திற்கும், கிருபையின்மேல் கிருபைக்கும் அடிவைத்து ஏறி, கடைசியாய் 'கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷனாவான்.'

## III. சில ஆக்ஷேபங்களுக்கு எவ்வாறு உத்தரம் சொல்லலாம்.

1. 'விசுவாசத்தினாலேமாத்திரம் இரக்ஷிப்பு, அதாவது, நீதிமானாக்குதல் ஒருவனுக்குக் கிடைக்குமென்று உபதேசிப்பது பரிசுத்த ஜீவியம், நற்கிரியைகள், இவற்றிற்கு இடையூறுவரப் போதிப்பதற்குச் சரி ஆகாதோ?' இதற்குப் பின்வரும் சுருக்கமான உத்தரம் சொல்வதே போதும்: 'சிலர் போதிக்கிறதுபோல, நாமும் இவற்றை நீதிமானாக்குதலில் அடக்காமல் அதற்கு வேறான விசுவாசத்தைப்பற்றிப் பேசினால்மாத்திரம் அப்படி ஆக்ஷேபிப்பது தகும்: நாமோ அப்படிப்பட்ட விசுவாசத்தைப்பற்றிப் போதிக்கிறதில்லை. நாம் போதிக்கிறது சகல



விதமான பரிசுத்த ஜீவியத்தையும் சகலவிதமான நற்கிரியைகளையும் **உற்பத்தி செய்கிற விசுவாசம்.'**

**3.** இந்த ஆக்ஷேபனையை இன்னும் விரிவாய்ப் பார்ப்பது பிரயோசனமாயிருக்கும். ஏனெனில், அது புது ஆக்ஷேபம் அல்ல. பவுல் காலத்திலேயே முளைத்த பழைய ஆக்ஷேபம். 'விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோம் அல்லவா?' என்று அக்காலத்திலேயே ஆக்ஷேபித்தார்கள். நாம் சொல்லும் உத்தரம் வருமாறு: — முதலாவது, யார் யார் விசுவாசத்தைப் பிரசங்கியாமல் அடக்கி வைக்கிறார்களோ அவர்களே பிரத்தியக்ஷமாய் நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறார்கள். அல்லது அவர்கள் தாங்கள் சொல்லுகிற வியாக்கியானத்தினால் நியாயப்பிரமாணத்திற்குள் தேவன் குறித்த விசாலமான அர்த்தம் சமூலமும் கெட்டுப்போகும்படி செய்கிறார்கள். அல்லது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றக் கூடுவதற்கு ஒரே சாதனமாகிய விசுவாசத்தை ஜனங்களுக்கு உபதேசிக்காமையால் நியாயப்பிரமாணத்தை அவமானம் செய்கிறார்கள். இரண்டாவது, (அவர்கள் நம்மேல் சொல்லுகிறதற்கு எதிர்மாறாய்) நாம் நியாயப்பிரமாணத்திற்கு இருக்கிற அதிவிரிவானதும் ஆவிக்குரியதுமான அர்த்தத்தைச் சகலருக்கும் விளங்கவைக்கிறதுந்தவிர எல்லாரையும் பார்த்து 'நியாயப்பிரமாணத்தின் நீதியை உங்களிடத்தில் நிறைவேறச்செய்கிற' ஜீவனை வழிக்கு வாருங்கள் என்று அழைத்துக்கொண்டுமிருக்கிறோம். இதனால் 'நாம் நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே.' ஆதலால், நாம் சொல்லுகிற மாதிரியான விசுவாசிகள் இரக்ஷிப்புக்காக கிறிஸ்துவின் இரத்தத்தைமாத்திரமே நம்புவார்கள். ஆயினும், அவர்கள் அவர் நியமித்திருக்கிற சகல முறைமைகளையும் கைக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்பார்கள்; 'அவர்கள் நடக்கும்படி அவர் முன்னதாக ஆயத்தம்பண்ணியிருக்கிற சகல நற்கிரியைகளையும்' செய்யத் தவறமாட்டார்கள். அவர்கள் பரிசுத்தம் பொருந்திய பரலோக வாசனை வீசிக்கொண்டு கிறிஸ்து இயேசுவில் இருந்த சகல குணங்களையும் சுய உள்ளத்தில் அனுபவித்து அவைகளைப் பிறருக்கு விளங்கப்பண்ணவும் கவலையுடையவர்களாய் இருப்பார்கள்.

3. 'இந்தமாதிரி விசுவாசத்தை உபதேசிப்பது மனுஷரைப் பெருமைக்குத் தூண்டிவிடாதோ?' தூண்டினாலும் தூண்டும். இதினி

மித்தம் நாம் ஒவ்வொரு விசுவாசியையும் பார்த்து: *'முதற் கிளைகள் அவிசுவாசத்தினிமித்தம் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய், மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக் கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க உன்னையும் தப்பவிடமாட்டாரென்று எச்சரிக்கையாயிரு. ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார். விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்' என்று அப்போஸ்தலன் சொன்ன சொற்களினால் கண்டிப்பாய் எச்சரிக்கவேண்டும் (ரோ. 11: 21, 22.). இதே ஆக்ஷேபனையைப் பவுல் முன்னறிந்து அதற்கு உத்தரம் சொல்லுகிறான். அந்த உத்தரத்தை விசுவாசிக்கிறவன் தேவனுடைய தயவில் நிலைத்திருக்குங் காலமெல்லாம் அதைத் தன் மனதில் வைத்திருப்பான். அது என்னவென்றால் 'இப்படியிருக்க மேன்மை பாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப் பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப் பிரமாணத்தினாலேயே' (ரோ. 3: 27.). ஒருவன் தன் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுவானாகில் மேன்மைபாராட்ட ஏதுவிருக்கும். ஆனால் 'கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனுக்கு' மேன்மைபாராட்ட ஏதுவில்லை (ரோ. 4: 5.). நமது பிரசங்க வாக்கியத்திற்கு முன்னும் பின்னும் வருகிற வசனங்களின் கருத்தும் இதுதான். (எபே. 2: 4....)—'தேவனே இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்டவுடனேகூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரக்ஷிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தமுடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை.....விளங்கச் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரக்ஷிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல.' உங்களால்தானே உங்களுக்கு விசுவாசமும் இரக்ஷிப்பும் வராது. 'அது இரண்டும் தேவனுடைய ஈவு.' அதாவது, தேவன்தாமே பாத்திரமில்லாத உங்களுக்குக் கொடுக்கிற இலவசமான கொடை. உங்களை இரக்ஷிக்கிற விசுவாசமும் அவர் கொடுக்கிற கொடைதான்.



அதனோடே அவர் தம்மிஷ்டப்படி தயவுவைத்து அருளுகிற இரக்ஷிப்பும் அவர் கொடுக்கிற கொடைதான். நீங்கள் விசுவாசிகளாயிருப்பது அவருடைய கிருபைக்கு ஒரு திருஷ்டாந்தமாகும்; விசுவாசித்து நீங்கள் இரக்ஷிக்கப்பட்டவர்களாயிருக்கிறது இன்னொரு திருஷ்டாந்தமாகும்; 'ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலுண்டானதல்ல' நாம் விசுவாசிகளாகிறதற்கு முந்தின காலங்களில் நாம் செய்த சகல புண்ணியங்களும், நமக்கு இருந்த சகல நீதியும் தேவனிடத்தில் ஆக்கினைக்கேதவிர வேறொன்றுக்கும் பாத்திரமாயிருந்ததில்லை. அவைகளினால் நாம் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள யோக்கியராயிருந்தோம் என்று சொல்லவே தகாது. ஆனபடியால் விசுவாசம் நமக்கு எப்போது கொடுக்கப்பட்டாலும் அது நாம் செய்த கிரியைகளினிமித்தம் கொடுக்கப்படுகிறதேயில்லை. அதுபோலவே நாம் விசுவாசிகளானபின் செய்கிற கிரியைகளினிமித்தம் நமக்கு இரக்ஷிப்பு கிடைக்கிறதென்று சொல்லவேகூடாது. ஏனென்றால் நாம் விசுவாசிகளானபின் நம்முள் கிரியை செய்கிறவர் தேவனேதவிர வேறொருவரல்ல நம்முள் தேவன்தாமே இருந்துகொண்டு நமது மூலமாய் நற்கிரியைகளைச் செய்து அதற்காக நமக்குப் பலன் அளிக்கிறார். இது அவருடைய இரக்கத்தின் ஐசுவரியத்தை மேன்மைப்படுத்தித் தெரிவிக்கிறதேயொழிய நாம் பெருமை பாராட்டுகிறதற்கு நமக்கு எவ்வித ஏதுவும் காட்டுகிறதில்லை.

4. 'விசுவாசத்தினால்மாத்திரம் இரக்ஷிப்பு, அதாவது நீதிமானாக்குதல் இலவசமாய்க் கிடைக்கும் என்று தேவனுடைய இரக்கத்தைப்பற்றி இவ்விதமாய் உபதேசிப்பது மனுஷரைப் பாவத்தில் ஜீவிக்கத் துணிவு உண்டாக்குமல்லவா?' உண்டாக்கும் என்பது உண்மைதான். அநேகம்பேர் 'கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலைநிற்பார்கள்.' அவர்களுடைய இரத்தப்பழி அவர்களுடைய தலைமேலேதான் இருக்கும்; தேவனுடைய தயவு அவர்களை மனந்திரும்பத் தூண்டவேண்டும்; மாயமில்லாத உள்ளத்தையுடைய யாவரையும் அது மனந்திரும்புதலுக்கே தூண்டும். அவரிடத்தில் தங்களுக்கு இன்னும் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்று கண்டவுடனே இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசத்தின் மூலமாய் எங்கள் பாவங்களைக் கிறுக்கிப்போடுமென்று அவர்கள் அவரை நோக்கிக் கதறிப் புலம்

புவார்கள். அவர்கள் சோர்ந்துபோகாமல் ஊக்கமாய் இப்படி மன்றாடி அவர் ஏற்படுத்தியிருக்கிற சகல எத்தனங்களிலேயும் அவரைத் தேடி அவர் வந்தாலொழிய எங்கள் மனம் ஆறாது என்று வைராக்கியமாயிருந்தால், 'அவர் வருவார், தாமதம்பண்ணார்.' அவர் சொற்ப நேரத்திற்குள் அதிக வேலையைச் செய்யக்கூடியவர். இந்த விசுவாசத்தை மானிடர் உள்ளங்களில் தேவன் மின்னல் வேகமாய் உண்டாக்கினதற்கு அப்போஸ்தலர் நடபடிகளில் பல திருஷ்டாந்தங்களுண்டு. பவுலும் சீலாவும் உபதேசிக்கத் துவங்கின நேரத்திலேயே சிறைச்சாலைக்காரன் மனந்திரும்பி விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். பெந்தெகொஸ்தே தினத்தில் மூவாயிரவர் பேதுருவினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் எல்லாரும் அவருடைய முதற் பிரசங்கத்தினாலேயே மனந்திரும்பி விசுவாசித்தார்கள். இக்காலத்திலேயும் அவர் அப்படியே இரக்ஷிக்க வல்லவர் என்கிறதை ரூபிக்கிற வெகுபேர் உயிருடனே இருக்கிறார்கள். இதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

5. இந்தச் சத்தியத்தையே வேறொருவகையாய் நிதானிக்கிறவர்கள் மேற்சொன்னதற்கு நேர் மாறான ஆக்ஷேபம் ஒன்று சொல்லுகிறார்கள். அதாவது, 'ஒருவன் தான் செய்கிற எந்தப் புண்ணியத்தினாலும் இரக்ஷிப்பு அடைய முடியாது என்றால் இது மானிடரை அவநம்பிக்கைக்குள் ஓட்டிவிடுமே?' உண்மைதான்; சுயகிரியை, சுயபுண்ணியம், சுயநீதி இவற்றால் இரக்ஷிப்பே வராது என்று அவநம்பிக்கைப்பட இந்த உபதேசம் ஒருவனைத் தூண்டுமென்பது வாஸ்தவமே. அது அப்படித்தான் செய்யவேண்டும்; ஏனெனில் ஒருவன் சுயபுண்ணியத்தைப் பிரயோசனமற்றதென்று தள்ளும்வரையில் கிறிஸ்துவின் புண்ணியத்தின்மேல் நம்பிக்கை வைக்கமாட்டான். 'தன் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறவன் தேவனுடைய நீதியை ஏற்றுக்கொள்ளான்.' நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதியின்மேல் அவன் நம்பிக்கை வைத்திருக்கிற காலமெல்லாம் விசுவாசத்தினால் வரும் நீதியை அவனுக்குக் கொடுக்க வழியே இல்லை.

6. வேறு சிலர், 'இது ஆறுதலளிக்கக்கூடிய உபதேசம் அல்ல' என்கிறார்கள். இப்படி உண்மையும் வெட்கமுமில்லாமல் பேசத் தூண்



டினவன் பிசாசானவனே. 'நான்' என்னும் பகைவனை அதம்பண்ணி ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து வைத்திருக்கிற சகல பாவிகளுக்கும் இது ஒன்றே ஆறுதலளிக்கும் போதகம்; இதிலேதான் ஆறுதலெல்லாம் நிரம்பியிருக்கிறது. 'அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.' இந்தத் திருவாக்கிலே வானம்போல் உயர்ந்ததும் மரணத்தை விட பலமுள்ளதுமாகிய ஆறுதல் இருக்கிறது. இதைக் கேட்டு: 'என்ன! இரக்கம் எல்லாருக்குமா? பகிரங்க திருடனாகிய சகேயுவுக்குமா? பொதுமகளாகிய மகதலேனா மரியாளுக்குமா? அப்படியானால் பாவியாகிய எனக்கும் இரக்கம் கிடைக்குமென்று நம்பியிருக்கலாமே' என்று யாரோ ஒருவன் சொல்லுகிற சத்தம் என் காதில் விழுகிறது. ஆம், வேறெவரிடத்திலும் ஆறுதல் காணாமல் துயரப்பட்டிருக்கிறவனே, உனக்கும் இரக்கம் கிடைக்கும் என்று நீ நிச்சயமாய் நம்பலாம். தேவன் உன் ஜெபத்தை அலக்ஷியம் செய்யமாட்டார். அவர் உன்னைப் பார்த்து 'திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று சொன்னாலும் சொல்லுவார். அவர் உனக்கு அருளுகிற மன்னிப்பு உன்னை வருத்தின அந்தப் பாவங்கள் இனி உன்னை ஆளவொட்டாமல் தடுக்க வல்லமையுள்ள மன்னிப்பாயிருக்கும். அந்த மன்னிப்பின் வல்லமையினால் 'பரிசுத்தாவி நீ தேவனுடைய பிள்ளையாயிருக்கிறாய் என்று உன்னுடைய ஆவியுடனேகூடச் சாக்ஷி கொடுப்பார்.' ஆ! இது எவ்வளவு நல்ல செய்தி. இது சகல ஜனங்களுக்கும் அனுப்பப்படுகிற மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கும் நற்செய்திதான். 'ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றி வாங்கிக்கொள்ளுங்கள்.' உங்கள் பாவங்கள் எப்பேர்ப்பட்டவைகளாயிருந்தாலும், 'அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும்,' 'அவைகள் உங்கள் தலைமயிரிலும் அதிகமாயிருந்தாலும்' 'கர்த்தரிடத்தில் திரும்புங்கள், அவர் உங்கள்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்புங்கள், அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.'

7. வேறு ஆக்ஷேபனைகள் கொண்டுவர முடியாதவர்கள் 'விசுவாசத்தினாலாகும் இரக்ஷிப்பைமாத்திரம் விசேஷித்த உபதேசமாகப் பிரசங்கிக்கக்கூடாது; அல்லவென்று பிரசங்கித்தாலும் அதையாவருக்கும் பிரசங்கிக்கலாகாது' என்கிறார்கள். அப்படியா? பரிசுத்தாவி சொல்வதைக் கேட்கவேண்டாமா? அவர் சொல்லுகிறதென்ன? 'போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை யல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.' இதுவே பரிசுத்தாவியின் கட்டளை. ஆனபடியால் 'விசுவாசிக்கிற எவனும் இரக்ஷிக்கப்படுவான்' என்கிற உபதேசம் நம்முடைய சகல பிரசங்கங்களுக்கும் அஸ்திபாரம்; அதுவே சகல பிரசங்கங்களுக்கும் அஸ்திபாரமாய் இருக்கவும்வேண்டும். அதாவது அந்த உபதேசமே எல்லாவற்றிற்கும் முதன்மையான உபதேசமாய்ப் பிரசங்கிக்கப்படவேண்டும். 'அப்படியேயாகட்டும், ஆனால் எல்லாருக்கும் அதைச் சொல்லாதேயுங்கள்' என்கிறார்கள். அப்படியா? யாருக்கு அதைச் சொல்லத்தகாது? அந்த உபதேசத்திற்குத் தகாதவர்களென்று நாம் யாரைத் தள்ளலாம்? தரித்திரரையா? அப்படி யல்லவேயல்ல. இந்தச் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்கிறதற்கு அவர்கள்தான் விசேஷித்த உரிமையுள்ளவர்கள். கல்லாதவர்களா? அல்ல. ஏனென்றால் தேவன் இந்த நல்ல செய்திகளைக் கல்லாதவர்களுக்கும் அறிவில்லாதவர்களுக்குமே துவக்க முதல் வெளிப்படுத்தி வந்திருக்கிறார். சிறுவரையா? ஒருபோதுமில்லை, அவர்கள் எப்படியாயினும் கிறிஸ்துவண்டை வருவதற்கு இடங்கொடுங்கள்; 'அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்.' கேடுகெட்ட பாவிகளையா? யாரை விலக்கினாலும் அவர்களை விலக்கவே கூடாது. 'அவர் நீதிமான்களை யல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தார்.' யாரையாகிலும் விலக்கவேண்டுமென்கிற மனது நமக்கு வந்தால் பணக்காரரையும், படித்தவர்களையும், கீர்த்திப் பிரியரையும், சன்மார்க்கப் பெருமை கொண்டவர்களையும் விலக்கி வைத்தாலும் வைக்கலாமேதவிர மேலே சொன்ன ஒருவரையும் விலக்கி வைக்கவே கூடாது. நாம் இவர்களைக்கூட விலக்கி வைக்கிறதற்கு அவசியமேயில்லை. ஏனென்றால் பெரும்பாலும் இவர்கள் வசனத்தைக் கேளாமல் தங்களையே அதற்கு விலக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் எவர்களாயிருந்தாலுஞ் சரி, அவர்களுக்கு நாம்



கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லவேண்டும். ஏனென்றால் நமக்கு இடப்பட்டிருக்கிற கட்டளையின் கருத்து அதுதான். 'நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்பதல்லவா அந்தக் கட்டளை. அந்தக் கட்டளை முழுவதையுமாவது அதில் ஒரு பாகத்தையாவது ஒருவன் எடுத்து வைத்துக்கொண்டு அதன் அர்த்தத்தைப் புரட்டித் தனக்குச் சேதம் வருவித்துக்கொண்டால் அந்தப் பழி அவனுடையதேதவிர நம்முடையதல்ல. நாமோ 'கர்த்தர் நம்மிடத்தில் சொல்வதையே சொல்வோம் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறோம்.'

8. எக்காலத்தையும்விட விசேஷமாய் இக்காலத்திலேதான் நாம் பாவிகளைப் பார்த்து நீங்கள் 'கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரக்ஷிக்கப்படுகிறீர்கள்' என்று பிரசங்கிக்கவேண்டும். ஏனென்றால் மற்ற எந்தக்காலத்தையும்விட இந்தக்காலத்திற்குத்தான் இந்த உபதேசம் அவசியமாயிருக்கிறது. இக்காலத்தில் ரோமான் சபையின் மோசம்போக்கிற உபதேசம் நமக்குள் திருட்டளவாய் நுழைந்து இரகசியமாய் வளரப்பார்க்கிறது. அதை வெளியே தள்ளி ஒழிக்க இந்த உபதேசத்திற்குத்தான் வல்லமையுண்டு. அந்தச் சபையின் தப்பும் தவறுமான உபதேசங்களை ஒவ்வொன்றாய் எடுத்துத் தொலைக்கப் புகுந்தால் அதற்கு முடிவேயிராது. ஆனால் விசுவாசத்தினால் உண்டாகிற இரக்ஷிப்பை உபதேசித்தால் அதினால் அந்தச் சபையின் தப்பு உபதேசங்களினுடைய அடிவேர் அற்றுப்போகும். இந்த உபதேசம் உறுதியாக அந்தத் தப்பு உபதேசங்கள் அடியோடே சாயும்.

**கிறிஸ்துமார்க்கத்தின் உறுதியான கன்மலை கிறிஸ்துமார்க்கத்தின் அஸ்திபாரம்** என்று இந்தப் போதகத்திற்குத்தான் பேர். நமது சபை அதற்கு இந்தப் பேர் சொல்வது நியாயமே. ஏனென்றால் இந்த உபதேசந்தான் பாப்புமார்க்கத்தை நமது சீமைகளை விட்டு முதல் முதல் ஓட்டிவிட்டது. பாப்புமார்க்கம் மறுபடியும் இங்கே கால் வைக்காமல் இந்த உபதேசம் ஒன்றுதான் தடுக்கும். 'ஜலப்பிரவாகம்போல் தேசம் எங்கும் பரவியிருக்கிற' துன்மார்க்கத்தை யடக்க இந்த உபதேசத்தைத்தவிர வேறே எது உண்டு?

விஸ்தாரமான சமுத்திர ஜலத்தைத் துளி துளியாய் வற்றவைக்க முடியுமா? அது முடியுமானால் பெருவெள்ளமாய்ப் பரவியிருக்கிற துன்மார்க்கங்களைத் தனித்தனியே எடுத்துக் கண்டித்து ஜனங்களைச் சீர்திருத்துவதும் முடியும். ஆனால் அலைமோதிக்கொண்டிருக்கிற துன்மார்க்க வெள்ளத்தின்மேல் 'விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிற நீதி' வந்து பாய்ந்தால் அதினுடைய பெருமையான அலைகள் அடங்கிவிடும். தங்கள் இலச்சையைத் தங்கள் மகிமையென்று எண்ணித் தங்களைக் கிரயத்திற்குக் கொண்ட ஆண்டவரை வெளியரங்கமாய் மறுதலிக்கிறவர்களை இந்த உபதேசத்தைத்தவிர வேறொன்றும் அடக்காது. நியாயப்பிரமாணத்தைத் தன் உள்ளத்தில் தேவகரத்தால் எழுதப்பெற்றவன் எப்படிப் பேசுவானோ அப்படி உன்னதமாய் அதைக் குறித்துப் பேச அவர்களுக்குத் தெரியும். இந்த விஷயத்தை யெடுத்து அவர்கள் பேசக் கேட்கையில் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவர்கள் அல்லவென்று நினைக்க நமக்கு மனது வரும். ஆனால் அவர்களை நியாயப்பிரமாணத்திலிருந்து எடுத்து சுவிசேஷத்திலே கொண்டுவந்து விடு. விசுவாசத்தினாலுண்டாகும் நீதியைப்பற்றி உபதேசிக்கத் துவங்கு. 'விசுவாசிக்கிற எவனுக்கும் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிற' கிறிஸ்துவைப்பற்றிப் பேச ஆரம்பி. முழு கிறிஸ்தவர்கள் அல்லாவிட்டாலும் முக்கால்வாசி கிறிஸ்தவர்களாக சற்றுமுன் காணப்பட்ட இவர்கள் கேட்டின் மக்களாய் விளங்கி நிற்பார்கள். பாதாளத்தின் ஆழம் பரலோகத்தின் உயரத்திற்கு எவ்வளவு தூரமிருக்கிறதோ அவ்வளவுதூரம் அவர்களுக்கும் இரக்ஷிப்புக்கு மிருக்கிறதைப் பார்ப்போம். (தேவன் அவர்களுக்கு இரங்குவாராக.)

9. இதினிமித்தமே 'விசுவாசத்தினால் உண்டாகும் இரக்ஷிப்பை' உலகத்துக்கு அறிவிக்கும்போதெல்லாம் எதிராளியாகிய பிசாசானவன் மூர்க்கங்கொள்ளுகிறான். இதினிமித்தமே அதை முதலில் பிரசங்கித்தவர்களை அழிக்கும்படி அவர்களுக்கு விரோதமாய் அவன் பூலோகத்தையும் பாதாளத்தையும் தூண்டிவிட்டான். இதே காரணத்தினாலேதான் அதாவது தன் ராஜ்யத்தின் அஸ்திபாரங்களை அடியோடே கவிழ்த்துப்போட விசுவாசம் ஒன்றுக்கே வல்லமை யிருப்பதை யறிந்துதான் அவன் தன் சேனைகளையெல்லாம் கூட்டிச் சேர்த்து



பொய், அவதூறு என்கிற தன் சகல தந்திர உபாயங்களையும் கையாடி மார்ட்டின் லூத்தரைப் பயமுறுத்தி அந்த உபதேசத்தை மறுபடியும் உலகத்தில் பிரசித்தப்படுத்தாமல் அவனைத் தடுக்கப் பார்த்தான். அது நமக்கு ஆச்சரியமாயிருக்கத் தேவையில்லை. ஏனெனில் அந்தப் பக்தன் சொல்லுகிறபடி: 'ஆயுதம் அணிந்த அகந்தையுள்ள பலவானுக்கெதிரே ஒரு சிறு குழந்தை நாணற்புல்லை ஆயுதமாக எடுத்து வந்து அவனை வழிமறித்துக் கர்வபங்கம் செய்தால் அது அவனுக்கு எவ்வளவு மூர்க்கம் உண்டாக்கும்!' அதிலும் அந்த மதலைச் சிறுவன் தன்னை மடக்கிக் கீழே போட்டுக் காலால் மிதித்துவிடுவான் என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தால் அவனுடைய மூர்க்கம் என்னவாயிருக்கும்! இதுவே உமக்குப் பிரியம்; கர்த்தராகிய இயேசுவே! இப்பிரகாரமே எக்காலத்திலும் உம்முடைய பெலன் 'பெலவீன[illegible] பூரணமாய் விளங்கிற்று.' ஆகையால் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிற சிறு பிள்ளையே, நீ போகிற பாதையிலேயே போ. 'உனக்கு அவருடைய வலதுகரம் பயங்கரமானவைகளை விளங்கப்பண்ணும்.' பிறந்து கொஞ்சநாளாகித் தன்னைக் காக்கத் திராணியில்லாத பாலகனைப்போல் நீ பலக்ஷயனாயிருந்தாலும் அந்தப் பலாஷ்டியன் உனக்குமுன் நிற்க முடியாது. நீ அவனை ஜெயித்து மேற்கொண்டு மடக்கிக் கீழேபோட்டு உன் காலின்கீழ் மிதித்துப் போடுவாய், உன் சகல சத்துருக்களும் அதமாகி 'மரணம் ஜெயமாக விழுங்கப்படும்' வரையில் நீ உன் இரக்ஷிப்பின் பெரிய தளபதியின் கீழ் 'ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும்' புறப்பட்டுப் போவாய்.

இப்பொழுது 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.' அவருக்கும், குமாரனுக்கும் பரிசுத்தாவிக்கும் சகல துதியும், ஸ்தோத்திரமும், மகிமையும், ஞானமும், வல்லமையும், கனமும், அதிகாரமும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

## வினாக்கள்.

1. இரக்ஷிக்கிற விசுவாசமானது, புறமதஸ்தரின் விசுவாசமுமல்ல, பிசாசுகளின் விசுவாசமுமல்ல என்பதோடு வேறெந்த விசுவாசமுமல்லவென்று உவெஸ்லி ஐயர் சொல்லுகிறார்?

'கிறிஸ்து பூமியில் வாசஞ்செய்த காலத்தில் அப்போஸ்தலருக்கிருந்த மாதிரியான விசுவாசமுமல்ல.'

**2.** இரக்ஷிக்கிற விசுவாசத்திற்கும், நமது ஆண்டவர் புவிவாசியாயிருந்தபோது, அப்போஸ்தலருக்கிருந்த விசுவாசத்திற்கும் பேதம் என்ன?

பிரிவு. I. 5. பார்க்க.

3. இந்த வித்தியாசம், தகுந்ததும் அறிவுக்கடுத்ததுமான வித்தியாசமா?

ஆம் என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

4. இரக்ஷிக்கிற விசுவாசமென்பதென்னவென்று உவெஸ்லி ஐயர் சொல்லுகிறார்?

பிரிவு. I. 5. பார்க்க.

5. அப்படியானால் இரக்ஷிக்கிற விசுவாசம் கிரியையையன்றி வழக்கத்தைப் பொறுத்தது என்று சொல்லலாமோ?

அது முதலில் கிரியைதான், அப்புறம் வழக்கத்தைப் பொறுத்ததே.

பிரிவு. I. 5. பார்க்க.

6. இரக்ஷிப்பு, இப்போதே கிடைக்கிறதென்றும் அது பூரண இரக்ஷிப்பென்றும் உவெஸ்லி ஐயர் எவ்வாறு ரூபிக்கிறார்?

பிரிவு. II. 1, 2. பார்க்க.

**7.** விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் விஷயமாய் அவர்களுடைய அநுபவம் என்னவென்று பார்க்கிறோம்?

'தேவனுடைய கிருபையை இழந்துபோவதும் அவர் அருளியிருக்கிற அரிய பெரிய வாக்குகள்' மு.

பிரிவு. II. 4. பார்க்க.

8. இப்பிரசங்கம் எப்பொழுது செய்யப்பட்டது?

உவெஸ்லி ஐயர் ஆக்ஸ்போர்ட் யூனிவர்சிடி சபைக்கு முன்பாக 1738–ஆ ஜூன் மீ 18உ இந்தப் பிரசங்கத்தைச் செய்தார்.

# இரண்டாம் பிரசங்கம்.

## RIGHTEOUSNESS BY FAITH.

## விசுவாசத்தினாலாகும் நீதி.

*'மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக்குறித்து: இவைகளைச் செய்கிற மனிதன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான். விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப் பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறதென்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.'* (ரோம. 10: 5–8.)

1. மோசேயினாலுண்டான உடன்படிக்கையானது கிறிஸ்துவானவர் அருளிச்செய்த உடன்படிக்கைக்கு எதிரிடையானதென்று அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விடத்தில் சொல்லுகிறதில்லை. அப்படிச் சொல்லுவதாக எண்ணியிருப்போமானால் அது வாக்கியத்தை நன்றாய்க் கவனியாததினாலுண்டான எண்ணமே. ஏனென்றால் இவ்வாக்கியங்களின் முந்தின பாகத்தைச் சொன்ன மோசேயே பிந்தின பாகத்தையும் இஸ்ரவேலருக்குச் சொன்னான். மேலும் அவன் அக்காலத்திலிருந்த உடன்படிக்கையைக்குறித்தே சொன்னான் (உபா 30: 11, 12, 14.). (தேவன் தாம் மனுஷாவதாரம் எடுத்த காலத்திற்குப் பின்னுள்ளவர்களோடு மாத்திரமல்ல, யூதப் பிரமாணத்திற்குட்பட்டவர்களோடும் அதற்கு முன்னுள்ளவர்களோடும்,

ஆக) எக்காலத்திலுமுள்ள மனுஷருடன் கிறிஸ்துவின்மூலமாய் செய்திருக்கும் கிருபை உடன்படிக்கையானது அவர் பாதியில் ஆதாமுடன் செய்த கிரியை உடன்படிக்கைக்கு எதிரிடையானதென்று பவுல் அப்போஸ்தலன் இவ்விடத்தில் காண்பிக்கிறான். தேவன் மனிதனோடு கிரியை உடன்படிக்கையைத்தவிர வேறு உடன்படிக்கை செய்யவில்லையென்று பொதுவாய் எல்லாரும் எண்ணினார்கள். விசேஷமாய் இந்த நிருபத்தைப் பெற்றுக்கொண்ட யூதரும் அப்படியே நினைத்தார்கள்.

2. இந்த யூதர்களைக்குறித்தே அப்போஸ்தலன் இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் பின் வருகிறபிரகாரம் மிகவும் பட்சத்தோடு பேசுகிறான். 'சகோதரரே, இஸ்ரவேலர் இரக்ஷிக்கப்படவேண்டுமென்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று அவர்களைக்குறித்துச் சாக்ஷி சொல்லுகிறேன். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்' என்கிறான். ஆகவே, அவர்கள் தங்கள் தவறுதலான ஜீவியத்தினால் மரணத்தை வருவித்துக்கொள்ளுகிறார்கள். இதில் 'தேவநீதி' என்பது தேவன் கைமாறின்றித் தமது நேசகுமாரனாகிய இயேசுவின்மூலமாய் நமது பாவங்களை மன்னித்து கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு தமது சுத்தக் கிருபையினாலும் இரக்கத்தினாலும் நம்மை நீதிமான்களாக்குவதைக் குறிக்கும். 'சுயநீதி' என்பது விசுவாசம் பாவிகளை நீதிமானாக்குகிறவரிடத்தில் சேர்க்குமுன் தேவன் தங்கள் பாவங்களை மன்னிப்பதற்கும் தங்களை அங்கீகரித்துக்கொள்ளுவதற்கும் ஆதாரமாக எண்ணிக்கொள்ளுகிற தங்கள் சுய பரிசுத்தத்தைக் குறிக்கும்.

3. 'விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்' என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். அதாவது தேவன் மோசேயோடு அல்ல ஆதாம் குற்றமற்றவனாயிருந்த காலத்தில் அவனோடு செய்த



முதல் உடன்படிக்கையை அல்லது நியாயப்பிரமாணத்தைக் கிறிஸ்துவானவர் ஒரேதரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்ததினால் முடிவடையச்செய்தார். அந்த உடன்படிக்கையின் மொத்தக்கருத்து 'இவைகளைச் செய்கிறவன் இவைகளால் பிழைப்பான்' என்கிற வார்த்தைகளுக்குள் அடங்கியிருக்கிறது. அது யாதொரு குறைவுமின்றிக் கண்டிப்பாய் நிறைவேற்றப்படவேண்டியது. கிறிஸ்துவோ இந்த முதலாம் உடன்படிக்கைக்கு முடிவுண்டாக்கி, அதற்குப் பதிலாக, 'விசுவாசி அப்பொழுது பிழைப்பாய்' என்கிற அதிக மேன்மையான உடன்படிக்கையைச் சம்பாதித்தார். 'விசுவாசி அப்பொழுது பிழைப்பாய்' என்பதினால் விசுவாசிக்கிறவன் பாவத்தின் தோஷத்தினின்றும் பாவத்தின் வல்லமையினின்றும் பாவத்தின் சம்பளத்தினின்றும் இப்போதே இரக்ஷிக்கப்படுவான் என்பது கருத்து. அவர்கள் இதை அறியாதிருக்கிறார்கள்.

4. இக்காலத்திலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற எத்தனையோபேர் அதேபிரகாரம் இதை அறியாதிருக்கிறார்கள். இக்காலத்திலும் எத்தனையோபேர் 'தேவனைப்பற்றிய வைராக்கியம்' உள்ளவர்களாயிருந்தும் அறிவுக்கேற்ற வைராக்கியம் அற்றவர்களாய் பாவமன்னிப்புக்கும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கும் தங்கள் 'சுயநீதி' என்பதை ஆதாரமாக நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் 'தேவநீதிக்கு' கீழ்ப்படியமாட்டோம் என்று சாதிக்கிறார்கள். சகோதரரே, நீங்கள் இரக்ஷிக்கப்படவேண்டும் என்பதே என்னிருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. ஆகையால் இதற்குத் தடையாயிருக்கிற இப்பெரிய இடறுதலை உங்களைவிட்டு அகற்றும்பொருட்டு முதலாவது நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியும் விசுவாசத்தினாலாகும் நீதியும் இன்னின்னதென்றும், இரண்டாவது, நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியை நம்புவதின் மதிகேடும் விசுவாசத்தினாலாகும் நீதிக்குக் கீழ்ப்படிவதின் ஞானமும் இன்னின்னதென்றும் விவரிக்கப் பிரயாசப்படுகிறேன்.

I. 1. முதலாவது நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியானது 'இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்'

என்று சொல்லுகிறது. இவை யாவற்றையும் இடைவிடாமல் குறைவறப் பூரணமாய்க் கைக்கொள்ளுவாயானால்மாத்திரம் நீ சதாகாலமும் பிழைத்திருப்பாய் என்கிறது. கிரியை உடன்படிக்கை யென்று சாதாரணமாய்ச் சொல்லப்படுகிற இப்பிரமாணத்தை ஆதாம் பரதீசிலிருந்தகாலத்தில் தேவன் அருளிச்செய்தார். மனிதன் தான் சிருஷ்டிக்கப்பட்டபோதுள்ள பரிசுத்தமும் பாக்கியமுமான நிலைமையில் நித்தியகாலமாய் நிலைத்திருக்க வேண்டுமேயானால் இந்த நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அவன் குறைவின்றிப் பூரணமாய் நிறைவேற்றவேண்டியது.

2. இந்த உடன்படிக்கையின்பிரகாரம் மனிதன் உள்ளும் புறம்பும் செய்யவேண்டியவைகளையும் செய்யக்கூடாதவைகளையும் சொல்லும் நீதி யாவற்றையும் நிறைவேற்ற வேண்டியவனாயிருக்கிறான்.

எவ்வித வீண் வார்த்தைக்கும் துர்க்கிரியைக்கும் விலகி நடப்பதுமன்றித் தன் வாஞ்சை, விருப்பம், நினைவு ஒவ்வொன்றிலும் தேவசித்தத்துக்கு அமைந்து நடக்கவேண்டும். தன்னைச் சிருஷ்டித்தவர் பரிசுத்தராயிருப்பதுபோலத் தானும் தன் இருதயத்திலும் நடக்கையிலும் பரிசுத்தனாய் நிலைத்திருக்கவேண்டும். தேவன் சுத்தராயிருப்பதுபோல மனிதனும் தன்னிருதயத்தில் சுத்தமுள்ளவனாயிருக்கவேண்டும் பரலோகத்திலிருக்கிற தன் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோலத் தானும் பூரண சற்குணனாயிருக்கவேண்டும். அவன் தன் தேவனாகிய கர்த்தரிடத்தில் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு மனதோடும் தன் முழுப் பலத்தோடும் அன்புகூரவேண்டும். தேவன் தன்னிடத்தில் அன்புகூர்ந்ததுபோலத் தானும் அவர் சிருஷ்டித்த ஒவ்வொரு ஆத்துமாவின்பேரிலும் அன்புகூரவேண்டும். இத்தன்மையான சர்வ பரிபூரண கருணையினால் அன்பின் சொரூபியாயிருக்கிற தேவனுக்குள் மனிதனும் மனிதனுக்குள் தேவனும் வாசமா யிருக்கவேண்டும். அவன் தன் முழுப் பலத்தோடும் சேவித்து எவ்விஷயத்திலும் அவருடைய மகிமையையே நோக்கவேண்டியது.

3. நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதி கட்டளையிட்டிருக்கிறவைகள் இவைகளே. இவைகளைச் செய்கிறவனே பிழைப்பான். இவ்



வளவுதானா? இப்படி முற்றிலும் கீழ்ப்படிந்து உள்ளும் புறம்பும் இவ்வித பரிசுத்தமாய் நடந்து, தன்னிருதயமும் தன் ஜீவியமும் தேவனுடைய சித்தத்துக்கு இசைந்திருக்கச் செய்வதுமட்டும் போதுமானதல்ல. இவைகளைச் செய்கிற அளவிலும் குறைவிருக்கக்கூடாது. உள்ளான புறம்பான நியாயப்பிரமாணத்தின் ஒரு சிறு எழுத்தாயிருப்பினும் அதைக் கைக்கொள்ளுகிற அளவில் அணுவேனும் குறையலாகாது. குறையுமானால் அக்குறைவினிமித்தம் சொல்லுகிற எவ்வித போக்கையும் நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதி அங்கீகரிக்காது. புறம்பான விஷயங்களைக்குறித்த கட்டளைகள் ஒவ்வொன்றையும் கைக்கொண்டு வந்திருப்பினும் அவைகளை முழுப் பலத்தோடும் பூரண அளவாயும் குறைவற்றவிதமாயும் கைக்கொள்ளாவிட்டால் நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதிக்குத் திருப்திகாயிராது. மேலும் இந்தப் பிரமாணத்தின்பிரகாரம், மனிதன் தனக்குரிய சக்தி தத்துவத்தைக்கொண்டு தேவனிடத்தில் அன்புகூருவதுமட்டும் போதுமானதல்ல, அவன் தன் சக்தி, தத்துவங்களைக்கொண்டும், தன் ஆத்துமபெலத்தைக்கொண்டும் எவ்வளவு அன்புகூரக்கூடுமோ அவ்வளவு அன்புகூர வேண்டியவனாயிருக்கிறான்.

4. நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியின்படி மனிதன் அவசியம் கைக்கொள்ளவேண்டிய வேறொரு விஷயமுண்டு. அதென்னவெனில், இருதயத்திலும் ஜீவியத்திலுமுள்ள குறையற்ற பரிசுத்தமாகிய பூரண கீழ்ப்படிதல் இடையில் நின்று போகவுங்கூடாது. தேவன் மனிதனைச் சிருஷ்டித்து அவன் நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதின நிமிஷமுதல் அவனது பரீட்சையின் காலம் முடிந்து அவன் நித்திய ஜீவனுக்குட்படும் காலம்வரையில் அவனுடைய பரிசுத்தமும் கீழ்ப்படிதலும் இடைவிடாமல் தொடர்ந்தேர்ச்சியாய் நடந்துகொண்டே யிருக்கவேண்டும்.

5. ஆகவே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதி சொல்லுவதைக் கேள். தேவனுடைய மனுஷனே! நீ அன்பில் நிலைத்திரு. நீ உண்டாக்கப்பட்ட தேவ சாயலிலிருந்து விலகிப்போகாதே. நீ ஜீவனில் நிலைத்திருக்க விரும்பினால் உன்னிருதயத்தில் வரைந்திருக்கும் கட்

டளைகளைக் கைக்கொள். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூர்ந்து உன்னிடத்தில் அன்புகூருவதுபோல அவர் சிருஷ்டித்திருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவின் பேரிலும் அன்புகூருவாயாக. தேவனைத்தவிர வேறொன்றையும் வாஞ்சியாதே. உன் நினைவு, வார்த்தை, கிரியை யாவிலும் தேவனே உன் முழு நோக்கமா யிருக்கவேண்டும். நீ நோக்கவேண்டியவரும் பரம அழைப்பின் பந்தயப்பொருளுமாகிய அவரை விட்டு உன் ஆத்துமாவாவது சரீரமாவது அணுவளவும் அசையப்படாது. உன் ஆத்துமாவின் சக்தி, தத்துவம், உன் சரீரம், உன்னிலுள்ள யாவும், எல்லாவிதத்திலும் பூரண அளவாயும் நிமிஷந்தப்பாமலும் அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரிக்கக்கடவது. இப்படிச் செய், அப்பொழுது பிழைப்பாய். இப்படிச் செய்வாயாகில் நீ அவரோடேகூடப் பரம ராஜ்யத்தில் சதாகாலங்களிலும் அரசாளும்படி அவர் உன்னைத் தமது வீட்டில் ஏற்றுக்கொள்ளும்பரியந்தம் உன் வெளிச்சம் மேன்மேலும் பிரகாசிக்கும்; உன் அன்பு சுவாலித்தெரியும் என்று சொல்லுகிறது.

6. விசுவாசத்தினாலாகும் நீதி சொல்லுகிறதென்ன? (தேவன் உன்னை அங்கீகரிக்கும்பொருட்டு நீ செய்யவேண்டிய அசாத்திய கிரியை ஒன்றிருந்தாற்போல) ‘கிறிஸ்துவை இறங்கிவரப் பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது’ (நீ அங்கீகரிக்கப்படும்பொருட்டு செய்யவேண்டிய கிரியை இன்னும் முடியாமல் பாக்கியா யிருந்தாற்போல) ‘கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார் என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக’ என்று சொல்லுகிறதுமன்றி அந்த வார்த்தை (நீ நித்திய ஜீவனுக்குச் சுதந்தரவாளியாக இப்போதே அங்கீகரிக்கப்படலாம் என்னும் கருத்துள்ள அந்த வார்த்தை) ‘உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறதென்றும் சொல்லுகிறது. அந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.’ இதுவே, கிறிஸ்து இயேசுவின்மூலமாய் தேவன் பாவியுடன் ஸ்தாபித்திருக்கிற உடன்படிக்கை.

7. கெட்டுப்போன மனுஷன் நீதிமானாக்கப்படும்பொருட்டு தேவன் தமது ஒரேபேறான குமாரனின் புண்ணியத்தினாலும் மத்தி



யஸ்தத்தினாலும் ஏற்படுத்தியிருக்கிற நிபந்தனையே விசுவாசத்தினாலாகும் நீதியாம். இப்படி நீதிமானாக்கப்படுவதினால் இப்போதே இரக்ஷிக்கப்படுவதுடன் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால், கடைசியாக மறுமையில் கிடைக்கும் இரக்ஷிப்பையும் பெற்றுக்கொள்ளலாம். ஆதாம் பாவஞ்செய்தகாலத்தில் இந்நிபந்தனை அவனுக்கு ஒருவாறு வெளிப்படுத்தப்பட்டது. எப்படியென்றால், ‘சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்’ (ஆதி. 3: 15.) என்று ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் கிடைத்த ஆதி வாக்குத்தத்தத்தில் இது அடங்கியிருக்கிறது. ‘உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்’ (ஆதி. 22: 16-18.) என்பதாகப் பரலோகத்திலிருந்து வந்த தேவதூதன் அறிவித்ததில் இது சற்று விவரமாய் வெளிப்படுத்தப்பட்டது. இன்னும் இதைவிடத் துலாம்பரமாய் மோசேக்கும், தாவீதுக்கும், அவர்களுக்குப் பின்வந்த தீர்க்கதரிசிகளுக்கும், இவர்கள்மூலமாய் அந்தத் தலைமுறையிலுள்ள தேவனுடைய ஜனங்களில் அநேகருக்கும், இந்தச் சத்தியம் அறிவிக்கப்பட்டது. ஆயினும் இவர்களில் பெரும்பாலோர் இதைக்குறித்து அறிவீனராகவே யிருந்தார்கள். தெளிவாய் அறிந்துகொண்டவர்கள் வெகு சொற்பம். என்றாலும் ‘ஜீவனும் அழியாமையும் இக்காலத்திலே சுவிசேஷத்தினாலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல்’ பூர்வகாலத்தில் யூதருக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

8. இந்த உடன்படிக்கையானது பாவியை நோக்கி, ‘நீ குறைவறப் பூரணமாய்க் கீழ்ப்படி, அப்பொழுது பிழைப்பாய்’ என்று சொல்லுகிறதில்லை. இப்படிச் சொல்லுமேயானால், கிறிஸ்து அவனுக்காகச் செய்த கிரியைகளினாலும் பாடுபட்டு உத்தரித்தவைகளினாலும் யாதொரு நன்மையு முண்டாகாது. இப்படிச் சொல்லுமானால் ஜீவனை யடையும்பொருட்டு ‘கிறிஸ்துவை இறங்கிவரப் பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறவேண்டுமென்றும்’ அல்லது ‘கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி’ காணப்படாத உலகமாகிய பாதாளத்துக்கு இறங்கவேண்டுமென்றும் கட்டளையிட்டது போலாகும். இந்த உடன்படிக்கையானது அசாத்தியமான எதையாகிலும் செய்யென்று கற்பிக்கிறதில்லை. அப்படிக் கற்பிக்குமே

யானால், மனுஷனை அவனுடைய பலவீனத்தினிமித்தம் பரிகாசம் செய்கிறதுபோலிருக்குமே. இந்த உடன்படிக்கை விதிக்கிறபிரகாரம் செய்வது ஜென்ம சுபாவ மனுஷனுக்குக் கூடாததாயிருப்பினும் பரிசுத்தாவியின் சகாயத்தைப் பெற்றவனுக்கு இது கூடாதது அல்ல. திட்டமாய்ச் சொன்னால் கிருபை உடன்படிக்கையானது நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு யாதேனும் செய்யவேண்டியது இன்றியமையாத அவசியமெனக் கட்டளையிடாமல் தேவகுமாரனினிமித்தமும் அவர் செய்த கிருபாதார பலியினிமித்தமும் 'கிரியையில்லாமல் பாவியை நீதிமானாக்கி' அவனுடைய விசுவாசத்தை அவனுக்கு நீதியாக எண்ணுகிற அவர் நாமத்திலே **விசுவாசம்** வைக்கவேண்டுமென்றுமாத்திரம் கற்பிக்கிறது. 'ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்' (ஆதி. 15: 6.). விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக, அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும் 'அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான்' (ரோம. 4: 11.). விசுவாசம் 'அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது அவனுக்காக மாத்திரமல்ல நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்' (ரோம. 4: 23, 24.). அதாவது நமக்கும் விசுவாசமே போதுமானதாக எண்ணப்படும். நாம் தேவனால் அங்கீகரிக்கப்படும்பொருட்டு பூரணமாய்க் கீழ்ப்படிவதற்குப் பதிலாக விசுவாசிப்பதே போதுமானதாயிருக்கிறது. விசுவாசிக்கிறவர்கள் தங்கள் பாவமன்னிப்பையும் மறுமைக்குரிய ஜீவனையுங்குறித்து நிச்சயமுள்ளவர்களாயிருப்பதற்கு 'அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டுமிருக்கிறார்.' (ரோம. 4: 25.)

9. அப்படியானால், பாவமன்னிப்பையும், அபாத்திரருக்குப் பாராட்டும் அன்பையும், மன்னிக்கிற கிருபையையும்பற்றிய இந்த உடன்படிக்கை கூறுகிறதென்ன? 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரக்ஷிக்கப்படுவாய்' என்கிறது. என்றைக்கு விசுவாசிக்கிறாயோ அன்றைக்கே நீ பிழைப்பது நிச்சயம். நீ தேவ தயவை மீண்டும் பெறுவாய். அவருடைய தயவோ நீடிய வாழ்வு. தேவ சாபத்தினின்றும் கோபத்தினின்றும் இரக்ஷிக்கப்படுவாய். நீ பாவ மரணத்தினின்று உயிரடைந்து நீதியாகிய ஜீவனைக் கண்டடைவாய். இயேசுவை நீ விசுவாசித்து முடிவுபரியந்தம் நிலைத்திருப்பாயானால் இரண்டாம் மரணத்தினால் நீ சேதப்படுவதில்லை (வெளி. 2: 11.). மேலும் உன் ஆண்டவருடன் பாடுபடுவாயானால் அவருடன் சதாகாலமும் ஜீவித்தரசாளுவாய்.



10. 'இந்த வார்த்தை உனக்குச் சமீபமாயிருக்கிறது.' ஜீவனை அடைவதற்கான இந்தச் சங்கேதம் தெளிவாயும் இலகுவாயுமிருக்கிறது. பரிசுத்தாவியின் கிருபையினால் 'அது உன் வாயிலும் உன் இருதயத்திலு மிருக்கிறது.' தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினவரை நீ உன் இருதயத்தில் விசுவாசித்து 'கர்த்தராகிய இயேசுவை உன் ஆண்டவரும் உன் தேவனுமாக உன் வாயினால் அறிக்கை செய்கிற' அச்சணமே, நீ முன் செய்த பாவத்துக்கு வரும் ஆக்கினைத் தீர்ப்பினின்றும் பாவ தோஷத்தினின்றும் தண்டனையினின்றும் இரக்ஷிப்படைந்து உன் மீதியான ஜீவகாலமெல்லாம் மெய்யான பரிசுத்தமாய்த் தேவனைச் சேவிக்கச் சக்தியுடையவனாவாய்.

11. நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதிக்கும் விசுவாசத்தினாலாகும் நீதிக்கும் வித்தியாசமென்ன? அதாவது, முதலாம் உடன்படிக்கையாகிய கிரியை உடன்படிக்கைக்கும், இரண்டாம் உடன்படிக்கையாகிய கிருபை உடன்படிக்கைக்குமுரிய பேதமென்ன? இவ்விரண்டிற்குமுரிய மாறாத முக்கிய வித்தியாசம் யாதெனில், கிரியை உடன்படிக்கையானது அதைப் பெற்றுக்கொள்ளுகிறவன் எவனோ அவன் முன்னமே தேவசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டுத் தேவதயவை அனுபவித்துப் பரிசுத்தமும் பாக்கியமுமுள்ளவனாயிருப்பதாகப் பாவித்துக்கொள்ளுகிறது. இவ்வாறு எண்ணிக்கொள்ளுவதினால், அவன் அன்பும், சந்தோஷமும், ஜீவனும் அழியாமையுமுள்ளவனாய் நிலைத்திருப்பதற்கு வேண்டிய நிபந்தனையை ஏற்படுத்துகிறது. கிருபை உடன்படிக்கையோ, அதைப் பெற்றுக்கொள்ளுகிறவன் அசுத்தனும், நிர்ப்பாக்கியனும், மகிமையான தேவசாயலை இழந்தவனும், தேவனுடைய கோபத்தைத் தன்மேல் சுமத்து

கிறவனுமாயிருக்கிறானென்று பாவிக்கிறது. பாவத்தினால் அவன் ஆத்துமா மரித்திருக்கிறபடியினால் சரீர மரணமும் நித்திய மரணமும் அவனைப் பின்தொடர்ந்து வருகிறது. இந்த நிலைமையிலுள்ள மனுஷன் தான் இழந்துபோன முத்தைத் திரும்பக் கண்டடைந்து, தேவதயவையும் தேவசாயலையும் திரும்பவும் பெற்றுத் தன் ஆத்துமாவிலிருந்த ஜீவனைப் புதுப்பித்து, நித்திய ஜீவனுக்கு ஆரம்பமாகிய தேவனை அறிகிற அறிவையும் அவரை நேசிக்கிற நேசத்தையும் திரும்பவும் பெற்றுக்கொள்ளுவதற்கு அவசியமாய் வேண்டிய சங்கேதம் இன்னதென்பதை இந்த இரண்டாம் உடன்படிக்கை அவனுக்கு விதிக்கிறது.

12. மேலும், கிரியை உடன்படிக்கை சொல்லுவதென்ன? குறைவற்ற மனுஷன் தேவதயவிலும், அவரைப்பற்றிய அறிவிலும் அன்பிலும் பரிசுத்த பாக்கியத்திலும் நிலைத்திருக்கவேண்டுமானால், அவன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு கற்பனைக்கும் இடைவிடாமல் **பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டும்** என்றுரைக்கிறது. கிருபை உடன்படிக்கையோ, இழந்துபோன தேவதயவையும் ஜீவனையும் **திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமாகில் விசுவாசமே** போதுமெனச் சொல்லுகிறது. அதாவது, தேவ வல்லமையினால் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் கீழ்ப்படியாதவனை சேர்க்கிற ஜீவனுள்ள விசுவாசமே போதுமென்கிறது.

13. கிரியை உடன்படிக்கையானது ஆதாமும் அவன் சந்ததியாரும் தாங்கள் இனிமேல் பெற்றுக்கொள்ளப்போகிற ஆசீர்வாதங்களுக்குத் தாங்களே கிரயம் செலுத்தித் தீர்க்கவேண்டுமென்று கற்பிக்கிறது. கிருபை உடன்படிக்கையின் ஏற்பாடோ அப்படியல்ல; நாம் செலுத்தித் தீர்க்க நிர்வாகமற்றிருப்பதினால் நமக்காகச் செலுத்தி 'நம்முடைய பாவங்களையும் சர்வலோகத்தாரின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலியாக' தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவரிடத்தில் விசுவாசம் வைப்பதினால்மாத்திரம் தேவன் நமக்கு 'இலவசமாய் மன்னிக்கிறார்' என்று சொல்லுகிறது.

14. இவ்விதமாய் முதல் உடன்படிக்கையானது மனுஷன் தன் **சக்திக்கெட்டாததைச்** செய்யும்படி கற்பிக்கிறது. எப்படியெனில்,



அது மனுஷன் குறைவறப் பூரணமாய்க் கீழ்ப்படியவேண்டுமெனச் சொல்லுகிறது. பாவத்தில் உற்பவித்துப் பிறந்த மனுஷனுக்கு இது சாத்தியமானதல்ல. இரண்டாம் உடன்படிக்கையோ, மனிதனுடைய சக்திக்கு மிஞ்சினதையல்ல, சக்திக்குட்பட்டதையே செய்யும்படி கற்பிக்கிறது. இது பாவியை நோக்கிச் சொல்லுகிறதென்னவெனில், நீ பாவஜென்மி, தேவனோ அன்பாயிருக்கிறார், பாவத்தால் நீ தேவ மகிமையற்றவனானாய். ஆயினும் அவரிடத்தில் இரக்கமுண்டு. பாவமன்னிப்பை அருளும் தேவனிடத்தில் உன் சகல பாவங்களையும் கொண்டுவா, அப்பொழுது அவைகள் மேகத்தைப் போல் பறந்துபோம். நீ பாவியாயிராவிட்டால் அவர் உன்னை நீதிமானாக்க வேண்டியதில்லை. ஆனால் உறுதியான விசுவாசத்தோடு அவரிடம் சேர்ந்திரு. அவர் சொல்ல ஆகும். பயப்படாதே; நம்பிக்கையாயிரு. தேவன் நீதியுள்ளவராயிருந்தும் இயேசுவை விசுவாசிக்கிற யாவரையும் நீதிமான்களாக்குகிறார் என்பதே.

II. இவைகளைச் சிந்தித்தானபின், இரண்டாவதாக, நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியில் நம்பிக்கை வைக்கிறது முடியாத காரியமென்றும், விசுவாசத்தினாலாகும் நீதிக்குக் கீழ்ப்படிவதே ஞானமென்றும் ரூபித்துக் காண்பிப்பது எளிது.

1. 'இதைச் செய், அப்பொழுது பிழைப்பாய்' என்று கட்டளையிடுகிற நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியின்மேல் நம்பிக்கை வைக்கிறது மதியீனம் என்பதை நான் சொல்லப்போகிறதைக்கொண்டு அறிந்துகொள்ளலாம். இப்படி நினைக்கிறவர்கள் முழுதும் தப்பிதஞ் செய்கிறார்கள். முதலில் இந்த உடன்படிக்கைக்கு உடன்பட்டவனாகிய பாவி இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதம் பெறுமுன் குறைவின்றி நடக்கவேண்டும் என்பது நியாயமல்லவா. ஆசீர்வாதம் வருமென்று எண்ணலாம். ஆனால் இந்த உடன்படிக்கை ஆதாம் குற்றமற்றவனாயிருந்த காலத்தில் அவனுடன் செய்யப்பட்டதினால் இப்படி எண்ணுவது எவ்வளவு அறிவீனம். ஆகையால் இந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கும் கட்டடம் முழுவதும் ஸ்திரமுள்ளதல்ல. இவ்வாறு மணலின்மேல் கட்டுகிற யாவரும் அறியாமற் கட்டுகிறார்கள். கிரியா உடன்படிக்கையானது மனிதன் 'அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவனாயிருந்தபோதல்ல,' அவன் தேவ

னுக்கென்று பிழைத்து, பாவம் அறியாதவனாய், அவர் பரிசுத்தராயிருப்பதுபோல் பரிசுத்தனாயிருந்த காலத்தில் கொடுக்கப்பட்டதென்பதை இவர்கள் சிந்திக்கிறதில்லை. மேலும் இழந்துபோன தேவதயவையும் தேவனுடைய ஜீவனையும் திரும்பப் பெற்றுக்கொள்ளும் நோக்கமாயல்ல, இந்த ஜீவன் நித்திய ஜீவனில் பூரணமாகும்வரைக்கும் நிலைத்திருந்து பெருகும் நோக்கமாகவே இந்த உடன்படிக்கையானது ஏற்படுத்தப்பட்டதென்பதை மறந்துபோகிறார்கள்.

2. நியாயப்பிரமாணத்தினாலாகும் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறவர்கள், நியாயப்பிரமாணம் அவசியம் என்பதாகக் கற்பிக்கிற கீழ்ப்படிதலாவது நீதியாவது எப்படிப்பட்டதா யிருக்கவேண்டுமென்பதைச் சிந்திக்கிறதில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் இக்கீழ்ப்படிதலானது நிறைவும் பூரணமுமானதா யிருக்கவேண்டும். மற்றப்படி அது நியாயப்பிரமாணம் கட்டளையிடுகிறபிரகாரமான கீழ்ப்படிதலாகாது. ஆனால் உங்களில் யார் இவ்விதமாய்க் கீழ்ப்படியக் கூடும்? இவ்விதமாய்க் கீழ்ப்படிந்து ஜீவித்திருக்கக் கூடியவனுமுண்டோ? தேவனுடைய புறம்பான கட்டளைகளையாவது அணுப்பிசகாமல் கைக்கொள்ளத்தக்கவன் யார்? தேவன் விலக்கியிருக்கிற சிறிதும் பெரிதுமான கட்டளைகளில் எதையாவது செய்யாதிருக்கிறவன் எவன்? அவர் செய்யும்படி கற்பித்திருக்கிற யாவற்றையும் விடாது நிறைவேற்றினவனுமுண்டோ? 'வீணான வார்த்தைகளைப் பேசாமல் கேட்கிறவர்களுக்குப் பிரயோசனமுண்டாகும் சம்பாஷணையையே' செய்கிறவன் எவன்? புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்று செய்கிறவன் யார்? புறம்பான இக்கற்பனைகளை நிறைவேற்றுவதே அசாத்தியமாயிருக்க, தேவனுடைய உள்ளான கற்பனையின்படி உன் ஆத்துமாவின் குணம், செய்கை, யாவும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நீ உன் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூரக்கூடுமா? உன் சொந்த ஆத்துமாவில் அன்புகூருகிறாப்போல் சகல மனிதரிடத்திலும் அன்புகூர முடியுமா? இடைவிடாமல் ஜெபம் செய்து எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செலுத்தக்கூடுமா? தேவனை உனக்குமுன் எப்போதும் வைத்துக்கொள்ளுவது கூடியதா? உன் வாஞ்சை, விருப்பம், நினைவு யாவும் அவர் பிரமாணத்துக்கு இணங்கும்படி செய்ய முடியுமா?



3. மேலும், நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதி கற்பிக்கிறபடி மனுஷன் செய்யவேண்டியவைகளையும் செய்யக்கூடாதவைகளையும் சொல்லும் தேவனுடைய பிரமாணம் ஒவ்வொன்றுக்கும் உள்ளும் புறம்பும் கீழ்ப்படிவதுமாத்திரம் போதாது. அந்தக் கீழ்ப்படிதல் பூரண அளவுள்ளதாயு மிருக்கவேண்டும். நியாயப்பிரமாணமானது ஒவ்வொரு விஷயத்திலும் உன் தேவனாகிய கர்த்தரை உன் முழுப் பலத்தோடும் சேவிப்பாயாக என்றே கூறுகிறது. இதைக் கைக்கொள்ளுமளவில் எவ்வித குறைவும் இருக்கப்படாது. குறைவிருக்குமாகில் எவ்வித போக்குச்சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளமாட்டாது. இதைக் கைக்கொள்ளும் அளவில் கொஞ்சம் குறைந்தாலும் நியாயப்பிரமாணமானது அதினிமித்தம் குற்றஞ்செய்தவனை ஆக்கினைக்குட்படுத்தி அச்சணமே அவன்மேல் சாபமும் கூறுகிறது. இந்த நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியானது தனக்கு நீதிசெய்யத் தெரியுமேயன்றி இரக்கம் பாராட்டத் தெரியாது என்கிறது.

4. இப்படியிருக்க 'எல்லா அக்கிரமங்களையும் கவனிக்கிற' இந்த நியாயாதிபதிக்குமுன் நிற்கத்தக்கவன் யார்? அப்படி நிற்கக்கூடியவர்கள் இல்லை. எப்படியென்றால், தற்காலம் நமது முழுப் பலத்தோடும் ஒவ்வொரு கற்பனையையும் கைக்கொண்டு நடப்பதாக வைத்துக்கொண்டாலும், எக்காலத்திலாயினும் செய்யத் தவறிவிட்ட ஒரே தவறுதலினிமித்தம் ஜீவனுக்குரிய சகல பாத்தியதையையும் முற்றிலும் இழந்துபோவோம். நாம் எப்போதாவது, எந்த அற்பவிஷயத்திலாவது தவறிவிடுவோமாகில் அதோடே இந்த நீதி முடிவடைந்துபோம். ஏனென்றால் நியாயப்பிரமாணமானது தனக்கு இடைவிடாது கீழ்ப்படியாதவர்களை மாத்திரமல்ல, பூரணமாய்க் கீழ்ப்படியாதவர்களையும் ஆக்கினைக்குட்படுத்துகிறது. ஆகையால் இப்பிரமாணத்தின் தீர்ப்புப்பிரகாரம், அணுவளவாயினும் ஒருதரம் பாவஞ்செய்தவனுக்கு 'நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்'

5. அப்படியானால், கெட்டுப்போன மனுஷன் இந்த நீதியினால் ஜீவனை அடையத் தேடுவது மதியீனம் அல்லவா? மனிதன் துர்க்குணத்தில் உருவானவன்; அவன் முழுவதும் லௌகிக சம்பந்தமானதும்

ஜென்ம சுபாவத்துக்குரியதும் பேய்த்தனத்துக்கடுத்ததுமான சுபாவத்தை யுடையவன்; முற்றிலும் தன்னைக் கெடுத்து அருவருப்பான காரியங்களைச் செய்கிறவன்; தேவகிருபையைப் பெற்றுக்கொள்ளுமுன் தன்னிலே நன்மையற்றவன்; நன்மையானதொன்றையும் சுயமாய் யோசிக்கும் சக்தியற்றவன். அவன் அவபக்தியே ரூடமாகக்கொண்ட பாவஜென்மி. அவன் தன் காலமெல்லாம் பாவமே செய்கிறான். அவன் வாக்கினாலும் கிருயையினாலும் செய்கிற அக்கிரமங்கள் அவன் தலைமயிரிலும் அதிகம். இவ்வளவு அசுத்தனும் குற்றஞ்செய்தவனும் சக்தியற்ற புழுப்போன்றவனுமான மனிதன், தன் சுயநீதியினால் அங்கீகரிக்கப்பட்டு நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியினால் பிழைக்கலாமென்று நம்பலாமா? கனவிலும் எண்ணலாமா? அப்படி எண்ணுவது மதியீனமல்லவோ?

6. நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியை நம்புவது மதியீனம் என்று ரூபிக்கிற நியாயங்களைக்கொண்டே விசுவாசத்தினாலாகும் தேவநீதிக்குக் கீழ்ப்படிவது ஞானமென்றும் ரூபிக்கக்கூடும். மேற்சொன்ன குறிப்புகள் ஒவ்வொன்றையும் எடுத்துக்கொண்டு இதைக் காண்பிப்பது வெகு எளிது. ஆயினும் அதை விட்டுவிட்டு வேறு விதமாய்ப் பார்ப்போம். நமக்குச் சுயநீதியே யில்லை என ஒத்துக்கொள்வதுதான் இந்த ஞானத்திற்கு முதற்படி. இதெப்படியென்று கேட்டால், நமக்குச் சுயநீதி யில்லையென்று அறிக்கையிடும்போது நாம் உள்ளதை ஒப்புக்கொண்டு காரியத்தின் யதார்த்தத்தை மறுக்காமல் ஒத்துக்கொள்ளுகிறோம் (ஆகையால் இது ஞானமே.). இப்படிச் சுயநீதி யற்றவர்களென்று அறிக்கையிடுவது, நாமிருக்கிற உண்மையான நிலைமையை நமது இருதயத்தினாலும் வாயினாலும் ஒத்துக்கொள்ளுகிறதேயன்றி வேறென்ன? நாமிருக்கிற உண்மையான நிலைமையென்ன? மனதினால் கிரகிக்கவும் வார்த்தையினால் விஸ்தரிக்கவும் கூடாத கெட்ட பாவ சுபாவமுள்ளவர்களாய் உலகத்தில் பிரவேசித்திருக்கிறோம். அதினாலே தீமைக் கிணங்கி நன்மைக் கெதிர்த்து நிற்கிற சுபாவமுள்ளவர்களா யிருக்கிறோம். நாம் பெருமை, சுயசித்தம், ஆசாபாசம், துர்இச்சை நிறைந்தவர்களாயும், உலக சிநேகிதராயும், தேவனை அல்ல நம்மையே பிரியப்படுத்தவர்களாயும் இருக்கிறோம். நமதிருதயத்தைப்போலவே நமது ஜீவியமும் அநேக



விஷயங்களில் அவபக்தியும் அசுத்தமும் நிறைந்ததாயிருக்கிறது. வார்த்தையினாலும் கிரியையினாலும் செய்த பாவங்கள் வானத்து நட்சத்திரங்களைப்பார்க்கிலும் ஏராளமாயிருக்கின்றது. இவை யெல்லாவற்றினாலும் 'தீமையைப் பார்க்கமாட்டாத கடவுளாகிய சுத்தக் கண்ணனுக்கு' வெறுப்பை உண்டாக்கியிருக்கிறோம். இதினால் பாவத்திற்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய சம்பளமாகிய உக்கிர கோபாக்கினையையும் மரணத்தையுமேயன்றி வேறெதையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரர் அல்ல. நமக்குச் சுயநீதி யில்லாததினாலே நமது நீதியினாலாவது, மரத்துக்குத் தக்கபடியே கனியு மிருப்பதினாலே நமது கிரியைகளினாலாவது தேவகோபத்தை ஆற்றி, நமக்கு நியாயமாய் வரவேண்டிய தண்டனையை விலக்கிக்கொள்ள நமக்குத் திராணியில்லை. இவ்வளவுதானா? நமதிஷ்டப்படி நடக்க இடம்பெற்றால் மேன்மேலும் நம்மைக் கெடுத்து, பாவஉளையில் அதிகமதிகமாய் அமிழ்ந்து, நமது துர்க்கிரியைகளினாலும், மாம்ச சிந்தைக்குரிய துர்க்குணங்களினாலும் தேவனை அதிகமதிகமாய்க் கோபமூட்டி, கடைசியில் நமது அக்கிரமத்தின் அளவை நிறைவாக்கி, நமதுமேல் தீவிரமர்ய் அழிவை வருவித்துக்கொள்ளுவோம். இதல்லவோ சுபாவத்தின்படி நமது நிலைமை! நமதிருதயத்தினாலும் வாயினாலும் இதை அறிக்கையிட்டு, அதாவது, நியாயப்பிரமாணத்தினாலாகும் சுயநீதி நமக்கில்லையென்று ஒத்துக்கொள்ளும்போது யதார்த்த நிலைமையை மறுக்காமல் உள்ளதை உள்ளபடி ஒத்துக்கொள்ளுகிறோம். ஆகையால் இதுவே மெய்ஞ்ஞானத்திற்கு ஓர் அத்தாட்சி.

7. 'விசுவாசத்தினாலாகும் நீதிக்கு' கீழ்ப்படிவது ஞானம் என்பதற்கு வேறொரு நியாயமென்னவென்றால், அந்த நீதி தேவநீதியே. தேவநீதி என்பதின் கருத்தென்ன? தேவன் ஞானமுள்ள தேவனாய் மாத்திரமல்ல; பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் தாம் உண்டாக்கின ஒவ்வொரு சிருஷ்டிக்கும் மேலான ஏகாதிபதியாயு மிருப்பதினால் மனிதன் தம்மோடே ஒப்புரவாகும்படி அவர்தாமே தெரிந்தேற்படுத்திய ஓர் முறைமையாயும் இருக்கிறது. மனுஷன் (நிர்மூடனாயிருந்தாலன்றி) தன்னிலும் வல்லமையுள்ளவரும் சர்வத்தையும் ஆளுகிறவருமாகிய தேவனிடத்தில் தர்க்கித்து, அவரை நோக்கி, 'நீர் என்ன செய்கிறீர்?' என்று கேட்பது தகுதியாயிராது. அப்படியே

அவர் தெரிந்துகொண்ட முறை எதுவோ அதற்கிணங்கி மற்றதில் போலவே இதிலும் 'அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக' என்று சொல்வதே மெய்ஞ்ஞானமாம். இதுவே நிதான புத்திக்கு அடையாளம்.

8. மேலும், பாவியானவன் தம்மோடு ஒப்புரவாகும் வழியைத் தேவன் தயவாய் ஏற்படுத்தித் தம்மை விட்டு நம்மை விலக்கிவிடாமலும் நம்மை முற்றிலும் மறந்துபோகாமலு மிருப்பதேன்? அவருடைய சுத்தக்கிருபையும் கைமாறில்லாத அன்பும் அபாத்திரருக்குப் பாராட்டும் இரக்கமுமே இதற்குக் காரணம். ஆகையால், அவருக்குத் துரோகஞ்செய்து நெடுங்காலமாய் அவருக்கு விரோதமாய் முரட்டாட்டம்பண்ணிக் கலகஞ்செய்கிற சத்துருக்கள் தம்மிடம் தயவு பெற்றுக்கொள்ளும்படி தமது உருக்க இரக்கத்தினாலும் அபாத்திரருக்குப் பாராட்டும் கிருபையினாலும் ஏற்படுத்தியிருக்கிற முறை எதுவோ அதை நன்றியறிதலோடே ஏற்றுக்கொள்ளுவதே ஞானம் என்பதற்கு ஐயமில்லை.

9. கவனிக்கவேண்டிய இன்னொரு குறிப்பு சொல்லுகிறேன். மேன்மையான ஒரு நோக்கத்தை அடையும்படி தகுந்த யத்தனங்களைக் கையாடுவது ஞானம். எந்தச் சிருஷ்டியாயினும் நாடித் தேடவேண்டிய மேலான நோக்கம் தேவனுக்குள் அடைந்துகொள்ளும் ஆநந்த பாக்கியமே. கெட்டுப்போன சிருஷ்டியாகிய மனுஷன் நாடவேண்டிய மேலான நோக்கமென்ன? இழந்துபோன தேவ சாயலையும் தேவ தயவையும் திரும்பப் பெற்றுக்கொள்வதுதான். ஜீவனைப்பார்க்கிலும் மேன்மையான தேவ தயவையாகிலும் ஆத்துமாவுக்கு மெய் ஜீவனாகிய தேவ சாயலையாகிலும் மனிதன் திரும்ப அடைந்துகொள்ளும்படி வானத்திற்குக் கீழ் ஏற்பட்டிருக்கும் ஒரே மேலான யத்தனம் என்னவென்றால், விசுவாசத்தினாலாகும் நீதிக்குக் கீழ்ப்படிவதே அதாவது, தேவனுடைய ஒரேபேறான குமாரனிடத்தில் விசுவாசம் வைப்பதேயாம்.

III. 1. பாவமன்னிப்புப்பெற்றுத் தேவனோடு ஒப்புரவாகி அவருடைய தயவைப் பெற்றுக்கொள்ளும்படி வாஞ்சிக்கிறவனே, 'நான் முதலாவது இன்னின்னதைச் செய்யவேண்டும். நான் முதலில்



ஒவ்வொரு பாவத்தையும் ஜெயிப்பேன். துர்ச்சம்பாஷணை, துர்க்கிரியை ஒவ்வொன்றையும் விலக்கிவிட்டு எல்லா மனுஷருக்கும் நன்மை செய்வேன். முதலில் நான் தேவாலயத்துக்குப் போய், கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பெற்று, இன்னும் பல பிரசங்கங்கள் கேட்டு, இன்னும் அதிகமாய் ஜெபிப்பேன்' என்று உன்னிருதயத்தில் சொல்லிக்கொள்ளாதே. அப்படிச் சொல்லுவாயானால், ஐயோ, என் சகோதரனே, நீ செல்லவேண்டிய பாதையை விட்டு விலகிவிட்டாய்: நீ தேவநீதியை இன்னும் அறியாமல் 'தேவனோடு ஒப்புரவாகிறதற்கு உன் சுயநீதியையே ஆதாரமாக நிலைநிறுத்தத் தேடுகிறாய். நீ தேவனோடு ஒப்புரவாகிறவரையில் பாவமே தவிர வேறொன்றும் செய்யச் சக்தியற்றவன் என்பதை அறியாயோ? அப்படியிருக்க, செய்யவேண்டிய கிரியைகளை நினைக்காமல்' முதலாவது விசுவாசத்தைப்பற்றி நினை. உன் பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலியாகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வை. முதலில் இந்தப் பலமான அஸ்திபாரத்தைப் போடு, அப்புறம் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்வாய்.

2. மேலும் நான் இன்னும் போதுமானபடி நல்லவனாகவில்லை. ஆதலால் தேவன் என்னை அங்கீகரிக்கமாட்டாரென்றும் உன் உள்ளத்தில் சொல்லாதே. தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதாக இக்காலத்திலாவது இதற்கு முன்னாவது போதுமானபடி நல்லவனாயிருந்தவனுண்டோ? ஆதாமின் சந்ததியில் இவ்விதமாக நல்லவனாயிருந்தவன் எவன்? அல்லது உலக முடிவுக்குள் இப்படி யிருக்கத்தக்கவன் யார்? நீயோ சற்றேனும் நல்லவனேயல்ல. உன்னிடத்தில் யாதொரு நன்மையுங் கிடையாது. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விசுவாசம் வைக்கும்வரையில் நீ நல்லவனாகவுமாட்டாய். நல்லவனாகிறதற்குப் பதிலாக அதிகமதிகமாய்க் கெட்டுப்போகிறதாகவே காண்பாய். ஆனால் நீ அங்கீகரிக்கப்படும்பொருட்டு அதிகமாய்க் கெட்டுப்போவது அவசியமா? நீ இப்போதே போதுமானபடி கெட்டுப்போயிருக்கவில்லையா? கெட்டுப்போயிருக்கிறாய் என்பது மெய்யே. தேவன் அதை அறிவார். நீயுமதை மறுக்க முடியாது. பின்னை ஏன் தாமதிக்கிறாய்? எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. 'நீ எழுந்து உன் பாவங்கள் போகக் கழுவப்படு.' ஊற்று இப்போது பாய்ந்துகொண்டி

ருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் உன்னைக் கழுவி வெண்மையாக்கிக் கொள்ளுவதற்கு இதுவே காலம்; அவர் உன்னை 'ஈசோப்பினால் சுத்திகரிக்க நீ சுத்தமாவாய். அவர் உன்னைக் கழுவ நீ உறைந்த மழையிலும் வெண்மையாவாய்.'

3. 'பாவத்தைப்பற்றி எனக்குள் சரியான மனஸ்தாபமில்லை. போதுமானபடி பாவ உணர்வு வரவில்லை' என்றும் சொல்லிக் கொள்ளாதே. அது மெய்தான். இப்போதிருக்கிறதைப்பார்க்கிலும் உனக்குள் பாவ உணர்வும் உத்தம மனஸ்தாபமும் ஆயிரமடங்கு அதிகமாயிருக்க விரும்புகிறேன். ஆயினும் இதினிமித்தம் தாமதியாதே. ஒருவேளை நீ விசுவாசிக்குமுன் அல்ல, விசுவாசிப்பதினால் இப்படிப்பட்ட இருதயத்தைத் தேவன் உனக்குள் உண்டாக்குவார். உனக்கு அதிகம் மன்னிக்கப்பட்டதால் அதிகமாய் அன்புகூரும் வரையில் உத்தம மனஸ்தாபக்கண்ணீர் அதிகமுண்டாகாதிருக்கலாம். இதற்கிடையில் இயேசுவை நோக்கிப் பார். இதோ அவர் உன்னிடத்தில் எவ்வளவு அன்பாயிருக்கிறார். அவர் உனக்காகச் செய்யவேண்டியதை எல்லாம் செய்திருக்கிறார். அதுவே போதும்.

நீர் பட்ட கஸ்தியும்
காட்டிய பேரன்பும்
முற்றும் ஒப்பற்றதே
தேவாட்டுக்குட்டியே.

அவர் உன்னை நோக்கிப்பார்த்து உன் கடின இருதயம் இளகச்செய்யும்வரையில் உன் கண்கள் அவரையே உறுதியாய் நோக்கிக் கொண்டிருக்கட்டும். அப்போது உன் கண்கள் கண்ணீரூற்று ஆகும்.

4. பின்னும், 'நான் கிறிஸ்துவினண்டை வருமுன் இன்னும்செய்ய வேண்டியவைகளநேகமுண்டே' என்று சொல்லாதே. உன் ஆண்டவர் வரத் தாமதித்தால், உன்னால் கூடியவரை அவர் கட்டளைப்பிரகாரம் நடந்து அவர் பிரசன்னத்துக்காகக் காத்திருப்பது தகுதியும் நியாயமுமாயிருக்கலாம். ஆனால் அவ்வாறு உத்தேசிக்க யாதொரு அவசியமுமில்லை. அவர் தாமதிப்பார் என்றெப்படித்தெரியும். ஒருவேளை விடியற்கால வெளிச்சத்துக்குமுன் உன்னதத்திலிருந்து தோன்



றும் அருணோதயம்போல் அவர் தோன்றுவார். அவருடைய வருகைக்கு நேரங் குறியாதே. எக்காலமும் அவரை எதிர்பார்த்துக் கொண்டிரு. இப்போதே சமீபமாய் வாசற்படியில் நிற்கிறார்.

5. உன் பாவங்கள் மன்னிக்கப்படுமுன் நீ அதிக உண்மையுள்ளவனாகவேண்டும் என்று காத்திருப்பதேன்? தேவகிருபையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உன்னை அதிக பாத்திரவானாக்கிக்கொள்ளலாமா? அப்படியானால் ஐயோ, நீ இன்னும் உன் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறாயே. நீ அவருடைய இரக்கத்துக்குப் பாத்திரவானாயிருக்கிறதினிமித்தமுமல்ல, நீ நீதிமானாயிருப்பதினிமித்தமுமல்ல, அவர் மட்டற்ற கருணையுள்ளவராயிருப்பதினிமித்தமும் இயேசுகிறிஸ்து உன் பாவங்களுக்காகப் பிராயச்சித்தஞ் செய்திருப்பதினிமித்தமே அவர் உனக்குக் கிருபை அருளுவார்.

மேலும் உண்மையுள்ளவனாயிருப்பதினால் நன்மையுண்டென்று நினைத்தாலும் நீ விசுவாசிக்குமுன் உண்மையுள்ளவனாயிருப்பதெப்படி? எல்லா நற்குணத்துக்கும் பரிசுத்தத்துக்கும் விசுவாசமே ஆதாரமாயிருக்கிறது.

யாவற்றிற்கும் மேலாக, நீ தேவனிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், பாவமன்னிப்புக் கிடைக்குமுன் நீ செய்கிற எந்தக் கிரியையினாலாவது, உன்னிடமிருக்கிற எந்த நற்காரியத்தினாலாவது பிரயோஜனமுண்டாகாதென்பதை எவ்வளவுகாலம் மறந்துபோயிருப்பாய்? இவை யாவையும் உன் பின்னே எறிந்து உன் காலின்கீழ் மிதித்து உதவாதென்று தள்ளிப்போடவேண்டும். மற்றப்படி தேவசமுகத்தில் ஒருபோதும் தயவு பெற்றுக்கொள்ளமாட்டாய். இவைகளைத் தள்ளிவிடுகிறவரையில், நீ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரனின் புண்ணியங்களையன்றி தேவ சமுகத்தில் கொண்டுபோய்ச் செலுத்த யாது புண்ணியமு மற்றவனாயிருக்கிறேனே என்று உணரமாட்டாய். அப்படி உணராததினால், பாவத்தினால் சீர்கெட்டலைந்துபோன ஒரு குற்றவாளி தன் குற்றத்தை உணர்ந்து கெஞ்சி மன்றாடுவதுபோல் நீ மன்றாட முடியாது.

6. கடைசியாக, மரண ஆக்கினையைப் பெற்று ஆக்கினைத்தீர்ப்புக் குட்பட்டிருப்பதாகவும், தேவகோபம் தலைமேல் நிற்பதாகவும் உணருகிற மனுஷனே, நீ யாராலுஞ்சரி, தேவன் உன்னைப் பார்த்து, நீ என்னுடைய சகல கற்பனைகளின்படியேயும் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடந்தால் பிழைப்பாய் என்று சொல்லாமல், 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்' என்று சொல்லுகிறார். 'இந்த விசுவாசத்தின் வார்த்தை உனக்குச் சமீபமாயிருக்கிறது.' ஆகையால் இப்போதே, இச்சணமே, நீ இருக்கிற நிலைமையில், பாவியாகவே, நீ இருக்கிற வண்ணமாகவே, சுவிசேஷத்தை விசுவாசி, 'நான் உன் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, உன் அக்கிரமங்களை இனி நினையாதிருப்பேன்' என்கிறார்.

## வினாக்கள்.

1. மோசேயின் ஏற்பாட்டுக்குட்பட்டவர்களும் கிருபைக்குட்பட்டவர்களே என்று உவெஸ்லி ஐயர் எவ்வாறு காண்பிக்கிறார்?

பிரிவு. I. 1. பார்க்க.

2. 'ஏறினவன் யார் இறங்கினவன் யார்' என்னும் வார்த்தைகளை எவ்வாறு தாற்பரியப்படுத்துகிறார்?

பிரிவு. I. 6. பார்க்க.

3. நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியில் நம்பிக்கை வைப்பது மதியீனம் என்பதை எவ்வாறு ரூபிக்கிறார்?

பிரிவு. II. 1, 2, 3, 4, 5. பார்க்க.

4. விசுவாசத்தினாலாகும் நீதிக்குக் கீழ்ப்படிவதே ஞானம் என்று காண்பிக்கும்படி சொல்லுகிற மூகாந்தரங்களெவை?

பிரிவு. II. 6, 7. பார்க்க.

5. 'பாவத்தைப்பற்றி எனக்குள் சரியான மனஸ்தாபமில்லை' என்று உத்தம மனஸ்தாபத்துடன் ஆக்ஷேபிக்கிற ஒருவனுக்குச் சொல்லத்தக்க பதிலென்ன?

பிரிவு. III. 3. பார்க்க.



6. 'நான் சரியானபிரகாரம் உண்மையுள்ளவனல்ல' என்று சொல்லுகிறவனுக்கு என்ன மறுமொழி சொல்லலாம்?

பிரிவு. III. 5. பார்க்க.

7. பாவமன்னிப்பின் நிச்சயத்தை உடனே பெற்றுக்கொள்ளாததினால் திகைக்கிற ஒரு பாவிக்குச் சொல்லத்தக்க ஆலோசனையாது?

பிரிவு. III. 4. பார்க்க.

8. இவ்வசனத்தின் கருத்தையும் இப்பிரசங்கத்தின் படிப்பினையையும் துலாம்பரமாய்க் காட்டுகிற ஞானப்பாட்டு எது?

Methodist Hymn Book 397.

பழைய பிரதியில் 192.

# மூன்றும் பிரசங்கம்.

THE WAY INTO THE KINGDOM OF GOD.

## தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் வழி.

*'தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.'*

*மாற்.* 1: 15.

இவ்விடத்தில் தேவனுடைய இராஜ்யமென்பது, மெய்ப்பக்தியைக் குறிக்கும். 'தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிருக்கிறதென்றும்,' அதில் பிரவேசிக்கவேண்டுமானால் 'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டுமென்றும்' நமதாண்டவர் சொல்லுகிறார். ஆகையால் இவ்வசனத்தைக்கொண்டு முதலாவது, தேவனுடைய இராஜ்யமாகிய மெய்ப்பக்தியின் தன்மை யின்னதென்றும், இரண்டாவ்து, இந்த இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும் வழி எது என்றும் பார்ப்போம்.

1. தேவனுடைய இராஜ்யமென்று நமதாண்டவர் சொல்லுகிற மெய்ப்பக்தியின் தன்மை யென்னவென்று முதலாவது பார்ப்போம். பவுல் அப்போஸ்தலன் இதே பதங்களை ரோமர் நிருபத்தில் உபயோகித்து அதில் இவ்வார்த்தைகளின் கருத்து இன்னதென்று விவரித்துக் காட்டியிருக்கிறான். 'தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது' என்று ரோமர், 14: 7–ல் சொல்லியிருக்கிறது.

2. மெய்ப்பக்தி என்கிற தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல. அவிசுவாசிகளான யூதர் மாத்திரமல்ல கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாயிருந்த யூதரிலும் அநேகர் மோசேயின்



சடங்குப்பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களா யிருந்தார்களென்பது தெரிந்த விஷயமே (அப். 21: 20.). ஆகையால் போஜனபான பலிகளைக் குறித்தாவது, சுத்த அசுத்த போஜனங்களைக் குறித்தாவது மோசேயின் ஆகமத்தில் எழுதியிருக்கிறவைகள் எவைகளோ அவைகளைத் தாங்களே அநுசரித்து வந்ததுமன்றித் தேவனிடத்துக்கு மனந்திரும்பின புறஜாதியாரும், மெய்க்கடவுளை அறியாதவர்களும், அவைகளைக் கட்டாயமாய் அநுசரிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். இவர்களி லநேகர் தாங்கள்போன இடங்களிலெல்லாம் 'நீங்கள் விருத்தசேதனமடைந்து நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள்' என்று போதித்துவந்தார்கள். (அப். 15: 1, 24.)

3. பவுல் அப்போஸ்தலனோ இதற்கு மாறாக, மெய்ப்பக்தியானது, புசிப்பும் குடிப்புமல்ல, அது சடங்காசாரமுமல்ல, அல்லது இருதயத்துக்குச் சம்பந்தமில்லாத எந்தக் கிரியையுமல்ல, அதின் சாராம்சமெல்லாம் 'நீதியும் சமாதானமும் பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமே' என்று இங்கும் வேறு அநேக இடங்களிலும் சொல்லியிருக்கிறான்.

4. மெய்ப்பக்தியானது சடங்காசார முறைமைகளாகிய புறம்பான காரியங்களுக்கடுத்ததல்ல. இவை மகா மேலானதும் மரியாதையானதும் நற்கருத்துள்ளதும், உள்ளான பொருளுக்குப் புறம்பான அடையாளமுமா யிருந்தபோதிலும் இவை மெய்ப்பக்தியாகாது. தாங்கள் காண்பதற்கு மிஞ்சிக் கிரகிக்க சக்தியற்ற அறிவீனருக்கு மாத்திரமல்ல, புத்தி தீக்ஷண்யமுள்ளவர்களுக்குங் கூடச் சிலவேளைகளில் இவைகள் அநுகூலமாயிருப்பது மெய்யே; ஆயினும் யூதர்களுக்கு ஏற்பட்டிருந்ததுபோல இச்சடங்காசாரங்கள் தேவனால் நியமிக்கப்பட்டவைகளாயிருப்பினும், அவைகளை அநுசரிக்கவேண்டுமென்கிற கட்டளை உத்தமமாயிருப்பினும், சடங்காசாரங்களை அநுசரிப்பது மெய்ப்பக்தியென்று சொல்லவே முடியாது. இவ்வளவு சிறப்புப்பெற்ற சடங்காசாரங்களே மெய்ப்பக்தியாகாதிருக்க மனுஷர் நியமித்த ஆசாரங்கள் மெய்ப்பக்தி யாவதெப்படி? கிறிஸ்து இயேசுவினாலுண்டான மெய்மார்க்கமோ இவை யாவிலும் சிறந்ததும் ஆழ்ந்த கருத்துமுள்ளது. சடங்காசாரங்கள் அவசியமல்ல

வென்று நாம் சொல்லத் துணியோம். அவைகள் மெய்ப்பக்திக்கு எவ்வளவுதூரம் அநுகூலமாயிருக்குமோ அவ்வளவுக்கு அவைகள் நன்மையானவைகளே. மனுஷ பெலவீனத்தினிமித்தம் வேளாவேளைகளில்கூட இவைகளை உபயோகிப்பது தகுதியல்லவென்று ஆட்சேபிப்பது வீண் போராட்டமே. ஆனால் சடங்காசாரங்களைக் குறித்து ஒருவனும் இதற்கு மிஞ்சி எண்ணாதிருப்பானாக. இவைகளை விலையுயர்ந்தவைகளாக மதித்து இவைகளின்றி மெய்ப்பக்தி யிராதென்று எண்ணுவது தகாது. இப்படி எண்ணினால் அவைகள் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும்.

5. ஜெபதப முறைகளும் சடங்காசாரங்களும் எப்படி மெய்ப் பக்தியில்லையோ அப்படியே எவ்வித புறம்பான கிரியையும் மெய்ப் பக்தியாகாது. பொல்லாங்கான துன்மார்க்கக் கிரியைகளை நடப்பிக்கிற மனுஷன் மெய்ப்பக்த னல்லவென்பது திண்ணம். மேலும் தன்னைப்போன்ற நிலைமையிலுள்ளவர்கள் தனக்குச் செய்ய விரும்பாததை மற்றவர்களுக்குச் செய்கிறவன் மெய்ப்பக்தி யுள்ளவனென்றும் சொல்ல ஏதுவில்லை. அப்படியே “ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாவிட்டால்” அவனிடத்தில் மெய்ப்பக்தி சற்றெனகிலும் இல்லையென்பது பிரத்தியட்சம். ஒருவன் வெளியரங்கமான தீமையை அகற்றி நன்மையையே செய்தும் மெய்ப்பக்தி யற்றவனாயிருக்கக்கூடும். எப்படியெனில், பசித்தவர்களுக்கும் வஸ்திரமற்றவர்களுக்கும் அன்னவஸ்திரம் கொடுப்பதாகிய புறம்பான கிரியைகளைச் செய்யும் இருவர் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இவர்களிருவரும் ஒரே நற்கிரியையைச் செய்த போதிலும் இவர்களி லொருவன் மெய்ப்பக்தி யுள்ளவனும் மற்றவன் பக்தியற்றவனுமாயிருக்கலாம். எப்படியென்றால், ஒருவன் தேவன் மீதுள்ள அன்பினால் செய்கிறான், மற்றவனோ புகழ்ச்சியை நாடிச் செய்கிறான். ஆகையால் மெய்ப்பக்தியானது நல்வார்த்தைகளைப் பேசி நற்கிரியைகளைச் செய்யும்படி மனுஷனைத் தூண்டிவிட்டபோதிலும் அதின் சரியான தன்மை ‘இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே’ என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது.

6. மெய்ப்பக்தியானது இருதயத்திலுள்ளது என்று சொன்னேன். ஆகையால் வேதவிசுவாசத்தையாவது நியாயமான கொள்கையையாவது மெய்ப்பக்தி என்று சொல்லக்கூடாது. எப்படியென்றால், இவை தோன்றுகிற விஷயங்களுக் கடுத்ததாயிராவிடினும், புத்திக்கடுத்ததேயன்றி இருதயத்துக்கடுத்தவை அல்ல. ஒருவன் (சகல விஷயத்திலும்) வேத விசுவாசியாயிருக்கலாம். அவன் தனது கொள்கை அபிப்பிராயங்களில் சரியாயிருப்பதுமன்றி எதிரிகளுக்குத் தகுந்த நியாயங்கள் எடுத்துரைத்துத் தன் கொள்கைகளை வைராக்கியத்துடன் நிலைநிறுத்தக் கூடியவனாயுமிருக்கலாம். நமதாண்டவரின் மனுஷாவதாரத்தைக் குறித்தும் வேதாகமத்திலுள்ள மற்ற உபதேசங்களைக் குறித்தும் அவன் சரியான அபிப்பிராயமுடையவனாயிருக்கலாம். அப்போஸ்தலர், நீசெயா, அதனாசி என்பவர்களின் விசுவாசப்பிரமாணம் ஒவ்வொன்றையும் ஒப்புக்கொண்டவனாயிருக்கலாம். இப்படி யெல்லாமிருந்தும் இவன் பக்தியற்றவனா யிருக்கக்கூடும். தன் கொள்கை அபிப்பிராயங்களில் பிசாசானவனைப் போல தவறுதலற்றவனா யிருக்கக்கூடும். (மனுஷன் வேத விசுவாசத்தில் பிசாசானவனுக்குப் பூரணமாய் ஒத்திருப்பானென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் மனுஷன் ஏதாவதொன்றில் தவறக்கூடியவன். பிசாசானவனோ தப்பறையான அபிப்பிராயமுள்ளவனென்று நாம் நினைக்க ஏதுவில்லை.) இப்படி யெல்லாமிருந்தும் பிசாசானவனைப்போலக் காலமெல்லாம் இருதய பக்தியற்றவனாயிருப்பதும் கூடியதே.



7. இருதய பக்தியே மெய்ப்பக்தி. இதையே பராபரன் விலையுயர்ந்ததாக மதிக்கிறார். பவுல் அப்போஸ்தலன் ‘நீதி, சமாதானம், பரிசுத்தாவியினா லுண்டாகும் சந்தோஷம்’ என்கிற மூன்று விஷயங்களுக்குள் இதைத் திரட்டி அடக்கியிருக்கிறான். அதில் முதலாவது நீதி. இதின் இரண்டு பிரதான பிரிவுகள் எவையென்றும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்கள் யாவும் இதற்குள் அடங்கியிருக்கிறதென்றும் நமதாண்டவர் விவரித்திருக்கிறார். அவர் சொன்ன வார்த்தைகள் ஞாபகமிருக்குமாகில் இந்த நீதி யென்னவென்று அறியாமல் திகைக்கமாட்டோம். ‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை’ (மாற். 12: 30.). இதுவே கிறிஸ்தவ நீதியின்

விசேஷித்த முதற் பிரிவு. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருந்து சகல பாக்கியத்தையும் அவரிடத்தில் தேடிக் கண்டுபிடி. இம்மைக்கும் மறுமைக்கும் 'அவரே உனக்குக் கேடகமும் மகா பெரிய பெலனுமாயிருப்பார்.' 'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்பமில்லை' என்று உன்னிலுள்ள யாவும் சொல்லக்கடவது. 'என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா' என்றழைக்கிறவரின் சத்தத்தைக் கேட்டு அவருடைய கட்டளையைக் கைக்கொள். உன் உள்ளான இருதயத்தில் அவர் சமூலமாய் ஆளுகை செய்யும்படி இடங்கொடுப்பாயாகில் உன் உள்ளம் பொங்கி 'என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருக்கமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமா யிருக்கிறார்' என்று சத்தமிட்டுச் சொல்லுவாய்.

8. இரண்டாம் கற்பனையும் இதற்கொப்பானதே. 'உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்பதே அக்கற்பனை. கிறிஸ்தவ நீதியின் இரண்டாம் பிரதான பிரிவாகிய இக்கற்பனை முந்தினதை விட்டுப் பிரிக்க முடியாதபிரகாரம் இசைந்திருக்கிறது. '**அன்புகூருவாயாக**' என்பதின் கருத்தென்ன? பிறன்மீது உருக்கமான நல்மனமும் ஊக்கமான பட்சமும் நிறைந்தவனாய் அவனுக்குத் தீமை நேரிடாதபடி பார்த்து, நேரிட்ட தீமையினின்றும் அவனை விலக்கித் தற்காத்து, அவனுக்குத் தன்னாலியன்ற நன்மைகளைச்செய்ய ஆவலாய் வாஞ்சிப்பதே அன்புகூருவதாம். **பிறன் யார்?** உன் சிநேகிதனும் உன் இனத்தானும் உனக்கு அறிமுகமானவனுந்தானோ பிறன்? சன்மார்க்கனும் உன் இஷ்டனும், உன்னை நேசிக்கிறவனும் உனக்கு நன்மை செய்யக் கருதுகிறவனும் உனக்குப் பிரதி உபகாரஞ் செய்கிறவனுந்தான் பிறன் ஆவானோ? ஒவ்வொரு மனுபுத்திரனும், நரஜென்மி ஒவ்வொருவனும், தேவன் சிருஷ்டித்த ஒவ்வொரு ஆத்துமாவும் உனக்குப் பிறன்தான். நீ ஒருபோதும் பார்த்திராதவனும், உனக்கறிமுகமில்லாதவனும், பெயர் ஊர் தெரியாதவனும் உனக்குப் பிறன்தான். பொல்லாதவனானாலும், நன்றியற்றவ



னானாலும், உன்னை நிந்தித்துத் துன்பப்படுத்துகிறவனானாலும் ஒவ்வொருவனும் உனக்குப் பிறனே. உன்னிடத்தில் அன்புகூருவது போல என்பதின் கருத்தென்ன? எவ்விஷயத்திலும் உன்னைப் போலவே பிறனுடைய வாழ்வைக் குன்றாத வாஞ்சையுடன் நாடி, அவனுடைய சரீர ஆத்துமத்துக்குத் தீமை நேரிடாதபடி தளரா முயற்சியுடன் கவலையாயிருப்பதேயாம்.

9. மேலும், 'நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்' கிறிஸ்தவ நீதியாகிய உள்ளான புறம்பான நீதியின் மொத்த அடக்கமும் அன்பல்லவோ? 1-வது உள்ளான நீதி இதற்குள்ளடங்கியிருக்கிறது. எப்படியெனில், 'அன்பு இறுமாப்பா யிராததினாலே' அது 'உருக்கமான இரக்கமும் மனத்தாழ்மையுமுள்ளது.' மேலும் அது 'தயவு, சாந்தம், நீடிய பொறுமையுள்ளது.' ஏனென்றால் 'அன்பு சினமடையாமல் சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.' 2-வது புறம்பான நீதி இதற்குள்ளடங்கியிருக்கிறது. எப்படியெனில், வாக்கினாலாவது, கிரியையினாலாவது அன்பானது, 'பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது.' அன்பு மனமறிய யாருக்கும் தீமை செய்கிறதுமில்லை. வருத்தமுண்டாக்குகிறதுமில்லை. தீமையை ஒழிப்பது மாத்திரமல்ல, நற்கிரியைகளைச் செய்யவும் வைராக்கியமுள்ளதாயிருக்கும். பிறனை நேசிக்கிறவன், பட்சபாதமும் மாயமுமற்ற 'இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்தவனா யிருக்கிறபடியினாலே' தனக்குக் கிடைக்கும் சமயத்துக்குத்தக்கதாக யாவருக்கும் நன்மை செய்வான்.

10. ஒருவன் மெய்ப்பக்தனாய் அல்லது தேவனுக்கும் மனுஷனுக்கும் முன் உத்தம இருதயம் உள்ளவனாயிருப்பானாகில், அவன் பரிசுத்தனாயும் பாக்கியசாலியாயு மிருப்பான். எப்படியெனில், மெய்ப்பக்தி என்பது நீதியாய் மாத்திரமல்ல; 'நீதியும், சமாதானமும், பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.' இது எத்தன்மையதான சமாதானம்? தேவன்மாத்திரம் அருளக்கூடியதும் 'உலகம் எடுத்துப்போடக் கூடாததுமான தேவ சமாதானம்.' 'அது எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானமாதலால்,' நமது பகுத்தறிவுக்கு மிஞ்சினது; அது 'இனிவரும் பெலன்களை ருசிபார்க்கச்' செய்கிறதான உன்னத தெய்வீக உணர்வாயிருக்கிறது. ஜென்ம சுபாவ

மான மனுஷன் லௌகிக விஷயங்களில் எவ்வளவு ஞானமுள்ளவனா யிருந்தாலும் இது என்னவென்று அறியான். அது 'ஆவிக்கேற்ற பிரகாரமாய் நிதானிக்கப்படுகிறபடியால்' ஜென்ம சுபாவமானவன் இதை அறிந்துகொள்வதும் கூடியதல்ல. ஒரு கிறிஸ்தவன் தான் 'தேவனுடைய பிள்ளை' என்பதற்கு தேவனுடைய ஆவியானவர் அவனுடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறபடியினால் இச்சமாதானம் சகல சந்தேகங்களையும், மனவேதனை உண்டுபண்ணக் கூடிய எவ்வித சமுசயத்தையும் அகற்றிவிடுகிறது. தேவனை உண்டாக்குகிற எவ்வித பயமும் இதற்குமுன் நிற்காது. தேவகோபம், நரகம், பிசாசு, விசேஷமாய் மரணம் முதலியவற்றைப்பற்றிய பயம் யாவையும் இச்சமாதானம் அகற்றிவிடும். இச்சமாதானமுள்ளவன் தேவனுக்குச் சித்தமானால் 'தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க விரும்புகிறான்.'

11. எந்த ஆத்துமாவில் இந்தச் சமாதானம் தங்கியிருக்கிறதோ அங்கே 'பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமிருக்கும்.' இந்தச் சந்தோஷத்தை, தேவனுடைய ஆவியாகிய மகத்துவ பரிசுத்தாவியானவர் இருதயத்தில் அருளிச்செய்கிறார். தேவனோடு ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவின் மூலமாய், தேவனுக்குள் சாந்தமுள்ள தாழ்மையான மனச்சந்தோஷத்தை நமக்குண்டுபண்ணுகிறவர் அவரே. 'எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்' என்று சங்கீதக்காரன் உரைத்திருக்கிற சத்தியம் உண்மையானதுதான் என்பதை நாம் நமது அனுபவத்தினால் உறுதிப்படுத்தும்படி செய்கிறவரும் அவரே. தான் தேவனுடைய பிள்ளையென்று பரிசுத்தாவியானவர் சாட்சி பகருவதினால் உண்டாகிற மெய்ச்சந்தோஷத்தைக் கிறிஸ்தவனின் இருதயத்தில் உண்டுபண்ணுகிறவரும் அவரே. இப்போது தனக்குள் குறைவாயும் இனிமேல் பூரணமாயும் வெளிப்படப்போகிற மகிமையுள்ள தேவசாயலைப்பற்றியும் பரலோகத்தில் தனக்காக வைக்கப்பட்டிருக்கிற வாடாத மகிமையுள்ள கிரீடத்தைப்பற்றியும் அவன் நம்பிக்கையுள்ளவனா யிருக்கிறான். 'தேவ மகிமை யடைவோம்' என்கிற இவ்வித நம்பிக்கையினாலே சொல்லி முடியாத சந்தோஷமுள்ளவனாய்க் களிகூரச் செய்கிறவரும் அவரே.



12. வேதாகமங்களில் இந்தப் பரிசுத்தத்தையும் சந்தோஷத்தையும் ஒன்றாகச் சேர்த்து இவ்வசனத்தில் சொல்லியிருக்கிறபிரகாரம் 'தேவனுடைய ராஜ்யம்' என்றும் சில வேளைகளில் 'பரலோக ராஜ்யம்' என்றும் கூறியிருக்கிறது. தேவன் ஆத்துமாவில் ஆளுகை செய்வதின் பலனாக இவ்வித பரிசுத்த பாக்கியம் உண்டாவதினால் இதைத் 'தேவனுடைய ராஜ்யம்' என்று சொல்லியிருக்கிறது. தேவன் இந்த வல்லமையுள்ள அதிகாரத்தைத் தாமே கைப்பற்றிக்கொண்டு நமதிருதயங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்த அந்நிமிஷமே நமதிருதயம் இந்த 'நீதி, சமாதானம், பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷத்தினால்' நிறைகிறது. நமதாத்துமா பரலோக இன்பத்தை ஓர் அளவாக இவ்வுலகத்திலேயே அனுபவிப்பதினால் இதைப் 'பரலோக ராஜ்யம்' என்றும் சொல்லுவதுண்டு. இச்சந்தோஷத்தை அனுபவிக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் தேவ தூதருக்கும் மனுஷருக்கும் முன்பாக

சாகா ஜீவனைப் பெற்றோம்
பாரில் மகிமை கண்டோம்,

என்று அறிக்கையிடுவார்கள். வேதம் பல இடங்களிலும் இதற்கிசையச் சாட்சியிடுகிறது. எப்படியெனில், 'தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனிலிருக்கிறது.' 'குமாரனை யுடையவன்' அதாவது, குமாரன் தன்னிருதயத்தில் ஆளுகை செய்யும்படி இடங்கொடுத்திருக்கிறவன், 'ஜீவனை யுடையவன்' (1 யோவா. 5: 11, 12.) அதாவது நித்திய ஜீவனை யுடையவன். ஏனென்றால், 'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்' (யோவா. 17: 3.). இதைப் பெற்றுக்கொண்டவர்கள் அக்கினிச்சூளையின் மத்தியிலிருந்தும் நம்பிக்கையோடு தேவனை ஸ்தோத்திரிக்கலாம்.

13. 'பரலோக ராஜ்யமாகிய தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று சொல்லியிருக்கிறது. இந்த வார்த்தைகள் சொல்லப்பட்ட காலத்தில் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டிருந்தபடியினால் அவர் மனுஷருக்குள் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து அவர்

களுடைய இருதயங்களில் அரசாட்சி செய்யுங்காலம் அப்போதே சமீபமாயிருந்ததென்பது இவ்வார்த்தைகளின் கருத்தாம். அப்போதே காலம் நிறைவேறியிருந்ததானால் இப்போது நிறைவேறவில்லையோ? அவர் 'இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும்' என் நாமத்தினால் பாவமன்னிப்பைக் கூறி அறிவிக்கிற 'உங்களுடனேகூட இருக்கிறேன்' என்று சொல்லுகிறார் (மத். 28: 20.). ஆகையால் கிறிஸ்துவின் சுவிசேஷம் எங்கே பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் 'அவருடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது.' உங்களி லொருவருக்கும் அது தூரமானதல்ல. "மனந்திரும்பிச் சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்கிற அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்தால் இந்நிமிஷத்திலேயே இந்த ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கலாம்.

II. 1. இதுவே வழி, இதிலே நடவுங்கள். முதலாவது, 'மனந்திரும்புங்கள்' அதாவது, உங்களையே கண்டுகொள்ளுங்கள். இதுவே விசுவாசத்திற்குமுன் உண்டாகிற முதல் மனந்திரும்புதல். இதுவே பாவ உணர்வாகிய தன்னை அறிதல். ஆகையால் தூங்குகிற நீ விழித்து நீ உன்னைப் பாவியென்று மாத்திரமல்ல, எப்படிப்பட்ட பாவியென்றும், உன்னுடைய உள்ளான சுபாவக்கேடு எத்தன்மையானதென்றும் சிந்தித்துப்பார். உன் சுபாவக்கேட்டினால் நீ ஆதி நீதியை விட்டு விலகிப்போனாய். அதினாலே 'மாம்சம்' எப்போதும் 'ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது;' ஆனால் 'மாம்ச சிந்தையோ தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது.' உன் ஆத்துமாவின் வல்லமை தத்துவம் யாவும் கெட்டுப்போயிற்றென்றும், நீ முழுவதும் கெட்டுப்போயிருக்கிறாயென்றும் நீ அறிந்துகொள்ளவேண்டும். உன் ஞானக்கண் அந்தகாரப்பட்டிருப்பதினால் நீ தேவனையும், தேவனுக்கடுத்த விஷயங்களையும் நிதானித்தறிந்துகொள்ளக்கூடாது. அறிவீனம் தப்பறை என்னும் மேகமந்தாரம் உன்மேல் கவிய மரண நிழல் உன்னை மூடியிருக்கிறது. நீ தேவனையாவது, உலகத்தையாவது, உன்னையாவது அறியவேண்டியபிரகாரம் இன்னும் அறியவில்லை. உன் சித்தம் இன்னும் தேவசித்தத்துக்கு இணங்கினதாயிராமல் கோணலும் தாறுமாறுமுள்ளதா



யிருக்கிறது. நன்மையானவைகளையும் தேவன் விரும்புகிறவைகளையும் உன் சித்தம் வெறுத்துத் தீமையானவைகளையும் தேவன் வெறுக்கிறவைகளையும் விரும்புகிறது. உன் ஆசை யெல்லாம் தேவனை விட்டு விலகி நிற்கிறது. உன் விருப்பும் வெறுப்பும், உன் சந்தோஷமும் சஞ்சலமும், உன் நம்பிக்கையும் பயமுமாகிய ஆசாபாசங்கள் யாவும் நிலைகெட்டு மிதமிஞ்சிப் போனவைகளும் தகாத காரியங்களின் பற்றுதலுள்ளவைகளுமாயிருக்கின்றன. ஆதலால் உன் ஆத்துமாவில் ஆரோக்கியமேயில்லை. ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன விதமாய் 'உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அது காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமுள்ளது.'

2. உன் இருதயத்தின் சுபாவக்கேடு இதுவே. உன் உள்ளான சுபாவம் இவ்வளவாய்க் கெட்டுப்போயிருக்க, கெட்டுப்போன வேரினின்று எவ்வகைக் கிளைகள் துளிர்க்கும்? அவிசுவாசம் இதினின்று உற்பத்தியாகிறது. 'கர்த்தரைச் சேவிக்க அவர் யார்?' 'தேவனாகிய நீர் இதைக்குறித்துக் கவலைப்படுகிறதில்லை' என்று சொல்லி ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகிப்போகிறாய். உன்னதமானவரைப் போலிருக்க வேண்டுமென்கிற தன்னிஷ்டம் இதினின்று உற்பத்தியாகிறது. 'நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னன் என்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் எண்ணிக்கொள்ளும்படி உன்னைத் தூண்டிவிடுகிற பலவித பெருமைக்கும் உற்பத்தி ஸ்தானம் இதுவே. இந்தக் கெட்ட ஊற்றினின்றே வீண் ஆடம்பரம், சுயநாட்டம், பேராசை, பொருளாசை, மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்கிற கசப்பான நதிகள் உற்பத்தியாகின்றன. இதிலிருந்தே கோபம், பகை, வன்மம், பொறாமை, எரிச்சல், பொல்லாத சமுசயங்கள், தீமைக்குத் தீமை செய்தல் முதலியவை புறப்படுகின்றன. 'அநேக வேதனைகளினால் உன்னை உருவக் குத்துகிற' மதியற்ற தீமையான சிற்றின்ப ஆசைகள் யாவும் இங்கிருந்தே சுரக்கின்றன. இவைகளைத் தகுந்தகாலத்தில் நீ தடுக்காவிடில் உன் ஆத்துமா நித்தியகாலமாய் கெட்டுப்போம்.

3. இவ்வித கிளைகள் கொடுக்கும் கனிகள் எப்பேர்ப்பட்டதாயிருக்கும்? எக்காலத்திலும் கசப்பும் கெட்டவைகளுமாகவே யிருக்கு

மல்லவா? பெருமையினால் வாக்குவாதம், வீம்பு பேசுதல், பிறர் புகழ்ச்சியை நாடுதல் முதலானவை உண்டாகின்றன. பெருமையினால் தேவனுக்கேயுரிய மகிமையை நீ உனக்குரியதாக்கினாய். மாம்சத்தின் இச்சையினால் பேருண்டி, குடிவெறி, சிற்றின்பம், வேசித்தனம், அசுத்தம் - முதலிய தீமை உற்பத்தியாகிப் பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கும்படி நியமிக்கப்பட்ட சரீரத்தைப் பலவிதமாய்த் தீட்டுப்படுத்துகின்றது. அவிசுவாசத்தினின்று பற்பல தீயமொழிகளும் தீய செயல்களு முண்டாகின்றன. ஆனால் உன் தீமை யாவற்றையும் எண்ணிக் கணக்கிடவேண்டுமானால் காலம் போதாது. உன்னதமானவரைக் கோபமூட்டி இஸ்ரவேலின் பரிசுத்தரைத் துக்கப்படுத்தின உன் வீண் வார்த்தைகளைக் கணக்கிடக்கூடுமா? தன்னிலே குற்றமானதாயிருந்தாலுஞ்சரி, தேவநாம மகிமைக்கென்று செய்யப்படாததாயிருந்தாலுஞ்சரி, உன் துர்க்கிரியைகளைக் கணக்கிடப்போனால் காலம் போதாது. ஏனெனில் நீ நடப்பித்த பாவங்கள் சொல்லிமுடியாதவைகளும் உன் தலைமயிரிலும் ஏராளமானவைகளுமா யிருக்கின்றன. சமுத்திரத்து மணலையும் பெருமழையின் துளிகளையும் எண்ணக்கூடியவனே உன் அக்கிரமங்களையும் எண்ணக்கூடும்.

4. ‘பாவத்தின் சம்பளம் மரணம்’ என்பதை அறியாயோ? இது சரீர மரணமாய் மாத்திரமிராமல் நித்திய மரணமாயுமிருக்கிறது. ‘பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.’ கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. இந்த ஆத்துமா இரண்டாம் மரணத்தை அடையும். நித்திய மரணதண்டனை அடையவேண்டுமென்பதே இந்த ஆத்துமாவுக்கு உரைக்கப்பட்டிருக்கிற தீர்ப்பு. ‘அவர்கள் கர்த்தருடைய சன்னிதானத்தினின்றும் அவருடைய வல்லமைபொருந்திய மகிமையினின்றும் விலகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.’ ஒவ்வொரு பாவியும் எரிநரகத்திற்கென்று தீர்ப்புப் பெற்றிருக்கிறான் என்றறியாயோ? கிரேக்கு பதங்களை ‘எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்’ என்று மொழிபெயர்த்திருக்கிறது. இது அதின் கருத்தைப் பூரணமாய்க் காட்டவில்லை. ‘எரிநரகத்திற்கென்று தீர்ப்புப் பெற்றிருக்கிறான்’ என்பதே சரியான மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு பாவிக்கும் மரணதண்டனை முன்னமே விதித்தாயிற்று.



இனித் தண்டனையை நிறைவேற்ற வேண்டியதுதான். நீ நித்திய மரணத்தை அடையவேண்டிய குற்றவாளி. உன்னில் உள்ளும் புறம்பும் காணப்படுகிற தீமைக்கு இது நியாயமாய் வரவேண்டிய பலன். இந்தத் தீர்ப்பு இப்போதே நிறைவேறுவதும் நியாயந்தான். இது உனக்குத் தெரியுமா? இதை உணருகிறாயா? நீ தேவகோபத்துக்கும் நித்திய ஆக்கினைக்கும் உள்ளானவனென்று உன் மனதுக்குத் தெளிவாய்ப் படவில்லையா? பூமி தன் வாயைத் திறந்து உன்னை விழுங்கும்படி தேவன் இச்சமயத்தில் கட்டளையிடுவாராகில் அது அநியாயமாயிருக்குமோ? நீ இச்சணமே அவியாத அக்கினிக்கடலில் விழும்படி செய்வாராகில் அவர்பேரில் குற்றமாகுமோ? தேவன் உனக்கு மெய்யான மனந்திரும்புதலைக் கட்டளையிட்டிருப்பாராகில் இவைகளெல்லாம் நேரிடுவது நியாயமென்றும் நீ நிர்மூலமாகிப் பூமியினின்று அறுப்புண்டு போகாதிருப்பது அவருடைய இரக்கமேயன்றி வேறல்லவென்றும் உண்மையாய் அறிந்துகொள்வாய்.

5. இப்படியிருக்க, தேவகோபத்தை ஆற்றவும் உன் பாவங்களை நிவிர்த்திபண்ணவும் என்னசெய்வாய்? உனக்கு நியாயமாய் வரவேண்டிய தண்டனையை எப்படி விலக்குவாய்? ஐயோ, நீ செய்யத்தக்க தொன்றுமேயில்லை. உன் மனோவாக்குக் காயங்களினால் நடப்பித்த ஒரு சிறு தீமையையும் பரிகரிக்க உன்னால் கூடாது. நீ இதுமுதல் யாவற்றையும் நன்றாய்ச் செய்ய ஆரம்பித்து, சாகும்நாள் மட்டும் நீ தவறாமல் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடப்பாயானாலும், அக்கீழ்ப்படிதல் உன் முந்தின பாவங்களை நிவிர்த்திபண்ணமாட்டாது. புதுக்கடன் வாங்காததினால் முன்பட்ட கடன் தீர்ந்துபோயிற்றென்கலாமா? பழைப கடன் மாறாமல் முன்போலவே யிருக்குமல்லவா? பரலோகத்திலுள்ள தேவதூதர் யாவரும் பூலோகத்திலுள்ள மனிதர் எல்லோரும், தற்காலத்திலும் இனிமேலும் காண்பிக்கப்போகிற கீழ்ப்படிதல் யாவையும் ஒன்று திரட்டினாலும் அதினால் ஒரு பாவத்தைத்தானும் நிவிர்த்திசெய்து தேவநீதியைத் திருப்தியாக்குதல் கூடாதிருக்க, நீ உன் கிரியைகளினால் உன் பாவங்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்யலாமென்று எண்ணுவது எவ்வளவு வீண். ஒரு ஆத்துமாவை மீட்கும் பொருளாக உலகத்திலுள்ள மனிதர் யாவரும் சேர்ந்து செலுத்தக்கூடிய எந்தக் கிரயமும் போதுமானதாயிராது.

ஆதலால் பாவியான மனுஷன் வேறு சகாயமிருந்தாலன்றி நித்திய காலமாய் அழிந்துபோவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

6. இன்றுமுதல் பூரணமாய்க் கீழ்ப்படிவதினால் இதற்குமுன் செய்த பாவங்கள் நிவிர்த்தியாகிறதென்று வைத்துக்கொண்டாலுமே, அதினாலும் உனக்கு நன்மை உண்டாகாது. ஏனென்றால் இவ்வித கீழ்ப்படிதல் கூடியதேயல்ல. வேண்டுமானால் இப்போதே ஆரம்பித்துப் பரீட்சித்துப்பார். உன்னைச் சுற்றி நெருங்கி நிற்கிற புறம்பான பாவத்தை விட்டுவிடப் பார். உன்னால் முடியாது. அப்படியிருக்க, தீமையை விட்டு நன்மை செய்யும்படி உன் ஜீவியத்தை மாற்றக்கூடுமோ? முதலில் உன் இருதயம் மாறினாலன்றி உன் ஜீவியம் மாறுவது அசாத்தியம். மரம் எவ்வளவுகாலத்துக்குக் கெட்டதாயிருக்குமோ அவ்வளவுகாலத்துக்குக் கனியும் கெட்டதாகவேயிருக்கும். பாவம்நிறைந்த உன் இருதயத்தை மாற்றிப் பரிசுத்தமுள்ளதாக்க முடியுமா? பாவத்தில் மரித்திருக்கிற உன் ஆத்துமாவை, அதாவது, தேவனுக்கு மரித்தும் உலகத்திற்குமாத்திரம் பிழைத்திருக்கிறதுமான உன் ஆத்துமாவை உயிர்ப்பிக்க உனக்குச் சக்தியுண்டோ? மரித்துப்போன சரீரத்தை உயிர்ப்பிக்கவும் கல்லறைக்குள்ளிருக்கும் பிரேதத்திற்கு உயிர்கொடுக்கவும் உன்னால் கூடாததுபோலவே இதுவும் உன்னால் கூடாது. செத்த பிரேதத்திற்குள் கொஞ்சமாவது ஜீவன் உண்டுபண்ண உனக்குச் சக்தியில்லாதிருக்க மரித்துப்போன ஆத்துமாவுக்குள் எப்படி உயிர்வரப் பண்ணுவாய்? இவ்விஷயத்தில் நீ செய்யக்கூடியது யாதொன்றுமில்லை. உனக்குச் சற்றென்கிலும் பெலன் கிடையாது. நீ கொடிய தோஷியும் மகா பாவியும் சக்தியற்றவனுயுமிருக்கிறாய் என்று உன் முழு மனதோடு உணருவாயாகில் அதுவே தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முதற்படியாம். 'பின்பு மனஸ்தாபப்படுவதற்கு இடமில்லாத மனந்திரும்புதல்' இதுவே.

7. உள்ளும் புறம்புமான உன் பாவங்களையும் உன் பாவதோஷத்தையும் உன் சக்தியின்மையையும் உண்மையாய் அறிந்து உனக்குக் கிடைத்த கிருபைகளை அலட்சியம் செய்ததற்காக உன் இருதயத்தில் துக்கமுண்டாகவேண்டும். அல்லாமலும் குற்றத்தினிமித்தம் பச்சாத்



தாபப்பட்டு உன்னை நீயே குற்றஞ்சாற்றவேண்டும். பரத்துக்கு நேரே உன் கண்களை ஏறெடுக்க உனக்கு வெட்கமுண்டாகவேண்டும். உன் தலைமேல் நிற்கிற தேவகோபத்தையும் சாபத்தையும், தேவனை மறந்து நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாதவர்களைப் பட்சிக்க ஆயத்தமாயிருக்கிற தேவகோபாக்கினையையும் பார்த்து நீ அஞ்சவேண்டும். இந்தக் கோபாக்கினைக்குத் தப்பவும் தீமையை ஒழித்து நன்மையைக் கற்றுக்கொள்ளவும் தீராத வாஞ்சை உண்டாகவேண்டும். இவ்வித உணர்விருக்குமானால் 'நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல.' நீ அந்த வழியிலே பிரவேசித்திருக்கிறாய். உனக்கு மனந்திரும்புதல் உண்டாகியிருக்கிறது, இனி நீ சுவிசேஷத்தை நம்பவேண்டியதுதான்.

8. **சுவிசேஷமாவது** சக்தியற்றவர்களும் குற்றவாளிகளுமாகிய பாவிகளுக்கு அறிவிக்கும் நற்செய்தி. சுவிசேஷம் என்று சொல்லும்போது பொதுவாய் இயேசுகிறிஸ்துவினால் மனிதருக்குக் கிடைத்த வெளிப்படுத்தல் முழுவதையும் குறிக்கும். சிலவேளைகளில் அவர் நம்முடன் உலகத்தில் தங்கியிருந்தகாலத்தில் செய்த கிரியைகள் பட்டபாடுகள் ஆகிய சரித்திர வரலாற்றைக் காட்டும். இதின் சாராம்ஸம் என்னவெனில், 'பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்;' 'நாம் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்;' 'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்' என்பதே.

9. இதை நம்பவேண்டும். அப்போது தேவனுடைய ராஜ்யம் உனக்குரியதாகும். விசுவாசத்தினாலே நீ இந்த வாக்குத்தத்தத்தை அடையவேண்டும். 'மெய்யாய் மனந்திரும்பி தமது சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார்.' 'திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன' என்று கர்த்தர் உன் உள்ளத்தில்

சொன்ன நேரத்திலே தேவனுடைய ராஜ்யத்தை அடைந்திருக்கிறாய். அப்போதே 'நீதியும் சமாதானமும், பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமும்' உனக்குக் கிடைக்கும்.

10. இந்த விசுவாசத்தின் தன்மையைப்பற்றி உன்னை வஞ்சித்துக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. வேதாகமமும் விசுவாசப்பிரமாணமும், பழைய புதிய ஏற்பாட்டிலுள்ளவைகள் யாவும் உண்மையென்று ஒத்துக்கொண்டால் போதும் என்று சிலர் தப்பாய் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இது சரியான விசுவாசமாகாது. உனக்கும் எனக்குந்தானா இவ்வித விசுவாசமிருக்கிறது. பிசாசுகளும் இப்படியே விசுவாசிக்கின்றன. இப்படி விசுவாசித்தும் பிசாசுகள் பிசாசுகளாகவே யிருக்கின்றன. சரியான விசுவாசம் இதற்கு மேற்பட்டது. கிறிஸ்து இயேசுவின்மூலமாய் தேவனுடைய இரக்கத்தில் வைக்கிற உறுதியான நம்பிக்கையே சரியான விசுவாசமாம். அது, பாவ மன்னிப்பை அருளுகிற தேவனிடத்தில் வைக்கும் நம்பிக்கையே. 'தேவன் உலகத்தாருடைய' மீறின 'பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினாரென்றும்,' விசேஷமாய், தேவகுமாரன் என்னிலன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்திருக்கிறதினால் நானும் அவரது சிலுவையின் இரத்தத்தினாலே இப்போது தேவனோடு ஒப்புரவாயிருக்கிறேனென்றும் தேவகிருபையினால் நிச்சயமுள்ளவர்களா யிருப்பதே மெய் விசுவாசமாம்.

11. நீ இவ்விதமாய் விசுவாசிக்கிறாயா? அப்படியானால் தேவ சமாதானம் உன் இருதயத்தில் இருக்கும். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். தேவன் உன்மேல் அன்பாயிருக்கிறாரோ என்பதைப் பற்றி இனிச் சந்தேகமில்லை. பட்டப்பகலைப்போல அது பரிஷ்காரமாய் விளங்கும். 'கர்த்தரின் கிருபைகளை என்றென்றைக்கும் பாடுவேன். உமது உண்மையைத் தலைமுறை தலைமுறையாக என் வாயினால் அறிவிப்பேன்' என்று நீ சத்தமிட்டுச் சொல்லுவாய். இனி நரகத்துக்கும் மரணத்துக்கும் அஞ்சமாட்டாய். ஒருகாலத்தில் மரணத்துக்கு அதிகாரியாயிருந்த பிசாசானவனுக்கும் பயப்படமாட்டாய். தேவனுக்கு மனவருத்தமுண்டாக்கிவிடுவேனோ என்கிற புத்திரனுக்கு ஒத்த



பயமிருக்குமேயன்றி அவரைப்பற்றிய வேதனை உண்டாக்கும் பயம் உனக்கிராது. நீ விசுவாசிக்கிறாயா? விசுவாசிக்கிறாயானால், 'உன் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்தும், உன் ஆவி உன் இரட்சகராகிய தேவனில் களிகூரும்.' 'இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு' கிடைத்திருப்பதினாலே ஆனந்த சந்தோஷமடைவாய். 'அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவி' உனக்குள்ளிருப்பதினால் நீ களிகூருவாய். அழியாத ஜீவனை அடைவேன் என்கிற நம்பிக்கையினாலும், பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருவதினாலும், தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிற சகல நன்மைகளையும் அடைய ஆவலாய் எதிர்நோக்குவதினாலும் நீ சந்தோஷப்பட்டுக் களிகூருவாய்.

12. இப்பொழுதே விசுவாசிக்கிறாயா? அப்படியானால், இப்போதே உன்னிருதயத்தில் தேவன்பைப் பூரணமாய் அறிவாய். 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால்' நீயும் அவரிடத்தில் அன்புகூருகிறாய். தேவனிடத்தில் அன்புகூருகிறபடியினாலே உன் சகோதரனிடத்திலும் அன்புகூருகிறாய். அன்பு, சந்தோஷம், சமாதானம் நிறைந்தவனா யிருக்கிறபடியினால் ஆவியின் கனிகளாகிய நீடிய பொறுமை, தயவு, விசுவாசம், நற்குணம், சாந்தம், இச்சையடக்கம் முதலியவை உன்னில் நிறைந்திருக்கின்றன. அதாவது, நீ பரத்துக்குரிய பரிசுத்தத்தை அடைந்தவனாயிருக்கிறாய். உன் முகத்தைவிட்டு முக்காடு நீங்கிப்போயிருப்பதால் 'நீ திறந்த முகமாய்' 'அவருடைய மகிமையைக் கண்டு' 'ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமை அடைந்து மறுரூபமாகிறாய்.' இதில் கர்த்தருடைய மகிமையென்பது அவருடைய மகத்துவ அன்பையும் நீ சிருஷ்டிக்கப்பட்ட மகத்துவ சாயலையும் குறிக்கும்.

13. மனந்திரும்புதல், விசுவாசம், சமாதானம், சந்தோஷம், அன்பு, மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுதல் ஆகிய இவைகளை உலகஞானிகள் பைத்தியமென்றும் மதாபிமானம் என்றும் தீர்த்திருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய மனுஷனே, நீ அவர்

களைக் கவனியாதே. இவைகளினிமித்தம் கலங்காதே. நீ விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிந்திருக்கிறாய். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. நீ அடைந்த கிருபையைப் பற்றிக்கொண்டு அருமையும் பெருமையுமான சகல வாக்குத்தத்தங்களின்மூலமாய் அனுபவிக்கவேண்டிய அருளை நாடிப்போவாயாக.

அவரை இன்னும் அறியாதிருக்கிறவனே, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்தும் பரத்துக்குரியவைகளைக் குறித்தும் தூஷணம் செய்கிறவர்களுக்கு, ஒன்றிலும் பயப்படாதிரு. தேவன் சீக்கிரத்தில் உன் சஞ்சலத்தைச் சந்தோஷமாக மாற்றுவார். உன் கைகளை நெகிழவிடாதே. இன்னும் கொஞ்சம் நேரந்தான். அப்போது அவர் உன் பாவங்களை நீக்கித் தெளிந்த மனதுள்ள ஆவியை உனக்குக் கட்டளையிடுவார். உன்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார். உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர். அவரே தேவனுடைய வலது பாரிசத்திலு மிருக்கிறவர், உனக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

உன் பாவங்கள் எண்ணிறந்தவைகளாயிருப்பினும் அவைகளை இயேசுகிறிஸ்துவின்மேல் சுமத்தி அவரையே உன் மீட்பராக நம்பு. அப்பொழுது நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க உனக்கருள்புரிவார்.

## வினாக்கள்.

1. எதைத் தேவபக்தி என்கலாகாது?

'இருதயத்துக்குச் சம்பந்தமில்லாத எந்தக் கிரியையுமல்ல.'

பிரிவு. I. 1, 2, 3, 4, 5, 6. பார்க்க.

2. அப்படியானால் சடங்காசாரங்களின் சரியான உபயோகந்தானென்ன?

'இவை மகா மேலானதும் மரியாதையானதும்' ஹ.

பிரிவு. I. 4. பார்க்க.



3. அபிப்பிராயங்களிலும் கொள்கைகளிலும் உண்மையுள்ளவர்களாயிருந்தும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு மாதிரியாயிருப்பவன் யார்?

'தன் கொள்கை அபிப்பிராயங்களில் பிசாசானவனைப்போல் தவறுதலற்றவனாயிருக்கக்கூடும்' ஹ.

பிரிவு. I. 6. 4. பார்க்க.

4. 'உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்பதின் கருத்தென்ன?

'பிறன்மீது உருக்கமான நல்மனதும்.'

பிரிவு. I. 8. பார்க்க.

5. மெய் தேவபக்தி என்பது பரிசுத்தம் ஒன்றைத்தான் குறிக்குமோ?

'பாக்கியத்தையும் குறிக்கும்.'

பிரிவு. I. 10. பார்க்க.

# நான்காம் பிரசங்கம்.

THE FIRST FRUITS OF THE SPIRIT.

## ஆவியின் முதற் பலன்கள்.

*‘ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.’ ரோம. 8: 1.*

1. ‘கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள்’ என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறவர்கள் யார்? கிறிஸ்து இயேசுவினிடத்தில் மெய்யான விசுவாசமுள்ளவர்களே. ‘விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறவர்கள்’ இவர்களே. இப்படிப்பட்டவர்கள் இதுமுதல் ‘மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறார்கள்.’ இவர்கள் இதுமுதல் கேடுள்ள ஜென்மசுபாவத்திற்கு இணங்கி நடவாமல், தங்கள் நினைவு, வார்த்தை, கிரியைகளிலெல்லாம் மகத்துவமுள்ள பரிசுத்தாவியினால் நடத்தப்படுகிறார்கள்.

2. ‘ஆனபடியால்’ இவர்களுக்கு ‘ஆக்கினைத் தீர்ப்பில்லை.’ தேவன் இவர்களை ஆக்கினைக்குள் தீர்ப்பதில்லை. ஏனென்றால் இவர்கள் ‘இலவசமாய், அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறார்கள்’ அவர் இவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து இவர்களுடைய பாவங்களையெல்லாம் நீக்கியிருக்கிறார். இவர்களுடைய இருதயமும் இவர்களை ஆக்கினைக்குள் தீர்க்கிறதில்லை. ஏனென்றால் ‘அவர்கள் உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் அவர்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற



ஆவியையே பெற்றிருக்கிறார்கள்’ (1 கொரி. 2: 12.). ‘அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்களென்று ஆவியானவர்தாமே அவர்களுடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.’ இந்தச் சாட்சியுடன், ‘மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல் தேவனுடைய கிருபையினாலே அவர்கள் உலகத்திலே கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தார்கள்’ என்று அவர்கள் மனதும் சாட்சியிடுகிறது. (2 கொரி. 1: 12.)

3. ஆனால் இந்த வேதவசனத்தை அநேகமுறை தப்பாயும் மோசமான விதமாயும் அர்த்தப்படுத்தி, கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களுமான பலர் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாகப் புரட்டியிருக்கிறார்கள். ‘கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்’ (2 பேது. 3: 16.) என்ற வார்த்தைகளுக்கு மூலவாக்கியத்தில் தேவனால் கற்பிக்கப்படாததினால் தேவபக்திக்கேதுவான சத்தியத்தில் ஸ்திரங்கொள்ளாதவர்கள் எனப் பொருள்படும். ஆதலால், முதலாவது ‘கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்கள்’ யார் என்றும், இரண்டாவது இவர்களுக்கு ஏன் ஆக்கினைத் தீர்ப்பில்லையென்றும், கூடியவாறு தெளிவாய்க் காண்பித்து, கடைசியாக அனுபவத்திற்கேற்ற சில புத்தி போதனைகளைச் சொல்லி முடிப்பேன்.

I. 1. முதலாவது, ‘கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள்’ யார் என்று பார்ப்போம். ‘அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிறவர்களே’ அவருக்குட்பட்டவர்கள். ‘இவர்கள் சுயநீதியை உடையவர்களாயிராமல், விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிற நீதியை உடையவர்களாய்க் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களென்று காணப்படுகிறவர்கள்.’ ‘அவருடைய இரத்தத்தினால் பாவமன்னிப்பாகிய மீட்பு’ பெற்றுக்கொண்ட இவர்களை அவருக்குள்ளிருப்பதாகச் சொல்வது தகுதியே. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவுக்குள் வாசஞ்செய்ய கிறிஸ்து அவர்களுக்குள் வாசஞ்செய்கிறார். அவர்கள் ஒரேஆவியில் தேவனோடு இசைந்திருக்கிறார்கள். திராட்சச்செடியோடு கொடிகள் ஒட்டியிருக்குமாப்போல இவர்கள் அவரோடு ஒட்டியிருக்கிறார்கள். அவயவங்கள் சிரசோடு இணைக்கப்

பட்டிருப்பதுபோல அவர்கள் விபரிக்க முடியாதவண்ணமாய் இவரோடு இணைக்கப்பட்டு ஐக்கியமாயிருக்கிறார்கள். தங்களிருதயங்களில் இந்த ஐக்கியம் உண்டாகுமுன் அவர்களுக்கு இது புலப்படாது.

2. 'அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை, மாம்சத்தின்படி நடக்கிறதுமில்லை' என்று சொல்லியிருக்கிறது. அப். பவுல் மாம்சம் என்று சொல்லும்போது வழக்கமாய்க் கெட்டுப்போன ஜென்ம சுபாவத்தையே குறிக்கிறான். கலா. 5: 19—ல் 'மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன' என்றும், அதற்குச் சற்று முந்தி 5: 16—ல் 'ஆவிக்கு ஏற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை' அல்லது ஆசையை 'நிறைவேற்றாதிருப்பீர்கள்' என்றும் சொல்லியிருப்பதில், மாம்சம் என்னும் பதத்தை இதேகருத்தில் உபயோகித்திருக்கிறான். 'ஆவியின்படி நடக்கிறவர்கள் மாம்ச இச்சையை நிறைவேற்றாமலிருக்கிறார்கள்' என்பதை ரூபிக்கும்படி 'மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன' என்று அதற்கடுத்தாப்போல் சொல்லுகிறான்.

3. கிறிஸ்துவினுடையவர்களாய் அவரில் நிலைத்திருக்கிறவர்கள், தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசைஇச்சைகளையும் சிலுவையிலறைந்திருக்கிறார்கள். 'விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்; விக்கிரக ஆராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள்' முதலிய மாம்சத்தின் கிரியைகளுக்கும் ஜென்மசுபாவக் கேட்டினாலுண்டாகிற தகாத நினைவு வார்த்தை கிரியை ஒவ்வொன்றுக்கும் இவர்கள் விலகியிருக்கிறார்கள். கசப்பான பாவவேர் தங்களிலிருப்பதாக அவர்கள் உணர்ந்துகொண்டபோதிலும், அதைத் தங்கள் பாதத்தின்கீழ் மிதித்துப்போடுவதற்கு வேண்டிய பெலன் உன்னதத்திலிருந்து தருவிக்கப்படுவதினால் அது 'முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்காது.' அவர்களுக்கு நேரிடுகிற நூதன சோதனை ஒவ்வொன்றும்



'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்று துதி செலுத்துகிற தருணமாகவே இருக்கிறது.

4. இப்பொழுது அவர்கள் தங்கள் இருதயத்திலும் ஜீவியத்திலும் ஆவிக்கேற்றபடி நடக்கிறார்கள். தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்புகூரும்படி பரிசுத்தாவி இப்போது அவர்களுக்குக் கற்பிக்கிறார். அந்த அன்பு 'நித்தியஜீவகாலமாய் அவர்களில் ஊறுகிற நீரூற்றுப்போலிருக்கும்.' அவர்களுடைய இருதயத்தில் உதிக்கும் நினைவெல்லாம் பரிசுத்தமாகும்வரையில் அவர்கள் பரிசுத்தமானவை விரும்பி திவ்விய பரம குணங்களை நாடும்படி பரிசுத்தாவியானவர் அவர்களை ஏவிவிடுகிறார்.

5. 'ஆவியின்படி நடக்கிறவர்கள்,' தங்கள் சம்பாஷணையிலும் பரிசுத்தராயிருக்கும்படி அவர்களை ஆவியானவர் ஏவுகிறார். 'அவர்களுடைய வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயும்' தேவநேசம் தேவபயம் உள்ளதாயுமிருக்கிறது. கெட்ட வார்த்தை ஒன்றும் அவர்கள் வாயிலிருந்து புறப்படுகிறதில்லை. கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி 'பக்திவிருத்திக்கேதுவான நல்வார்த்தையையே பேசுகிறார்கள்.' (எபே. 4: 29.) அவர்கள் தேவனுக்குப் பிரியமானவைகளை மாத்திரம் செய்யவும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி தங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போன கிறிஸ்துவைத் தங்கள் புறம்பான நடக்கை யாவற்றிலும் பின்பற்றவும், தங்கள் அயலாரோடு நடந்துகொள்ளும் விஷயங்களிலெல்லாம் நீதி, இரக்கம், உண்மையுள்ளவர்களா யிருக்கவும், தாங்கள் வைக்கப்பட்டிருக்கிற நிலைமையில் 'எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யவும்' இரவு பகல் அப்பியாசித்துவருகிறார்கள்.

6. 'ஆவியின்படி நடக்கிறவர்கள்' இவர்களே. இவர்கள் பரிசுத்தாவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்து தங்களிருதயங்களில் பரிசுத்தாவியின் கனிகளுள்ளவர்களா யிருப்பதுடன் தங்கள் பேச்சு, கிரியை யாவற்றிலும் தங்கள் ஜீவியம் முழுவதிலுமே அக்கனிகளை விளங்கப்பண்ணுகிறவர்களுமா யிருக்கிறார்கள். அக்கனிகளாவன:

‘அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்’ என்பவைகளே. இன்னும், அன்புள்ளவைகள் எவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ (பிலி. 4: 8.), இவைகளும் தேவாவியின் கனிகளேயாம். ‘நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரித்து கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பின’ அதே ஆவியானவர் தங்களையும் மெய்யாய் நடத்துகிறார் என்பதாக யாவருக்கும் தெளிவாய்க் காண்பிக்கிறார்கள்.

II. 1. இரண்டாவதாக, இந்தவிதமாய்க் ‘கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து,’ இந்தவிதமாய் ‘மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லாததேன்’ என்று பார்ப்போம்.

முதலாவது, கிறிஸ்து இயேசுவில் விசுவாசம் வைத்து நடக்கிறவர்களுக்கு அவர்கள் முன் செய்த பாவங்களினிமித்தம் ‘ஆக்கினைத் தீர்ப்பில்லை.’ முன் செய்த பாவத்தினிமித்தம், தேவன் அவர்களை ஆக்கினைக் குட்படுத்தமாட்டார். ‘அவர்களுடைய பாவங்கள் எல்லாம் ‘சமுத்திரத்தின் ஆழங்களில் போடப்பட்டு விழுந்து மறைந்துகிடக்கும் கல்லைப்போலிருக்கின்றன.’ அவைகளை இனி நினையார். தேவன் தமது ‘குமாரனுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினால் பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தி, முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியை’ அவர்களுக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்கள்மேல் குற்றஞ் சுமத்தமாட்டார். இனி அவைகளை அவர் நினைக்கிறதேயில்லை.

2. கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களை அவர்களுடைய சொந்த இருதயமும் ஆக்கினைக்குட்படுத்தாது. பாவதோஷத்தைப்பற்றிய உணர்வும் தேவகோபத்தை எதிர்நோக்கிநிற்கும் பயமும் அவர்களிருதயத்திலில்லை. ‘அவர்கள் தங்களுக்குள்ளே அந்தச் சாட்சியுடையவர்களாயிருக்கிறார்கள்,’ தெளிக்கப்பட்ட இரத்தம் தங்களுக்குரியதென்று அவர்கள் மனதுக்கே தெரியும். ‘திரும்பவும் பயப்படுகிறதற்கு’ அதாவது, சந்தேகித்து நிச்சயமில்லாமல் திகிலடைகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், ‘அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள்.’ இவ்விதமாய் ‘விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டு’ தங்களுக்கு மன்னித்த தேவகிருபையையும் தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியையும்’ உடையவர்களாயிருப்பதினால் ‘தேவசமாதானம் அவர்களுடைய இருதயங்களில் ஆளுகிறது.’



3. இதற்கு ஆட்சேபனையாக, ‘விசுவாசி ஒருவனுக்குச் சிலகாலங்களில் தேவனுடைய இரக்கம் மறைபடலாமே. சிலவேளைகளில் இருள் வந்து அவனை மூடிக்கொள்ளுவதினால் அதரிசனமானவரைத் தரிசியாமலும், பாவப்பிராயச்சித்தத்தில் தனக்குப் பங்குண்டென்கிற சாட்சியில்லாமலுமிருக்கலாமே. அப்படிப்பட்ட காலங்களில் அவனிருதயம் அவனை ஆக்கினைக்குட்படுத்த அவன் திரும்பவும் தனக்குள்ளே மரணதண்டனை அடைவான் அல்லவா’ என்று ஒருவன் சொல்லலாம். இப்படி ஆட்சேபிக்கிறவனுக்கு நான் கொடுக்கிற உத்தரவு யாதெனில், விசுவாசி ஒருவன் இவ்வித நிலைமைக்குட்பட்டதாகவும் தேவனுடைய இரக்கம் அவனுக்கு மறைந்திருப்பதாகவும் வைத்துக்கொண்டால் அந்த நிலைமையில் அவன் விசுவாசியல்ல. ஏனென்றால், விசுவாசம் எங்கே உண்டோ அங்கே வெளிச்சமுண்டு. அந்த ஆத்துமாவில் தேவஒளி பிரகாசியாமலிராது. ஆகையால் ஒருவன் எவ்வளவுகாலம் இந்த ஒளியை இழந்துவிடுகிறானோ அவ்வளவுகாலம் தன் விசுவாசத்தையும் இழந்தவனே. மெய்விசுவாசி ஒருவன் தன் விசுவாசமாகிய வெளிச்சத்தை இழந்துவிடுவது கூடியதே. இதை இழந்துபோயிருக்குங்காலத்தில் அவன் மறுபடியும் ஆக்கினைத்தீர்ப்புக் குட்பட்டவனாகலாம். ஆனால் இப்பொழுது ‘கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயும்’ இப்பொழுது அவரில் விசுவாசமுள்ளவர்களாயுமிருக்கிறவர்களின் விஷயமோ அப்படியல்ல. ஏனெனில் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஆவியின்படி நடக்கிற காலமெல்லாம் தேவன் அவர்களை ஆக்கினைக்குள் தீர்க்கிறதில்லை, அவர்கள் சொந்த மனச்சாட்சியும் அவர்களை ஆக்கினைக்குட்படுத்தாது.

4. இரண்டாவது, அவர்கள் தேவனுடைய கற்பனையைத் தற்காலத்திலே மீறிச்செய்யும் பாவங்களினிமித்தமும் ஆக்கினைத்தீர்ப்புக்

குட்படார்கள். ஏனென்றால், அவர்களிப்போது தேவனுடைய கற்பனைகளை மீறுகிறதில்லை. இப்போது அவர்கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியல்லவோ நடக்கிறார்கள். அவர்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறார்கள் என்பதற்கு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே நிலையான அத்தாட்சி. பரி. யோவானும் இதற்குச் சாட்சியாக 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்' என்று சொல்லியிருக்கிறான். அன்பும் விசுவாசமும் அவனுக்குள் தரித்திருக்குங் காலமெல்லாம் அவன் பாவஞ்செய்ய மாட்டான். அவன் விசுவாசத்தில் 'தன்னைக் காத்துக்கொள்ளும்' காலமளவும் 'பொல்லாங்கன் அவனைத் தொடான்' ஆகையால் அவன் தான் செய்யாத பாவங்களினிமித்தம் ஆக்கினைக் குட்படான் என்பது இப்போது பிரத்தியட்சமாயிருக்கிறது. ஆகையால், இவ்விதமாய் 'ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள்' நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல (கலா. 5: 18.). அவர்கள் நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் ஆக்கினைக்கும் உட்பட்டவர்களல்ல. ஏனென்றால் நியாயப்பிரமாணமானது தன் கட்டளைகளை மீறுகிறவர்களையேயன்றி வேறு யாரையும் ஆக்கினைக்குள் தீர்க்கிறதில்லை. திருஷ்டாந்தமாக, 'களவு செய்யாதிருப்பாயாக' என்னும் கற்பனை களவு செய்கிறவர்களையேயன்றி மற்றவர்களை ஆக்கினைக் குட்படுத்துமா? அப்படியே 'ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக' என்கிற பிரமாணம் அதைப் பரிசுத்தமாய் ஆசரியாதவர்களைத்தானே ஆக்கினைக்குட்படுத்தும். ஆனால் ஆவியின் கனிகளுக்கு விரோதமான 'பிரமாணம் ஒன்றுமில்லை' (கலா. 5: 23.). அப். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் நிருபத்தில் இதை விபரமாய்ச் சொல்லுகிறான். 'ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால் நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம். எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணமானது நீதிமானுக்கென்று விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச்



செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது' (1 தீமோ 1: 8, 9, 11.). ஒருவன் மற்றவர்களுக்கு உணர்த்திக்காட்டும் நோக்கமாயாவது, போதிக்கும் நோக்கமாயாவது தேவனுடைய நியாயப்பிரமாணத்தை உபயோகிக்கையில் அவன் அறிந்துகொள்ளவேண்டியதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதும் என்னவெனில், நீதிமான்பேரில் நியாயப்பிரமாணத்துக்கு அதிகாரமில்லையென்பதே. ஏனென்றால், 'விதிக்க' என்னும் பதத்தின் அர்த்தத்தை ஆராயுமிடத்து அதற்குக் கட்டளையிட என்கிற அர்த்தமேயன்றி வேறர்த்தம் சொல்ல முடியாது.

5. மூன்றாவது, அவர்களிப்போது தங்களிடத்திலிருக்கிற உள்ளான பாவத்தினிமித்தம் ஆக்கினைக்குட்படார்கள். விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்களிடத்திலுங்கூட கேடுள்ள ஜென்மசுபாவம் இன்னும் உண்டென்பதும், பெருமை, வீண்டம்பம், கோபம், இச்சை, துர்ஆசை முதலிய பற்பல விதமான பாவவேர் இன்னுமவர்களிடத்திலிருக்கிறதென்பதும் பிரத்தியட்சம். இது பிரதிதின அநுபவமாதலால் இதை மறுக்க முடியாது. அப். பவுல் கொரிந்தியரைக்குறித்து 'கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களென்றும்,' அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாவதற்கு (பங்கு பெறுவதற்கு) அழைக்கப்பட்டவர்களென்றும் (1 கொரி. 1: 2, 9.) முந்திச் சாட்சியிட்டிருந்தபோதிலும், இதினிமித்தமே 'சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்றெண்ணிப் பேசக்கூடாமல் மாம்சத்திற்குரியவர்களென்றும், கிறிஸ்து இயேசுவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று' (1 கொரி. 3: 1.) என்று சொல்லியிருக்கிறான். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்று சொல்லியிருப்பதினால், அவர்கள் கிறிஸ்துவுக் குட்பட்டவர்களென்று பார்க்கிறோம். பெலவீன விசுவாசிகளாயினும் அவர்கள் விசுவாசிகளே. அவர்களிடத்தில் பாவமும், தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாத பாவ சுபாவமும் எவ்வளவோ இருந்தது.

6. இப்படியெல்லாமிருந்தும், அவர்கள் அதினிமித்தம் ஆக்கினைக் குட்படுகிறதில்லை. மாம்ச சிந்தையாகிய கெட்ட பாவசுபா

வம் தங்களிடத்தி லிருக்கிறதென்றும், தங்களிருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமா யிருக்கிறதென்றும் நித்தமும் அதிகமதிகமாய் அறிந்து உணருகிறார்கள். என்றாலும், அவர்கள் அதற்கு இடங் கொடாமலும் பிசாசுக்கு இணங்காமலுமிருந்து பெருமை, கோபம், துர்இச்சை முதலிய சகல பாவங்களோடும் இடைவிடாமல் போர் செய்து மாம்சம் தங்களை மேற்கொள்ளவிடாமல் 'ஆவியின்படி நடக்கிற' காலமெல்லாம் 'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட' இவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. அவர்கள் கீழ்ப்படிதலில் குறையுள்ளவர்களாயிருந்தபோதிலும் பூரண மனதோடு கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களானதினிமித்தம் தேவன் அவர்கள்மேல் பிரியமாய் இருக்கிறார். தேவன் தங்களுக்குத் 'தந்தருளின ஆவியினாலே' தாங்கள் அவருடையவர்களென்று அறிந்து அவரிடத்தில் தைரியங் கொண்டிருக்கிறார்கள். (1 யோவா. 3: 24.)

**7.** நான்காவது, வேறு குற்றத்தினிமித்தமும் தேவன் இவர்களை ஆக்கினைக் குட்படுத்தமாட்டார். அவர்கள் தாங்கள் செய்கிற எவற்றிலும் பாவம் ஒட்டிக்கொண்டிருப்பதாக எப்போதும் உணருகிறார்கள். மனோவாக்குக்காயத்தினால் பூரணப் பிரமாணத்தை தாங்கள் சரிவர நிறைவேற்றவில்லை என்பது அவர்கள் மனதுக்கே தெரியும். தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பெலத்தோடும் அன்புகூரவில்லையென்று அவர்கள் அறிவார்கள். பக்திக்கடுத்த கடமைகளை நிறைவேற்றுவதில்கூட பெருமை சுயசித்தம் நுழைந்து கலந்திருப்பதாகக் காண்கிறார்கள். இருதயத்தின் நினைவு விருப்பங்களை அறிகிற தேவனை நோக்கி, அந்தரங்கத்திலாவது, பகிரங்கத்திலாவது மன்றாடி அவரைக் கிட்டிச்சேருகிற சமயங்களிலுங்கூட, நினைவு சிதைந்து அலைகிறதையும், தங்கள் விருப்பங்கள் உயிரற்றுக் குன்றிப்போவதையும் கண்டு வெட்கப்படுகிறார்கள். இப்படியெல்லாமிருந்தும் தேவன் அவர்களை ஆக்கினைக் குட்படுத்துகிறதில்லை. அவர்கள் சொந்த இருதயமும் அவர்களை ஆக்கினைக்குள் தீர்க்காது. தங்களிடத்திலிருக்கிற இவ்வித பற்பல குறைவுகளைக்குறித்துச் சிந்திக்கும்போது அவர்கள் தங்களுக்காகத் தேவனிடத்தில் பரிந்துபேசி, தெளிக்கப்படுகிற இரத்தமும் பிதாவினிடத்தில் வேண்டுதல்செய்யும்படிக்கு



எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகிய இயேசுகிறிஸ்துவும் தங்களுக்கு இடைவிடாமல் வேண்டியது என்று முன்னிலும் அதிகமாய் உணருகிறார்கள். இக்குறைவுகள் அவர்களைத் தாங்கள் விசுவாசித்திருக்கிறவரை விட்டு விலகிவிடாமல், அவர் தங்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் அவசியமாய் வேண்டியவர் என்று காண்பிப்பதினால் அவரை அதிகமாய்க் கிட்டிச் சேரும்படி அவர்களை ஏவிவிடுகிறது. மேலும், இந்த அவசியத்தை—எவ்வளவாய்க் காண்கிறார்களோ, அவ்வளவாய், 'அவர்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே' அவருக்குள் நடந்துகொள்ளும்படி வாஞ்சையும் ஜாக்கிரதையுமுள்ளவர்களா யிருக்கிறார்கள்.

8. ஐந்தாவது, (Sins of infirmity) ஆத்தும பெலவீனத்தினால் செய்த பாவங்களினிமித்தமும் அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. பெலவீனத்தினாலான பாவங்களைப்பற்றித் திட்டமாயாராய்ந்தால் அவைகள் பாவங்களல்ல, பெலவீனங்களே. மற்றப்படி பாவம் என்னும் பதத்தைப் பெலவீனம் என்னும் பதத்தோடு இணைத்துச் சொல்லுவதினால் நாம் பாவத்துக்கு இடங்கொடுத்ததுபோலாகும். அல்லது பாவத்தின் தன்மையை அற்பமாய் எண்ணுவதுபோலாகும். ஆனால் உபயார்த்தமும் ஐயமுமுள்ள இந்த வார்த்தைகளையே வைத்துக்கொள்ள விரும்புவோமாகில் பெலவீன பாவங்கள் (Sins of infirmity) என்பதின் கருத்தென்ன? வேண்டுமென்றல்ல, அறியாமையாற் செய்த தவறுதல்களேயாம். திருஷ்டாந்தமாக, வாஸ்தவத்தில் அசத்தியமாயிருக்கும் ஒரு விஷயத்தை சத்தியமென்று விசுவாசித்து மற்றவர்களுக்கு அறிவித்தல்; வேண்டுமென்றல்ல அறியாமையினால் பிறனுக்குத் தீமை உண்டுபண்ணுதல்; அல்லது நன்மை செய்யவேண்டுமென்கிற நோக்கமுள்ளவர்களாயிருக்கையிலேயே பிறனுக்குத் தீமை விளைவித்தல்; இதைப்போன்றவைகளே பெலவீன பாவங்களாம். பரிசுத்தமும் பிரியமும் பூரணமுமான தேவசித்தத்துக்கு இவைகள் பொருந்தாதிருந்தும் இவைகளைப் பாவங்களென்று சொல்வது தகாது. கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களுடைய மனச்சாட்சி இவைகளினால் குற்றப்படாது. இவைகள் தேவனை விட்டு இவர்களைப் பிரிக்காது. அவருடைய திருமுகப்பிரகாசத்தை மறைக்கவும்மாட்டாது. ஏனென்றால், இவை

கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறவர்களுடைய பொதுவான நடக்கைக்கு எவ்வகையிலும் விகற்பமானவைகளல்ல.

9. கடைசியாக, அவர்களுடைய சக்திக்கு மிஞ்சின எந்தவிஷயத்தினிமித்தமும் 'அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.' இது இருதயத்துக்கடுத்ததாய் அல்லது புறம்பான விஷயத்துக்கடுத்ததா யிருந்தாலுஞ்சரி, செய்யவேண்டியதைச் செய்யாமலும் செய்யத்தகாததைச் செய்கிறதா யிருந்தாலும்சரி, அதினிமித்தம் ஆக்கினைத்தீர்ப்பு வராது. திருஷ்டாந்தமாக, கர்த்தருடைய இராப்போஜனம் பரிமாறப்படும்போது நீ வியாதியினால் போய் அதில் பங்குபெற ஏதுவில்லாதிருக்கிறாய். இதினிமித்தம் நீ ஆக்கினைக் குட்படமாட்டாய். உனக்கிஷ்டமிருந்தும் அக்கடமையை நிறைவேற்ற ஏதுவில்லாதபடியால் உன்பேரில் குற்றமாகாது. ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல, உள்ளதின்படியே அவன் செய்தது அங்கீகரிக்கப்படும்.

10. விசுவாசி ஒருவன் தன் ஆத்துமா வாஞ்சிக்கும் காரியங்களைச் செய்ய ஏதுவில்லாதிருப்பதினிமித்தம் சிலவேளைகளில் மனவேதனை அடைவதுண்டு. சபையோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கத் தடை நேரிடுகிறபோது, 'மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது; என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்' என்று கதறிப் பிரலாபிப்பான். 'என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று அவன் தன்னிருதயத்தில் சொல்லிக்கொண்டபோதிலும் 'மறுபடியும் ஜனங்களோடே நடந்து தேவாலயத்திற்கு அவர்களோடே போய் வர' ஆவலாய் இருக்கலாம். அவன் விருப்பப்படி போக ஏது இல்லாவிட்டால் அதினிமித்தம் தன்பேரில் ஆக்கினைத்தீர்ப்பாவது, குற்றமாவது, தேவகோபமாவது, வருமென்று பயப்படுகிறதில்லை. ஆனால் 'என் ஆத்துமாவே தேவனை நோக்கிக் காத்திரு, என் முகத்திற்கு இரட்சிப்பும் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்' (சங். 43: ௫.) என்று சொல்லிச் சந்தோஷத்தோடு தன் விருப்பங்களை அவருக் கொப்புவிக்கிறான்.



11. முன் கருதாது சோதனை நேரிடும் அந்தக்ஷணமே செய்த பாவங்களைக்குறித்துத் தீர்மானிப்பது எளிதல்ல. திருஷ்டாந்தமாக, சாதாரணமாய் பொறுமையினால் தன் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளுகிற ஒரு மனுஷன், தனக்கு திடீரென நேரிடுங் கொடிய சோதனையினால் 'உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்கிற ராஜரீகப் பிரமாணத்துக்குப் பொருந்தாதவிதமாய் நடக்கிறான். இவ்வகைப் பாவங்களைக்குறித்து பிரமாணம் விதிப்பது எளிதல்ல. பொதுவாய் திடீரெனச் செய்யும் பாவங்களினிமித்தம், மனிதர் ஆக்கினைத்தீர்ப்புக் குட்படுவோர்கள் என்றாவது உட்படமாட்டார்களென்றாவது சொல்ல முடியாது. ஆகிலும் விசுவாசமுள்ள ஒருவன் திடீரெனச் சோதனையிற் சிக்கிக்கொள்ளும்போது அவன் மனம் அதற் கிணங்கியிருந்த அளவுக்குத்தக்கதாக அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு கிடைக்குமெனத் தோன்றுகிறது. பாவமான நினைவு, வார்த்தை, கிரியைக்கு நமது மனம் எவ்வளவு இணங்கியிருக்கிறதோ அவ்வளவுக்குத் தேவன் நமதுமேல் கோபமாயிருப்பாரென்றும் அவ்வளவுக்கு அவன் ஆத்துமா குற்றமுள்ளதாகுமென்றும் எண்ணலாம்.

12. அப்படியிருக்குமானால் திடீரெனச் செய்யும் பாவங்களில் சிலவற்றினிமித்தம் அதிக குற்றமும் அதிக ஆக்கினையும் உண்டாகக்கூடியதே. எப்படியெனில், நாம் சில சமயங்களில் மனமறியத் தகாத கவலையீனத்துக்கு இடங்கொடுத்துத் திடீரெனப் பாவத்துக் குட்படுவதுண்டு; அல்லது சோதனை வருமுன்னமே அதைத் தடுத்து விலக்கிக்கொள்ளக் கூடியதாயிருந்தும் நமது ஆத்துமா அஜாக்கிரதையினால் இப்பாவத்திற் குட்படுவதுமுண்டு. சோதனைகளும் அபாயங்களும் நேரிடப்போகிறதாக தெய்வாதீனமாயாவது மனுஷர்மூலமாயாவது முன்னதாகவே அறிந்திருந்தும் 'இன்னும் கொஞ்சந் தூங்கட்டும், இன்னும் கொஞ்சங் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும்' என்று தன்னிருதயத்தில் சொல்லிக்கொண்டு தான் விலகிக்கொள்ளக்கூடிய வலைக்குள் கவலைத்தாழ்ச்சியினால் ஒருவன் விழுந்துவிட்டால் அக்கவலையீனம் அவனுக்குப் போக்காகாது. தனக்கு வரும் சோதனையை முன்னறிந்து விலகியிருக்கலாமே. இப்படிப்பட்ட விஷயத்தில் அவனுக்குண்டான தவறுதல் சடுதியானதென்றாலும்

வாஸ்தவத்தில் அது மனதாரச் செய்த பாவமே. அப்படியிருப்பதால் தேவனும் தன்னுடைய சொந்த மனச்சாட்சியும் அவனை ஆக்கினைக்குள் தீர்ப்பது தகுதியே.

13. இதற்கு மாறாக நேரிடுகிறதுமுண்டு. எப்படியெனில், இப்பிரபஞ்சமும், இப்பிரபஞ்சத்தின் தேவனும், சில சமயங்களில் நமது சொந்த துர் இருதயமும், நாம் எதிர்பாராமலும் எதிர்பார்க்கக்கூடாமலுமிருக்கையில் திடீரென நம்மை எதிர்த்துச் சோதிக்கிறதுண்டு. உத்தம கிறிஸ்தவனும் அவனுடைய விசுவாசம் பெலவீனமாயிருக்குங்காலத்தில் இப்பேர்ப்பட்ட சோதனைகளினால் ஜெயிக்கப்பட்டுத் தன் மனச்சம்மதமின்றிக் கோபத்துக் கிடங்கொடுப்பதும் பிறரைக்குறித்துத் தீமை நினைப்பதும் கூடியதே. இப்படிப்பட்ட விஷயத்தில் இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் அவன் மதியீனத்தை அவனுக்குக் காண்பிப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. தான் பூரணப் பிரமாணத்தையும் கிறிஸ்துவிலிருந்த சிந்தையையும் விட்டுவிட்டு விலகிப்போனதாக உணரும்போது தேவனுக்கேற்ற துக்கங்கொண்டு அவருக்குமுன் அன்புடன் வெட்கப்படுகிறான். ஆயினும் இதினிமித்தம் அவன் ஆக்கினைக் குட்படான். தேவன் அவன் மதியீனத்தை அவன்மேல் குற்றமாகச் சுமத்தாமல் 'தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல' இரங்குகிறார். அவனுடைய சொந்த இருதயமும் அவனைக் குற்றவாளியாக்குகிறதில்லை. துக்கமும் வெட்கமுமிருப்பினும் 'நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தராகிய யேகோவா என் பெலனும் என் கீதமுமானவர். அவரே எனக்கு இரக்ஷிப்புமானவர்' என்று சொல்லக்கூடும்.

III. நாம் முன்கூறிய விஷயங்களைக்கொண்டு ஆன்மார்த்தமாக சில விஷயங்களைச் சிந்திப்போம்.

1. முதலாவது, 'கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு' அவர்கள் முன் செய்த பாவங்களினிமித்தம் 'ஆக்கினைத்தீர்ப்பில்லை' யென்றால், அற்ப விசுவாசியே, நீ ஏன் பயப்படுகிறாய்? உன் பாவங்கள், ஒருகாலத்தில் மணலிலும் ஏராளமாயிருந்தாலும் அதைப்



பற்றி உனக்கென்ன? நீ இப்போது கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவனாயிருக்கிறாயே. 'தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?' உன் சிறு பிராயமுதல் இயேசுகிறிஸ்துவுக்குள் நீ அங்கீகரிக்கப்பட்ட நேரம்வரைக்கும் செய்த சகல பாவமும் பதரைப்போல் பறந்து காணப்படாமற்போயிற்று. அது இனி நினைக்கப்படுவதில்லை. அது ஆழத்தில் அமிழ்ந்துபோயிற்று. நீ இப்போது ஆவியினால் பிறந்திருக்கிறாய். நீ பிறந்ததற்கு முன்னுள்ளதைக்குறித்து கவலைப்பட்டுக் கலங்குவாயோ? அஞ்சாதே, பயப்படும்படிக்கல்ல 'அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை' பெற்றுக்கொள்ளும்படிக்கே, தேவன் உன்னை அழைத்திருக்கிறார். நீ அழைக்கப்பட்ட அழைப்பைச் சிந்தித்துப்பார். உன் இரக்ஷகரில் களிகூர்ந்து அவர்மூலமாய் உன் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்து.

2. அவருடைய இரத்தத்தினாலே மீட்பைப் பெற்றுக்கொண்ட பின்னும் நான் பாவஞ்செய்திருக்கிறேன். ஆகையால், 'நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்' என்கிறாயோ? நீ உன்னை அருவருப்பது நியாயமே; இதை உனக்குள் உண்டாக்கினவர் தேவனே. ஆனால் இப்பொழுது விசுவாசிக்கிறாயா? 'என் மீட்பர் உயிரோடிருக்கிறார்' என்றும், 'நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலேதான் பிழைத்திருக்கிறேன்' என்றும் நீ மறுபடியும் சொல்லும்படிக்கான சக்தியை அருளிச்செய்திருக்கிறாரா? அப்படியானால் இந்த விசுவாசம் நீ முன்செய்த பாவங்களனைத்தையும் மறுபடியும் நீக்கிவிட்டது. உனக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை; நீ தேவகுமாரனின் நாமத்தில் உண்மையாய் எந்தவேளையில் விசுவாசம் வைக்கிறாயோ அந்தவேளைக்கு முன்னுள்ள பாவம் யாவும் காலைப்பனிப்போல் பறந்தோடிப்போம். ஆகையால் 'கிறிஸ்து உனக்குண்டாக்கின சுயாதீன நிலைமையிலேயே நிலைத்திரு.' பாவத்தின் வல்லமையினின்றும் அதின் தோஷம் தண்டனையினின்றும் இன்னும் ஒருமுறை உன்னை விடுதலையாக்கியிருக்கிறார். மறுபடியும் 'அடிமைத்தனத்தின் நுகத்துக் குட்படாதே.' நரகத்துக்குப் போகுமுன்

இவ்வுலகத்தில் சுமக்கிற பாரமான நுகமாகிய பாவம், துர்இச்சை, துர்க்குணம், துர்ப்பேச்சு, துர்ச்செய்கையாகிய பிசாசின் கொடிய அடிமைத்தனத்துக்கு உட்படாதே. அல்லது அடிமைக்குரியதும் வேதனை யுண்டாக்குகிறதுமான பயம், பாவதோஷம், சுயஆக்கினைத் தீர்ப்பாகிய அடிமைத்தனத்துக்கும் உட்படாதே.

3. இரண்டாவது, கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டு அவரில் நிலைத்திருக்கிற யாவரும் 'மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறார்களா?' அப்படியானால், பாவஞ்செய்கிறவன் எவனோ அவனுக்கு இதில் பங்குமில்லை, பாகமுமில்லை யென்று அனுமானிக்க வேண்டியதே. அவனுடைய சொந்த இருதயமே அவனைக் குற்றவாளியென்று சொல்லுகிறது. நமதிருதயமே நம்மை ஆக்கினைக்குட்படுத்துமாகில், அதாவது, நமது சொந்த மனச்சாட்சியே நாம் குற்றவாளிகளென்று நமக்கு விரோதமாய்ச் சாட்சியிடுமாகில் தேவன் நம்மைக் குற்றமுள்ளவர்களென்று தீர்ப்பார் என்பதற்குச் சந்தேகமுண்டோ? ஏனென்றால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்.' நாம் நம்மை வஞ்சித்துக்கொள்ளக் கூடுமாயினும், அவரை வஞ்சிக்க முடியாது. 'ஒரு காலத்தில் நான் நீதிமானாக்கப்பட்டேன்; என் பாவங்கள் ஒருகாலத்தில் எனக்கு மன்னிக்கப்பட்டன' என்று சொல்ல நினையாதே. அது எனக்குத் தெரியாது. மன்னிக்கப்பட்டது மெய்யோ பொய்யோவென்று வாதாடவுமாட்டேன். மெய்யாகவே உன்னிருதயத்தில் தேவனுடைய கிரியை நடந்ததோ அல்லது நீயே உன்னை வஞ்சித்துக்கொண்டாயோ இதைக்குறித்துத் திட்டமாய்ச் சொல்லுவது கூடியதல்ல. ஆனால் ஒன்றுமாத்திரம் எனக்கு முழு நிச்சயமாய்த் தெரியும். அதென்னவெனில், 'பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்' என்பதே. ஆகையால் இதைக் கேட்கிற நீ பாவக் கிரியைகளைச் செய்தால் உன் பிதாவாகிய பிசாசினாலுண்டானவனாயிருக்கிறாய். இதை நீ மறுக்க முடியாது; ஏனென்றால் நீ உன் பிதாவின் கிரியைகளைச் செய்கிறாய். அப்படியிருக்க, வீண் நம்பிக்கைக் கிடங்கொடுத்து உன்னை வஞ்சித்துக்கொள்ளாதே. சமாதானமில்லாதிருக்க சமாதானம் ஆத்துமாவில் இருக்கிறதென்று சொல்வதேன்? ஆழங்களிலிருந்து தேவனை நோக்கிச் சத்தமிடு. ஒருவேளை



அவர் உன் சத்தத்தைக் கேட்பார். நீ முதல்தடவை வந்தது போலவே வா. நீ நிர்ப்பாக்கியனும், தரித்திரனும், பாவியும், பரிதபிக்கப்படத்தக்கவனும், குருடனும், நிர்வாணியுமாகவே வா. தேவன் தமது மன்னிப்பின் அன்பை உனக்குத் திரும்பவும் வெளிப்படுத்தி உன் சீர்கேடுகளைக் குணமாக்கி அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசத்தினால் உன்னைத் திரும்பவும் நிரப்புமட்டும் உன் ஆத்துமாவை இளைப்பாற விடாதே. எச்சரிக்கையாயிரு.

4. மூன்றாவது, 'ஆவியின்படி நடக்கிறவர்கள்' **உள்ளான பாவத்துக்கு** இடங்கொடாவிட்டாலும் இன்னும் தங்களிடத்திலிருக்கும் மீதியான பாவதோஷத்தினிமித்தம் அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வாராதா? அல்லது தங்கள் **கிரியைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாவத்தினிமித்தம்** ஆக்கினைத்தீர்ப்பு இல்லையா? அப்படியானால், உன்னிருதய அவபக்தியினிமித்தம் திகைத்துக் கலங்காதே. தேவனுடைய மகிமையான சாயலுக்கு நீ இன்னும் வந்தெட்டவில்லையேயென்றும், பெருமை, சுயசித்தம், அவிசுவாசம் என்பவை உன் வார்த்தை, கிரியை யாவற்றிலும் கலந்திருக்கிறதேயென்றும் விசனப்படாதே. உன்னிருதயம் இவ்வளவு கேடுள்ளதா யிருக்கிறதென்று காண்பதினிமித்தமும், நீ அறியப்பட்டிருக்கிறபடியே உன்னை நீ அறிவதினிமித்தமும் தியங்காதே. நீ உன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதபடிக்குத் தேவனை நோக்கி மன்றாடு.

உள்ளான பாவம் யாவையும்
நான் பார்க்கச் செய்யுமே
அவிஸ்வாஸம் பெருமையும்
எனக்குக் காட்டுமே

என்பதே எப்போதும் உன் ஜெபமாயிருக்கட்டும். அவர் உன் மன்றாட்டைக் கேட்டு, உன் இருதயத்தை உனக்குத் திறந்து காட்டி, நீ இன்ன தன்மை யுடையவனென்று உனக்குத் தெளிவாய்க் காண்பிக்கும்போது உன் விசுவாசத்தைவிட்டு வழுவிப்போகாமலும் உன் கேடகத்தைப் பறிகொடுக்காமலும் எச்சரிக்கையாயிரு. உன்னைத் தாழ்த்து, உன்னைத் தரைமட்டும் தாழ்த்து. நீ ஒன்றுமில்லையென்றும், நீ மாயையென்றும் அறிந்துகொள். ஆயினும் உன்னிருதயம் கலங்

காமலும் பயப்படாமலுமிருப்பதாக. ‘நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து எனக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.’ ‘பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, என் பாவங்களைப்பார்க்கிலும் அவருடைய அன்பு அவ்வளவு உன்னதமாயிருக்கிறது’ என்பதை உறுதியாய்ப் பற்றிக்கொள், ஆகையால் தேவன் பாவியாகிய உன்மேல் கிருபையாயிருக்கிறார் உன்னைப்போன்ற பாவியின்மேல்கூட கிருபையாயிருக்கிறார். தேவன் அன்பாகவேயிருக்கிறார். கிறிஸ்து உனக்காக மரித்தாரே. ஆகையால் பிதாதாமே உன்னில் அன்பாயிருக்கிறார். நீ அவருக்குப் பிள்ளையாயிருக்கிறாய். நன்மையானதை உனக்களிக்காதிரார். இப்போது சிலுவையில் அறையப்பட்டிருக்கிற உன் பாவ சரீரம் முழுவதும் ஒழிந்துபோவது நன்மையென்று நினைக்கிறாயோ? அப்படியே நடக்கும். ‘மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க உன்னைச் சுத்திகரிப்பார்.’ தேவனுடைய பரிசுத்த அன்பைத்தவிர வேறொன்றும் உன்னிருதயத்தி லில்லாதிருப்பது உனக்கு நன்மையாயிருக்குமோ? திடன்கொள். ‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு மனதோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப்பெலத்தோடும் அன்புகூருவாய்’ வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.’ ஆனால் நீ செய்யவேண்டியதென்ன? உன் விசுவாசத்தின் கிரியையிலும் உன் அன்பின் பிரயாசத்திலும் பொறுமையாய் நிலைத்திருந்து சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்து முடிக்கும்வரையில், சமாதானமும் நம்பிக்கையுமுள்ளவனாய் அமைதலோடும் கீழ்ப்படிதலோடும் ஆவலோடும் எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிரு.

5. நான்காவது, ‘‘கிறிஸ்துவுக் குட்பட்டவர்களாயிருந்து’ ஆவியின்படி நடக்கிறவர்கள் பெலவீனத்தினால் செய்த பாவங்களினிமித்தமும் மனதாரச் செய்யாத தவறுதல்களினிமித்தமும் தங்களுடைய சக்திக்கு மிஞ்சின எவைகளினிமித்தமும் ஆக்கினைக்குள் தீர்க்கப்படுகிறதில்லையானால், அவருடைய திரு இரத்தத்தில் விசுவாசமாயிருக்கிறவனே, பிசாசானவன் உன்னை மேற்கொள்ளாதபடி எச்சரிக்கையாயிரு. நீ இன்னும் பேதையும் பெலவீனனும் அந்தகனும்



அறிவீனனுமாயிருக்கிறாய். உன் பெலவீனம் இவ்வளவென்று வாயினால் சொல்ல முடியாது. நீ கண்டுகொள்ளக்கூடாத அவ்வளவு மதியீனனாயிருக்கிறாய். நீ அறியவேண்டியபிரகாரம் இன்னும் ஒன்றையும் அறியவில்லை. ஆயினும் நீ விட்டுவிடக் கூடாதிருக்கிற உன் பலவீனமாவது, மதியீனமாவது அல்லது அவைகளின் பலாபலனாவது தேவன்பேரிலுள்ள உன் விசுவாசத்தையும் பிள்ளையடைவான உன் நம்பிக்கையையும் அசைக்காமலும் கர்த்தருக்குள் உனக்கிருக்கும் சமாதான சந்தோஷத்தைக் குலைத்துப்போடாமலு மிருப்பதாக. மனதாரச்செய்யும் பாவங்களைக்குறித்து சிலர் கூறும் சட்டமானது அவ்வித பாவத்துக் கடுத்தவிஷயத்தில் தீமையை விளைவிக்கக்கூடியதாயினும், அச்சட்டத்தைப் பலவீனத்தினாலான பாவங்கள்விஷயமாயும் அறியாமற்செய்த தவறுதல்கள்விஷயமாயும் உபயோகிக்கும்போது அது ஞானமும் நன்மை உண்டுபண்ணுகிறதுமான சட்டமென்பதற்குச் சந்தேகமில்லை. தேவனுடைய மனுஷனே, நீ விழுந்துவிட்டாயோ, உன்னை நீயே நொந்துகொண்டும் உன் பெலவீனத்தைக்குறித்துப் புலம்பிக்கொண்டும் நீ விழுந்த இடத்திலேயே கிடக்காமல், ‘ஆண்டவரே, நீர் உம்முடைய கரத்தால் என்னைத் தாங்காவிடில் நான் இப்படியே ஒவ்வொரு நிமிஷமும் விழுந்துவிடக் கூடியவன்’ என்று தாழ்மையாய்ச் சொல்லு. அப்புறம் எழுந்திருந்து ‘உனக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவாய்.’

6. கடைசியாக, விசுவாசிக்கிறவன் தன் ஆத்துமா அருவருக்கிற பாவத்தைக் கவலைத்தாழ்ச்சியினாலாவது, அஜாக்கிரதையினாலாவது வேணுமென்று செய்யாமல் திடீரெனச் செய்வானாகில் அதினிமித்தம் அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை யென்று பார்த்தோம். ஆகையால், விசுவாசிக்கிற நீ இவ்விதமான குற்றத்துக்குள் அகப்பட்டிருப்பாயாகில் அதற்காக கர்த்தருக்குமுன் துக்கப்படு. உன் இருதயத்தை அவருக்குமுன் திறந்து உன் சஞ்சலத்தை அவருக்கு அறிவி. ‘உன் பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கிற ஆண்டவர் உன்னை ஸ்திரப்படுத்திப் பலப்படுத்தி உன் ஆத்துமாவை நிலைநிறுத்தி நீ இனித் தவறாதபடி உன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று உன் முழுப் புலத்தோடும் அவரை நோக்கி மன்றாடு.’ அவர் இன்னும் உன்னை

ஆக்கினைக் குட்படுத்தாமலிருக்க நீ என் நிலையடையவேண்டும். 'வேதனை உண்டாக்கும் பயம்' உன்னிடத்தி லிருக்கவேண்டிய அவசியமென்ன? உன்னிடத்தில் அன்பாயிருக்கிறவரிடத்தில் நீயும் அன்பாயிருந்தால் அதுவே போதும். அன்பு பெருக, பெலனும் பெருகும். நீ உன் முழு இருதயத்தோடும் அவரில் அன்புகூருகிற அந்நியிஷமே நீ 'ஒன்றிலும் குறைவுள்ளவனாயிராமல் பூரணனாயும் நிறைவுள்ளவனாயு மிருப்பாய்.' சமாதானத்தின் தேவன்தாமே உன்னை முற்றிலும் பரிசுத்தமாக்கி, உன் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காத்துக்கொள்வாராக. இப்படி நடக்கும்வரையில் பொறுமையுடன் காத்திரு.

## வினாக்கள்.

1. கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்கள் இப்போது தங்களிடத்திலிருக்கிற உள்ளான பாவத்தினிமித்தம் ஆக்கினைக் குட்பட்டவர்களா?

'அவர்கள் அதினிமித்தம் ஆக்கினைக் குட்படார்கள்.'

பிரிவு. II. 5. பார்க்க.

2. இதை எவ்வாறு ரூபிக்கலாம்?

'அப். பவுல்' மு.

பிரிவு. II. 5. பார்க்க.

3. கிறிஸ்துவுக் குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. இவ்வளவுதானா?

'தேவன் அவர்கள்மேல் பிரியமாயுமிருக்கிறார்.'

பிரிவு. II. 6. பார்க்க.

4. தேவன் அவர்களை ஆக்கினைக் குட்படுத்தாவிட்டாலும் அவர்களுடைய சொந்த மனச்சாட்சி அவர்களை ஆக்கினைக் குட்படுத்தாதா?

ஆக்கினைக் குட்படுத்தாது. 'இப்படியெல்லாமிருந்தும்' மு.

பிரிவு. II. 7. பார்க்க.



5. 'பெலவீன பாவங்கள்' என்னும் பதங்கள், கருத்தைத் தெளிவாய்க் காட்டுகின்றனவா?

இல்லை. 'அவை உபயார்த்தமும் ஐயமுமுள்ளவைகள்.'

பிரிவு. II. 8. பார்க்க.

6. திடீரெனச் செய்யும் பாவங்களெவை?

அவை, மனம் இணங்கின அளவுக்குத் தக்கதாய்ச் செய்யும் பாவம்.

II. 11. 'மனமறிய கவலையீனத்துக்கு இடங்கொடுத்துச் செய்த பாவம்; அல்லது சோதனை வருமுன்னே' மு.

பிரிவு. II. 12. பார்க்க.

7. உள்ளான பாவத்துக்கு இடங்கொடாதிருந்தும், இன்னும் தங்களில் பாவமிருப்பதாக உணருகிறவர்களுக்கு உவெஸ்லி ஐயர் சொல்லும் ஆலோசனை என்ன?

'உன் இருதய அவபக்தியினிமித்தம் திகைத்துக் கலங்காதே.'

பிரிவு. III. 4. பார்க்க.

8. 'நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்' என்கிற ஒருவனுக்கு என்ன பதில் சொல்லலாம்.

பிரிவு. III. 2. பார்க்க.

9. தவறி விழுந்துபோனவர்களுக்கு உவெஸ்லி ஐயர் சொல்லும் ஆலோசனை என்ன?

நீ விழுந்த இடத்திலேயே கிடக்கவேண்டாம்.

பிரிவு. III. 5. பார்க்க.

10. பூரண பரிசுத்தம் உண்டாகும் விதமும் அது வளரும் விதமும் சொல்லுக.

'அன்பு பெருக பெலனும் பெருகும்.'

பிரிவு. III. 6. பார்க்க.

# ஐந்தாம் பிரசங்கம்.

## THE SPIRIT OF BONDAGE AND ADOPTION.

## அடிமைத்தனத்தின் ஆவியும், புத்திர சுவிகாரத்தின் ஆவியும்.

*'அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.' ரோம. 8: 15.*

1. விசுவாசத்தினால் தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கிறவர்களைப் பார்த்து, பரி. பவுல் இவ்விடத்தில் பேசுகிறான். மெய்யாய் அவருக்குப் பிள்ளைகளாயிருக்கிற நீங்கள் அவருடைய ஆவியைப் பெற்றவர்கள் என்கிறான். எப்படியெனில், 'நீங்கள் திரும்பவும் பயப்படுகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறவில்லை. நீங்கள் புத்திரரா யிருக்கிறபடியினாலே தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்களிருதயங்களில் அனுப்பினார். அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள்' என்று சொல்லுகிறான்.

2. பயப்படுகிற அடிமைத்தனத்தின் ஆவிக்கும் அன்புள்ள புத்திரசுவிகாரத்தின் ஆவிக்கும் பெரிய வித்தியாசமுண்டு. அடிமைத்தனத்திற்குரிய பயத்தினால்மாத்திரம் நடத்தப்படுகிறவர்களைத் தேவனுடைய புத்திரர் என்று சொல்லக்கூடாது. ஆயினும் அவர்களில் சிலரை அவருடைய வேலைக்காரர் என்று சொல்லலாம். இவர்கள் 'பரலோக ராஜ்யத்திற்குத் தூரமானவர்களல்ல.'

3. ஆனால் யாவருக்குள்ளும், விசேஷமாய் கிறிஸ்தவர்கள் என்று பெயருள்ளவர்களுக்குள்ளும் பெரும்பாலோர் இவ்வளவுக்குக்கூட வந்தெட்டவில்லை. அவர்கள் இன்னும் தூரமாகவே யிருக்கிறார்கள். 'அவர்கள் நினைவுகளெல்லாம் தேவனில்லை யென்பதே.'



இது துக்கமானவிஷயம். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களைக் கணக்கிட்டால் மிகவும் சொற்பம். அவருக்குப் பயப்படுகிறவர்களின் தொகை சற்றதிகமிருக்கலாம்; தங்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமற்றவர்களும் தங்களிருதயத்தில் அவரை நேசியாதவர்களுமோ ஏராளம்.

4. தேவ கிருபையினால் இப்பொழுது நல்லாவியைப் பெற்றிருக்கிற உங்களில் அநேகருக்கு, நீங்களும் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டு மற்றவர்களைப்போலிருந்த காலம் ஞாபகமிருக்கும். நீங்கள் உங்கள் பாவங்களில் தினமும் உழன்று கிடந்தபோதிலும் துவக்கத்தில் இவைகளை அறியவில்லை. அப்புறம் தகுந்த காலத்தில் 'பயமுள்ள ஆவியைப் பெற்றுக்கொண்டீர்கள்.' (இந்த பயத்தின் ஆவியும் தேவனுடைய ஈவாயிருப்பதினால் 'பெற்றுக்கொண்டீர்கள்' என்று சொல்லியிருக்கிறது.) அதன்பின்பு, பயம் நீங்கிப்போக அன்பின் ஆவியால் நிரப்பப்பட்டீர்கள்.

5. பயமும் அன்புமின்றி முதல் நிலைமையிலிருப்பவனை வேதத்தில் 'ஜென்ம சுபாவமான மனுஷன்' என்றும், பயப்படுகிற அடிமைத்தனத்தின் ஆவி உடையவனை 'நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன்' என்றும் சொல்லியிருக்கிறது. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன் என்று சொல்லும்போது, பொதுவாய் யூதமார்க்கத்துக்குட்பட்டவனை அல்லது யூத நியாயப்பிரமாணத்தின் சடங்காசாரங்கள் யாவையும் கைக்கொள்ளக் கடமைப்பட்டதாக எண்ணிக்கொள்ளுகிறவனைக் குறிக்கும். ஆனால் பயத்தின் ஆவிக்குப் பதிலாக அன்பின் ஆவியைப் பெற்றிருக்கிறவனையோ 'கிருபைக்குக் கீழ்ப்பட்டவன்' என்று சொல்லியிருக்கிறது.

நாம் இன்ன ஆவியுள்ளவர்களென்று அறியவேண்டியது முக்கியமாதலால் மூன்று விஷயங்களைக்குறித்து விஸ்தரித்துக் காண்பிக்கப்போகிறேன்: 1–வது 'ஜென்ம சுபாவமான மனுஷனுடைய' நிலைமை. 2–வது 'நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனுடைய' நிலைமை. 3–வது 'கிருபைக்குக் கீழ்ப்பட்டவனுடைய' நிலைமை.

I. 1. முதலாவது 'ஜென்ம சுபாவமான மனுஷனுடைய' நிலைமை. இதைத் தூக்க நிலைமையென்று வேதம் சொல்லுகிறது. தேவன் அவனைப்பார்த்துத் 'தூங்குகிற நீ விழி' என்று

சொல்லுகிறார். ஏனென்றால், அவனுடைய ஆத்துமா அயர்ந்த நித்திரை செய்கிறது. அவனுடைய ஆவிக்குரிய புலன்கள் விழிப்பாயிராததினால் நன்மை தீமை யின்னதென்று அவைகளுக்கு விளங்கவில்லை. அவனுடைய புத்தியின் கண்கள் அடைபட்டுப் போயிற்று. அவைகள் இறுக மூடியிருப்பதினால் பார்க்கமுடியாது. மேகமும் மந்தாரமும் அவைகளை எப்போதும் கவிந்துகொண்டிருக்கிறது. அவன் இருக்கிற இடம் மரண இருளின் பள்ளத்தாக்கு அவன் ஆவிக்குரிய விஷயங்களை அறியாதபடி அவனுடைய ஆத்துமவாசல் யாவும் அடைபட்டிருப்பதினால் அவசியமாய் அறிய வேண்டியவைகளையும் உணராதவனாயிருக்கிறான். தேவனைக்குறித்து அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவரைக்குறித்து அவன் அறிய வேண்டியபிரகாரம் அறியவில்லை. தேவனுடைய பிரமாணத்தின் ஆவிக்குரிய உள்ளான மெய்க்கருத்து இன்னதென்று சற்றேனும் அறியான். 'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசியான்' என்று சுவிசேஷம் கூறுகிறது. 'இப்பரிசுத்தத்தைப்பற்றி அவனுக்குத் தெரியவே தெரியாது.' கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறவர்களுடைய ஜீவியத்தின் பாக்கியம் இன்னதென்றும் அவனுக்கு விளங்காது.

**2.** அவன் அயர்ந்த நித்திரையி லிருப்பதினிமித்தம் ஒருவகையாய் மனக்கலக்க மற்றிருக்கிறான். பார்வையற்றிருப்பதினிமித்தம் திகிலற்றவனாயுமிருக்கிறான். 'எனக்கு யாதொரு தீங்கும் நேரிடாது' என்றும் சொல்லிக்கொள்ளுகிறான். அவனைச் சுற்றி இருள் மூடியிருப்பதினால் அவனுக்கு ஒருவிதமான சமாதானமுண்டு. அது எவ்வித சமாதானமென்றால், பிசாசின் கிரியைகளும் அசுத்தமான லௌகீக சிந்தையுமுள்ளவர்களிடத்தில் இருக்கக்கூடிய சமாதானமே. செங்குத்தான பள்ளத்தின் ஓரத்திலே நிற்கிறதை அறியாதிருப்பதினால் அவனுக்குப் பயமேயில்லை. தனக்கு நேரிடவிருக்கும் அபாயத்தை அறியாதிருக்கையில் அவன் அதற்கஞ்சி நடுங்கக்கூடுமோ? போதுமான அறிவில்லாததினால் அச்சமற்றிருக்கிறான். தேவனைக்குறித்து ஒன்றும் அறியாதிருப்பதே அவருக்குப் பயந்து நடுங்காததற்குக் காரணம். அறிவற்றிருப்பதினால் 'தேவனில்லை' என்றாவது, அவர் வானமண்டலத்தில் வீற்றிருந்து பூமியிலுள்ளவைகளைப் பார்க்கும்



படி தம்மைத் தாழ்த்துகிறதில்லை' என்றாவது தனக்குள் சொல்லிக்கொள்ளாவிட்டாலும் லௌகீக சிற்றின்பத்தில் பிரியப்பட்டவனாய் 'தேவன் இரக்கமுள்ளவரல்லவா' என்று சொல்லித் தன்னைத் திருப்தி செய்துகொள்ளுகிறான். பரிசுத்தம், பாவவெறுப்பு, நீதி, ஞானம் என்னும் தேவ லட்சணங்களை யாவற்றையும் அவருடைய காருண்ணியம் மாற்றும் என்று புத்தியீனமாய் எண்ணிக்கொள்ளுகிறான். தேவனுடைய பரிசுத்த கற்பனைகளை அறிந்துகொள்ளாததினால் அதை மீறுகிறவர்களுக்கு விரோதமாய்க் கூறியிருக்கும் கோபாக்கினையைப்பற்றி அவனுக்குச் சற்றேனும் திகிலில்லை. செய்யவேண்டியது இவ்வளவுதானே! புறம்பான நடக்கையில் குற்றமற்றவனாயிருந்தால் போதுமல்லவா? என்று எண்ணிக்கொள்ளுகிறான். ஆனால் தன்னிருதயத்தின் சுபாவம், விருப்பம், ஆசை, சிந்தை, நினைவு யாவிலும் இவ்வாறே குற்றமற்றவனாயிருக்கவேண்டுமென்று அறியான். இதுகாலவரையில் நியாயப்பிரமாணத்துக்குரிய தன் கடமை முடிந்துபோயிற்றென்று எண்ணிக்கொள்ளுகிறான். ஏனெனில், 'நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்கும்படி, இயேசுகிறிஸ்து வந்தார் என்றும், தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சியாமல் அவர்கள் பாவத்தில் நிலைத்திருக்கும்போதே அவர்களை இரட்சித்து, அவர்கள் பரிசுத்தமற்றிருந்தும் அவர்களை மோட்சம் சேர்க்கும்படி வந்தார் என்றும் வீணாக எண்ணிக்கொள்ளுகிறான். ஆனால் ஆண்டவருடைய வார்த்தைகளோ இதற்கு மாறாயிருக்கின்றன. 'நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது' என்றும் 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே, கர்த்தாவே என்றுமாத்திரம் சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை' என்றும் சொல்லியிருக்கிறார்.

**3.** தன்னைத்தான் அறியாதிருப்பதே அவன் திகிலற்றிருப்பதற்குக் காரணம். அதினால் 'இனிமேல் மனந்திரும்பலாம்' என்று சொல்லிக்கொள்ளுகிறான். அவன் மனந்திரும்பப்போகிற சமயம் எப்போதென்று அவனுக்குத் தெரியாது. ஆனால் மனந்திரும்புதல்

தன் கைக்குள்ளிருக்கிறாப்போல் மரிக்குமுன் ஒருகாலத்தில் மனந்திரும்பலாமென்று எண்ணுகிறான். எப்படியென்றால் தான் மனந்திரும்ப இஷ்டப்பட்டால் அதற்குத் தடையுண்டோ? தான் ஒரு தடவை உறுதியாய்த் தீர்மானித்தால் போதும்; அப்புறம் அதை நிறைவேற்றத் தன்னால் கூடும் என்றெண்ணுகிறான்.

4. இவ்வித அறிவீனம் மற்றவர்களிடத்தி விருப்பதைப்பார்க்கிலும் **கல்விமான்கள்** என்று பெயர் பெற்றவர்களிடத்தில்தான் துலக்கமாய்த் தோன்றுகிறது. ஜென்ப சுபாவமான மனுஷன் கல்விமானா யிருப்பானாகில் தன் மனோதத்துவங்களைக்குறித்தும், சுயாதீன சித்தத்தைக்குறித்தும், மனுஷர் நன்மை தீமைக்கு உத்தரவாதிகளா யிருப்பதற்குச் சுயாதீன சித்தம் அத்தியந்த அவசியம் என்பதைக்குறித்தும் விஸ்தாரமாய்ப் பேசுவான். எந்த மனுஷனும் தன் இஷ்டப்படி நடந்து தன் விருப்பப்பிரகாரம் நன்மையோ தீமையோ செய்வதற்குத் தன் மனதுக் கிடங்கொடுக்கலாம் என்பதாகப் பல புஸ்தகங்களை எடுத்து வாசித்துத் தர்க்கமாடி, அத்தாட்சியுடன் ரூபித்துக் காட்டுவான். இந்தப்பிரகாரம் 'கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி' எவ்விதமாயாவது அவனிருதயத்தில் பிரவேசியாதபடி 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்' அவன் மனதை இரட்டிப்பாய்க் குருடாக்கியிருக்கிறான்.

5. ஜென்ம சுபாவமான மனுஷன் தன்னையும் தேவனையும் அறியாமல் தன் ஞானம் நற்குணத்தைப்பற்றித் தன்னை மெச்சிக்கொள்ளுவதினால் சில சமயங்களில் **ஒருவகையான** சந்தோஷம் அவனுக்குள் உண்டாகக்கூடும். உலகத்தார் சந்தோஷம் என்று சொல்லுகிற சந்தோஷம் அடிக்கடி அவனுக்கு இருக்கக்கூடியதே. பற்பலவிதமான இன்பங்களை அனுபவித்துச் சந்தோஷிக்கலாம். மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய இவைகளுக்கு இடங்கொடுத்து இவைகளின் இன்பத்தை அனுபோகிக்கலாம். விசேஷமாய், அவனுக்குத் திரண்ட சொத்தும் மிகுந்த ஆஸ்தியு மிருக்குமாகில், அவன் 'இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருப்பான்.' இவ்வாறு அவன் இருக்கும் காலமெல்லாம் மனுஷர் அவனைக்குறித்து மேன்மையாய்ச் சொல்லிக்கொள்வார்



ளென்பதற்குச் சந்தேகமில்லை. மனுஷர் அவனைப் பாக்கியவான் என்பார்கள். ஏனென்றால் உண்டு உடுத்தி உறவாடுவதும், புசித்துக் குடித்து விளையாடுவதுமே உலகத்தாரின் பார்வையில் பாக்கியமாம்.

6. இவ்வித நிலைமையிலுள்ள ஒருவன், முகஸ்துதியினாலும் பாவத்தினாலும் மயங்கிப் பலவித மனோராஜ்யத்துக்கு இடங்கொடுப்பதுடன் தன்னை மகா **சுயாதீனன்** என்றும் எண்ணிக்கொள்வது ஆச்சரியமல்ல. **கல்வியறிவு இல்லாதவர்களுக்குரிய தவறுதல்களுக்கும்**, கற்றோருக்குரிய **தப்பெண்ணங்களுக்கும்** அவன் தான் விலகி சுயாதீனனா யிருப்பதாகவும், தான் இவ்விரு வகுப்பாரோடும் சேராமல் நடுநிலைமையில் நின்று நியாயமாய் நிதானிக்கிறதாகவும் தன்னைக் குறித்து எண்ணிக்கொள்ளுவது எளிது. அற்ப மனுஷருக்குரிய **வைராக்கியமும்**, மிதமிஞ்சின நீதிமான்களாகிய மூடரையும், கோழை நெஞ்சரையும் பிடித்த **வீண்பக்தியும்**, உதாரகுணம் அற்றவர்களுக்குரிய **குருட்டுபக்தியும்** எனக்கில்லையாதலால் நான் சுயாதீனனே என்று அவன் தன்னைக்குறித்துச் சொல்லிக்கொள்ளலாம். அவன் சுயாதீனன் என்பது மெய்யே. எப்படிப்பட்ட சுயாதீனன்? 'பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமும்,' பரிசுத்தமும், இருதயபக்தியும், கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையுமற்ற சுயாதீனனா யிருக்கிறான்.

7. எப்படியென்றால், அவன் இவ்வளவுகாலமும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். அவன் அநுதினமும் பாவம் செய்துகொண்டே வருகிறான். அப்படியிருந்தும் அதினால் அவனுக்கு மனச்சஞ்சலமில்லை, சிலர் சொல்லிக்கொள்ளுகிறபிரகாரம் 'அவன் அடிமைப்பட்டவனல்ல.' ஆக்கினைத்தீர்ப்பு வருமென்கிற உணர்ச்சி அவனுக்கு இல்லை. கிறிஸ்தவ சத்தியங்கள் தேவனால் வெளிப்படுத்தப்பட்டதென்று தான் விசுவாசிக்கிறதாக அவன் சொல்லிக்கொண்டபோதிலும், மனுஷன் தவறக்கூடியவன், யாவரும் பெலவீனர், ஒவ்வொருவனுக்குமுரிய குறைவுண்டு என்பதாகச் சொல்லித் தன்னைத் திருப்தி செய்துகொள்ளுகிறான். 'நீதிமான் ஏழுதரம் விழுவதாக சாலொமோன் சொல்லவில்லையா' என்று தனக்கிசைவாக வேதவசனத்தை எடுத்துரைத்து தங்கள் அயலாரைப்பார்க்கிலும் தங்களை நல்லவர்களாகக் காண்பிக்கிற யாவரும் மாய்மாலக்காரரும் மத

வைராக்கியம் பிடித்தவர்களுமா யிருக்கிறார்கள் என்றும் சொல்லிக் கொள்ளுகிறான். எப்போதாகிலும் அவன் மனசில் பயபக்தியான எண்ணமுண்டாகுமாகில் 'தேவன் இரக்கமுள்ளவர்; கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தாரே, அப்படியிருக்க நான் ஏன் பயப்படவேண்டும்' என்று சொல்லி அவ்வெண்ணத்தை உடனே நீக்கிப்போடுகிறான். இவ்விதமாகப் பாவத்துக்கு மனதார ஊழியஞ்செய்து தீமைக்கு அடிமைப்பட்டிருக்கச் சம்மதிக்கிறான். உள்ளும் புறம்பும் அசுத்தனாயிருந்தும் அந்த நிலைமையில் மனரம்மியமாயிருக்கிறான். அவன் பாவத்தை ஜெயிக்கிறதுமில்லை. ஜெயிக்கும்படி முயற்சி செய்கிறதுமில்லை. விசேஷமாய்த் தன்னைச் சுற்றி நிற்கிற பாவத்தையாவது ஜெயிக்கும்படி முயலுகிறதேயில்லை.

8. **ஜென்ம சுபாவமான மனுஷனின்** நிலைமையும் இதுவே. அவன் கொடிய துன்மார்க்கனாயிருக்கலாம். அல்லது தெய்வபக்தியின் பெலனை நாடாமல் அதின் வேஷத்தைமாத்திரம் தரித்து மரியாதையும் யோக்கியமுமாக ஜீவிக்கிறவனாயிருக்கலாம். இப்பேர்ப்பட்ட ஒருவன் **தன் பாவத்தை உணர்வது** எவ்வாறு? அவன் மனந் **திரும்பி, நியாயப்பிரமாணத்துக் குட்பட்டு, பயப்படுகிற அடிமைத் தனத்தின் ஆவியைப்** பெற்றுக்கொள்ளுவதெப்படி? இது நாம் ஆலோசிக்கவேண்டிய இரண்டாவது விஷயம்.

II. 1. இரண்டாவது **'நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனுடைய'** நிலைமை. தெய்வச்செயலால் நேரிடும் பயங்கர சம்பவத்தினாலாவது, பரிசுத்தாவியின் வல்லமையினால் வேதவசனம் செய்கிற கிரியையினாலாவது அந்தகாரத்திலும் மரண இருளிலும் நித்திரை செய்தவனுடைய இருதயத்தைத் தேவன் தொட்டு உணர்த்துகிறார். நித்திரையினின்று அவனைப் பயங்கரமாய் அசைத்து அவன் தனக்கு வரப்போகிற மோசத்தை உணர்ந்துகொள்ளும்படி விழிப்படையச் செய்கிறார். க்ஷணப்பொழுதில் அல்லது நாளாவட்டத்தில் அவனுடைய புத்தியின் கண்கள் திறக்க, அவனுடைய முகத்தை மூடிய முக்காடு சற்றே விலகுவதினால் இப்போதான் முதல்தடவையாகத் தன் யதார்த்த நிலைமையை அறிகிறான். ஆழமான பாதாளத்திலிருந்தும், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலிருந்தும் புறப்படுகிற சுவாலைக்கு ஒப்பான பயங்கரமான சுவாலை அவன் ஆத்துமாவில் வீசு



கின்றது. அன்பும் இரக்கமுமுள்ள தேவன் 'பட்சிக்கிற அக்கினியாயு மிருக்கிறார்' என்றும் காண்கிறான். அவர், அவனவன் செய்கைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளித்து, துன்மார்க்கரை அவர்களுடைய வீண்வார்த்தைகளினிமித்தம் மாத்திரமல்ல, அவர்களிருதயத்தின் நினைவுகளினிமித்தமும் நியாயந்தீர்க்கிற சத்தியமும் பயங்கரமுமான தேவனாயிருக்கிறார் என்றும் அவனுக்கு இப்போ தெரிகிறது. மகிமையும் பரிசுத்தமுமுள்ள தேவன் 'தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணர்' என்று தமக்கு விரோதமாய்க் கலகஞ் செய்கிறவனிடத்தில் பழிவாங்கி, துன்மார்க்கனுக்குப் பிரத்தியட்சமாய்ப் பதிலளிக்கிறவர் என்றும் 'ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரம்' என்றும் இப்போ துலாம்பரமாய்க் காண்கிறான்.

2. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய உள்ளான கருத்து இப்பொழுது அவன் மனதில் உதிக்கிறது. 'தேவனுடைய கற்பனை மகா விஸ்தாரமானது' என்றும், 'அதின் காந்திக்கு மறைவானதொன்றுமில்லை' என்றும் அறிகிறான். கற்பனையின் ஒவ்வொரு பாகமும் புறம்பான கீழ்ப்படிதலையும் புறம்பான மீறுதலையும்மாத்திரம் குறிக்காமல் தேவனுடைய கண்களுக்குமட்டும் தோன்றக் கூடிய ஆத்துமாவின் அந்தரங்கங்களையும் குறிக்கிறது என்றும் உணருகிறான். 'கொலை செய்யாதிருப்பாயாக' என்னும் வார்த்தைகள் அவன் செவியில் விழும்போது, தேவன் அவனைப் பார்த்து, 'தன் சகோதரனைப் பகைக்கிறவன் கொலைபாதகனாயிருக்கிறான்' என்றும், 'தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்' என்றும் பயங்கர சப்தத்துடன் முழங்குகிறார். நியாயப்பிரமாணமானது 'விபசாரஞ் செய்யாதிருப்பாயாக' என்று சொல்லுகையில் தேவனுடைய சத்தமோ 'ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று' என்று அவன் செவிகளில் பலமாய்த் தொனிக்கிறது. இவ்விதமாகத் தேவனுடைய வார்த்தையானது எவ்விஷயத்திலும் 'ஜீவனும் வல்லமையுமுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்' இருக்கிறதாகக் காண்கிறான். அது அவனுடைய 'ஆத்துமா

வையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறது.' மேலும் 'இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்று' தன் பாவங்களை விட்டுத் தன்னை இரட்சிக்கச் சித்தமுள்ள 'தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம்' என்று (அதாவது பரிசுத்தமாக்கக்கூடாத தீட்டான இரத்தமென்று) எண்ணினேனேயென்பதாக அவன் உணருகிறபடியால் தேவவசனமானது அவனை அதிக பலமாய் உருவக் குத்துகிறது.

3. 'சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறதென்றும் அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்' என்றும் அவன் அறிந்திருக்கிறான். அப்படியே தன்னைப் பக்தியும் சன்மார்க்கமுமுள்ளவனாகக் காட்டின மாய்மாலங்களையும், தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததற்கு அவன் சொன்ன அபத்த போக்குகளையும், உண்மையாய் அறிகிறான். தன்னிருதயத்திலுள்ள யாவும் பகிரங்கமாய்த் தோன்றுகின்றன. அவனுடைய இருதயம் திறந்திருப்பதினால் அது பாவம் நிறைந்ததும் 'எல்லாவற்றைப்பார்க்கிலும் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது' என்று காண்கிறான். அவனுடைய இருதயம் நாவினால் விவரிக்க முடியாத அவ்வளவு சீர்கெட்டதும் அருவருக்கப்படத் தக்கதுமாயிருக்கிறது. அநீதியும் அவபக்தியுமேயன்றி அதில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை. இருதயத்தின் தோற்றம் குணம் நினைவு யாவும் எப்போதும் பொல்லாததேயென்றும் கண்டுகொள்ளுகிறான்.

4. இவைகளை அவன் கண்டுகொள்ளுகிறது மாத்திரமல்ல, தன் வாயினால் விவரிக்க முடியாத ஆத்தும உணர்வு அவனுக்குள் உண்டாகத் தன் புறம்பான ஜீவியம் குற்றமற்றதாயிருப்பினும் தன் இருதயத்திலுள்ள பாவங்களினிமித்தம் அவியாத அக்கினியிலே தான் தள்ளப்படப் பாத்திரன் என்றும் உணருகிறான். ஆனால் அவனுடைய புறம்பான ஜீவியம் இதுவரை குற்றமற்றதா யிருந்ததுமில்லை. இனிமேலும் அப்படி இருப்பது கூடியது அல்ல. ஏனென்றால் கெட்ட மரம் நல்ல கனி கொடுக்குமா? 'பாவத்திற்கு' விசேஷமாய் 'தன் பாவத்திற்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய கூலி, மரணம்'



என்றும் உணருகிறான். சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்தில் அமிழ்த்துப்போடுகிற நித்திய மரணமாகிய இரண்டாம் மரணமே தன் பங்கு என்றுணருகிறான்.

5. அவனுடைய இனிய சொப்பனமும், பொய்யான ஆறுதலும், கள்ளச் சமாதானமும், வீண் நம்பிக்கையும், இத்தோடே முடிவடைகின்றன. அவன் சந்தோஷம் மேகத்தைப்போல் பறந்துபோகிறது. முன்னே விருப்பமாயிருந்த இன்பங்களின்மேல் இப்போது அவனுக்குப் பிரியமில்லை. அவைகள் ருசியற்றுப்போயின. அவைகளின் சுவை அரோசிகரமாயிருக்கிறது. அவைகளை அனுபவித்து இளைத்துப்போனான். அவனுக்கிருந்த சந்தோஷங்கள் நிழலைப்போல மறைந்துபோயின. அவன் ஒன்றையும் அனுபவியாமல் இங்குமங்கும் அலைந்து இளைப்பாறுதலைத் தேடியும் காணாதிருக்கிறான்.

6. இவ்வித சிற்றின்ப மயக்கம் தெளிந்துவிட காயப்பட்ட அவன் ஆவி வேதனைபடைகிறது. பெருமையோ, கோபமோ, துர்இச்சையோ, சுயசித்தமோ, விரோதமோ, பொறாமையோ, பழிவாங்குதலோ, எப்பாவமாயிருப்பினும் இவைகளுக்கு இடங்கொடுப்பதைப்போல் ஆத்துமாவுக்கு நிர்ப்பந்தம் வேறொன்றுமில்லை என்று காண்கிறான். தான் இழந்துவிட்ட ஆசீர்வாதங்களுக்காகவும் தன்மேல் வரப்போகிற சாபத்துக்காகவும் மனச்சஞ்சலமுள்ளவனாயிருக்கிறான். தன்னைத்தானே இவ்வாறு கெடுத்து தனக்குக் கிடைத்த கிருபைகளை அலட்சியம் செய்ததினிமித்தம் மனவேதனை அடைகிறான். தேவகோபத்தையும், அந்தக் கோபத்தினால் வரும் பலனையும், தனக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டியதும் தன் தலைக்குமேல் நிற்பதுமான தண்டனையையும் பார்த்துத் திகிலடைகிறான். சரீர மரணமானது அவனுக்கு நரகவாசலும் நித்திய மரணத்துக்குட்படுத்தும் வழியுமாயிருப்பதால் மரிக்கப் பயப்படுகிறான். பிசாசானவன் தேவனுடைய கோபத்தையும் அவருடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினையையும் நிறைவேற்றுகிறவனாக எண்ணி அவன் பிசாசானவனுக்கும் பயப்படுகிறான். மனுஷருக்கும் பயந்தான். அவர்கள் தன் சரீரத்தைக் கொலை செய்கிறதாயிருந்தால் சரீரமும் ஆத்துமாவும் நரகத்திலே தள்ளுண்டுபோகுமே யென்றெண்ணி அவர்களுக்கும் பயப்படுகிறான். குற்றமுள்ள இந்த நிர்ப்பந்த பாபாத்துமாவுக்

குச் சிலவேளை பயம் மிஞ்சுவதினால் எதைக் கண்டாலும், திகிலே, யாதொன்றுமில்லாவிடினும் அதற்கும் பயந்தான். மர நிழலுக்கும் பயம்; காற்றினாலசையும் இலைகளுக்கும் பயம். இதுமாத்திரமா? சிலவேளைகளில் இப்பயம் அதிகரிக்க அவனுடைய ஞாபகசக்தி, புத்தி, மனோதத்துவங்கள் குன்றிப்போவதினால் மனம் பேதலித்து மதுபானம் சாப்பிடாதிருப்பினும் வெறிகொண்டவன் போலாவான். சில வேளைகளில் பயத்தினால் அவன் அவநம்பிக்கைக்குட்படுவதுமுண்டு. அதினால், மரணமென்றவுடன் நடுங்குகிற அம்மனிதன், 'உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் நொருங்குண்டு சாவதையே விரும்பி' நிமிஷத்தோறும் உயிரை விட்டுவிடத் தயாராயிருப்பான். இப்பேர்ப்பட்ட மனிதன் தன் இருதய சஞ்சலத்தினிமித்தம் பூர்வீக ஞானி ஒருவனைப்போல் 'மனுஷனுடைய ஆவி அவனுடைய பெலவீனத்தைத் தாங்கும்; முறிந்த ஆவியை யாரால் தாங்கக்கூடும்?' என்று ஓலமிடுவது நியாயமே.

7. இப்பொழுது அவன் பாவப் பாசத்தினின்று விலகும்படி உண்மையாய் விரும்பி அதோடு போராட ஆரம்பிக்கிறான்; ஆனால் எவ்வளவாக முயன்றும் ஜெயிக்கச் சக்தி கிடையாது. பாவம் இவனிலும் வலிமையுள்ளது; பாவத்துக்குத் தப்பிக்கொள்ள விரும்பியும் சிறையிலடைபட்டிருப்பதினால் அவன் வெளியேற முடியாது. பாவஞ் செய்யக்கூடாதென்று பிரதிக்கினை செய்துகொண்டாலும் பாவஞ் செய்துகொண்டேவருகிறான். கண்களுக்குமுன் விரித்திருக்கும் கண்ணி தெரிகிறது; அதற்கு அஞ்சினபோதிலும் அதற்குள்ளேயே சிக்கிக்கொள்ளுகிறான். அவன் பெருமையாய் மதித்த அவனுடைய பகுத்தறிவு இப்போது செய்கிற நன்மை யென்ன? அது அவனுடைய குற்றத்தைப் பெரிதாக்கி அவனுடைய நிர்ப்பந்தத்தை அதிகரிக்கச் செய்கிறதேயன்றி வேறல்ல. அவன் சுயாதீன சித்தமுள்ளவனல்லவா? எவ்வித சுயாதீனம்! தீமை செய்யத்தான் சுயாதீனம். 'அநியாயத்தைத் தண்ணீரைப்போல் குடித்து ஜீவனுள்ள தேவனை விட்டு மேலும் மேலும் விலகி' கிருபையின் ஆவியை நிந்திக்கத்தான் அவனுடைய சித்தம் சுயாதீனமடைந்திருக்கிறது.

8. பாவத்துக்கு விலகும்படி எவ்வளவாக முயற்சிசெய்து வாஞ்சையுடன் பிரயாசப்படுகிறானோ அவ்வளவாக, பளுவுள்ள பாவச்சங்கிலி



தன்னைச் சுற்றியிருப்பதாகவும் அச்சங்கிலியினாலே சாத்தான் தன்னை இறுகக்கட்டி, 'அவன் இஷ்டப்படி செய்யத் தன்னைச் சிறையாக்கியிருப்பதாகவும்' அறிகிறான். மனதில் எவ்வளவாய் வியாகுலப்பட்டபோதிலும் இன்னும் அவன் பிசாசுக்கு ஊழியக்காரனே. எவ்வளவாய்க் கலகஞ்செய்தபோதிலும் அவனை மேற்கொள்ளக் கூடியவனல்ல. பாவத்தினிமித்தம் பொதுவாகப் புறம்பான பாவத்தினிமித்தம் இன்னும் பயமுள்ள அடிமைத்தன நிலைமையிலேயிருக்கிறான். சுபாவத்தினாலும் பழக்க வழக்கங்களினாலும் தானிருக்கும் நிலைமையினாலும் அவன் மனம் புறம்பான சில பாவங்களுக்கு லேசாய்ச் சாயக்கூடியது. அப்பாவங்களினால் அவன் அடிமைத்தன நிலைமைக்குட்பட்டிருக்கிறான். துர்க்குணம் துர்இச்சை முதலிய உள்ளான பாவத்தினிமித்தந்தான் எப்போதும் இந்த அடிமைத்தன நிலைமைக்குள்ளிருக்கிறான். பாவத்தினிமித்தம் எவ்வளவுக்குப் பயந்து அதை நீக்கப் பிரயாசப்படுகிறானோ அவ்வளவுக் கதிகமாய்ப் பாவம் அவனை மேற்கொள்ளுகிறது. அவன் தன்னைக் கட்டியிருக்கும் சங்கிலியை வளைத்தாலும் வளைக்கலாம்; ஒடிப்பதோ கூடியதல்ல. பாவத்துக்காக மனஸ்தாபப்படுகிறான், மறுபடியும் பாவஞ்செய்கிறான். பின்னும் மனஸ்தாபப்படுகிறான், மறுபடியும் பாவஞ்செய்கிறான். இவ்விதமாக ஓய்வில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருக்கிறான். கடைசியாக, சக்தியற்ற நிர்ப்பந்தமான இந்த நீசப்பாவி என்ன செய்கிறதென்று தெரியாமல் 'ஐயோ நிர்ப்பந்தமான மனுஷன் நான்; இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்' என்று முறையிடுகிறான்.

9. 'நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவனாயும்,' 'பயப்படுகிற அடிமைத்தன ஆவிக்குட்பட்டவனாயுமிருக்கிற' ஒருவனுடைய போராட்டம் முழுவதையும், உணர்வடைந்த ஒரு பாவி சொல்லுகிறப்போல பரி. பவுல் இதற்கு முந்தின அதிகாரத்தில் விவரமாய்ச் சொல்லியிருக்கிறான். 9-ம் வசனத்தில் 'முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது' என்கிறான். முன்னே நான் ஜீவனும் ஞானமும் பெலனும் சன்மார்க்கமுமுள்ளவனென்றென்னை எண்ணிக்கொண்டேன்; கற்பனையின் ஆவிக்குரிய கருத்து தேவ

வல்லமையினால் என் மனதுக்குள் உதித்தபோது என்னிலுள்ள பாவம் எழும்பிக் கொதிக்க என் சன்மார்க்கமெல்லாம் பறந்துபோய்விட்டது. 'இப்படியிருக்க ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவா யிருக்கக்கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று என்னை வஞ்சித்து அதினாலே என்னைக் கொன்றது' (வச. 10, 11.). பாவமானது நான் நினையாதிருக்கையில் என்னில் வந்து என் நம்பிக்கையை எல்லாம் கெடுத்து நான் ஜீவனோடிருக்கும்போதே சாவுக்குட்பட்டவனென்று தெளிவாய்க் காட்டிற்று. 'ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான்; கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயுமிருக்கிறது' (வச. 12.). இனி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்தாமல் என் இருதய சீர்கேட்டையே குற்றப்படுத்துகிறேன். 'நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதா யிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனா யிருக்கிறேன்' என்று ஒத்துக்கொள்ளுகிறேன் (வச. 14.). இப்பொழுது நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய தன்மையையும் உலக சிந்தையையும் பேய்த்தனமுள்ள என்னிருதயத்தின் தன்மையையும் காண்கிறேன். கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட அடிமைகள் தங்களுடைய எஜமான்களின் இஷ்டத்திற்கு முற்றிலும் கீழ்ப்பட்டவர்களா யிருப்பதுபோல என்னிருதயமும் 'பாவத்திற்குக் கீழாக விற்கப்பட்டு' அதற்கு முற்றிலும் அடிமைப்பட்டிருக்கிறது. எப்படியெனில் 'நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன்' (வச. 15.). இத்தன்மையான அடிமைத்தனத்துக்குள்ளிருந்து நான் தவிக்கிறேன். கடினமுள்ள என் எஜமானின் கொடுமையும் இத்தன்மையானது. 'நன்மை செய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது; நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன்' (வச. 18, 19.). 'நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமை உண்டென்கிற ஒரு பிரமாணத்தை,' அதாவது என்னை நெருக்கிப் பலவந்தம் செய்கிற ஒரு சக்தியைக் காண்கிறேன். 'உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்' (வச. 21, 22.). அதா



வது, என் 'மனதில்' தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குச் சம்மதித் திணங்குகிறேன் ('உள்ளான மனுஷன்' என்பது மனதைக் குறிக்கிறதாக அப்போஸ்தலன் அடுத்த வசனத்தில் விளக்குகிறான். 'உள்ளான மனுஷன்' என்றருத்தங்கொள்ளும் கிரேக்குப் பதங்களை இக்கருத்திலேயே மற்ற கிரேக்க நூலாசிரியரும் வழங்கியிருக்கிறார்கள்.). 'ஆகிலும்' உள்ளான மனுஷனாகிய 'என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை' அதாவது என்னைப் பலவந்தம் செய்கிற வேறொரு சக்தியை, 'என் அவயவங்களிலிருக்கக் காண்கிறேன்.' அது பாவப்பிரமாணத்துக்கு அல்லது 'பாவத்தின் வல்லமைக்கு என்னைச் சிறையாக்கி' (வச. 23.), சிறைப்பட்டவனை ரதசக்கரத்தோடு கட்டி யிழுத்துக்கொண்டு போவதுபோல, என் ஆத்துமா வெறுக்கிற அதே காரியத்தைச் செய்யும்படி என்னை இழுத்துக்கொண்டு போகிறது. 'நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?' (வச. 24.) சக்தியற்று சாவுக்கேதுவானதாயிருக்கிற இந்த நிர்ப்பந்த பாவ அடிமைத்தனத்தினின்று என்னை விடுதலையாக்குகிறவர் யார்? இந்த விடுதலை கிடைக்குமட்டும் 'நானே' (நான் என்பது இம்மட்டும் பாவித்துப் பேசிக்கொண்டுவந்த அந்த மனுஷன் என்று பொருள்படும்.) 'உள்ளான மனுஷனின்படி' அதாவது, என் மனதிலே, 'தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கிறேன்.' மனம் என்கிற என் மனச்சாட்சி தேவனுடைய பட்சத்திலிருக்கிறது. 'மாம்சத்தினாலேயோ, அதாவது என் சரீரத்தினாலேயோ பாவப் பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கிறேன்' (வச. 25.). அதின் வல்லமைக்கு எதிர்த்து நிற்க எனக்குச் சக்தியில்லை.

10. 'நியாயப்பிரமாணத்துக் குட்பட்ட ஒரு மனுஷனை இதில் எவ்வளவு சிறப்பாயும் விவரமாயும் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறது. ' இவன் தன்னால் அகற்றிவிடக்கூடாத சுமை தன்பேரிலிருப்பதாக உணருகிறான். சுயாதீனமும் வல்லமையும் அன்பும் தனக்கு வேண்டுமென்று ஆவலாய் வாஞ்சித்தும் இன்னும் பயப்படுகிறவனும் அடிமைத்தனத்துக் குட்பட்டவனுமாகவே யிருக்கிறான். மரண சரீரமாகிய இந்தப் பாவ அடிமைத்தனத்தினின்று 'யார் என்னை விடுவிப்பார்' என்பதாகக் கதறி அலறுகிற இந்த நிர்ப்பந்த

மனுஷனை நோக்கி, 'உன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவகிருபை உன்னை விடுதலையாக்கும்' என்று தேவன் அவனுக்குப் பதில் உரைக்கும்வரையில் இந்த நிலைமையிலேயே யிருக்கிறான்.

III. 1. மூன்றாவது 'கிருபைக்குக் கீழ்ப்பட்டவனுடைய' நிலைமை. இதற்கப்புறந்தான், இந்த நிர்ப்பந்த அடிமைத்தனத்துக்கு முடிவுண்டாகிறது. இனி அவன் 'நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறான்.' இந்நிலைமை யாதென்று மூன்றாவதாக சிந்திப்போம்.

இந்நிலைமையிலுள்ளவனுக்குப் பிதாவாகிய தேவனுடைய கண்களில் கிருபையும் தயவும் கிடைத்திருக்கிறது. இவனுடைய இருதயத்தில் பரிசுத்தாவியானவருடைய தயவும், அவரது வல்லமையும் ஆளுகை செய்கிறது. இப்படிப்பட்டவனைக் குறித்துத்தான் அப்போஸ்தலனாகிய பவுல், 'அப்பா பிதாவே யென்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவன்' என்கிறான்.

2. 'அவன் தன் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். தேவன் அவனுடைய இக்கட்டுக்கு நீங்கலாக்கி அவனை விடுவிக்கிறார்.' அவனுடைய கண்கள் முன்போலல்ல, வேறுவிதமாய்த் திறந்திருக்கிறபடியால் தேவன் அன்பும் கிருபையுமுள்ளவரென்று காண்கிறான். 'உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்' என்று அவன் மன்றாடும்பொழுது 'என்னுடைய தயையெல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி கர்த்தருடைய நாமத்தைக் கூறுவேன். எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாய் இருப்பேனோ அவன்மேல் கிருபையாய் இருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாய் இருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன்' என்று சொல்லுகிற சத்தம் அவன் உள்ளத்தில் தொனிக்கிறது. கொஞ்சநேரத்துக்குள் 'கர்த்தர் ஒரு மேகத்திலிறங்கி தம்முடைய நாமத்தைக் கூறுகிறார்.' அப்பொழுது, 'கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர்' என்று தன் ஊனக் கண்களினாலல்ல, ஆவியின் கண்களினால் பார்க்கிறான்.



3. ஆரோக்கியம்தருகிற பரம ஒளி இப்பொழுது அவன் ஆத்துமாவில் வீசுகிறது. அவன் 'தான் குத்தினவரை நோக்கிப் பார்க்கிறான்.' 'இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் அவன் இருதயத்தில் பிரகாசிக்கிறார்.' தேவனுடைய மகத்துவ அன்பு இயேசுகிறிஸ்துவின் முகத்தில் பிரகாசிப்பதாகக் காண்கிறான். ஐம்புலன்களுக்கு மிஞ்சினவைகளையும் 'தேவனுடைய ஆழங்களையும்' குறித்து தெய்வீக சாட்சி பெற்றுக்கொள்ளுகிறான். இதிலும் விசேஷமாக, தேவனுடைய அன்பையும் இயேசுவில் விசுவாசம் வைக்கிறவனுக்கு அவர் அருளும் பாவமன்னிப்பின் அன்பையும் அறிந்துகொள்ளுகிறான். இக்காட்சியை அடக்கிக்கொள்ள சக்தியற்றவனாய் 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று தன் முழு ஆத்துமாவோடும் சத்தமிடுகிறான். எப்படியெனில், 'தமது சரீரத்தில் பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்து' தீர்த்தவர்பேரில் தன் அக்கிரமங்களெல்லாம் வைக்கப்பட்டிருப்பதாகப் பார்க்கிறான். தன் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியைக் காண்கிறான். 'தேவன் உலகத்தாரை இயேசுகிறிஸ்துவுக்குள் தம்மோடே ஒப்புரவாக்கி, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்' என்றும், அந்த உடன்படிக்கையினாலே தானும் தேவனோடு ஒப்புரவாயிருக்கிறான் என்றும் இப்போது எவ்வளவோ துலாம்பரமாய் அவனுக்குத் தெரிகிறது.

4. பாவத்தின் தோஷமும் அதின் வல்லமையும் இத்தோடே முடிவடைகிறது. 'கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் (சாவுக்கேதுவான இச்சரீரத்தில்) பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்' (கலா. 2: 20.) என்று இப்போது அவன் சொல்லக்கூடும். அவனுடைய பச்சாத்தாபமும் மனவேதனையும் நோய்

கொண்ட அவன் ஆவியின் வியாகுலமும் இத்தோடே நின்றுபோகிறது. 'தேவன் அவனுடைய சஞ்சலத்தைச் சந்தோஷமாக மாற்றுகிறார்.' காயப்படுத்தின அவருடைய கரங்களே இப்பொழுது காயத்தைக் கட்டுகின்றன. பயப்படுகிற அடிமைத்தனமும் ஒழிந்துபோகிறது. ஏனென்றால் அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கிறது. அவன் இனி தேவ கோபத்திற்குப் பயப்படுகிறதில்லை. அது இப்போது தன்னைவிட்டு விலகினதென்று அறிந்திருக்கிறான். இனி அவரைக் கோபமுள்ள நியாயாதிபதியாக எண்ணாமல் அன்புள்ள பிதாவாக எண்ணுகிறான். 'பரத்திலிருந்து' கொடுக்கப்பட்டாலொழிய பிசாசானவனுக்கு அதிகாரமில்லையென்று அறிந்து பிசாசானவனுக்கும் அவன் பயப்படுகிறதில்லை. பரலோக ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளியாயிருப்பதினாலே நரகத்துக்கும் அவன் பயப்படுகிறதில்லை. நரக பயமில்லாததினால் மரண பயமுமில்லை. முன்னே வெகுகாலமாக மரணபயத்தினால் 'அடிமைத்தனத்துக்குள்ளாயிருந்தான்.' இப்போதோ 'பூமிக்குரிய கூடாரமாகிய தன்னுடைய வீடு அழிந்துபோனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே தனக்குண்டென்று அறிந்து இந்தக் கூடாரத்திலே தவித்து பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள வாஞ்சிக்கிறான்' 'மரணமானது ஜீவனாலே விழுங்கப்படும்பொருட்டு' பூமிக்குரிய இவ்வீட்டை விட்டுவிடவேண்டுமென்று தவிக்கிறான் (2 கொரி. 5: 1.). இதற்குத் 'தேவன் தன்னை ஆயத்தப்படுத்தியிருக்கிறார்' என்றும், 'ஆவியென்னும் அச்சாரத்தைத் தந்திருக்கிறார்' என்றும் அறிவான்.

5. மேலும் 'கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு' பாவதோஷத்தினின்றும் பாவபயத்தினின்றும் மாத்திரமல்ல; நுகங்களிலெல்லாம் பளுவானதும் அடிமைத்தனத்திலெல்லாம் இழிவானதுமாகிய பாவத்தினின்றும் விடுதலையுண்டு. அவன் படுகிற பிரயாசம் இப்பொழுது வீணாய்ப் போகிறதில்லை. கண்ணி தெறித்தது; அவன் தப்பினான். அவன் பாவத்தை ஜெயிக்க முயற்சிப்பது மாத்திரமல்ல, மேற்கொள்ளுகிறவனாயுமிருக்கிறான். போராடுவது மாத்திரமல்ல ஜெயமும் அடைகிறான். 'அவன் இனி பாவத்திற்கு ஊழியஞ் செய்கிறதில்லை' (ரோம. 6.). அவன் பாவத்திற்கு மரித்துத்



தேவனுக்கென்று பிழைத்திருக்கிறான். 'சாவுக்கேதுவான அவன் சரீரத்தில்' கூட 'பாவம் ஆளுகிறதில்லை.' அவன் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படிகிறதுமில்லை. அவன் தன் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறான். ஏனென்றால், 'இப்பொழுது பாவத்தினின்று அவன் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமையாயிருக்கிறான்.'

6. இவ்விதமாக அவன் 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவனிடத்தில் சமாதானம்பெற்று' தேவமகிமை அடைவேனென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டிப் பலவித பாவத்தின்மேலும், துர்இச்சை, துர்க்குணம், துர்வார்த்தை, துர்ச்செய்கைகளின்மேலும் வல்லமையுள்ளவனாயிருப்பதினால் 'தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்துக்கு' ஜீவசாட்சியாய் விளங்குகிறான். 'தேவனுடைய பிள்ளைகள்' யாவரும் இப்பேர்ப்பட்ட விலையுயர்ந்த விசுவாசத்தில் பங்கு பெற்றிருப்பதினால் 'அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணும் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம்' என்று ஏகவாக்காய்ச் சாட்சியிடுகிறார்கள்.

7. 'தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் அவர்களில் எப்போதும் உண்டுபண்ணுகிறவர்' இந்த ஆவியானவரே; தேவ அன்பையும், மனுஷ அன்பையும் அவர்களிருதயங்களில் சொரிந்து அதினால் உலகநேசம், மாம்சஇச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமையாகிய இவைகளினின்று அவர்கள் இருதயங்களைச் சுத்திகரிக்கிறவர் இவரே. கோபம், பெருமை, சிற்றின்பம் ஆகிய இவைகளினின்று விடுதலையடைவதும் இவரால்தான். இவ்விதமாய், தீமொழி தீயசெயல்களுக்கும், அசுத்த சம்பாஷணை யாவுக்கும் விலக்கிக் காக்கப்பட்டு ஒருவருக்கும் தீமைசெய்யாமல் நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியங்கொள்ளுகிறார்கள்.

8. முன் சொன்னவைகளைத் திரட்டிச் சொன்னால், ஜென்மசுபாவமான மனுஷன் தேவனுக்குப் பயப்படுகிறதுமில்லை; அவரில்

அன்புகூருகிறதுமில்லை. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன் அவருக்குப் பயப்படுகிறான். கிருபைக்குக் கீழ்ப்பட்டவனோ அவரில் அன்புகூருகிறான். முதலாவது மனுஷன் தேவ காரியங்களைப் பற்றி ஒன்றும் அறியாமல் அந்தகாரத்தில் நடக்கிறான். இரண்டாவது மனுஷன் நரகத்தைப் பயங்கரத்தோடு பார்க்கிறான். மூன்றாவது மனுஷனோ, மோட்ச ஒளியைக் கண்டு சந்தோஷிக்கிறான். மரண நித்திரை செய்கிற ஜென்ம சுபாவ மனுஷனுக்குப் பொய்ச்சமாதானமுண்டு. நித்திரையினின்று விழிப்படைந்தவனுக்குச் சமாதானமே கிடையாது. விசுவாசிக்கிறவனுக்கோ மெய்ச்சமாதானமுண்டு. அந்த மெய்ச்சமாதானமாகிய தேவ சமாதானம் அவனிருதயத்தில் நிறைந்து ஆளுகிறது. ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் பெறாதிருந்தாலும் புறமதஸ்தன் ஒருவன் தனக்குச் சுயாதீனமுண்டென எண்ணிக்கொள்ளுகிறான். சிற்றின்பமே அவனுக்குச் சுயாதீனம். யூதன் அல்லது யூத ஏற்பாட்டை ஒப்புக்கொண்ட ஒருவன் பாரமும் பளுவுமான அடிமைத்தனத்துக்கு உட்பட்டவன். கிறிஸ்தவனோ தேவனுடைய புத்திரருக்குரிய மகிமையான மெய்ச்சுயாதீனத்தை அனுபவிக்கிறவன்., உணர்வடையாத பிசாசின் மகன் மனதாரப் பாவஞ்செய்கிறான். உணர்வடைந்தவன் மனங் கருதாமல் பாவஞ்செய்கிறான். தேவனுடைய பிள்ளையோ 'பாவஞ்செய்யாமல் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான்.' சுருக்கிச் சொன்னால், ஜென்ம சுபாவமான மனுஷன் பாவத்தோடு போராடுகிறதுமில்லை, அதை ஜெயிக்கிறதுமில்லை. . நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனோ போராடுகிறான், ஆனால் அதை ஜெயிக்கிறதில்லை. கிருபைக்குக் கீழ்ப்பட்டவனோ போராடி மேற்கொள்ளுகிறான்; இவ்வளவுதானோ? தன்னில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவனா யிருக்கிறான்.

IV. 1. நாம் இம்மட்டும் சிந்தித்த ஜென்ம சுபாவ நிலைமை, நியாயப்பிரமாணத்துக்குட்பட்ட நிலைமை, சுவிசேஷ நிலைமையாகிய கிருபைக்குட்பட்ட நிலைமை என்கிற மூன்றுவித நிலைமைகளைக் கவனிக்கையில், மனிதரை உண்மையுள்ளவர்கள் உண்மையற்றவர்கள் என இரு வகுப்பாய்ப் பிரிப்பது போதாதெனத் தோன்றுகிறது. எப்படியென்றால், ஒருவன் இந்த மூன்று நிலைமைகளில் எந்த நிலை-



மைகளிலாவது உண்மையுள்ளவனா யிருக்கக்கூடும். 'புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கும்போது மாத்திரமல்ல' 'பயப்படுகிற அடிமைத்தனத்தின் ஆவியை' உடையவனாயிருக்கையிலும், தேவபயமும் அன்பும் அற்றவனா யிருக்கையிலும்கூட ஒருவன் உண்மையுள்ளவனா யிருக்கலாம். ஏனென்றால், யூதர்கள், கிறிஸ்தவர்களாகிய இவர்களுக்குள் உண்மையுள்ளவர்கள் இருக்கக்கூடியதுபோலவே, மற்ற மதஸ்தர்களுக்குள்ளும் உண்மையுள்ளவர்கள் இருக்கக்கூடும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் ஒருவன் உண்மையுள்ளவனாய் இருப்பதினிமித்தம் அவன் தேவனோடு ஒப்புரவாகிவிட்டான் என்று சொல்லக்கூடாது.

ஆனபடியால் நீங்கள் உண்மையுள்ளவர்களோவென்று மாத்திரமல்ல, 'விசுவாசமுள்ளவர்களோ' என்றும், 'உங்களை நீங்களே சோதித்தறியுங்கள்.' உன் ஆத்துமாவை ஆளுகிற பிரமாணம் என்னவென்று நுட்பமாய்ச் சோதித்துப்பார். இது உனக்கு மகா அவசியம்: அது தேவ அன்பா? அல்லது தேவ பயமா? அல்லது இவ்விரண்டும் உன்னை ஆளுகிறதில்லையா? ஒருவேளை உலக பாசமாயிராதா? சிற்றின்ப ஆசையல்லவா? உலகாதாயத்தையும் உல்லாசத்தையும் கீர்த்தியையும் நாடுவதினாலல்லவா? உன் ஆத்துமாவை ஆளுகிற பிரமாணம் இவைகளாய் இருக்குமானால் நீ யூதனின் நிலைமைக்குக்கூட வந்தெட்டவில்லை. நீ இன்னும் அஞ்ஞானத்திலே இருக்கிறாய். உன்னிருதயத்தில் மோட்சம் தோன்றுகிறதா? 'அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறாயா?' அல்லது துக்கமும் பயமும் நிறைந்தவனாய் 'பாதாளத்தின் வயிற்றிலிருக்கிறவன்' போல தேவனை நோக்கிக் கூப்பிடுகிறாயா? அல்லது நான் சொல்லுகிறது இன்னதென்று அறிந்துகொள்ளக் கூடாதபடி இதெல்லாம் உனக்கு நூதனமாயிருக்கிறதா? அஞ்ஞானத்தில் இருக்கிறவனே! உன் வேஷத்தைக் களைந்தெறி. நீ ஒருபோதும் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவில்லை. உன் முகத்தை மூடாமல் வானத்தை நோக்கிப்பார்த்து சதாகாலங்களிலும் ஜீவித்திருக்கிற ஆண்டவருக்கு முன்பாக, தேவனுடைய புத்திரருக்குள்ளாவது அவரது ஊழியர்களுக்குள்ளாவது உனக்குப் பங்கும் பாகமுமில்லையென்று ஒத்துக்கொள்.

நீ யாரானாலுஞ்சரி, நீ பாவஞ்செய்கிறதுண்டோ, இல்லையோ? செய்கிறதுண்டானால் மனப்பூர்வமாயோ, மனதுக்கு விரோதமாயோ? மனதாரச் செய்தாலும் மனதுக்கு விரோதமாய்ச் செய்தாலும் பாவஞ்செய்கிறவன் இன்னாரைச் சேர்ந்தவனென்று தேவன் உனக்கு அறிவித்திருக்கிறார். அதென்ன? ‘பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்.’ நீ மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறாயாகில் நீ அவனுக்கு உண்மையுள்ள ஊழியக்காரன். உன் ஊழியத்துக்குப் பலனளிக்காதிரான். மனங் கருதாதவனாய்ப் பாவஞ்செய்கிறதானாலும் நீ அவனுடைய ஊழியக்காரன்தான். அவன் கைகளிலிருந்து தேவன் உன்னை விடுவிப்பாராக.

நீ தினமும் சகல பாவத்திற்கும் விரோதமாய்ப் போர்செய்து முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறாயா? அப்படியானால் நீ தேவனுடைய பிள்ளைதானென்று ஒப்புக்கொள்ளுகிறேன். மகிமையுள்ள இந்தச் சுயாதீனத்தைக் காத்துக்கொள். நீ போராடியும் ஜெயங்கொள்ளாதவனோ? ஜெயிக்கப்பிரயாசப்பட்டும் வெற்றியடையாமல் இருக்கிறவனோ? அப்படியானால் நீ இன்னும் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனல்ல. ஆயினும் இத்தோடே நின்றுபோகாதே. நீ கர்த்தரைக் காண்பாய். நீ பாவத்தோடு சற்றென்கிலும் போராடாமல் சுகஜீவியும் நிர்விசாரியுமாயிருந்து சம்பிரமமாய் வாழ்கிறாயோ? அப்படியானால் நீ கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ள எப்படித் துணிந்தாய்? புறமதஸ்தர்களுக்குள் அந்நாமம் உன்னால் தூஷிக்கப்படுகிறதேயன்றி வேறல்ல. தூங்குகிற நீ விழி. பாதாளம் உன்னை விழுங்குவதற்குமுன்னே உன் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடு.

**2.** அநேகர் தங்களைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி
எண்ணித் தங்கள் நிலைமை யின்னதென்று கண்டுகொள்ளா திருப்
பதற்கு ஒரு முகாந்தரம் உண்டு. அதென்னவெனில், வித்தியாச
யான இந்த ஆத்தும நிலைமை அநேக சமயங்களில் ஒன்றாய்க் கலந்தி
ருப்பதும் ஒரே ஆளிடத்தில் காணப்படுகிறதுமுண்டு. அனுபவ
தைப் பார்த்தால், பயப்படுகிற நிலைமையாகிய நியாயப்பிரமாணத்து
குட்பட்ட நிலைமை ஜென்ம சுபாவ நிலைமையோடு அடிக்கடி கல
திருப்பதாக அறியலாம். எப்படியெனில், எப்போதாயினும் அ



குறையாயாவது உணர்வடையாமல் பாவத்தில் நித்திரை செய்கிறவர்கள் அபூர்வம். தேவாவியானவர் மனிதன் தம்மை நோக்கிக் கூப்பிடும்வரையில் காத்திராமல் சில வேளைகளில் தாமே தமது சத்தம் அவனுக்குக் கேட்கும்படி செய்கிறார். புறமதஸ்தர்கள் சிறிது காலமாயினும், தங்களை மனுஷர் என்று அறிந்துகொள்ளத்தக்கதாக அவர்களுக்குப் பயமுண்டாக்குகிறார். அவர்கள் தங்கள் பாவப்பாரத்தை உணர்ந்து, வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள ஆவலாய் விரும்புகிறதுமுண்டு. ஆனால் இந்த உணர்வு நீடித்திருக்கிறதில்லை. இவ்வுணர்வு தங்கள் ஆத்துமாவில் ஆழமாய்ப் பதியும்படி இடங்கொடாமல் தேவ கிருபையைச் சீக்கிரத்தில் அசட்டைசெய்து பாவ உளைக்குத் திரும்புகிறார்கள்.

இவ்வண்ணமே, அன்பின் நிலைமையாகிய கிருபைக்குட்பட்ட நிலைமை நியாயப்பிரமாணத்துக்குட்பட்ட நிலைமையோடு கலந்திருப்பதுண்டு. எப்படியென்றால், பயப்படுகிற அடிமைத்தனத்தின் ஆவிக்குட்பட்டவர்களில் முற்றிலும் நம்பிக்கையற்றவர்களாய்ப் போகிறவர்கள் வெகு சொற்பம். ஞானமும் கிருபையுமுள்ள தேவன் அவர்களை இப்படியே விட்டுவிடுவது அபூர்வம். ‘நாம் மண்ணென்று அவர் நினைவுகூருகிறார்.’ மேலும் ‘மாம்சமாவது அவர் உண்டுபண்ணின ஆவியாவது அவருக்கு முன்பாகச் சோர்ந்துபோவது’ அவருடைய சித்தமல்ல. ஆதலால் அவர் திருப்பார்வைக்கு நலமென்று தோன்றுங் காலங்களில் இருளில் உட்கார்ந்திருக்கிற ஜனங்களுக்கு வெளிச்சம் உதயமாகும்படி கட்டளையிடுகிறார். தமது தயவை ஓர் அளவாய் அவர்களுக்குமுன் காண்பித்துத் தாம் ‘ஜெபத்தைக் கேட்கிற கர்த்தர்’ என்று விளங்கப்பண்ணுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே உண்டாகும் வாக்குத்தத்தத்தைத் தூரத்திலே கண்டு அதினால் தைரியமடைந்து தங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடுகிறார்கள்.

**3.** அநேகர் தங்களை வஞ்சித்துக்கொள்ளுவதற்கு வேறொரு முகாந்தரமுண்டு: அதென்னவெனில், ஒருவன் சன்மார்க்கனாயிருந்தபோதிலும் அவன் ஜென்ம சுபாவமான மனுஷனாயாவது, நியாயப்பிரமாணத்துக் குட்பட்டவனாயாவது இருக்கக்கூடும் என்பதை அவர்

கள் சிந்திக்கிறதில்லை. ஒருவன் மனவுருக்கமும் தயாளசிந்தையுமுள்ளவனாயிருக்கலாம். அவன் ஆசார உபசாரமும் தயாள பட்சமுள்ளவனாயு மிருக்கலாம். சாந்தம், பொறுமை, இச்சையடக்கம் முதலிய சுகுணங்கள் ஓர் அளவாய் அவனிடம் இருக்கக்கூடியதே. துன்மார்க்கத்தை எல்லாம் ஒழித்துவிட்டு மேலான சன்மார்க்கத்தை அடையவேண்டுமென்கிற ஆவலுள்ளவனாயிருக்கலாம். அநேக பொல்லாப்புக்கு அவன் விலகி, நீதி, இரக்கம், சத்தியம் முதலியவற்றிற்கு எதிரிடையான தீமைக்கு நீங்கி நடந்தாலும் நடக்கலாம். இத்தோடு நன்மையான பல விஷயங்களைச் செய்கிறவனாயும் இருக்கக்கூடும். பசித்தவர்களுக்கு அன்னமிட்டு, வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுத்து, விதவைகளுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் சகாயஞ்செய்யலாம். கோவில் ஆராதனைக்குப் போய், தனி ஜெபஞ்செய்து பக்திக்குரிய அநேக புஸ்தகங்களை வாசிக்கிறவனாயு மிருக்கலாம். அப்படியெல்லாமிருந்தும் தன்னையும் தேவனையும் அறியாமல் ஜென்மசுபாவமான மனுஷனாகவே யிருப்பது கூடியது. அப்படியே மனந்திரும்பாமலும் சுவிசேஷத்தை விசுவாசியாமலும் இருப்பதினால் பயப்படுகிற ஆவியும் அன்பின் ஆவியும் அற்றவனாயும் இருப்பதுங் கூடியதே.

இத்தோடே தகுந்த பாவ உணர்வும், தேவகோபம் வரும் என்கிற பயமும், பாவம் யாவையும் தள்ளிவிட்டு எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டுமென்கிற ஆவலும், நம்பிக்கையினால் அடிக்கடி உண்டாகும் சந்தோஷமும் ஆத்துமாவில் பலமுறையும் தோன்றுகிற அன்பும் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இவைகளிருப்பதினால் ஒரு மனுஷன் கிருபைக்குக் கீழ்ப்பட்டு உயிருள்ள மெய்யான கிறிஸ்தவ விசுவாசமுள்ளவனென்று சொல்லக்கூடாது. 'அப்பா, பிதாவே' என்று இடைவிடாமல் கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருப்பானாகில்மாத்திரம் அவன் கிருபைக்குக் கீழ்ப்பட்டவன் என்கலாம்.

4. ஆகையால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறவனே! நீ அழைக்கப்பட்டிருக்கிற இந்தப் பரம அழைப்புக்கு வரத் தவறிப் போகாதபடி பார்த்துக்கொள். நல்ல கிறிஸ்தவர்களென்று எண்ணப்



படுகிற அநேகரைப்போல் ஜென்ம சுபாவநிலைமையில் நின்றுபோகாதே. அல்லது மனுஷரால் மதிக்கப்பட்ட அநேகர் தங்கள் ஜீவகாலத்தைக் கழிக்கிற நியாயப்பிரமாண நிலைமையிலும் நின்றுபோகாதபடி எச்சரிக்கையாயிரு. நீ எச்சரிக்கையாயிருந்து, தேவன் உனக்கு ஆயத்தஞ்செய்து வைத்திருக்கிற மேன்மையானவைகளை அடைந்துகொள்ளும்வரையில் விடாப்பிடியாயிரு. பிசாசுகளைப் போல நீ பயந்து நடுங்கும்படி தேவன் உன்னை அழைக்காமல் தேவதூதரைப்போல் சந்தோஷப்படவும் அன்புகூரவும் அழைத்திருக்கிறார். 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுச்சிந்தையோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக.' எப்போதும் சந்தோஷமாயிரு. இடைவிடாமல் ஜெபம்பண்ணு. எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செலுத்து. பரலோகத்திலே தேவனுடைய சித்தம் செய்யப்படுகிறதுபோல, பூலோகத்திலேயும் அவருடைய சித்தத்தை நிறைவேற்று. 'தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்துகொள்.' இப்போதே, 'உன்னைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக' அவருக்கு ஒப்புக்கொடுப்பாயாக. நீ 'அடைந்துகொண்டதை உறுதியாய்ப் பற்றிக்கொள்.' முன்னானவைகளை நாடி அவைகளை ஆசையாய்த் தொடர்ந்து பிடி. அப்படியானால் சமாதானத்தின் தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குப் பிரியமானதை உன்னில் நடப்பித்து உன்னைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவனாக்குவார். அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

## வினாக்கள்.

1. இப்பிரசங்கத்தில் உவெஸ்லி ஐயர் மூன்று நிலைமையைக் குறித்து விஸ்தரிக்கிறார். அவை எவை? இந்த மூன்று நிலைமையும் ஒன்றுக்கொன்று எவ்வாறு பேதப்படுகிறது?

பிரிவு. 5. பார்க்க.

2. 'தேவன் இரக்கமுள்ளவர்' என்னும் சத்தியத்தைச் சிலர் தப்பாய்ப் புரட்டுவதெப்படி?

'பரிசுத்தம், பாவவெறுப்பு, நீதி, ஞானம் என்னும் தேவலட்சணங்கள் யாவற்றையும் அவருடைய காருண்ணியம் மாற்றிப்போடும் என்று புத்தியீனமாய் எண்ணிக்கொள்ளுகிறான்.'

பிரிவு I. 2. பார்க்க.

3. கல்விமான்கள் என்று பேர் பெற்றவர்களினிடத்திலுள்ள அறிவீனத்தைக்குறித்து உவெஸ்லி ஐயர் என்ன சொல்லுகிறார்?

இவ்வித அறிவீனம் மற்றவர்களிடத்தி லிருப்பதைப்பார்க்கிலும் கல்விமான்கள் என்று பேர் பெற்றவர்களிடத்தில்தான் துலக்கமாய்த் தோன்றுகிறது, ம்.

பிரிவு I. 4. பார்க்க.

4. ஆத்துமா நித்திரையினின்று விழிப்படையும் விதத்தை உவெஸ்லி ஐயர் எவ்வாறு விஸ்தரிக்கிறார்?

'தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய உள்ளான கருத்து இப்பொழுது அவன்மேல் உதிக்கிறது.'

பிரிவு II. 2. பார்க்க.

5. விழிப்படைந்த பாவியானவன் தனது சித்தத்தின் சுயாதீனத்தைக்குறித்து என்ன காண்கிறான்?

'பாவத்துக்கு விலகும்படி எவ்வளவாக முயற்சிசெய்து,' ம்.

பிரிவு II. 8. பார்க்க.

6. புத்திரசுவிகாரத்தின் ஆவியானவர் உட்பிரவேசிக்கும்விதம் என்னவென்று உவெஸ்லி ஐயர் காண்பிக்கிறார்?

'ஆரோக்கியம்தருகிற பரம ஒளி இப்பொழுது அவன் ஆத்துமாவில் வீசுகிறது,' ம்.

பிரிவு III. 3. பார்க்க.

7. முன்சொன்ன மூன்றுவிதமான ஆத்தும நிலைமையிலுள்ளவர்களை உவெஸ்லி ஐயர் கடைசியாய் எவ்வாறு வகுக்கிறார்?

'ஜென்ம சுபாவ மனுஷன் பாவத்தோடு போராடுகிறதும் இல்லை' ம்.

பிரிவு III. 8. கடைசி பார்க்க.



8. இருவித புறமதஸ்தர் உண்டென்று உவெஸ்லி ஐயர் சொல்லுகிறார். அவர்கள் யார்?

'ஞானஸ்நானம் பெற்றவன், பெறாதவன்.'

பிரிவு III. 8. பார்க்க.

9. இந்த மூன்று விதமான ஆத்தும நிலைமையையும் பேதப்படுத்திக் காட்டும்படி உவெஸ்லி ஐயர் சொல்லும் பதங்கள் எவை?

'ஜென்ம சுபாவநிலைமை, நியாயப்பிரமாணத்துக் குட்பட்ட நிலைமை, சுவிசேஷ நிலைமை.'

பிரிவு IV. 1. பார்க்க.

10. குணப்படாத கிறிஸ்தவர்களைக் குணப்படும்படி அழைக்கும்போது உவெஸ்லி ஐயர் என்ன சொல்லியிருக்கிறார்?

பிரிவு IV. 1. பார்க்க.

11. ஒரே மனுஷனிடத்தில் இந்த மூன்று நிலைமையும் ஏககாலத்தில் காணப்படுமோ?

'வித்தியாசமான இந்த ஆத்தும நிலைமை அநேக சமயங்களில் ஒன்றாய்க் கலந்திருப்பதும் ஒரே ஆளிடத்தில் காணப்படுகிறதுமுண்டு.'

பிரிவு IV. 2. பார்க்க.

# ஆறும் பிரசங்கம்.

## THE WITNESS OF THE SPIRIT, PART I.

## ஆவியானவரின் சாட்சி. (1-ம் பாகம்.)

*'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.'*

ரோ. 8: 16.

1. தாங்கள் சொல்லுகிற இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிற இன்னதென்றும் அறியாமல் இவ்வேதவசனத்தைப் புரட்டி, அதினால் தங்கள் ஆத்துமாவுக்குக் கேடு உண்டு பண்ணிக்கொள்ளாவிட்டாலும் பெரும் நஷ்டத்தை விளைவித்துக்கொள்ளுகிற வீம்பர் அநேகருண்டு. தங்கள் மனோதோற்றத்தைப் பரிசுத்தாவியின் சாட்சியாகப் பாவித்து, தாங்கள் பிசாசின் கிரியைகளை நடப்பித்துவந்தும் தங்களைத் தேவனுடைய பிள்ளைகளென்று சாதிக்கத் துணிகிறவர்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள்; இவர்களையே மத வைராக்கியர் என்று சொல்லத்தகும். வைராக்கியம் என்னும் பதத்தை நாம் இழிவான கருத்தில் உபயோகித்திருப்பதினால் இவர்களைக் குருட்டு பக்தி வைராக்கியர் என்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கும், விசேஷமாய் இத்தப்பறையின் ஆவி பலமாய்ப் பிடித்திருக்கிறவர்களுக்கும், அவர்கள் தப்பிதத்தை உணர்த்திக் காட்டுவது எளிதன்று. அவர்கள் தங்கள் நிலைமையை அறிந்துகொள்ளும்படி பிறர் செய்கிற பிரயத்தனத்தையெல்லாம் தேவனுக்கு விரோதமாய்ப் போர்செய்வதாக எண்ணிக்கொள்ளுவார்கள். தங்களுக்கிருக்கும் மூர்க்கமும் ஆங்காரமுமான மார்க்க ஆவேசத்தை 'விசுவாசத்திற்காகத் தைரியமாய்ப் போராடல்' என்று சொல்லிக்கொள்ளுவதினால், பிறருடைய தப்பிதங்களை உணர்த்தும்படி நாம் சாதாரணமாய் உபயோகிக்கும் முறைகள் இவர்களுக்குப் பொருந்துகிறதில்லை. ஆகையால், இவர்களை உணர்த்துவது 'மனுஷரால் கூடாதது' என்றே சொல்லவேண்டும்.



2. ஆகையால் இத்தப்பறையினாலுண்டாகும் கொடிய தீமைகளைக் கண்டு இதில் சிக்கிக்கொள்ளாதபடி பிரயாசப்படுகிற அநேக புத்திசாலிகள் இதற்கு முற்றிலும் விரோதமான வேறொரு கொள்கைக்குட்படுவது ஆச்சரியமா? எப்படியெனில், இவ்வித சாட்சியைக்குறித்துச் சிலர் தவறிப்போனபடியினால் தங்களிடத்தில் இச்சாட்சியுண்டென்று எவர் சொல்லினும் அவர்கள் நம்புகிறதேயில்லை. இவ்வார்த்தைகளைச் சிலர் தப்பாய் அர்த்தப்படுத்தியிருப்பதினிமித்தம் அவைகளை உபயோகிக்கிற யாவரையும் மதவைராக்கியர் என்றே தீர்மானிக்கிறார்கள். மேலும், இதில் சொல்லியிருக்கும் பரிசுத்தாவியின் சாட்சி அப்போஸ்தலர் காலத்துக்கு மாத்திரமுரிய அபூர்வ ஈவுகளிலொன்றேயன்றிச் சாதாரண கிறிஸ்தவர்களுக்குரிய சிலாக்கியமல்லவென்கிறார்கள்.

3. ஒன்றுக்கொன்று விரோதமான இந்த இரண்டு கொள்கைகளுக்கும் உட்படாமல் இடையில் போகலாகாதா? ஒருபக்கத்தில் தப்பறையும் குருட்டு வைராக்கியமுமுள்ள கோட்பாட்டுக்கு இணங்காமலும், மறுபக்கத்தில் தேவனுடைய ஈவை மறுத்து அவர் பிள்ளைகள் யாவருக்குமுரிய மேலான சிலாக்கியத்தை இழந்துபோகாமலும் நடுநிலைமையில் நாம் நிற்கலாகாதா? நிற்பது கூடியதே. ஆகையால் தேவ சந்நிதியில் அவருக்குப் பயப்படும் பயத்தோடு நாம் சிந்திக்கவேண்டிய விஷயங்களாவன:

I. நம்முடைய ஆவியின் சாட்சி என்பதென்ன? பரிசுத்தாவியானவரின் சாட்சி என்பதென்ன? 'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்' என்று அவர் 'நம்முடைய ஆவியுடனேகூட எவ்வாறு சாட்சி கொடுக்கிறார்?'

II. பரிசுத்தாவியானவரும் நமது சொந்தஆவியும் சேர்ந்து கொடுக்கும் இச்சாட்சியானது மனதின் துணிகரமல்ல; பிசாசின் வஞ்சனையுமல்லவென்று எவ்வாறு தெளிவாயும் தீர்க்கமாயும் காட்டலாம்?

I. 1. நம்முடைய ஆவியின் சாட்சி என்பதென்னவென்று முதலாவது பார்ப்போம். பரிசுத்தாவியின் சாட்சியும் பகுத்தறிவினால் கண்டுகொள்ளக்கூடிய நமதாவியின் சாக்ஷியுமாகிய இரண்டும் ஒன்று

தான் என்று சொல்லுகிறவர்கள் இவ்வசனத்தில் அப்போஸ்தலன் நமது சொந்தஆவி கொடுக்கும் சாட்சியைக்குறித்து மாத்திரம் சொல்லவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். அப்போஸ்தலன் இதில் பரிசுத்தாவியின் சாட்சியைக்குறித்து பேசுகிறானேயன்றி நமதாவியின் சாட்சியைக்குறித்து ஏதேனும் சொல்லுகிறானோவென்பது கூடச் சந்தேகம். மூல பாஷையில் இவ்வசனத்தின் கருத்து இதுவே எனத் தோன்றுகிறது. எப்படியெனில், அப்போஸ்தலன் முந்தின வசனத்தில் 'நீங்கள், அப்பா பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்' என்று சொல்லி, அதினடியில் 'அதே ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நம்முடைய ஆவிக்குச் சாட்சி கொடுக்கிறார்' என்று சொல்லுகிறான். கிரேக்க மொழிகளை நுட்பமாய்ப் பார்த்தால், அவை நாம் தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற அதே சமயத்தில் ஆவியானவர் நாம் தேவனுடைய பிள்ளைகளென்றும் நமக்குச் சாட்சியிடுகிறார் என்றுமாத்திரம் அர்த்தம் கொடுக்கின்றன. ஆயினும் இதையிட்டு நாம் தர்க்கிக்க வேண்டியதில்லை. ஏனென்றால், விசுவாசியானவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறானென்று அவனுக்குள் சாட்சியிடும் பரிசுத்தாவியின் சாட்சியும் அவன் சொந்தஆவியின் சாட்சியுமாக இரண்டு சாட்சியுண்டென்று ரூபிக்கிற வேறு அநேக வேத வசனங்களுண்டு. மேலும் மெய்கிறிஸ்தவர்கள் யாவருடைய அநுபவமும் இதற்கொத்திருக்கிறது.

2. தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அடையாளங்கள் இன்னின்னவை என்று தெளிவாய் விவரிக்கிற வேத வசனங்களுண்டு. இந்த வசனங்களே நமது சொந்தஆவியின் சாட்சியையும் ரூபிப்பதற்கு ஆதாரங்களாயிருக்கின்றன. பூர்வீகத்திலும் தற்காலத்திலுமுள்ள நூலாசிரியரில் பலர் இவ்வசனங்களைத் திரட்டிச் சேர்த்து யாவரும் பார்க்கத்தக்கவிதமாய்ப் பகிரங்கப்படுத்தி யிருக்கிறார்கள். யாராவது அதைப்பற்றி இன்னும் அதிகமாய் அறிய விரும்பினால் திருவசனப் போதகர்களைக் கேட்கிறதினாலும், அந்தரங்கத்தில் தேவனுக்கு முன்பாக அதைக்குறித்துத் தியானிப்பதினாலும், தேவனுடைய வழிகளை அறிந்தவர்களிடத்தில் சம்பாஷிப்பதினாலும் அறிந்துகொள்ளலாம். மேலும், தேவன் நமக்குப் புத்தியாகிய



அறிவைக் கொடுத்திருக்கிறார். தேவ பக்தியானது நமது புத்தியை பூரணமாக்குமேயன்றிக் குறைக்கமாட்டாது. அப்படியே அப். பவுல் 'சகோதரரே, நீங்கள் புத்தியில் குழந்தைகளா யிராதேயுங்கள். துர்க்குணத்திலே குழந்தைகளாயும் புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்' என்று சொல்லுகிறான் (1 கொரி. 14: 20.). ஆகையால் தேவன் மனுஷனுக் கருளிச்செய்திருக்கும் இந்தப்புத்தியைக்கொண்டு வேத வாக்கியங்களில் சொல்லியிருக்கிற அடையாளங்கள் தனக்குண்டோவென்று ஒருவன் பரிசோதித்துப் பார்க்கும்பொழுது தான் தேவனுடைய பிள்ளையோ அல்லவோவென்று அறிந்துகொள்ளலாம். எப்படியெனில், பரிசுத்த வேதாகமத்தில் உறுதியாய்ச் சொல்லியிருக்கிறபிரகாரம், 'எவர்கள் தேவனுடைய ஆவியினாலே' பரிசுத்த குணங்களைப் பெற்று நற்கிரியைகளைச் செய்யும்படி 'நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்' என்றும், தானும் இவ்விதமாகவே தேவாவியினால் நடத்தப்படுகிறான் என்றும் ஒருவன் அறிந்துகொள்வானாகில் அவன் நான் தேவனுடைய புத்திரனாயிருக்கிறேன் என்று வெகு சுலபமாய் அனுமானிக்கலாம்.

3. இதற்கிணங்க, பரி. யோவான் அப்போஸ்தலன் தன்னுடைய முதல் நிருபத்தில் தெளிவாய்ச் சொல்லுகிறான். 'அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம்' (அதி. 2: 3.). 'அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள்ளிருக்கிறோம் என்பதை,' அதாவது நாம் மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகள்தான் என்பதை 'அதினாலே அறிந்திருக்கிறோம்.' (அதி. 2: 5.). 'அவர் நீதியுள்ளவராயிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால் நீதியைச் செய்கிறவன் எவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்' (29. வச.). 'நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியினால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம்' (அதி. 3: 14.). 'வசனத்தினாலும் நாவினாலும் அல்ல கிரியையினாலும் உண்மையினாலும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருகிறபடியால் நாம் நம்மைச் சத்தியத்துக்குரியவர்கள் என்றறிந்து நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்

சயப்படுத்திக்கொள்ளலாம்' (வச. 19.). 'அவர் தம்முடைய அன்புள்ள ஆவியில் நமக்குத் தந்தருளியிருக்கிறதினாலே நாம் அவரில் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.' (அதி. 4: 13.). 'அவர் நமக்குத் தந்தருளின' கீழ்ப்படிதலின் 'ஆவியினாலே அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.' (அதி. 3: 24.).

4. உலகந்தோன்றினது முதல் தேவனுடைய பிள்ளைகளுக்குள் இந்நிருபத்தை எழுதின யோவானையும் அதைப் பெற்றுக்கொண்ட பிதாக்களையும்விட தேவகிருபையிலும் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் தேறினவர்கள் யாருமில்லை என்பது திண்ணம். என்றாலும், இந்த யோவான் அப்போஸ்தலனும், தேவனுடைய சபைக்குத் தூண்களாயிருந்த மற்றவர்களும், தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று காட்டுகிற அடையாளங்களை அவமதிக்காமல், தங்கள் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும்பொருட்டு, தங்கள் சொந்த ஆத்துமவிஷயமாய் இவ்வடையாளங்களைக் கவனித்தார்கள் என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. நமது பகுத்தறிவின் சாட்சியாகிய நம்முடைய ஆவியின் சாட்சி இதுவே; நம்முடைய அறிவின் சாட்சி அல்லது புத்தியின் சாட்சி என்பதும் இதுதான். ஆகவே, இந்த நியாயதோரணையினால் ரூபகாரமாகிறது என்ன? இந்த அடையாளங்களை உள்ளவர்கள் எவர்களோ, அவர்களே தேவனுடைய புத்திரர். நமக்கு இந்த அடையாளங்களிருக்கின்றன. ஆகையால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ரூபகாரமாகிறது.

5. ஆனால் நமக்கிந்த அடையாளங்களிருக்கின்றனவென்று எப்படித் தெரியும் என்பது அடுத்த கேள்வி. இதற்கு இனி உத்தரவு சொல்லவேண்டியது. நாம் தேவனிடத்திலும் பிறனிடத்திலும் அன்புகூர்ந்து, தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறோம் என்பது எப்படித் தெரியும் என்று சொல்லும்போது அவரவர்க்கு எப்படித் தெரியும் என்பதேயன்றி மற்றவர்களுக்கு எப்படித் தெரியும் என்பது இக்கேள்வியின் கருத்தல்ல. இக்கேள்வி கேட்கிறவனிடத்தில் நானும் ஒரு கேள்வி கேட்கிறேன். நீ ஜீவனோடு இருக்கிறாயென்றும், நோயற்றவனாய்ச் சுகமனுபவிக்கிறாயென்றும் உனக்கெப்படித் தெரியும்? நான் இக்கேள்வி கேட்ட க்ஷணமே அது



உன் மனதுக்குத் தெரிகிறதல்லவா? அதே மனவுணர்வினால் உன் ஆத்துமா தேவனுக்குள் பிழைத்திருக்கிறதாவென்றும், அகங்காரம் என்னும் நோவு நீங்கி சாந்தமும் அமைதலுமான ஆவியாகிய சுகத்தை அனுபவிக்கிறாயாவென்றும் உனக்குத் தெரியும். நீ தேவனிடத்தில் அன்புவைத்து அவரில் களிகூர்ந்து அவரில் மகிழ்ச்சியாயிருந்தாயானால் அதுவும் அதே உணர்வினால் உனக்குத் தெரியும். உன்னைப்போல் பிறனை நேசித்து எல்லா மனுஷரிடத்திலும் பட்சம்வைத்து சாந்தமும் நீடிய பொறுமையுமுள்ளவனாயிருக்கிறாயோவென்றும் உன் மனமே உனக்குச் சொல்லும். தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதே தேவனுடைய பிள்ளைகளுக்கிருக்கவேண்டிய புறம்பான அடையாளம் என்று பரி. யோவான் சொல்லியிருக்கிறான். தேவகிருபையினால் இந்த அடையாளம் உனக்குண்டோவென்று நீயே சந்தேகமின்றிக் கண்டுகொள்ளலாம். பயபக்தியோடும் வணக்க சிந்தையோடுமேயன்றி உன் வாயினால் தேவநாமத்தை உச்சரிக்கிறதில்லையாவென்றும், ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைத்து உன் பெற்றோரைக் கனம்பண்ணி மற்றவர்கள் உனக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறாயோ அவைகளை நீயும் மற்றவர்களுக்குச் செய்து உன் சரீரத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் காத்துக்கொண்டு, புசித்தாலும் குடித்தாலும் இச்சையடக்கமுள்ளவனாய் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்துவருகிறாயாவென்றும் உன் மனச்சாட்சி உனக்குத் தினமும் அறிவிக்கிறது.

6. **நமது ஆவியின் சாட்சியாவது என்ன?** உள்ளான இருதயத்திலும் புறம்பான நடக்கையிலும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி தேவன் நமக்குக் கிருபை அருளிச்செய்திருக்கிறார் என்று நமது சொந்த மனம் கொடுக்கிற சாட்சியே நம்முடைய ஆவியின் சாட்சியாம். அதாவது தேவனுடைய சுவிகாரப் புத்திரருக்குரியதாக தேவவசனத்தில் குறித்திருக்கும் பரிசுத்த குணங்களை புத்திர சுவிகாரத்தின் ஆவியிலும் ஆவியின் மூலமாயும் பெற்றிருக்கிறோம் என்று நமது மனம் சொல்லும் சாட்சியேயாம். அக்குணங்களாவன:— தேவனிடத்திலும் மனுஷர் யாவரிடத்திலும் அன்புகூருதல்; நம்முடைய பரமபிதாவாகிய தேவனைப் பிள்ளையடைவான நம்பிக்கை

யுடன் பற்றிக்கொள்ளுதல்; அவரையன்றி வேறொன்றையும் ஆசியாதிருத்தல்; நம்முடைய கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து மனுஷனாகப் பிறந்த எவனிடத்தும் உத்தம பாசநேசமுள்ளவர்களாயிருத்தல் ஆகிய இவைகளே.

ஆகவே, தேவாவியினால் நாம் உள்ளாக அவரது குமாரனின் சாயலுக்கொப்பாக மாறி நீதியும் இரக்கமும் உண்மையுமுள்ளவர்களாய் அவர் திருப்பார்வைக்குப் பிரியமானவைகளைச் செய்துவருகிறோமென்று நமது மனம் சொல்லுகிற சாட்சிதான் நம்முடைய ஆவியின் சாட்சியாம்.

7. நம்முடைய ஆவியின் சாட்சி யின்னதென்று பார்த்தோமே. அப்படியானால் இதோடுகூடச் சேர்ந்திருக்கிற பரிசுத்தாவியின் சாட்சியாவதென்ன? 'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்' என்று அவர் நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சிகொடுப்பதெப்படி? 'தேவனுடைய ஆழங்களை' விஸ்தரித்துக் காட்ட மனுஷ பாஷையில் வார்த்தைகள் காண்பதரிது. தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய அநுபவத்தைத் தகுந்தபிரகாரம் விவரித்துச் சொல்லக்கூடியவர்கள் யாருமுண்டோ? இல்லை. ஆயினும் சொல்லவேண்டுமானால், நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்றும், இயேசுகிறிஸ்து என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்றும், என் பாவம் யாவும் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்றும், நான் தேவனோடு ஒப்புரவாயிருக்கிறேன் என்றும், பரிசுத்தாவியானவர் என் ஆவிக்கு நேர் நேராய் தெரிவிக்கிறதாக என் ஆத்துமாவிலுண்டாகிற உள்ளான உணர்வே பரிசுத்தாவியின் சாட்சியாம். தேவனால் போதிக்கப்பட்டவன் எவனோ அவன் இவ்வார்த்தைகளைத் திருத்திக்கொள்ளலாம், அல்லது சற்றே கூட்டிக் குறைத்துக்கொள்ளலாம்

8. இவ்விரு சாட்சிகளில் இயற்கைப்படி பரிசுத்தாவியின் சாட்சியே நம்முடைய ஆவியின் சாட்சிக்கு முந்தினதா யிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு நியாயமுண்டு. அதென்னவெனில், நாம் பரிசுத்தராய் இருந்தால் அன்றி நாம் நமது இருதயத்திலும் ஜீவியத்திலும் பரிசுத்த முள்ளவர்கள்தானென்றும், உள்ளும் புறம்பும் சுத்தமாயிருக்கிறோம் என்றும் நமது மன உணர்வினால் அறிந்துகொள்வது எப்படி



அதற்கு முந்தி நம்முடைய ஆவி சாட்சியிடமாட்டாது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்தாலன்றி நாம் பரிசுத்தரல்ல என்பது நிச்சயம். அவரில் அன்புகூருவதே சகல பரிசுத்தத்துக்கும் வேராயிருக்கிறது. ஆனால் அவர் நம்மில் அன்பாயிருக்கிறார் என்று அறியும்வரையில் நாம் அவரிடத்தில் அன்புகூரவும் முடியாது. எப்படியெனில், 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.' மேலும் அவருடைய ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே சாட்சி கொடுத்தாலன்றி தேவன் நமது பாவங்களை மன்னித்ததில் பாராட்டியிருக்கும் அன்பை நாம் அறிந்துகொள்ளக்கூடாது. ஆகவே, நாம் தேவனிடத்தில் அன்புகூர்வதற்கும் பரிசுத்தமாய் நடப்பதற்கும் முன் அவருடைய ஆவியானவர் சாட்சி கொடுக்கவேண்டியதா யிருக்கிறபடியால் நம்மிடத்தில் தேவன்பும் பரிசுத்தமு மிருக்கிறதாகச் சொல்லுகிற உள்ளான உணர்வு என்னும் நம்முடைய ஆவியின் சாட்சிக்கு அது முந்தினதாகவே யிருக்கவேண்டியது.

9. 'தேவன் உன்னில் அன்புகூர்ந்து உன் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்தார்' என்றும், தேவகுமாரன் உன்னில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே உன் பாவங்களற உன்னைக் கழுவியிருக்கிறார் என்றும் தேவாவி உன் ஆவியோடுகூடச் சாட்சி கொடுக்கும்வரையில் நீ அவரில் அன்புகூர முடியாது. அப்படிச் சாட்சி கொடுக்கும்போது, 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.' அவரிடத்தில் மாத்திரமல்ல, அவர் நிமித்தம் நமது சகோதரர்பேரிலும் அன்புகூருகிறோம். இதைக்குறித்து நமது மனதுக்கே பிரத்தியட்சமாய்த் தெரியும். ஏனென்றால், 'தேவனால் நமக்கருளப்பட்டவைகளை அறிவோம்' என்று சொல்லியிருக்கிறது. மேலும் நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறோம் என்று அறிவோம். எப்படியெனில் 'இதினாலே நாம் தேவனால் உண்டானவர்கள் என்று அறிவோம்' என்று சொல்லியிருக்கிறது; இதுவே நம்முடைய ஆவியின் சாட்சியாம். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்குங் காலமெல்லாம் 'நாம் தேவனு

டைய பிள்ளைகளாயிருக்கிறோம்' என்று இந்தச் சாட்சியோடு தேவாவியின் சாட்சியும் சேர்ந்து சொல்லும்.

10. சாட்சியைப்பற்றி இதுவரை சொன்னதைக்கொண்டு நமது சொந்த ஆவியின் சாட்சியில் தேவாவியின் கிரியை இல்லையென்று நான் சொன்னதாக எண்ணக்கூடாது; அது என் கருத்தல்ல. ஏனென்றால் நம்மில் சகல நற்காரியங்களையும் நடப்பித்துத் தமது கிரியைகளின்மேல் ஒளிவீசச்செய்து, தாம் செய்து முடித்ததைத் துலாம்பரமாய்க் காட்டுகிறவர் அவரே. அப்படியே 'தேவனால் எங்களுக் கருளப்பட்டவைகளை அறிந்துகொள்ளுவதுதான்' பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளுவதின் பிரதான நோக்கம் என்று பரி. பவுல் சொல்லுகிறான். அதாவது, பரிசுத்தாவியானவர் நம்முடைய கபடமில்லாத திவ்விய உண்மையைப்பற்றி நமது மனச்சாட்சி சொல்லுவதை ஸ்திரமாக்கி நாம் இப்பொழுது அவருக்குப் பிரியமானவைகளைச் செய்கிறோமென்று பூரணமாயும் பரிஷ்காரமாயும் நிதானித்து அறிந்துகொள்ளப்பண்ணுகிறார்.

11. இவ்வளவு சொல்லியும், நாம் தேவனுடைய புத்திரர் என்பதாக எவ்வித சந்தேகமுமின்றி உறுதிப்படுத்தும்படி பரிசுத்தாவியானவர் நம்முடைய ஆவியுடனேகூட எவ்வாறு சாட்சி கொடுக்கிறார் என்று ஒருவன் கேட்கிறதானால், இப்படிப்பட்டவனுக்கு மேற்சொன்னவைகளிலிருந்தே தகுந்த பிரதியுத்தரம் கொடுக்கலாம். எப்படியெனில், முதலாவது நம்முடைய ஆவியின் சாட்சியைக்குறித்துப் பார்ப்போம். ஆத்துமாவானது பூமியிலுள்ள ஒரு பொருளின்மேல் பிரியம் வைத்து அதில் மகிழ்ச்சியாயிருக்கிற சமயம் அதற்குத் தெரியும். அதைப்போலவே அந்த ஆத்துமா, தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவரில் மகிழ்ச்சியடைந்து சந்தோஷப்படுகிற சமயமும் அதற்குத் திட்டமாயும் பிரத்தியட்சமாயும் தெரியும். மேலும் அந்த ஆத்துமா தான் ஜீவனோடிருக்கிறதைக் குறித்துச் சந்தேகமற்றிருக்கிறதுபோலவே அது தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்குள் மகிழ்ச்சியடைந்து சந்தோஷமாயிருக்கிறதைப்பற்றியும் சந்தேகப்படுகிறதில்லை இது எப்படியென்று பின்வரும் சித்தாந்தம் ரூபிக்கும்:

தாழ்மையான சந்தோஷமும் பரிசுத்த மகிழ்ச்சியும் கீழ்ப்படிகிற அன்புமுள்ளவனாய் எவன் தேவனிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்குள்



மகிழ்ந்து சந்தோஷமாயிருக்கிறானோ அவனே தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான்.

அதேவண்ணமாய் நான் அவரில் அன்புகூர்ந்து அவருக்குள் மகிழ்ந்து சந்தோஷமாயிருக்கிறேன். ஆகையால் நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன்.

இந்த நியாயதோரணை சரியாயிருக்குமாகில் ஒரு கிறிஸ்தவன் தான் தேவனுடைய பிள்ளையோ அல்லவோ என்று சந்தேகிக்க வேண்டியதில்லை. எப்படியெனில், வேதவாக்கியங்கள் தேவனால் கொடுக்கப்பட்டதென்பது எவ்வளவு நிச்சயமோ, தான் தேவனுடைய பிள்ளை என்பதும் அவ்வளவு நிச்சயமானதே. தனக்கு இவ்விதமாய்த் தேவனிடத்தில் அன்புண்டென்கிறதற்கு அவனுக்குள்ளேயே நிச்சயமான பிரத்தியட்ச ரூபகாரமுண்டு. ஆகவே, நாம் தேவனுடைய புத்திரர் என்பதைப்பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ளாதிருக்கும்பொருட்டு நம்முடைய ஆவியின் சாட்சியானது பூரண நிச்சயத்தோடு நமக்குள் வெளியாக்கப்பட்டிருக்கிறது.

12. தேவாவியின் சாட்சி நமதிருதயத்திற்கு எவ்வாறு வெளிப்படுகிறதென்று விவரிக்கத் துணியேன். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு மேற்பட்டதும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. காற்று வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறேன். ஆயினும் அது எவ்விதமாய் வருகிறதென்றும் எங்கே போகிறதென்றும் அறியேன். மனிதனிலுள்ள ஆவியேயன்றி எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான். அதேபிரகாரம் தேவனுடைய ஆவியேயன்றி தேவனுக்குரியவைகள் எத்தன்மையானவை என்று ஒருவனும் அறியமாட்டான். ஆகிலும் ஒன்றுமட்டும் சத்தியம். அதென்னவெனில், விசுவாசியானவன் தேவனுடைய சுவிகாரப்புத்திரன் என்று தேவாவியானவர் அவனுக்குச் சாட்சி கொடுக்கிறார். பட்டப்பகல் வேளையில் சூரிய வெளிச்சத்தில் நிற்கிற ஒருவன் சூரியன் பிரகாசிக்கிறதைக்குறித்து எப்படிச் சந்தேகியானோ அப்படியே பரிசுத்தாவியின் சாட்சியைத் தன் ஆத்துமாவில் பெற்றிருக்கிற ஒருவன் தன் புத்திர சுவிகாரத்தின் நிச்சயத்தைக் குறித்தும் சந்தேகியான்.

II. 1. பரிசுத்தாவியும் நமதாவியும் சேர்ந்து கொடுக்கும் இச்சாட்சியானது ஜென்ம சுபாவ மனுஷனின் துணிகர மனோபாவனையுமல்ல, பிசாசின் வஞ்சனையுமல்லவென்று எவ்வாறு தெளிவாய் வித்தியாசப்படுத்தலாம்? இது நாம் சிந்திக்கவேண்டிய இரண்டாம் விஷயம். தேவனுடைய இரட்சிப்பை வாஞ்சித்து நாடுகிற யாவரும் தங்கள் சொந்த ஆத்துமாக்களை வஞ்சித்துக்கொள்ளாதபடி இந்த விஷயத்தைக் கவனிக்கவேண்டியது அவசியம். இவ்விஷயத்தில் நேரிடும் தவறுதல் பொதுவாய் மோசமான தீமையை உண்டுபண்ணுகிறதாக அறிந்திருக்கிறோம். அதுமாத்திரமா? இதில் தவறுகிறவன் தன் பிழையைக் கண்டுகொள்வது அபூர்வம். கண்டுகொண்டாலும் காலம் பிந்திப்போனபின் திருத்துவது கடினம்

2. முதலாவது, இச்சாட்சியை ஜென்ம சுபாவ துணிகர மனோபாவனையினின்று எவ்வாறு பேதப்படுத்தலாம்? பாவ உணர்வடையாத ஒருவன் தன்னைக்குறித்து எப்போதும் மெச்சிக்கொள்ளுவதும் விசேஷமாய் ஆவிக்குரிய விஷயங்களில் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுவதும் சத்தியமே. அதனால் உத்தம கிறிஸ்தவர்களில் ஒருவனாகத் தன்னைப் பாவித்து, மாம்சசிந்தையினால் வீண் பெருமை பாராட்டுகிற ஒருவன் மெய்க்கிறிஸ்தவர்களுக்குரிய இச்சிலாக்கியத்தைக்குறித்துக் கேள்விப்படுகையில் தனக்கும் இச்சாட்சி முன்னமே யிருப்பதாகத் தன்னை வஞ்சித்துக்கொள்ளுவது ஆச்சரியமா? இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் தற்காலத்தில் காணலாம். தற்காலத்தில் மாத்திரமல்ல, எக்காலத்திலுமே யுண்டு. அப்படியானால் பரிசுத்தாவியும் நம்முடைய ஆவியும் சேர்ந்து கொடுக்கும் மெய்யான சாட்சிக்கும், மோசமான துணிகர மனோபாவனைக்குமுரிய பேதமென்ன?

3. இக்கேள்விக்குப் பிரதியுத்தரம் சொல்லுகிறேன். இந்த இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களைக் குறிக்கும் அடையாளங்கள் பரிசுத்த வேதாகமங்களில் அநேகமுண்டு. தேவாவியும் விசுவாசியின் ஆவியும் சேர்ந்து உண்மையாய்ச் சாட்சி கொடுக்கும் காலத்திலும், அதற்கு முன்னும், அதற்குப் பின்னும், சம்பவிக்கவேண்டியவைகள் இன்னின்னவென்று தெளிவாய் உரைத்திருக்-



கிறது. இவைகளைச் சீர்தூக்கிக் கவனித்து நடக்கிறவன் எவனோ அவன் இருளை வெளிச்சமாகப் பாவிக்கமாட்டான். இந்த விஷயங்களில் பரிசுத்தாவியின் மெய்யான சாட்சிக்கும் மனோபாவனைக்கும் பெரிய வித்தியாசமிருப்பதாகக் காண்பான். இவ்விரண்டுக்கும் தகுந்த வித்தியாசமிருப்பதினால் இதுதான் அதுவோவென்று திகைக்க வேண்டிய அவசரமேயில்லை.

4. தேவனுடைய ஈவாகிய சாட்சி தனக்குண்டென்று வீணாகத் துணிந்து எண்ணிக்கொள்ளுகிற ஒருவன் தன் யதார்த்த நிலைமையை அறிய விரும்புவானேயாகில், தான் இதுவரையில் 'கொடிய வஞ்சகத்துக்குட்பட்டு' பொய்யை நம்பும்படி நேர்ந்ததாக இந்த அடையாளங்களைக்கொண்டு நிச்சயமாய்க் கண்டு கொள்ளலாம். எப்படியென்றால், இந்த ஈவைப் பெற்றுக்கொள்வதற்கு முந்தியும் பிந்தியும், அதைப் பெற்றுக்கொள்ளும்போதும் இருக்கிற அடையாளங்கள் இன்னின்னவை யென்று வேதத்தில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. இதைச் சற்றே யோசித்துப் பார்ப்பானாகில் தன் ஆத்துமாவில் இந்த அடையாளங்கள் ஒருபோதும் காணப்பட்டதேயில்லை யென்று சந்தேகமறக் கண்டுகொள்ளுவான். திருஷ்டாந்தமாக: பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பற்றிய இந்தச் சாட்சி கிடைக்குமுன் மனந்திரும்புதல் என்கிற பாவ உணர்வு உண்டாவதவசியம் என்று வேதம் சொல்லுகிறது. அவைகளாவன: 'மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' (மத். 3: 2.). 'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்' (மாற். 1, 15.). 'நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்' (அப். 2: 38.). 'உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்' (அப் 3: 19.). நமது திருச்சபையும் இதற்கிசைவாக, பாவமன்னிப்புக்கும் அதைப்பற்றிய சாட்சிக்கும் முந்தி மனந்திரும்புதலிருப்பதாக எப்போதும் அறிவிக்கிறது. எப்படியெனில், 'மெய்யாய் மனந்திரும்பி சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார்.' 'சர்வவல்லமையுள்ள தேவன் உத்தம மனஸ்தாபத்தோடு தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும்

பாவமன்னிப்பை அருளிச்செய்வோமென்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்' என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இந்த வீண் எண்ணக்காரனுக்கு மனந்திரும்புதல் உண்டானதேயில்லை. 'நொருங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம்' எப்படி யிருக்குமென்று அவனுக்குத் தெரியவே தெரியாது. அவன் தன் பாவங்களை நினைத்துத் துயரப்பட்டதேயில்லை, அவைகள் அவனுக்குச் சுமக்கமுடியாத பாரமாயிருக்கவில்லை. இவ்வார்த்தைகளை அவன் பலமுறை உச்சரித்தும் அதின் கருத்தை உணர்ந்து சொன்னது கிடையாது. தேவனுக்குப் பிரியமான உபசார வசனங்களாகமாத்திரம் அவைகளை உச்சரிக்கிறான். ஆகையால் இந்தச் சாட்சி உண்டாகுமுன் தேவன் செய்கிற கிரியையாகிய மனந்திரும்புதல் அவனுக்குள்ளில்லாததே இதற்குக் காரணமாயிருக்குமானால், தான் கானலை நீரென்று நம்பினவனேயன்றித் தேவனுடைய புத்திரருக்குரிய இந்த மெய்யான சிலாக்கியத்தை அறிந்தவனே யல்லவென்று எண்ணத்தகுந்த நியாயமுண்டு.

5. மேலும், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சாட்சிபெறுமுன் தேவனால் பிறக்கவேண்டியதென்றும், அப்படித் தேவனால் பிறப்பது மகா பலத்த மாறுதல் என்றும் வேதம் உரைக்கிறது. இந்த மாறுதலை 'இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்புதல்' என்றும்; 'மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்படுதல்' என்றும்; 'மரித்தோரை விட்டு உயிர்த்தெழுதல்' என்றும் சொல்லியிருக்கிறது. அப்படியே, அப். பவுல், எபேசியரை நோக்கி: 'அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்' என்று சொல்லியிருக்கிறான் (2: 1.). பின்னும் 'அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடுகூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடு உட்காரவுஞ் செய்தார்' என்றும் சொல்லியிருக்கிறான் (2: 5, 7.). ஆனால் நாம் பேசிக்கொண்டுவருகிற அந்த வீண் எண்ணமுள்ள மனுஷனுக்கு இப்படிப்பட்ட மாறுதலைக்குறித்து என்ன தெரியும்? இந்தச் சங்கதி முழுவதும் அவனுக்கு நூதனம். இது அவனுக்கு விளங்காத பாஷை. தான் எக்கா



லமும் கிறிஸ்தவனாகவே யிருந்ததாக உனக்குச் சொல்லுவான். இப்படிப்பட்ட மாறுதல் அவசியம் என்று அவனுக்கொருநாளும் தோன்றினதேயில்லை. ஆகையால் அவன் சற்றே யோசித்துப் பார்ப்பானாகில் தான் பரிசுத்தாவியினால் பிறந்தவனல்லவென்றும், இதுவரை தான் தேவனை அறியவில்லை யென்றும், ஜென்ம சுபாவ சத்தத்தையே தேவ சத்தமாக விபரீதமாய் எண்ணிக்கொண்டவனென்றும் இந்த அடையாளத்தின்மூலமாய்க் கண்டுகொள்ளுவான்.

6. இதற்குமுன் அவனுடைய அனுபவம் எப்படியிருந்தாலும் சரி, அதைப் பாராமல் தற்காலத்திலிருக்கும் அடையாளங்களைக் கொண்டு அவன் தேவனுடைய பிள்ளையோ, அல்லது தேவனுடைய பிள்ளையாகத் தன்னை வஞ்சித்துக்கொண்ட துணிகரக்காரனோவென்று எளிதில் அறிந்துகொள்ளலாம். விசுவாசி ஒருவனுக்குப் பரிசுத்தாவியின் சாட்சியோடு கர்த்தருக்குள்ளான சந்தோஷமிருக்கும் என்றும், அந்தச் சந்தோஷம் தாழ்மையான சந்தோஷம் என்றும் வேதத்தில் சொல்லியிருக்கிறது. இந்தச் சந்தோஷத்தினால் மன்னிப்படைந்த பாவியொருவன் தன்னைத் தரைமட்டும் தாழ்த்தி, 'நான் நீசன், நான் எம்மாத்திரம், என் தகப்பன் குடும்பம் எம்மாத்திரம், இப்பொழுதே என் கண் உம்மைக் கண்டது; ஆகையால் நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலு மிருக்கிறேன்' என்று அலறுகிறான். தாழ்மை எங்கே உண்டோ அங்கே சாந்தம், சகிப்பு, அமைதி, நீடிய பொறுமையிருக்கும்; சாந்தமும் இணக்கமுமான ஆவியிருக்கும். அவனுடைய ஆத்துமாவில் சொல்வதற்கரிய அமைதியான சுபாவமும், நற்குணமும் உருக்க சிந்தையும் விளங்கும். ஆனால் ஆவியின் சாட்சி தனக்குண்டென்று வீண் எண்ணங்கொண்டிருக்கிற துணிகரக்காரனிடத்தில் இக்கனிகளுண்டோவென்று பார்த்தால் அவைகள் இல்லை. தேவ தயவு தனக்குண்டென்று எவ்வளவுக்கதிகமாய் நம்பிக்கையா யிருக்கிறானோ அவ்வளவுக்கதிகமாய் மேட்டிமைகொண்டு தன்னை உயர்த்துகிறான்; அவனுடைய நடக்கையாலிலும் இறுமாப்பும் அகங்காரமு முள்ளவனாகிறான். ஆவியின் சாட்சி தன்னில் பலமாயிருக்கிறதாக நினைக்க நினைக்க தன்னைச் சேர்ந்த யாவரிடத்திலும் அவனுக்குக் கர்வம் அதிகப்படுகிறது. எச்சரிப்பு அவனுக்குப் பிரியமில்லை. தன்னை மறுத்துப் பேசச் சகி

யான். சாந்தம், அமைதி, இணக்கம் அவனில் அதிகப்படவேண்டியது. அவன் கேட்கிறதற்கு அதிக தீவிரமாயும் பேசுகிறதற்கு அதிக பொறுமையாயு மிருக்கவேண்டியது. அதற்குப் பதிலாக, அவன் கேட்கிறதற்குத் தாமதமாயும் பேசுகிறதற்குத் தீவிரமாயு மிருக்கிறான். மற்றவர்களிடத்தில் ஒன்றும் கற்றுக்கொள்ள அவனுக்கு முன்போல் மனமில்லை. அவனுடைய குணம் முன்னிலும் அதிக மூர்க்கமும் அகங்காரமும் கொள்ளுகிறது. சம்பாஷணை செய்கையில் ஆத்திரம் அதிகப்படுகிறது. மேலும், சில சமயங்களில் அவன் முகத்திலும், பேச்சிலும், அவன் நடக்கை முழுவதிலுமே மூர்க்க குணம் தோன்றுகிறது. அச்சமயங்களில் தேவன் நடப்பிக்க வேண்டியவைகளை அவன் நடப்பித்து, தானே 'விரோதிகளைப் பட்சிக்கிறவன்' போல் நடந்துகொள்வான்.

7. மேலும், 'தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருகிறோ மென்பதற்கு மெய்யான அடையாளம்' என்று வேதவசனம் கற்பிக்கிறது (1 யோவா. 5: 3.). 'என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்' என்று நமது ஆண்டவரே உரைத்திருக்கிறார் (யோவா. 14: 21.). அன்பு சந்தோஷமாய்க் கீழ்ப்படியும்; 'தன் நேசருக்குப் பிரியமான' எதையும் செய்ய வாஞ்சிக்கும். தேவனிடத்தில் உண்மையாய் அன்புகூருகிற ஒருவன் அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூலோகத்திலும் செய்யப்படும்படி ஜாக்கிரதைப்படுகிறான். ஆனால் தேவனிடத்தில் அன்பாயிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிற துணிகரக்காரனிடத்தில் இச்செய்கை யுண்டோ? கிடையாது. அவனுடைய அன்பு தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதற்கான சுயாதீனத்தை உண்டுபண்ணாமல் அவைகளை மீறிக் கீழ்ப்படியாமலிருப்பதற்கான சுயாதீனத்தையே உண்டுபண்ணுகிறது. தேவகோபம் வருமென்று அவன் பயந்திருந்தகாலத்தில் அவருடைய சித்தத்தின்படி நடக்க அவன் பிரயாசப்பட்டிருந்தாலுமிருக்கலாம். இப்போதோ 'தன்னை நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன் அல்ல' என்றெண்ணிக்கொள்ளுவதினால் அதைக் கைக்கொள்ளவும் கடமைப்பட்டவனல்ல என்றெண்ணிக்கொள்ளுகிறான். அதினால் நற்கிரியைகளைப் பற்றியிருந்த வைராக்கியம் குன்றிப்



போயிற்று. தீமைக்கு விலகிக்கொள்ளும்படியான கவலை குறைந்துபோயிற்று. தன் இருதயத்தைக் காத்துக்கொள்ளும்படி முன்போல் விழிப்பாயிருக்கவில்லை. தன் நாவை முன்போல் காக்கிறதில்லை. தன்னைத் தான் வெறுத்து அநுதினமும் தன் சிலுவையை எடுத்துக்கொள்வதில் முன்னிருந்த ஊக்கம் குன்றிவிட்டது. சுருக்கிச் சொன்னால் தான் சுயாதீனனாகிவிட்டதாக எண்ணிக்கொண்ட காலமுதல் அவனுடைய ஜீவியம் முழுவதும் மாறிப்போயிற்று. அதுமுதல் அவன் 'தேவபக்திக் கேதுவான முயற்சி' செய்கிறதில்லை. மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும்' செய்த போராட்டம் நின்றுவிட்டது. துன்பங்களைச் சகிக்கிறதில்லை. 'இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகிறதுமில்லை.' இவைகளைச் செய்யாதது மாத்திரமல்ல, மோட்சம் சேர்வதற்குச் சுலபமான வழியும் கண்டுபிடித்திருக்கிறான். அந்த வழி விரிவானதும், கஷ்டமற்றதும் இன்பமுமானது. 'நீ புசித்துக் குடித்துப் பூரிப்பாயிரு' என்று அவன் தன் ஆத்துமாவோடே சொல்லத்தக்க வழி இதுவே. இவனுக்கு அவனுடைய சொந்த ஆவியின் சாட்சியில்லை என்பதற்கு இதுவே மறுக்கமுடியாத பலத்த அத்தாட்சி. தாழ்மை, சாந்தம், கீழ்ப்படிதல் முதலிய அடையாளங்கள் தன்னிட மில்லாதிருக்கையில் அவைகள் தன்னிட மிருப்பதாக அவன் மனம் சாட்சியிடுமா? இடாது. அப்படியே சத்திய தேவனுடைய ஆவியானவரும் பொய்யான விஷயத்துக்குச் சாட்சி கொடுப்பாரா? ஒருவன் பிரத்தியட்சமாகப் பிசாசின் பிள்ளையாயிருக்கையில் அவன் தேவனுடைய பிள்ளை யென்று சாட்சி கொடுக்கவேமாட்டார்.

8. உன்னையே வஞ்சித்துக்கொள்ளுகிற பேதையே! நீ உன் நிலைமையைக் கண்டுகொள். நானும் தேவனுடைய பிள்ளைதானென்று நம்பிக்கையா யிருக்கிறாயே. எனக்குள்ளும் சாட்சி யிருக்கிறதென்று சொல்லி உன் விரோதிகள் யாவர் முன்பாகவும் வீம்பு பேசுகிறாயே, தேவனுடைய பரிசுத்த தராசிலே நீ நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய். தேவவசனம் உன்னைப் புடமிட்டுச் சோதித்துப்பார்த்து நீ தள்ளுபடியான வெள்ளியென்று உன்னைத் தீர்த்திருக்கிறது. உனக்கு மனத்தாழ்மை யில்லாததினால் நீ இதுவரை

இயேசுகிறிஸ்துவின் ஆவியைப் பெறவில்லை. உனக்கு அமைதியும் சாந்தமுமில்லாததினால் உன் சந்தோஷம் சந்தோஷமல்ல, அது கர்த்தருக்குள்ளான சந்தோஷமாகாது. நீ அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாததினால் நீ அவரிடத்தில் அன்புகூரவில்லை. அவருடைய பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளவுமில்லை. இந்த முகாந்தரங்களினால் வேதவசனம் தெளிவாய்க் கற்பிக்கிறபடி நீ தேவனுடைய பிள்ளையென்று ஆவியானவர் உன்னுடைய ஆவியுடனே சாட்சியிடவில்லையென்பது உண்மையும் பிரத்தியட்சமுமாயிருக்கிறது. உன் கண்களினின்று படலம் விழும்படியாகவும் நீ அறியப்பட்டிருக்கிறபடியே உன்னை நீ அறிந்துகொள்ளும்படியாகவும் நீ மரணதண்டனைக்கு உட்பட்டவனென்று உனக்குக் காட்டும்படியாகவும் அவரை நோக்கி மன்றாடு. அப்புறந்தான் மரித்தோரை உயிரோடெழுப்புகிறவர், 'திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன; உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது' என்று சொல்லும் சத்தம் உன் காதில் விழும்.

9. 'ஆனால் பரிசுத்தாவியின் சாட்சியை உண்மையாய்ப் பெற்றிருக்கிற ஒருவன் தனக்கிருக்கும் சாட்சி துணிகர மனோபாவனையல்லவென்று எவ்வாறு கண்டுகொள்ளலாம்' என்பதாகச் சிலர் கேட்கலாம். சிநேகிதனே, இரவு பகல் என்று எப்படி அறிந்துகொள்ளுகிறாய்? இருளுக்கும் வெளிச்சத்துக்குமுரிய பேதம் எப்படி விளங்குகிறது? பட்டப்பகல் வெளிச்சம் வேறு, நட்சத்திர வெளிச்சம் வேறு, மங்கி எரிகிற திரி வெளிச்சம் வேறு என்று எப்படிக் கண்டுகொள்ளுகிறாய்? ஒவ்வொன்றுக்கும் இயற்கையான வித்தியாசம் இல்லையா? உன் பஞ்சேந்திரியங்கள் சரியான ஸ்திதியிலிருக்குமானால் அவ்வித்தியாசத்தைத் தடையின்றி உடனே காணமாட்டாயோ? அவ்வாறே ஆவிக்குரிய இருளுக்கும், ஆவிக்குரிய ஒளிக்கும் இயற்கையாயுள்ள விசேஷித்த வித்தியாசமுண்டு. நீதியின் சூரியன் நமதிருதயத்தில் வீசுவதினாலாகிய வெளிச்சத்துக்கும், நாம் மூட்டின நெருப்புப் பொறிகளிலிருந்துண்டாகும் மங்கின வெளிச்சத்துக்கும் மகாபேதமுண்டு. நம்முடைய ஆவிக்குரிய புலன்கள் கிரமமான ஸ்திதியிலிருக்குமாகில் இவ்விரண்டுக்குமுள்ள பேதத்தை உடனே நேராய்க் கண்டுகொள்ளலாம்.



10. இவைகளை எவ்வாறு பேதப்படுத்தலாம் என்றும், தேவனுடைய சத்தத்தை அறிந்துகொள்ளக்கூடிய அடையாளங்களாவது அத்தாட்சிகளாவது உண்டோவென்றும், நுட்பமாயும் சாஸ்திரவிதமாயும் விவரிக்கவேண்டுமென்று ஒருவன் கேட்பானாகில், அக்கேள்விக்குத் தகுந்த விடை கூறுவது கூடியதல்ல. தேவனைப்பற்றி ஆழ்ந்த அறிவுள்ள ஞானிமுதலாய் இதற்கு உத்தரவு சொல்ல முடியாது. பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு முன்னின்று தனக்கு உத்தரவு சொல்லுகையில், 'நீ தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்பதாகச் சொல்லுகிறாயே, அது அவருடைய சத்தந்தானென்று உனக்கெப்படித் தெரியும்? தேவனுடைய சத்தமென்று என்ன அடையாளத்தினால் கண்டுகொள்கிறாய்? அதை அறிந்துகொள்ளத்தக்க ஏதேனும் விதியுண்டோ? தேவசத்தம், மனுஷசத்தம், தேவதூதர்களின் சத்தமென்று பகுத்தறிந்துகொள்ளும் விதமென்ன? என்று புத்தியுள்ள அந்த ரோம நியாயாதிபதி கேட்டதாக வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட வீண் கேள்விக்கு அப்போஸ்தலன் உத்தரவு சொல்ல எத்தனித்திருப்பானென்று நினைக்கிறாயா? அப்படியிருந்தும் அச்சத்தம் கேட்ட அந்நிமிஷமே அது தேவசத்தம் என்று அப்போஸ்தலன் அறிந்துகொண்டான். ஆகிலும் அதை எப்படி அறிந்துகொண்டானென்று விவரிக்கக்கூடியவன் யார்? மனுஷராலும் முடியாது, தேவதூதராலும் முடியாது.

11. இன்னும் சற்றுத் தெளிவாய்ப் பார்ப்போம். தேவன் ஒரு மனுஷனைப் பார்த்து 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது' என்று சொல்லுகிறதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவன் தமது சத்தத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பம் அவருக்கிருக்கவேண்டும். மற்றப்படி அவர் பேசினதில் உபயோகமென்ன? தேவன் ஒன்றைச் செய்யச் சித்தங்கொள்ளுகிற சமயத்திலேயே அதைச் செய்து முடிக்கிறவராயுமிருப்பதினால் இதையும் செய்யக்கூடியவரே. அப்படியே செய்து முடிக்கிறார். அதினால் அவன் இந்தச் சத்தம் தேவசத்தந்தானென்று பூரண நிச்சயங்கொள்ளுகிறான். என்றாலும் தனக்குள் இந்தச் சாட்சியுள்ள ஒருவன் அதில்லாதவனுக்கு அதை விவரிக்க முடியாது. அதை விவரிக்கத்தான் வேண்டுமென்றும் எதிர் பார்க்

கலாகாது. தேவ காரியங்களை அதில் அனுபவமற்றவர்களுக்கு விவரித்து ரூபிக்கக்கூடிய இயற்கையான உபகரணமாவது முறையாவது இருக்குமாகில் ஜென்ம சுபாவமுள்ள மனிதன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை நிதானித்து அறிந்துகொள்ளுவான். ஆனால் அப்போஸ்தலன் இதற்கு நேர் விரோதமாய் 'அவைகள் ஆவிக்கேற்றபிரகாரம் அறிந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் ஜென்ம சுபாவமான மனுஷன் அவைகளை அறியமாட்டான்' என்று சொல்லியிருக்கிறான். ஆவிக்குரிய புலன்களினாலும் அறியமாட்டான். அவைகள் அவனுக்கு இல்லையே.

12. 'சரிதான், ஆனால் என் உணர்வு யதார்த்த ஸ்திதியிலிருக்கின்றது என்று எனக்கு எப்படித் தெரியும்?' எனச் சிலர் கேட்கலாம். இதுவும் மகா முக்கியமான கேள்வியே. ஏனென்றால் ஒருவன் இதில் தவறிவிட்டால் அவன் அநந்த தப்பறைகளுக்குள்ளும் மோசத்துக்குள்ளும் அகப்படக்கூடியதே. 'அப்படியானால் என்னுடைய நிலைமை அப்படியல்லவென்றும், நான் கேட்கிற சத்தம் ஆவியானவரின் சத்தந்தானென்றும் அறிவதெப்படி' என்று கேட்கிறாயோ? உன் சொந்தஆவியின் சாட்சியினாலும் தேவனைப்பற்றும் உன் நல்மனச் சாட்சியினாலுமே நீ அதை அறிந்துகொள்ளலாம். அவர் உன் ஆவியில் உண்டாக்கியிருக்கும் கனிகளைக்கொண்டு தேவாவியின் சாட்சியைக் கண்டுகொள்வாய். இதினாலேயே நீ உன்னை வஞ்சிக்கப்படவில்லையென்றும் உன் ஆத்துமா மோசத்துக்குள் அகப்படவில்லையென்றும் அறிந்துகொள்வாய். 'அன்பு, சந்தோஷம், சமாதானம், உருக்கமான இரக்கம், மனத்தாழ்மை, சாந்தம், தயவு, நீடிய பொறுமை' யாகிய இவை உன் உள்ளத்தில் ஆளுகைசெய்கிற ஆவியானவரின் உள்ளான கனிகளே. புறம்பான கனிகளோ யாவருக்கும் நன்மை செய்வதும், ஒருவருக்கும் தீமை செய்யாதிருப்பதும், ஒளியில் நடப்பதுமேயாம். அதாவது, தேவனுடைய சகல கற்பனைகளுக்கும் பக்தி வைராக்கியத்துடன் எப்போதும் கீழ்ப்படிவதேயாம்.

13. இக்கனிகளைக் கொண்டுதான் தேவனுடைய சத்தத்திற்கும், பிசாசின் மாய வசனிப்பிற்குமுள்ள வித்தியாசத்தைப் பகுத்தறியலாம். அகங்காரங்கொண்ட பிசாசானவன் நீ உன்னைத் தேவனுக்கு முன்



தாழ்த்தும்படி விடமாட்டான். நீ தேவன்பேரிலுள்ள வாஞ்சையினால் முதலாவது உண்மையாய்த் துக்கப்பட்டு அப்புறம் அவர்பேரில் பிள்ளையடைவான நேசத்தோடு அன்புகூரும்படி உன் இருதயத்தை இளகச்செய்யான். அப்படிச் செய்யவும் அவனால் முடியாது. நீ பிறனைச் சிநேகித்து, சாந்தம், தயவு, பொறுமை, இச்சையடக்கம் முதலிய. தேவனுடைய சகல சர்வாயுதவர்க்கங்களையும் தரித்துக்கொள்ளுவதற்கு தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துருவாயிருக்கிறவனா உனக்கு உதவி செய்யப்போகிறவன்? அவன் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருப்பானா? அல்லது தன் பாவக்கிரியையைத் தானே அழிப்பானா? அப்படிச் செய்யவேமாட்டான். 'பிசாசின் கிரியைகளை அழிக்க' வந்தவர் தேவகுமாரனே யன்றி வேறு யாருமில்லை. பரிசுத்தம் தேவனாலும் பாவம் பிசாசினாலும் உண்டாயிருப்பது எவ்வளவு நிச்சயமோ, உன்னிடத்தில் ஆவிக்குரிய கனிகள் இருந்தால் உன்னிலிருக்கும் சாட்சி பிசாசினால் அல்ல, தேவனால் உண்டாகி யிருக்கிறதென்பதும் அவ்வளவு நிச்சயமே.

14. அப்படியானால் தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று நீ தடையின்றிச் சொல்லலாம். 'நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று' அறியச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. 'அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்க தமது குமாரனின் ஆவியை என் இருதயத்தில் அனுப்பி' இச்சமயத்திலும் நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்று சாட்சி கொடுக்கும்படி செய்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக என்று சொல்லுவாயாக. இப்படி உன் வாய்மாத்திரமல்ல, உன் ஜீவியம் முழுவதுமே அவரை ஸ்தோத்திரிக்கட்டும். உன்னை அவர் தமக்குச் சொந்தமாக முத்திரித்திருக்கிறார். அப்படியானால், தேவனுக்குரியவைகளாகிய உன் சரீரத்தினாலும் ஆவியினாலும் அவரை மகிமைப்படுத்து. பிரியமானவனே, அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற நீ, அவர் சுத்தராயிருக்கிறதுபோல் உன்னையும் சுத்திகரித்துக்கொள். நீ தேவனுடைய பிள்ளையென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் உனக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பார்க்கிறாயே. அதினால் மாம்சத்திலும் ஆத்துமத்திலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க உன்னைச் சுத்திகரித்துக்கொண்டு

பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடு பூரணப்படுத்து. உன் மனோ வாக்குக் காயம் யாவும் கிறிஸ்து இயேசுவின்மூலமாய்ப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஆவியின் பலியாயிருக்கக்கடவது.

### வினாக்கள்.

1. நமது சொந்த ஆவியின் சாட்சி முக்கியமானதென்று உவெஸ்லி ஐயர் எவ்வாறு காண்பிக்கிறார்?

பிரிவு. I. 4. பார்க்க.

2. தேவாவியின் சாட்சியாவதென்ன?

'தேவனுடைய ஆழங்களை' ஞ.

பிரிவு. I. 7. பார்க்க.

3. பரிசுத்தாவியின் சாட்சி நமது சொந்த ஆவியின் சாட்சிக்கு முந்தினதென்று எவ்வாறு ரூபிக்கலாம்?

பிரிவு. I. 8. பார்க்க.

4. தேவனுடைய பிள்ளையாயிருக்கிற ஒருவன் தான் தேவனுடைய புத்திரன்தான் என்பதைத் தனக்குள்ளே நிச்சயப்படுத்திக் கொள்ளுவதெப்படி?

பின்வரும் சித்தாந்தத்தினாலே 'தாழ்மையான சந்தோஷமும் ஞ.

பிரிவு. I. 11. பார்க்க.

5. தெய்வீக சாட்சி நமதிருயத்திற்கு எவ்வாறு வெளிப்படுகிறது?

பிரிவு. I. 12. பார்க்க.

6. உள்ளான இந்த சாட்சி மெய்யானதென்பதை ரூபிக்கும் வேத அடையாளங்கள் எவை?

பிரிவு. II. 3, 4, 5, 6. பார்க்க.

7. பரிசுத்தாவியின் சாட்சியைக்குறித்துச் சாஸ்திரவிதமாய் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்கிற ஒருவனுக்கு என்ன பதில் சொல்லலாம்?

'இவைகளை எவ்வாறு பேதப்படுத்தலாம்' ஞ.

பிரிவு. II. 10. பார்க்க.

# ஏழாம் பிரசங்கம்.

## THE WITNESS OF THE SPIRIT, PART II.

## ஆவியானவரின் சாட்சி. (2-ம் பாகம்.)

'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.'

ரோம. 8: 16.

I. 1. வேதாகமம் தேவனுடைய வசனமென்று விசுவாசிக்கிற எவனும் இச்சத்தியம் மகா விசேஷமானதென்பதை சந்தேகியான். இது தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அபூர்வ சிலாக்கியங்களில் ஒன்றென்பதாக வேதத்தில் ஒருமுறையல்ல பலமுறையும், கருகலாயல்ல தெளிவாயும், தற்செயலாயல்ல சித்தம்கொண்டும் பயபக்தியுடனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

2. இருபக்கங்களிலிருந்து இச்சத்தியத்துக்கு தவறுதல் நேரிடக் கூடியதாயிருக்கிறது. அதினிமித்தம் இதை விவரித்துக் காண்பிப்பதும் இதை நிலைநிறுத்துவதும் மிகவும் அவசியம். எப்படியெனில் இச்சத்தியத்தை மறுதலிப்போமாகில், நம்முடைய பக்தி உள்ளான பக்தியாயிராமல் புறம்பான பக்தியாய்மாத்திரம் மாறிப்போகக் கூடும். அதினால் நாம் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களும், அதின் பெலனை மறுதலியாவிட்டாலும் அதை அசட்டை செய்கிறவர்களுமாயிருக்கக்கூடியது. இச்சத்தியத்தை ஒப்புக்கொண்டும் ஒப்புக்கொண்டதின்னதென்று அறியாதிருப்போமாகில், குருட்மெத வைராக்கியர்போலாவோம். ஆகையால் தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்கள் இவ்விரு தவறுதலுக்கும் விலகிக்கொள்ளும்பொருட்டு இந்த விசேஷித்த சத்தியத்தை வேதத்தைக்கொண்டும் பகுத்தறிவைக்கொண்டும் திருஷ்டாந்தப்படுத்தி நிலைநிறுத்துவது அத்தியந்த அவசியமே.

3. இப்படிச் செய்யவேண்டியது மிகவும் அவசியமெனத் தோன்றுகிறது. ஏனென்றால், இச்சத்தியத்திற்கு விரோதமாய் எழு

தப்பட்டதும் தப்பான அர்த்தத்தைக் கொடுக்கிறதுமான பிரபந்தங்கள் சில உண்டே அன்றி இதைக்குறித்துத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறவைகள் மிகவும் சொற்பம். 'தாங்கள் சொல்லுகிற தின்னதென்றும், [illegible] இல்லையென்றும் 'அறியாத' அநேகர் குருட்டுத்தனமாயும், வேதாதாரமில்லாமலும், புத்திக்கடாதவிதமாயும் எழுதினதே இந்த விரோத பிரபந்தங்கள் உண்டானதற்கு முகாந்தரமென்று சந்தேகமின்றிச் சொல்லலாம்.

4. மெதோடிஸ்டு கிறிஸ்தவர்கள் சர்வ ஜனங்களுக்கும் சாட்சி கூறி அறிவிக்கும்படி தேவன் அவர்கள்வசமாய் ஒப்புவித்திருக்கிற விசேஷித்த சத்தியங்களில் இதுவும் ஒன்றாயிருப்பதினிமித்தம், அவர்கள் இந்த உபதேசத்தை நன்றாய்க் கற்று மற்றவர்களுக்கு விளக்கிக் காண்பித்து நியாயத்துடன் நிலைநிறுத்துவது அவர்களைப் பொறுத்ததே. தேவன் அவர்களுக்குப் பாராட்டின பெரிய கிருபையினால் வெகு வருஷங்களாய் மறைந்திருந்ததும், மறக்கப்பட்டிருந்ததுமான இச் சுவிசேஷ சத்தியத்தை அவர்கள் வேதத்தில் ஆராய்ந்து தேவனுடைய பிள்ளைகளின் அனுபவத்தைக்கொண்டு உறுதியாக்கி வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

II. 1. பரிசுத்தாவியின் சாட்சியாவது என்னவென்று பார்ப்போம். 'சாட்சி' யென்று அர்த்தம்கொள்ளும் கிரேக்கு பதம் சாட்சியிடுகிறவனை அல்ல, அவன் சொல்லும் சாட்சியையே குறிக்கிறது. 1 யோவா. 5: 11-ல் இப்பதத்தைச் 'சாட்சி' யென்றே தமிழில் மொழிபெயர்த்திருக்கிறது. 'தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனிலிருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.' நாம் இப்போது சிந்திக்கும் இந்தச் சாட்சியைக் கொடுக்கிறவர் தேவாவியானவர். அவரே நம்முடைய ஆவிக்கும், நம்முடைய ஆவியுடன் சேர்ந்தும் சாட்சி கொடுக்கிறார். அவர் கொடுக்கிற சாட்சி யென்ன? 'நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்' என்பதே. அந்தச் சாட்சியினாலுண்டாகிற உள்ளான பலன் என்னவென்றால் 'அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம்' என்னும் ஆவியின் கனியே. இந்த ஆவியின் கனியில்லாவிட்டால் சாட்சி நீடித்திராது. எப்படியென்றால், புறம்பான



பாவத்தைச் செய்வதினாலும், செய்யவேண்டிய கடமையைச் செய்யாமல் விடுவதினாலும் மாத்திரமல்ல, எவ்வித உள்ளான பாவத்துக்கும் இடம் கொடுப்பதினாலும் அந்தச் சாட்சி நின்றுபோ[illegible] சுருக்கிச் சொன்னால் தேவனுடைய பரிசுத்த[illegible]கிற எந்தப் பாவத்தினாலும் அந்தச் சாட்சி அற்றுப்போம்.

2. 'தேவனுடைய ஆழங்களை விஸ்தரிக்க மனுஷ பாஷையில் வார்த்தைகள் காண்பதரிது. ஆவியானவர் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் நடப்பிக்கும் கிரியையைத் தகுந்தபிரகாரம் விவரிக்கக்கூடியவன் யாருமில்லை. என்றாலும், சொல்லவேண்டுமானால் நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்றும், இயேசுகிறிஸ்து என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தாரென்றும், என் பாவம் யாவும் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்றும், நான் தேவனோடு ஒப்புரவாயிருக்கிறேன் என்றும், தேவாவியானவர் நேர்நேராய் என் ஆவிக்குத் தெரிவிக்கிறதாக என் ஆத்துமாவில் உண்டாகிற உள்ளான உணர்வே பரிசுத்தாவியின் சாட்சியாம்.' தேவனால் போதிக்கப்பட்ட யாராயினும் இந்த வார்த்தைகளைத் திருத்தலாம். அல்லது சற்றே கூட்டிக் குறைத்துக்கொள்ளலாம். இப்படி நான் எழுதி வெகு காலமாயிற்று.

3. இதை எழுதி இருபது வருஷங்களாயினும் இதில் எதையாவது விட்டுவிடலாமோவென்று பார்த்தால் விட்டுவிடத்தக்க முகாந்தரம் தெரியவில்லை. இதை முன்னிலும் அதிக தெளிவாக்கும்பொருட்டு எதையாகிலும் மாற்றலாமோவென்று பார்த்தால் எதை மாற்றுகிறதென்றும் தெரியவில்லை. ஆனால் தேவனுடைய பிள்ளைகளில் யாராவது இதைப்பார்க்கிலும் அதிக தெளிவும் வேதத்துக் கிசைந்ததுமான வேறு வார்த்தைகளைக் கூட்டக்கூடுமாகில் இவைகளை விட்டுவிடத் தயாராயிருக்கிறேன்.

4. இதுநிற்க, ஒரு காரியம் கவனிக்கவேண்டும். சாட்சியிடுகிறார் என்று சொல்லும்போது தேவாவியானவர் நமது செவி கேட்கத்தக்கவிதமாய்ச் சத்தமிட்டுச் சாட்சி கொடுக்கிறார் என்பது என் கருத்தல்ல. அல்லது, எப்போதும் இருதயத்துக்குக் கேட்கத்தக்கவிதமாய்ச் சொல்லுகிறார் என்பதும் என் கருத்தல்ல. எப்போதும்

வேதவசனங்களை நமதிருதயத்துக்கு எடுத்துக் காண்பித்துச் சாட்சி கொடுக்கிறார் என்பதும் என் அர்த்தமல்ல. அவர் இவ்விதமாய் அடிக்கடி சாட்சியிடுவதும் உண்டு. ஆனால், அவர்தாமே தமது ஏவுதலினாலும் [illegible] கிரியையினாலும், விவரிக்கக் கூடாதவண்ணமாய் ஆத்துமாவில் கிரியை நடப்பிப்பதினாலே, புசல் நின்று கோஷ்டம் அடங்க, அமைதி உண்டாகிறது. பாவியின் இருதயம் இயேசுகிறிஸ்துவின் திருக்கரத்தில் இளைப்பாறுகிறது. தேவன் தன்னோடு ஒப்புரவாகியிருக்கிறதாகவும் 'தன் அக்கிரமங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு தன் பாவங்களெல்லாம் மூடப்பட்டிருக்கிறதாகவும்' பாவி உணர்ந்து திருப்தியாயிருக்கிறான்.

5. அப்படியானால், இவ்விஷயத்தைப்பற்றிய தர்க்கம் என்ன? ஆவியின் சாட்சி உண்டா இல்லையா வென்பதல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோமென்று ஆவியானவர் நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறாரென்பதும் தர்க்கமல்ல. இதை யாரும் மறுக்க முடியாது. மறுக்கிறதுண்டானால் வேதத்தை ஆட்சேபித்துச் சத்தியபரனைப் பொய்யராக்குவதுபோலாகும். ஆகையால் பரிசுத்தாவியின் சாட்சி உண்டென்பது சகல கட்சிக்காரரும் ஒப்புக்கொள்ளுகிறவிஷயமே.

6. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்குக் குறிப்பான சாட்சி உண்டா என்பதும் தர்க்கவிஷயமல்ல. இந்தச் சாட்சியும் 'தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சி' என்பதும் ஏகதேசம் ஒன்றுதான். நம்முடைய ஆத்துமாவில் உண்டாகிற உணர்வு எத்தன்மையதென்று பகுத்தறிவினாலாவது யோசனையினாலாவது அனுமானித்துக் கண்டுகொள்ளுதலே இச்சாட்சியாம். திட்டமாய்ச் சொன்னால், ஒருவாறு வேதவசனத்தைக்கொண்டும், ஒருவாறு நமது சுய அனுபவத்தைக்கொண்டும் நிதானிப்பதே அந்தச் சாட்சி. ஆவியின் கனி உள்ளவன் எவனோ, அவனே தேவனுடைய பிள்ளையென்று வேதம் கூறுகிறது. என் அனுபவத்தினால் அல்லது என் மன உணர்வினால் என்னிடத்தில் ஆவியின் கனி யிருப்பதாக அறிகிறேன். ஆகையால் நான் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்று என்



பகுத்தறிவினால் தீர்மானித்துக்கொள்ளுகிறேன். யாவரும் இதை ஒப்புக்கொள்ளுகிறபடியால் இதைப்பற்றி வாக்குவாதம் இல்லை.

7. ஆவியின் கனியின்றி ஆவியின் மெய்யான சாட்சி யிருக்கக் கூடும் என்று நாம் சாதிக்கிறதில்லை. ஆனால் இதற்கு மாறாக, பரிசுத்தாவியின் சாட்சி வரவே ஆவியின் கனி உண்டாகுமென்று சொல்லுகிறோம். ஆவியின் சாட்சி முதலில் அருளப்படும்போது அது இருக்கிற அதேஅளவாக எக்காலத்திலு மிருக்கிறதில்லை. பின்னுக்கு அதிகமாய்க் குறையலாம். சந்தோஷமும் சமாதானமும் அன்பும் ஆகிய ஆவியின் கனி எக்காலமும் ஒன்றுபோலிராததுபோலவே, இந்தச் சாட்சி எக்காலமும் ஒன்றுபோல் பலமும் தெளிவுமாயிராது.

8. ஆனால் இப்போது தீர்மானிக்கவேண்டியவிஷயம் ஆவியானவர் நேர் நேராய்ச் சாட்சி கொடுக்கிறாரா என்பதுதான். ஆவியின் கனியைக்கொண்டு அநுமானித்து பகுத்தறிவினால் அறிந்து கொள்ளும் சாட்சியைத்தவிர ஆவியானவர் கொடுக்கும் வேறுவிதமான சாட்சி யில்லையா?

III. 1. நேரான சாட்சி உண்டென்பதே என் விசுவாசம். ஏனெனில் 'நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே, நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்' என்னும் வாக்கியத்துக்கு நாம் இயற்கையாய்ச் சொல்லக்கூடிய சாதாரண கருத்து இதுவே. ஓரே விஷயத்தைக்குறித்துச் சேர்ந்து சாட்சியிடுகிற இரு சாட்சிகள் இருப்பதாக இவ்வசனத்தில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. பரிசுத்தாவி ஒன்று, நமதாவி ஒன்று. காலஞ்சென்ற லண்டன் நகர அத்தியட்சர், இவ்வசனத்தின்பேரில் பிரசங்கம் செய்தபோது, துலாம்பரமாயிருக்கிற இவ்விஷயத்தைக் குறித்துச் சந்தேகிப்பவரும் உண்டோவென ஆச்சரியப்பட்டார். 'நம்முடைய ஆவியின் சாட்சி என்றால் நமது உண்மையைக்குறித்து நமது மனம் சொல்லும் சாட்சியே' என்று அந்த அத்தியட்சர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதைச் சற்று விபரமாய்ச் சொன்னால் நம்முடைய ஆவியின் சாட்சி யென்பது ஆவியின் கனி நம்மிடமிருப்பதாக நமது மனம் சொல்லுகிற சாட்சிதான். நம்மிடத்தில் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்கு

ணம் முதலிய ஆவியின் கனியிருப்பதாக நமதாவிக்குத் தெரியும்போது 'நாம் தேவனுடைய பிள்ளைகள்தான் என்று எளிதில் அநுமானித்துக்கொள்ளலாம்.

2. 'நமது நற்கிரியைகளைக்குறித்து நமது மனம் கொடுக்கும் சாட்சியே' மற்றச் சாட்சி யென்று இந்தச் சிறந்த அத்தியட்சர் எண்ணுகிறார். இதைத்தான் தேவாவியின் சாட்சி யென்று அவர் சாதிக்கிறார். ஆனால் பதத்தின் சாதாரண கருத்தின்படி 'நமது ஆவியின் சாட்சி' என்பதற்குள் இது உண்மையாய் அடங்கியிருக்கிறதென்று சொல்லலாம். 'நாங்கள் உலகத்தில் கபடமில்லாமல் திவ்ய உண்மையோடே நடந்தோமென்று எங்கள் மனது எங்களுக்குச் சொல்லும் சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது' என்று பவுல் சொல்லியிருக்கிறான். இவ்விடத்தில் 'உண்மை' யென்பது எப்படி நமக்குள்ளான குணங்களைக் குறிக்கிறதோ, அப்படியே நமது வார்த்தைகள் கிரியைகளையும் குறிக்கிறது. ஆகையால் இது பிரத்தியேகமான சாட்சியல்ல. அத்தியட்சர் முதல் சொன்ன சாட்சியும் இதுவும் ஒன்றே. எப்படியென்றால், நமது நற்கிரியைகளைக்குறித்து நமது மனஞ்சொல்லும் சாட்சியானது நாம் உண்மையோடே நடந்தோமென்று நமது மனம் சொல்லும் சாட்சியின் ஓர் பாகமே. அதாவது, அது இதற்குள் அடங்கினதே. ஆகையால் இது வேறு அது வேறு என்றாகாமல் இரண்டும் ஒன்றே என்றாகிறது. அப்படியிருக்க வசனத்தில் இரண்டு சாட்சிகள் உண்டென்று சொல்லியிருக்குமாகில், அவைகளில் ஒன்று நமது நற்கிரியைகளைப் பற்றியாவது உண்மையைப் பற்றியாவது நமது மனஞ்சொல்லும் சாட்சியைக் குறிக்காது. ஏனென்றால் இவை யாவும் நம்முடைய ஆவியின் சாட்சிக்கு உட்பட்டதென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது.

3. அப்படியானால் மற்றச் சாட்சி ஏது? பிரசங்கவாக்கியம் தெளிவாயிராவிட்டால் அதற்கு முந்தின வாக்கியத்தைக்கொண்டு இந்த சாட்சி எதுவென எளிதில் அறிந்துகொள்ளலாம். 'நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்' என்றும், அடுத்த வசனத்தில் 'நாம் தேவனுடைய பிள்ளைகளா யிருக்



கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்' என்றும் சொல்லியிருக்கிறது.

4. இதற்குச் சம்பந்தமான வேறொரு வசனத்தைக்கொண்டு இதை விவரமாய் அறிந்துகொள்ளலாம். 'நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே, என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்' (கலா. 4: 6.). இந்தச் சாட்சியைப் பகுத்தறிவினாலாவது நியாயங்களினாலாவது அனுமானித்துக்கொள்ளாமல் நேர் நேராய் தக்ஷணமே அறிந்துகொள்ளுகிறோமல்லவா? நமது உண்மையைக்குறித்துச் சிந்தனைசெய்து நியாயங்களினால் தீர்மானிப்பதற்குமுன், ஆவியானவர் நமக்கருளப்பட்ட அக்ஷணமே, அவர் நமதிருதயத்தில் 'அப்பா, பிதாவே' என்று உரைக்கிறதில்லையா? இவ்வசனங்களைக் கேட்டவுடன் ஒரு மனுஷனுக்கு இயல்பாய் மனதில் படத்தக்க சாதாரண கருத்து இதல்லவோ? ஆகவே, இவ்வசனங்கள் யாவையும் சாதாரண கருத்தின்படி அர்த்தப்படுத்தினால் ஆவியானவரின் நேரான சாட்சி உண்டென்றே காணலாம்.

5. இவ்விரு சாட்சிகளில், காரியத்தின் இயற்கைப்படி பரிசுத்தாவியின் சாட்சியே நம்முடைய ஆவியின் சாட்சிக்கு முந்தினதாயிருக்கவேண்டு மென்பதற்கு ஒரு நியாயமுண்டு. நாம் இருதயத்திலும் ஜீவியத்திலும் பரிசுத்தரா யிருந்தாலன்றி நாம் பரிசுத்தரென்று மன உணர்வினால் அறிந்துகொள்ள முடியாது. தேவனிடத்தில் அன்புகூர்ந்தாலன்றி நாம் பரிசுத்தரல்ல. ஏனென்றால், அவரில் அன்புகூர்வதே சகல பரிசுத்தத்துக்கும் காரணமாயிருக்கிறது. தேவன் நம்மேல் அன்பாயிருக்கிறார் என்றறியும்வரையில் நாம் அவரில் அன்புகூர முடியாது. 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்' என்று சொல்லியிருக்கிறது. ஆனால், அவருடைய ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே சாட்சி கொடுக்கிறவரையில் அவர் நமக்குப் பாராட்டின அன்பை அறிந்துகொள்ள முடியாது. அதுவரையில் அவருடைய அன்பை நாம் நம்பவும் முடியாது. அதுமட்டும், 'நான் இப்பொழுது பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்

தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினால் பிழைத்திருக்கிறேன்' என்று சொல்ல முடியாது.

'திரு ரத்தம் ரட்சகர்
எனக்காகச் சிந்தினர்,
என்றுணர்ந்தபோது தான்
நீர் என் தேவன் என்பேன் நான்.'

ஆகவே, நாம் தேவனிடத்தில் அன்புகூர்வதற்கும் பரிசுத்தராவதற்குமுன் அவருடைய ஆவியானவர் சாட்சி கொடுக்கவேண்டியிருப்பதால் நம்மிடத்தில் இவைகள் உண்டென்கிற உணர்வுக்கு, அதாவது நமதாவியின் சாட்சிக்குப் பரிசுத்தாவியின் சாட்சி முந்தினதாகவே யிருக்கவேண்டியது.

6. இந்த வேதோபதேசத்தை தேவனுடைய பிள்ளைகளின் அனுபவம் உறுதிப்படுத்துகிறது. இது இரண்டொருவருடைய அனுபவமல்ல, சிலருடைய அநுபோகமுமல்ல, ஒருவரும் எண்ணக்கூடாத திரளான விசுவாசிகளின் அனுபவம். இக்காலத்திலும் எக்காலத்திலுமுள்ள மேகம்போன்ற திரளான சாட்சிகள் தங்கள் ஜீவகாலத்திலும் மரணகாலத்திலும் இதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். உன் அனுபவமும் என் அனுபவமும் அதை ஸ்திரப்படுத்துகிறது. நான் தேவனுடைய பிள்ளையென்று ஆவியானவர் என் ஆவிக்குச் சாட்சியிட்டு அதைப்பற்றி எனக்கு அத்தாட்சியும் கொடுத்தார். உடனே நான் 'அப்பா, பிதாவே' என்று கூப்பிட்டேன். ஆவியின் கனி என்னிடமுண்டென்று நான் யோசித்து அறிந்து சொல்லுமுன்னமே நான் இப்படிக் கூப்பிட்டேன். நீயும் அப்படியே கூப்பிட்டாயல்லவா? இந்தச் சாட்சி யுண்டாகவே, அன்பு, சந்தோஷம், சமாதானம் முதலிய ஆவியின் கனி யாவும் எனக்குள் உண்டாயின.

'மன்னித்தேன் உன் பாவத்தை
ஏற்றுக்கொண்டேன் உந்தனை
என்று மீட்பர் சொல்லவே,
மோட்சம் என்னில் தோன்றிற்றே.'



7. தேவனுடைய பிள்ளைகளின் அனுபவம் மாத்திரமா இச்சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது? அவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள், தேவாவியானவர் இதைக்குறித்து அவர்களுக்கு நேர் நேராய்ச் சாட்சி கொடுக்கும்வரையில் நாங்கள் தேவதயவைப் பெற்றவர்கள் என்றறியாதிருந்தோம் எனச் சொல்லக்கூடும். ஆயினும் தேவனுடைய பிள்ளைகள் மாத்திரமல்ல, பாவத்தை உணர்ந்து தேவகோபம் தங்கள் தலையின்மேல் நிற்பதாக உணருகிற யாவரும் இந்த உபதேசத்தை உறுதிப்படுத்துகிறார்கள். தேவன் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் நினைக்கவில்லை என்று ஆவியானவர் நேராக அவர்களுக்குச் சாட்சி கொடுத்தாலன்றி இவர்கள் திருப்தியடையார்கள். இவர்களில் ஒருவனை நோக்கி, 'தேவன் உன்னிடத்தில் உண்டுபண்ணியிருக்கிற மாறுதலையும், உன்னிலுள்ள அன்பு, சந்தோஷம், சமாதானத்தையும் பார்த்து, நீ உன்னைத் தேவனுடைய பிள்ளையென்று அறிந்துகொள்ளலாம்' என்று சொல்லுவோமாகில், அவன் என்ன சொல்லுவான்? 'இவை யாவற்றினாலும் நான் பிசாசின் பிள்ளையென்றே எனக்குத் தெரிகிறது. பிசாசுக்குத் தேவன்பேரில் அன்பில்லாததுபோலவே எனக்கும் அவர்பேரில் அன்பில்லை, என் மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது, பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷம் என்னிலில்லை, என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது, எனக்கு ஆறுதலேயில்லை, என் இருதயம் கொந்தளிக்கிற கடலுக்கொப்பாயிருக்கிறது, என் உள்ளம் குழம்பிக் கலங்குகிறது' என்றே சொல்லுவான். இவ்வித துயரங்கொண்ட ஆத்துமாக்களைப் பார்த்து, நீங்கள் நல்லவர்கள், உத்தமர், இருதயத்திலும் ஜீவியத்திலும் வேதத்துக்கு இசைந்து நடக்கிறவர்கள் என்று சொன்னால் ஆறுதலடைவார்களோ? அடையார்கள்; ஆனால் அதற்குப் பதிலாக, தேவன் பாவியை நீதிமானாக்குகிறார் என்கிற தெய்வீக சாட்சி அவர்களுக்கு ஆறுதல் உண்டுபண்ணும். மனிதன் தான் நீதிமானாக்கப்படும் நிமிஷம்வரையில் அவன் பாவியும் மெய்யான பரிசுத்தமற்றவனுமாய் இருக்கிறான். 'தான் செய்த நீதியின் கிரியைகளினிமித்தமல்ல,' தேவனுடைய கைம்மாறில்லாத இரக்கத்தினிமித்தமும் தேவகுமாரன் தனக்காகப் பாடுபட்டுத்தரித்ததினிமித்தமும்

மாத்திரம் தேவன் தன்னை அங்கீகரித்திருக்கிறார் என்று அவன் உணரும்வரையில் அவன் கிரியை செய்யாதவனும் யாதொரு நற்செய்கையற்றவனுமாய் இருக்கிறான். ஒருவன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறானாகில் தேவனுடைய இரக்கத்தினாலன்றி வேறெதினால் அவன் நீதிமானாக்கப்படக்கூடியது? அப்படியே வேறெதினாலாவது நீதிமானாக்கப்படுகிறதாக வைத்துக்கொண்டாலும், தான் நீதிமானாக்கப்படுமுன் உள்ளான புறம்பான நன்மை தன்னிடமிருப்பதாகக் காண்கிறானா? 'கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு இலவசமாய் நீதிமான்களாக்கப்படுவதற்குமுன்,' கடனைச் செலுத்த நிர்வாகமில்லை, அதாவது, நம்மில் நன்மை 'வாசமாயிருக்கவில்லை' என்றும், உள்ளான புறம்பான நற்காரியம் நம்மிலில்லை என்றும் உணருகிற உணர்வல்லவோ அத்தியந்த அவசியம்?

'ஆக்கினைக்கே நான் பாத்திரன்
புகலொன்று மற்றவன்
ஆயினும் எனக்காகவே
நீர் மரித்தீர் யேசுவே'

என்று உணருகிற உணர்வு வருமுன் நீதிமானாக்கப்பட்ட மனுஷன் உலகந் தோன்றினதுமுதல் உண்டோ? எவனாகிலும் நீதிமானாக்கப்படுவதும் கூடுமோ?

8. ஆதலால் இவ்வித சாட்சியில்லையென மறுக்கிற எவனும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்கிற உபதேசத்தை மறுக்கிறான். இதை மறுக்கிறவனுக்கு இந்த அனுபவம் ஒருபோதும் உண்டாகவில்லை, அல்லது அவன் ஒருபோதும் நீதிமானாக்கப்பட்டதில்லையென்று தோன்றுகிறது; அல்லது பரி. பேதுரு சொல்லுகிறதுபோல 'முன்செய்த பாவங்களற தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்துபோனான்' என்று தோன்றுகிறது. அப்பொழுது தனக்கிருந்த அனுபவமும், தன் முந்தின பாவங்கள் நீக்கப்பட்டபோது தேவன் ஆத்துமாவில் கிரியைசெய்த முறையும், இப்போது அவனுக்கு ஞாபகமில்லையென்றே சொல்லவேண்டும்.



9. மேலும், இவ்விஷயத்தில் உலகமக்களின் அனுபவமும் தேவனுடைய பிள்ளைகளின் அனுபவத்தை உறுதிப்படுத்துகிறது. எப்படியெனில், இவர்களில் அநேகர் தேவனைப் பிரியப்படுத்த வாஞ்சிக்கிறார்கள். சிலர் அவரைப் பிரியப்படுத்தும்படி அரும்பிரயாசமும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆயினும் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்றறிவேன் என்று சொல்லுவதைப்போல் மதியீனமுண்டோவென இவர்கள் யாவரும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். என் பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறதென்று இவர்களுக்குள் துணிந்து சொல்லக்கூடியவன் எவனாவது உண்டா? அப்படியிருந்தும் அவர்களில் அநேகர் தாங்கள் உண்மையாய் நடக்கிறோமென்றறிந்திருக்கிறார்கள். அவர்களுடைய உண்மையைக்குறித்து அவர்களுடைய ஆவி ஒருவாறு சாட்சியிடுவதும் மெய்யே. ஆயினும், இதினால் அவர்கள் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறதென்றாவது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்களென்றாவது, அவர்களுடைய மனம் சொல்லுகிறதில்லை. இதைப்பற்றிய நிச்சயமில்லாததினால் எவ்வளவுக்கு உண்மையையுடையவர்களாயிருக்கிறார்களோ அவ்வளவுக்கு ஆறுதலற்றவர்களாயுமிருக்கிறார்கள். ஆதலால், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று தேவன் தாமே நமக்கு நேர் நேராகச் சாட்சியிடாவிடில் நமது சொந்தஆவியின் சாட்சியினால் இதைத் திருப்திகரமாய் அறிந்துகொள்ள முடியாதென்று இதினால் கண்டுகொள்ளுகிறோம்.

IV. ஆனால் இவ்வுபதேசத்திற்கு விரோதமாய்ச் சொல்லும் ஆக்ஷேபனைகள் ஏராளம். அவைகளில் முக்கியமானவைகளை ஆராய்ந்து பார்ப்பது தகுதி.

1. முதல் ஆக்ஷேபனை.—'வேதாதாரமற்ற உபதேசத்தை ரூபிக்கிறதற்கு அனுபவம்மாத்திரம் போதுமானதல்ல.'

நிராகரம்.—இது மெய்யே, இது ஒரு முக்கியமான சத்தியந்தான். ஆனால் நமது விவகாரத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இவ்வுபதேசத்திற்கு வேதாதாரம் உண்டென்று முந்தியே காண்பித்திருக்கிறோம். ஆகையால் இதை உறுதிப்படுத்தும்பொருட்டே அனுபவத்தைத் துணை நியாயமாக எடுத்துரைத்திருக்கிறோம்.

2. ஆக்ஷேபனை. — ஆனால், பைத்தியக்காரரும், கள்ளத் தீர்க்கதரிசிகளும், பற்பல மதவைராக்கியர் யாவரும், தங்களுக்கும் இந்தச் சாட்சி யுண்டென எண்ணிக்கொள்ளவில்லையா?

**நிராகரம்.**—எண்ணினதுண்டு; அவர்களில் அநேகருக்கு இச் சாட்சி இருந்திருக்கவும் கூடும்; ஆயினும், அது அவர்களிடத்தில் நிலைத்திராதபடியினாலே மற்றவர்கள் அந்தச் சாட்சியைப் பெற்றுக்கொள்ளவில்லை யென்று சொல்லலாமா? பைத்தியக்காரன் தன்னை ராஜாவென் றெண்ணிக்கொள்ளுவதினால் மெய்யான ராஜாக்களே யில்லையென வாதிக்கலாமா?

**ஆக்ஷேபனை.**—இக்கொள்கையை ஒப்புக்கொண்டு தர்க்கம் செய்கிற அநேகர் வேதத்தைப்பற்றிக் குறைவாய்ப் பேசுகிறார்கள்.

**நிராகரம்.**—பேசினாலும் பேசுவார்கள். இதினால் வேதம் குறைவானதென்கலாமா? ஏனென்றால், இச்சாட்சியை ஒப்புக்கொள்ளுகிற ஆயிரக்கணக்கானவர்கள் வேதாகமத்தை மதித்துவருகிறார்கள்.

**ஆக்ஷேபனை.**—அநேகர், இதினால் தங்களை வஞ்சித்துக்கொண்டார்கள். என்ன சொன்னாலும் அவர்கள் மனதுக்குப் படுகிறதேயில்லை.

**நிராகரம்.**—மனிதர் தங்களுக்குக் கேடு உண்டாகத்தக்கவிதமாய் வேதோபதேசத்தைத் தப்பாய் உபயோகிப்பதினால் அந்த உபதேசத்துக்குப் பங்கம் உண்டாகுமா?

3. ஆக்ஷேபனை.—ஆவியின் கனிதான் பரிசுத்தாவியின் சாட்சி என்பது எவரும் சந்தேகிக்கக்கூடாத சத்தியம். இந்தக் கனியின் சாட்சி போதுமானதாயிருந்தால் நேரான சாட்சி அவசியமா?

**நிராகரம்.** — 'சந்தேகிக்கக் கூடாத' என்று சொல்லப்படாது. ஏனென்றால், ஆவியின் சாட்சியே போதுமானது என்பதைப்பற்றிச் சந்தேகிப்பதோடு, 'அப்படி அல்ல' வென்று மறுக்கிறவர்களும் அநந்தம். பின்வரும் இரண்டு சமயங்களில்தவிர, மற்றச் சமயங்களில் கனியின் சாட்சி போதுமானதாயிருக்கலாம் என்று சொல்லலாம். அந்த இரண்டு சமயங்களில் நேரான சாட்சி இருக்கவேண்டும். 1-வது. இரட்சிப்பு அடைகிற ஆரம்பகாலம் ஆவியின் கனி முற்றிலுமில்லாத சமயம். அப்போதே ஆவியின் கனி இராது. ஆதலால்,



புதிதாய் இரட்சிக்கப்பட்டவனுக்குக் கனியின் சாட்சி அல்ல, நேர் சாட்சி அவசியம். 2-வது. ஆவியின் கனி இருந்தும் அதை அறியாதிருக்கும் சமயம். ஒருவனிடத்தில் ஆவியின் கனி இருந்தும் அவன் அதை அறியாதிருக்கலாம். ஆம், ஒருவன் தனக்கிருக்கிற தேவதயவை அறியாமல் இருக்கலாம் என்பதுபோல அவன் சில சமயங்களில் கனியின் சாட்சியை அறியாமல் இருக்கலாம். அப்பொழுது அவன் பரிசுத்தாவியின் நேரான சாட்சியினாலன்றி வேறெவ்விதத்தினாலாவது தான் தேவதயவைப் பெற்றிருக்கிறவன் என்று அறியலாமா? பரிசுத்தாவியின் நேரான சாட்சி கொடுக்கப்பட்ட நோக்கமும் இதுவே. குறிப்பான சாட்சி மறைந்திருக்கையிலுங்கூட நேரான சாட்சி பிரத்தியட்சமாய் இருக்கவேண்டுமென்றே நாம் உறுதியாய் நம்புகிறோம்.

4. ஆக்ஷேபனை. — நாம் செய்கிற அறிக்கை உண்மையானதென்று ரூபிப்பதுதானே இந்த நேரான சாட்சியின் நோக்கம். ஆனால் இந்தச் சாட்சி அதை ருசுப்படுத்துகிறதில்லையே.

**நிராகரம்.** — இதை ருசுப்படுத்துவது இச்சாட்சியின் நோக்கமன்று. இந்த நேர் சாட்சி கிடைக்குமுன் ஏதேனும் அறிக்கை செய்தோமாகில் அது நாம் சீர்கெட்டவர்களும் குற்றவாளிகளும் புகலற்றவர்களுமாய் இருக்கிறோம் என்பதேயன்றி வேறல்ல. இந்த நேரான சாட்சி அந்த அறிக்கைக்குப் பிந்தினதேயன்றி முந்தினதன்று. இந்தச் சாட்சி எவர்களுக்குக் கிடைக்குமோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றும், இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்களென்றும் அவர்களுக்கு நிச்சயப்படுத்துவதுதான் இதின் நோக்கம். இதினால் அவர்களுடைய முந்தின மனோவாக்குக் கிரியைகள் வேதப்பிரமாணத்துக்கு இசைந்திருந்ததென்று நாம் உத்தேசிக்கலாகாது. அதற்கு மாறாக, அவர்கள் தங்கள் இருதயத்திலும் ஜீவியம் முழுவதிலும் பாவஞ் செய்திருக்கிறார்கள் என்றே எண்ணவேண்டியது. மற்றப்படி தேவன் நீதியுள்ளவர்களையே நீதிமான்களாக்குகிறார் என்றும், அவரவர் சொந்தக் கிரியையையே அவரவருக்கு நீதியாக எண்ணுகிறார் என்றும் சொல்லவேண்டிய

தாகும். நமது கிரியைகளினால் இரட்சிக்கப்படலாம் என்கிற எண்ணந்தான் இவ்வாக்ஷேபனைகளுக்கெல்லாம் காரணமென் நினைக்கிறேன். ஏனென்றால், நீதிமான்களாக்கப்படுகிற யாவரையும் கிரியைகளில்லாமலே தேவன் நீதிமான்களாக எண்ணுகிறார் என்று உண்மையாய் விசுவாசிக்கிறவன் எவனோ அவன், ஆவியின் சாட்சி ஆவியின் கனிக்கு முந்தினதென்பதை எளிதில் ஒப்புக்கொள்ளுவான்.

5. **ஆக்ஷேபனை.**—'பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தாவியைக் கொடுப்பார்' என்று ஒரு சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறது. வேறொரு சுவிசேஷத்தில் இந்த ஈவு 'நன்மையானவைகள்' என்று சொல்லியிருக்கிறது. இதினால் நன்மையானவைகளைக் கொடுப்பதே ஆவியானவர் சாட்சி கொடுக்கும் முறை என்று திட்டமாய் ரூபகாரமாகிறதல்லவா?

**நிராகரம்.** — இந்த வசனத்திலாவது அந்த வசனத்திலாவது **சாட்சி கொடுப்பதைப்பற்றி யாதேனும் சொல்லப்படவில்லை.** ஆதலால் இதைச் சரிவர ரூபிக்கும்வரையில் இதைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடுகிறேன்.

6. **ஆக்ஷேபனை.**—'மரமானது அதின் கனியினால் அறியப்படும். எல்லாவற்றையும் சோதித்துப் பாருங்கள். ஆவிகளைச் சோதித்தறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்' என்று வேதம் சொல்லுகிறதல்லவா?

**நிராகரம்.** — இதெல்லாம் மெய்யே. ஆகையால் தனக்குள் அந்தச் சாட்சி உண்டென்று விசுவாசிக்கிற எவனும் அது தேவனால் உண்டானதோவென விசாரிக்கக்கடவன். சாட்சியோடு கனியுமிருக்குமாகில் அது தேவனாலுண்டானதுதான், மற்றப்படி அது தேவனாலுண்டானதல்ல. 'மரமானது அதின் கனியினால் அறியப்படும்' என்று சொல்லியிருக்கிறபிரகாரம் அந்தச் சாட்சி 'தேவனாலுண்டானதோ' வென **சோதித்தறியலாம்.**

**ஆக்ஷேபனை.**—நேரான சாட்சியைப்பற்றி வேதத்தில் யாதேனும் குறிப்பில்லையே.



**நிராகரம்.** — வேதத்தில் இதைப் பிரத்தியேகமான சாட்சியாகச் சொல்லாவிட்டாலும் அது மற்றச் சாட்சியோடு சம்பந்தப்பட்டதாயும், **சேர்ந்து சாட்சியிடுகிறதாயும், நம்முடைய ஆவியுடனே கூட** சாட்சியிடுகிறதாயும் சொல்லியிருக்கிறது. **2** கொரி. **13: 5**-ல் 'நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்று உங்களை நீங்களே அறியீர்களா?' என்று வாசிக்கிறோம். **மேலே சொன்ன கருத்துடன்** நேரான சாட்சியைப்பற்றி **இவ்வசனத்தில்** சொல்லவில்லை யென்று யார் ரூபிக்கக்கூடும்? **நேரான சாட்சியைக்**கொண்டும் **குறிப்பான சாட்சியைக்**கொண்டும் அவர்கள் இதை யறியவில்லை யென்று எப்படிச் சொல்லலாம்? அவர்கள் இதை முதலாவது உள்ளான மன உணர்வினாலும், பிறகு அன்பு, சந்தோஷம், சமாதானம் முதலிய ஆவியின் கனியினாலும் அறிந்துகொள்ளவில்லை யென்று ரூபிக்கக் கூடுமா?

7. **ஆக்ஷேபனை.** ஆனால் உள்ளான மாறுதலினாலும், புறம்பான மாறுதலினாலும் உண்டாகும் சாட்சியைக்குறித்து வேதத்தில் பல முறையும் சொல்லியிருக்கிறதே.

**நிராகரம்.** — சொல்லியிருக்கிறது மெய்தான். ஆவியானவர் கொடுக்கும் சாட்சியை **உறுதிப்படுத்தும்**பொருட்டு இந்த மாறுதலினால் உண்டாகும் சாட்சியை ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறதுண்டு.

**ஆக்ஷேபனை.** — **தேவாவியின்** கிரியைகளையும் நமது மனோபாவனையையும் பேதப்படுத்துகிறதாக இதுவரை எடுத்துரைத்த அடையாளங்களெல்லாம் நமக்குள்ளேயும் நமக்குப் புறம்பேயும் நடந்திருக்கிற மாறுதலைக் குறிக்கிறவைகளே.

**நிராகரம்.**—இதுவும் வாஸ்தவமென்பதற்குச் சந்தேகமில்லை.

8. **ஆக்ஷேபனை.**—பரிசுத்தாவியின் நேரான சாட்சியானது நாம் வஞ்சிக்கப்பட்டு ஏமாந்து போகாதபடி நம்மைத் தற்காக்கிறதில்லை. அப்படிப் பெலனற்ற சாட்சி நம்பத்தக்கதா? தான் சொல்லுவதை ரூபிக்க வேறு ஆதாரம் தேடுகிற சாட்சியை நாம் நம்பலாமா?

**நிராகரம்.** — நாம் எவ்வித மோசத்துக்கும் விலகிக்கொள்ளும் பொருட்டு தேவன் இருவித சாட்சிகளினால் நம்மை அவருடைய பிள்ளைகளென்று காட்டுகிறார். இந்த இரண்டு சாட்சிகளும் இவ்விஷயத்தைக்குறித்து ஒன்றுசேர்ந்து சாட்சியிடுகின்றன. ஆகையால் 'தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.' அவைகள் சேர்ந்திருக்குமாகில் நாம் மோசம் போகமாட்டோம். அவைகளின் சாட்சியை நாம் நம்பலாம். இச்சாட்சிகள் நம்பப்படத்தக்கதா யிருப்பதினிமித்தம் அவைகள் சொல்லுவதை ரூபிக்க வேறொன்றும் அவசியமேயில்லை.

ஆக்ஷேபனை. — இந்த நேரான சாட்சி சொல்லுகிறதேயன்றி எதையும் ரூபிக்கிறதில்லை.

**நிராகரம்.**—சகல காரியங்களும் இரண்டு சாட்சிகளின் வாக்கினால் நிலைவரப்படும். தேவனுடைய நோக்கப்படி தேவாவியானவர் நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கையில் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று சந்தேகமின்றி ரூபகாரமாகிறது.

9. ஆக்ஷேபனை.—இரட்சகருக்குச் சிலுவையில் நேரிட்ட சோதனையைப் போலொத்த கொடிய சோதனையான காலங்களிலன்றி, மற்றப்படி நம்மிலுண்டாயிருக்கும் இரட்சிப்பின் மாறுதலே போதுமான சாட்சியென ஒத்துக்கொள்ளுகிறீர். ஆனால் நம்மில் யாருக்காவது இவ்வளவு கொடிய சோதனை நேரிடக் கூடியதல்லவே. ஆதலால் இந்த நேரான சாட்சி வேண்டியதில்லை.

**நிராகரம்.** — உனக்கும் எனக்கும், தேவனுடைய மற்றப் பிள்ளைகளில் யாருக்கும் இவ்வித சோதனை உண்டாகக்கூடியதே. அக்காலத்தில் பரிசுத்தாவியின் நேரான சாட்சி யில்லாமல் நாம் தேவன்மேல் பிள்ளையடைவான நம்பிக்கையுள்ளவர்களா யிருக்க முடியாது.

10. கடைசி ஆக்ஷேபனை.—'இந்த நேரான சாட்சிக்காக அதிக போராட்டமாய் வழக்காடுகிறவர்கள் மகா பெருமையுள்ளவர்களும் நற்குணமற்றவர்களுமா யிருக்கிறார்கள்.'

**நிராகரம்.** — இதற்காக **மூர்க்கமாய்** வழக்காடுகிறவர்களிற் சிலர் பெருமையும் அகந்தையுமுள்ளவர்களா யிருக்கலாம். ஆனால் இதற்காக **ஸ்திரமாய்** வழக்காடுகிறவர்களில் அநேகர் சாந்தமும் மனத்தாழ்மையு முள்ளவர்களா யிருக்கிறார்கள். மற்ற எல்லா விஷயங்களிலுங்கூட அவர்களைக்குறித்து 'ஆட்டுக்குட்டிபோன்ற நம் ஆண்டவரின் மெய்த்தொண்டர்' என்று சொல்லத்தக்கது.



எனக்குத் தெரிந்த ஆக்ஷேபனைகளுக்குள் இம்மட்டும் சிந்தித்தவைகளே மகா முக்கியமானவை. இவைகள்தான் பலமானவை என்றெண்ணுகிறேன். என்றாலும் சாவதானமாய் பாரபட்சமின்றி இவ்வாக்ஷேபனைகளையும் மாறுத்தரங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறவன், நாம் தேவனுடைய பிள்ளைகளென்று தேவாவியானவர் **நேராயும் குறிப்பாயும்** சாட்சி கொடுக்கிறார் என்கிற பெரிய சத்தியத்தின் நிச்சயத்தை இவ்வாக்ஷேபனைகள் அழிக்கிறதுமில்லை, குறைக்கிறதுமில்லை யென்று எளிதில் கண்டுகொள்ளுவான்.

V. 1. இம்மட்டும் சொன்னவைகளின் தொகுப்பு: தாங்கள் தேவனுடைய பிள்ளைகளென்று தேவாவியானவர் தங்கள் ஆவிக்குச் சாட்சி கொடுக்கிறார் என்பதாக விசுவாசிகளின் ஆத்துமாவில் உண்டாகும் உள்ளான உணர்வே பரிசுத்தாவியின் சாட்சியாம். பரிசுத்தாவியின் சாட்சியுண்டோ வென்பது கேள்வியல்ல. ஆனால் பரிசுத்தாவி **நேர்நேராய்ச்** சாட்சி கொடுக்கிறாரா என்பதும், ஆவியின் கனியைக்கொண்டு அநுமானித்தறிகிற சாட்சியைத்தவிர வேறு சாட்சியில்லையா வென்பதும்தான் கேள்வி. ஆவியானவர் கொடுக்கும் நேரான சாட்சி உண்டென்பதே நமது விசுவாசம். ஏனென்றால் பிரசங்க வாக்கியத்துக்குரிய சாதாரண கருத்து இதுவே. இதற்கு முந்தின வசனங்களும், கலாத்தியர் நிருபத்தில் இதற்குச் சம்பந்தமான வசனங்களும் இதைத் தெளிவாய்க் காண்பிக்கின்றன. மேலும், காரியத்தின் இயற்கைப்பிரகாரம் ஆவியின் சாட்சி வந்தபின்தான் கனியுண்டாக்கூடும். இந்த வேதவசனத்தின் கருத்தை எண்ணிறந்த தேவனுடைய பிள்ளைகளின் அனுபவம் உறுதியாக்குகிறது. பாவ உணர்வடைந்தவரின் அனுபவமும் இதற்கு ஒத்திருக்கிறது. எப்படியென்றால் பரிசுத்தாவியின் நேரான சாட்சியைப் பெற்றுக் கொள்ளும்வரையில் அவர்கள் மனதிற்கு ஆறுதலே யில்லை. உலக மக்களின் அனுபவம்கூட இந்தச் சாட்சியை உறுதிப்படுத்துகிறது. அவர்களுக்கு இந்தச் சாட்சியில்லாததினால் ஒருவனும் தன் பாவம்

மன்னிக்கப்பட்டதை அறிந்துகொள்ள முடியாது என்று அவர்கள் எல்லாரும் ஒன்றுபோல் சாதிக்கிறார்கள்.

2. ஆனால் இதற்கு விரோதமான பல ஆக்ஷேபனைகளுண்டு. அவைகளின் மொத்த சாரத்தைச் சுருக்கிச் சொல்லுகிறேன்:

(1) வேதாதாரமற்ற உபதேசத்தை ரூபிப்பதற்கு அனுபவம் போதுமானதல்ல. (2) பல பைத்தியக்காரரும், மதவைராக்கிகளும் இவ்விதமான சாட்சி தங்களுக்கு யிருந்ததாக எண்ணிக்கொண்டார்கள். (3) நாம் செய்கிற அறிக்கை உண்மையானதென்று ரூபிப்பதே இந்தச் சாட்சியின் நோக்கமாயிருக்க அந்த நோக்கம் நிறைவேறுகிறதில்லை. (4, 5) 'மரமானது அதின் கனியினால் அறியப்படும். உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்' என்று வேதம் உரைக்கிறதேயன்றி நேரான சாட்சி யுண்டென்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. (6) அந்தச் சாட்சி நாம் மோசம் போகாதபடி நம்மைக் காக்கக்கூடியதல்ல.' (7) கடைசியாக, கிறிஸ்துவுக்கு நேரிட்ட துன்பத்தைப்போன்ற துன்பம் உண்டானாலன்றி மற்றப்படி நம்மிடத்திலுண்டாகிய மாறுதலே போதுமான சாட்சி. இவ்வாக்ஷேபனைகளுக்கு நாம் சொல்லும் சமாதானத்தின் சுருக்கம். (1) வேதாதாரமுள்ள உபதேசத்தை உறுதிப்படுத்துவதற்கு அனுபவம் போதுமானது. (2) அனுபவத்தில் அறியாததை அறிந்ததாக சிலர் தப்பாய் எண்ணிக்கொள்ளுவதினால் உண்மையான அனுபவமும் இல்லையென்று சொல்லக்கூடாது. (3) நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நம்மை நிச்சயப்படுத்துவதே அந்தச் சாட்சியின் நோக்கம். அந்த நோக்கத்தை இச்சாட்சி நிறைவேற்றுகிறது. (4) ஆவியின் சாட்சியை ஆவியின் கனியாகிய 'அன்பு, சந்தோஷம், சமாதானம்' என்பவைகளால் அறியலாம். ஆனால் இக்கனி நேரான சாட்சிக்குப் பிந்தி உண்டாகிறதேயன்றி முந்தி உண்டாகிறதில்லை. (5) 'இயேசு கிறிஸ்து உங்களுக்குள் ளிருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா?' என்னும் வேதவசனத்தில் நேரான சாட்சியும் குறிப்பான சாட்சியுமாகிய இரு சாட்சியும் சொல்லப்படவில்லை என ரூபிக்க முடியாது. (6) தேவாவியானவர் நம்முடைய ஆவியுடனேகூடச் சேர்ந்து சாட்சி கொடுத்து நாம் வஞ்சிக்கப்படாதபடி தற்காக்கிறார். (7) கடைசியாக, நம்மெல்லாருக்கும் துன்பம் வரக்கூடியதே. அக்காலங்களில் நமது சொந்தஆவியின் சாட்சி போதுமானதல்ல. அக்காலங்களில் தேவனுடைய பரிசுத்தாவியின் நேரான சாட்சியைத் தவிர நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நமக்கு நிச்சயம் உண்டாக்கக்கூடியது வேறொன்றுமில்லை.



3. முன் சொன்னவைகளைக்கொண்டு இரண்டு விஷயங்களை அனுமானிக்கலாம். முதலாவது, ஆவியின் கனியில்லாதிருந்தும் ஆவியின் சாட்சி யிருக்கக்கூடும் என்று துணிகரமாய் எண்ணி ஒருவனும் தன்னைத் திருப்தி செய்துகொள்ளக் கூடாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதாக தேவாவியானவர் சாட்சியிடுவது மெய்யானால் அந்தச் சாட்சியோடுகூட அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்கிற கனியும் உண்டாகும். கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் ஒரு விசுவாசியைப் புடைப்பதினால் பலத்த சோதனை யுண்டாகுங்காலத்தில் சோதிக்கப்படுகிற மனுஷனுக்கு ஆவியின் கனி சிலகாலம் மறைந்து தோன்றாதிருக்கக்கூடும். அப்படியிருந்தபோதிலும், எவ்வளவு கொடிய சோதனையாயிருந்தாலுங்கூட அதின் முக்கிய பாகமாகிய தானியமணிகள் நிலைத்திருக்கும். சோதனைகாலத்தில் பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷம் எடுபட்டுப் போகக்கூடியதே. அந்தகாரத்தின் அதிகாரமும் வேளையும் நீடித்திருக்கும்போது ஆத்துமா மிகுந்த துக்கமடையக்கூடும். ஆனால் இந்தத் துக்கம் பெரும்பாலும் மாறிப்போகும். அப்போது நாம் சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷத்தையுடையவர்களாய் முன்னிலும் அதிகமாய்க் களிகூருவோம்.

4. இரண்டாவது, ஆவியின் சாட்சி யில்லாதிருக்கையில் ஆவியின் கனி தோன்றுமாகில் அதுவே போதும் என்று எண்ணிக்கொள்ளவேண்டாம். நம்மில் சாட்சி உண்டாகிறதற்கு வெகு காலத்துக்கு முன்னமே, அன்பும் சந்தோஷமும் சமாதானமும் நமக்குள்ளிருப்பதாக நமதுணர்வுக்குத் தோன்றினாலும் தோன்றும். இவ்

வித நற்கனி தோற்றமாயிராமல் மெய்யாகவே தேவனிடத்திலிருந்து வந்ததாயுமிருக்கலாம். அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் நமக்குண்டாயிருக்கிறதென்று தேவாவியானவர் நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சியிடுவதற்கு முன்னமே இவ்வித உணர்வு உண்டாகக்கூடும். 'பிரியமானவருக்குள் நாம் அங்கீகரிக்கப்படுமுன்னும், அங்கீகரிக்கப்பட்டோமென்கிற அத்தாட்சியை நாம் பெற்றுக்கொள்ளுவதற்கு முன்னும், நீடிய பொறுமை, தயவு, விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலிய ஆவியின் கனியும் தோற்றமாய் அல்ல, வாஸ்தவமாகவே ஓரளவாய் நம்மிலிருக்கவும் கூடும். ஆனால் இத்தோடே நாம் திருப்தியாயிருக்கப்படாது. அப்படியிருந்துவிட்டால் அது நமது ஆத்துமாவுக்கு மோசமாய் முடியும். நாம் புத்திசாலிகளானால் அவருடைய ஆவி நம்முடைய இருதயத்தில் 'அப்பா, பிதாவே' என்று கூறும்வரையில் தேவனை நோக்கி இடைவிடாமல் மன்றாடவேண்டியது. இதுவே தேவனுடைய பிள்ளைகள் யாவருக்குமுரிய சிலாக்கியம். இதில்லாமல் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று ஒருபோதும் நிச்சயம் கொள்ளக்கூடாது. இந்தச் சாட்சியில்லாமல் நமது சமாதானம் நிலையில்லாமலும், நம்மைக் கலங்கப்பண்ணுகிற சந்தேகமும் பயமும் நம்மைவிட்டு நீங்காமலும் இருக்கின்றன. இந்தப் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுக்கொண்டோமாகில் 'எல்லாப் புத்திக்கும் மேலானதும்' எவ்வித சந்தேகத்தையும் பயத்தையும் அகற்றுகிறதுமான சமாதானம் 'நம்முடைய இருதயத்தையும் சிந்தையையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும்.' இந்தச் சாட்சி கிடைப்பதினாலுண்டாகும் நற்கனியாகிய உள்ளான புறம்பான பரிசுத்தம் உண்டாகும்போது, நமக்கு ஒருதரம் அருளிச்செய்ததை எப்பொழுதும் அருளுவது நம்மை அழைத்தவருடைய சித்தம் என்பதற்குச் சந்தேகமில்லை. அதினால் தேவாவியின் நேரான சாட்சியாவது, நீதியும் மெய்யான பரிசுத்தமுமாய் நடக்கிறோம் என்கிற உணர்வாகிய நம்முடைய ஆவியின் சாட்சியாவது, நம்மைவிட்டு ஒருக்காலும் எடுபடவேண்டியதேயில்லை.

**நியூரி, எப்பிரல், 4. 1769.**



## வினாக்கள்.

1. பரிசுத்தாவியின் சாட்சியைப்பற்றிய உபதேசம் வேதாகமங்களில் தெளிவாயும், வேண்டும் என்றும் சொல்லப்படாமல் தற்செயலாய்ச் சொல்லப்பட்ட உபதேசமா?

அப்படியல்ல, 'இது தேவனுடைய பிள்ளைகளுக்குரிய' து.

பிரிவு. I. 1. பார்க்க.

2. இவ்வுபதேசத்தைக் கற்று நிலைநிறுத்தவேண்டியவர்கள் யார்?

மெதொடிஸ்டு சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள்.

பிரிவு. I. 4. பார்க்க.

3. இப்பிரசங்கத்தின் முதற் பாகம் எழுதி எவ்வளவு காலத்துக்குப் பிற்பாடு இரண்டாம் பாகம் எழுதப்பட்டது?

'இருபது வருஷத்துக்குப் பிற்பாடு.'

பிரிவு. II. 3. பார்க்க.

4. ஆத்துமாவிலுண்டாகிற உள்ளான உணர்வென்பது என்னவென்று சொல்லியிருக்கிறது?

பிரிவு. II. 2, 4. பார்க்க.

5. பரிசுத்தாவியின் சாட்சியைப்பற்றிய உபதேசம் மெதொடிஸ்டு சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்களுக்குமாத்திரம் உரியதோ, அல்லது மற்றக் கிறிஸ்தவர்களாலும் ஒப்புக்கொண்ட சத்தியமோ?

'பரிசுத்தாவியின் சாட்சி உண்டென்பது சகலரும் ஒப்புக்கொள்ளும் விஷயமே.'

பிரிவு. II. 5. பார்க்க.

6. இவ்விவகாரத்தில் தீர்மானிக்கவேண்டிய விஷயமென்ன?

'ஆவியானவர் நேர்நேராய்ச் சாட்சிகொடுக்கிறாரென்பதுதான்.

பிரிவு. II. 8. பார்க்க.

7. பரிசுத்தாவியின் சாட்சி எக்காலமும் ஒன்றுபோல பலமும் தெளிவுமாய் இருக்குமா?

இராது. 'ஆவியின் கனியாகிய சந்தோஷமும் சமாதானமும் அன்பும் எக்காலமும் ஒன்றுபோலிராது.'

பிரிவு. II. 7. பார்க்க.

8. உவெஸ்லி ஐயர் காலத்திலுள்ள ஒரு வேதசாஸ்திரியார் பரிசுத்தாவியின் சாட்சியை மறுத்தவராயிருந்தும் மேற்படி சாட்சியுண்டென்று ரூபிக்கும்விஷயமாய் உவெஸ்லி ஐயர் அவர் பெயரைச் சொல்லுகிறூர். அவ்வேதசாஸ்திரி யார்?

காலஞ்சென்ற 'லண்டன் அத்தியக்ஷர்.' ஷெர்லாக் (Sherlock) அத்தியக்ஷரின் பிரசங்கம் 8. பார்க்க.

9. இந்த உபதேசத்தை உறுதிப்படுத்துவதற்கு வேதாகமத்தையன்றி வேறு ஆதாரமில்லையா?

'தேவனுடைய பிள்ளைகளின் அனுபவம் உறுதிப்படுத்துகிறது.'

பிரிவு. III. 6. பார்க்க.

10. நேரான சாட்சி அவசியம் என்பதை எவ்வாறு ரூபித்திருக்கிறது?

'பாவத்தை உணர்ந்து..................திருப்தியடையார்கள்.'

பிரிவு. III. 7. பார்க்க.

11. நேரான சாட்சிக்கு விரோதமாய்க் கூறப்படும் ஆக்ஷேபனைகளை ஆராய்ந்துபார்க்கையில் அவை நியாயப்பிரமாணிகளும் ரோமான் மார்க்கத்தாரும் சொல்லுகிற ஆக்ஷேபனைகள்தான் என்று எவ்வாறு காண்பிக்கலாம்?

'நமது கிரியைகளினுல் இரட்சிக்கப்படலாம் என்கிற எண்ணந்தான் இவ்வாக்ஷேபனைகளுக்கெல்லாம் காரணம் என்று நினைக்கிறேன்.'

பிரிவு. IV. 4. பார்க்க.

12. பரிசுத்தாவியின் சாட்சியும் நமது ஆத்துமாவின் சாட்சியும் வெவ்வேருன சாட்சிகளா?

இவை இரண்டும் ஏகசாட்சி.

பிரிவு. IV. 6. பார்க்க.



13. ஒரு சாட்சி இல்லாமல் மற்றச் சாட்சி இருந்தால் போதுமா?

'நாம் எவ்வித மோசத்துக்கும் விலகும்படி' மு.

பிரிவு. IV. 8. பார்க்க.

14. உவெஸ்லி ஐயர் இவைகளைத் திரட்டிச் சுருக்கியிருக்கிறூர், அதைச் சொல்லு. அதினடியில் அவர் சொல்லியிருக்கும் எச்சரிப்பு என்ன?

பிரிவு. V. 1, 2. பார்க்க.

15. இந்த விஷயத்தை உவெஸ்லி ஐயர் உத்தம வேதசாஸ்திரத்தின்படியும் நியாயத்தின்படியும் தீர்மானிக்கிறூரா?

அவர் ஆக்ஷேபனைகளையெல்லாம் நிராகரித்து வேதவாக்கியத்தினுலும் அனுபவத்தினுலும் தாம் சொன்னவைகளை ரூபிக்கிறபடியினுலே இதை ஸ்திரமாய்த் தீர்மானிக்கிறூர்.

16. அவருடைய கடைசியான ஆலோசனை என்ன?

பிரிவு. V. 4. பார்க்க.

# எட்டாம் பிரசங்கம்.

## ON SIN IN BELIEVERS.

## விசுவாசிகளினிடத்திலுள்ள பாவம்.

'ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்.'
2 கொரி. 5: 17.

I. 1. அப்படியானால், கிறிஸ்துவுக்குட்பட்டவனிடத்தில் பாவம் உண்டா? அவரில் விசுவாசமா யிருக்கிறவனிடத்தில் பாவம் இருக்கிறதா? தேவனால் பிறந்தவர்களிடத்தில் ஏதேனும் பாவம் இருக்குமா? அல்லது அவர்கள் அதினின்று முழுவதுமாய் விடுதலையடைகிறார்களா? என்பது ஒரு கேள்வி. இதை ஒரு விநோதக் கேள்வியாக எண்ணலாகாது. அல்லது இவ்வினாவுக்கு விடை எப்படியிருந்தாலும் பெரிய காரியமில்லை என்றும் எண்ணக்கூடாது. இதைக்குறித்துத் தீர்மானமாய்ச் சொல்லும் பதில் ஒருவனுடைய இம்மை மறுமைக்குரிய பாக்கியத்துக் கடுத்ததாயிருப்பதினால் இவ்விஷயத்தைக்குறித்து ஒவ்வொரு மெய்க் கிறிஸ்தவனும் பயபக்தியாய் ஆராயவேண்டியதே.

2. ஆதித் திருச்சபையார் இதையிட்டு எப்போதாகிலும் தர்க்கித்ததாகத் தெரியவில்லை. ஆதிக் கிறிஸ்தவர்கள் யாவரும் இவ்விஷயத்தில் ஒரே அபிப்பிராயமுடையவர்களா யிருந்தபடியால் இதைப் பற்றி விவாதம் நேரிட்டிருப்பது கூடியதல்ல. நான் ஆராய்ந்த மட்டில் பூர்வ கிறிஸ்தவர்களுக்குள் நூலாசிரியராயிருந்த எவரும் இதைக்குறித்து ஏக வாக்காய் அறிக்கையிட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் விசுவாசியானவர்கள் 'கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படும்' வரையில் 'மாம்சத்தோடும் இரத்தத்தோடும்' அதாவது பாவ சுபாவத்தோடும் 'துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும்' போராட வேண்டியவர்களென்றே பூர்வ கிறிஸ்தவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.



3. நம்முடைய திருச்சபையானது வேறு அநேக விஷயங்களில் செய்திருக்கிறபிரகாரம் இவ்விஷயத்திலும் ஆதிச்சபையின் உபதேசத்தையே அனுசரித்திருக்கிறது. ஒன்பதாவது வேதசித்தாந்தப் பிரமாணம் என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம். 'ஒவ்வொருவனுடைய சுபாவத்துக்குமுரிய பழுதும் கேடுமே ஜென்மப் பாவமாம். அதினாலே மனுஷர் தீமைக்கு இயல்பாய்ச் சாய்கிறார்கள். மாம்சமும் எப்பொழுதும் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது. இந்தச் சுபாவக்கேடு மறுஜென்மம் அடைந்தவர்களிலும் இன்னுமிருக்கிறது. ஆதலால் மாம்ச சிந்தையானது, தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறது. விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லாதிருந்தும் அவர்களுக்குள்ளிருக்கும் இச்சையானது பாவத்தன்மை யுள்ளதாயிருக்கிறது.'

4. மற்றச் சபைகளும் இதை ஒத்துக்கொள்ளுகின்றன. ரோமை, கிரேக்கு சபைகள் மாத்திரமல்ல, ஐரோப்பாவிலுள்ள சீர்திருத்தச் சபைகள் எப்பிரிவைச் சேர்ந்தவைகளாயிருப்பினும் இப்படியே சாட்சியிடுகின்றன. இவ்விஷயத்தில் சில சபைகள் அளவு கடந்து போகிறதாகவும் தோன்றுகிறது. ஒரு விசுவாசியின் இருதயக் கேட்டைக் குறித்துச் சொல்லுகையில் அவன் பாவத்தின்மேல் அதிகாரம் செலுத்துகிறாப்போலல்ல, அதற்கு அடிமைப்பட்டிருக்கிறாப்போலவே அவைகள் சொல்லுகின்றன. இப்படிச் சொல்லுவதினால் அவிசுவாசிக்கும் விசுவாசிக்கும் பேதமில்லாதது போலாகிறதல்லவா?

5. நல்லெண்ணமுள்ள அநேகர் விசேஷமாய் காலஞ்சென்ற (Count Zinzendorf) சின்சென்டார்வ் பிரபுவின் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் இத்தவறுதலான கொள்கைக்கு விலக விரும்பி வேறொரு தவறுதலுக் குட்பட்டார்கள். மெய் விசுவாசிகள் யாவரும் பாவத்தின் ஆளுகையினின்று மாத்திரமல்ல, உள்ளான புறம்பான பாவ ஜென்மிகளா யிருப்பதினின்றும் இரட்சிக்கப்படுவதினால் இனிப் பாவம் அவர்களுக்குள் ளிருப்பதேயில்லை யென்று இவர்கள் சாதிக்கிறார்கள். இக்கொள்கையை சுமார் இருபது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்தவரிலும் பலர் அநுசரித்து விசுவாசியி

னிடத்தில் ஜென்ம சுபாவக்கேடு முதலாய் இருக்கிறதில்லை யென்று ஒப்புக்கொண்டார்கள்.

6. இதைக்குறித்து ஜெர்மன் சபையாரை விசாரித்தபோது அவர்களில் அநேகர் 'பாவம் விசுவாசியின் மாம்சத்திலிருக்கிறது, ஆனால் இருதயத்தி லிருக்கிறதில்லை' என்று ஒத்துக்கொண்டார்கள். சில காலத்துக்குப்பின் இதின் ஆபாசத்தைக் காண்பித்தபோது தேவனால் பிறந்தவனிடத்தில் பாவம் உண்டுதான்; ஆனால் அது அவனை ஆளாது என்று அவர்கள் ஒப்புக்கொண்டு தங்கள் தப்பான கொள்கையை விட்டுவிட்டார்கள்.

**7.** ஆயினும் இவர்களுடைய கொள்கையை, அவர்கள் மூலமாயாவது அவர்கள் பின் சந்ததியார் மூலமாயாவது அநுசரித்துக்கொண்ட அங்கிலேயர் தங்களுக்கிஷ்டமான இந்த அபிப்பிராயத்தை எளிதில் விட்டுவிடவில்லை. இது நியாயத்துக்கு நிற்கத்தக்க கொள்கையல்லவென்று இவர்களில் பெரும்பாலோர் உணர்ந்தபோதிலும் சிலர் இதை விட்டுவிட மனமற்று இன்றுவரை அதைப் பற்றிக்கொண்டே யிருக்கிறார்கள்.

II. 1. உண்மையாய்த் தேவனுக்குப் பயந்து இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தை அறிய விரும்புகிறவர்களினிமித்தம் இவ்விஷயத்தைப் பட்சபாதமின்றிச் சாவதானமாய்ச் சிந்தித்துக்கொள்ளுவது தகுதியாயிருக்கும். இதை ஆராய்ந்து பார்க்கையில்: **மறு ஜெனனமடைந்தவர்கள், நீதிமான்களாக்கப்பட்டவர்கள், விசுவாசிகள்** என்னும் பதங்களை வித்தியாசமின்றி ஒரே கருத்தில் உபயோகிப்பேன். இப்பதங்கள் மூன்றும் ஒரே அர்த்தமுள்ளவைகளல்ல (ஏனென்றால் மறு ஜென்மமென்பது இருதயத்திலுண்டாகும் மெய்யான மாறுதலைக் காட்டும்; நீதிமானாக்கப்படுதல் என்பது தேவனுக்கும் பாவிக்குமுரிய சம்பந்தம் மாறுதல் அடைந்ததைக் குறிக்கும்; மூன்றாவது வார்த்தை, இவ்விரண்டு மாறுதலும் நடந்தேறுவதற்கு தேவையாயிருக்கிற யத்தனத்தைக் குறிக்கும்.). என்றாலும் மொத்தத்தில் மூன்றும் ஒன்றுதான். எப்படியென்றால் விசுவாசிக்கிறவன் எவனோ அவனே நீதிமானாக்கப்பட்டவனாயும் அவனே தேவனால் பிறந்தவனாயுமிருக்கிறான்.



2. பாவம் என்று சொல்லும்போது இவ்விடத்தில் உள்ளான பாவமென்பதே என் கருத்து. அது பெருமை, சுயசித்தம், உலக நேசம்போன்ற பாவ சுபாவத்துக் கடுத்ததாயிருக்கலாம். அது எத்தன்மையதாயும் எவ்வளவாயு மிருக்கலாம். அல்லது இச்சை, கோபம், வெடுவெடுப்பு போன்ற துர்ஆசைக்குச் சம்பந்தமானதா யிருக்கலாம். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தைக்கு மாறான குணமெல்லாம் இதைச் சேர்ந்ததே.

3. இதில் நாம் பேசப்போகிற விஷயம் **புறம்பான பாவத்**தைப் பற்றியல்ல. தேவனுடைய பிள்ளை பாவஞ்செய்வானோ இல்லையோவென்பது நாம் இப்போது சிந்திக்கப்போகிற விஷயமல்ல. 'பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்' என்று நாம் யாவரும் ஒத்துக்கொண்டு அப்படியே சாதிக்கிறோம். 'தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்' என்று யாவரும் ஒப்புக்கொள்ளுகிறோம். தேவனுடைய பிள்ளைகளிடத்தில் உள்ளான பாவம் எக்காலமும் இருக்குமோ என்பதும், ஆத்துமாவானது சரீரத்தில் வசிக்கும் காலமெல்லாம் பாவமும் ஆத்துமாவில் நிலைத்திருக்குமோ என்பதும் நாம் இப்போ ஆலோசிக்கப்போகிற விஷயமல்ல. நீதிமானாக்கப்பட்ட மனுஷன் உள்ளான புறம்பான பாவங்களுக்குள் மறுபடியும் விழுவதுண்டா என்பதும் நம்முடைய விவகாரமல்ல. நாம் ஆராயப்போகிற விஷயம் என்னவென்றால், நீதிமானாக்கப்பட்டு மறு ஜெனனமடைந்த ஒருவன் தான் நீதிமானாக்கப்பட்ட மாத்திரத்தில் **சகல பாவங்களுக்கும்** நீங்கியிருக்கிறானா? அக்காலத்தில் அவனிடத்தில் பாவமில்லையாகில் கிருபையினின்று தவறிப்போனாலொழிய இதற்குப்பின் ஒருபோதும் அவனிருதயத்தில் பாவமிராதோ? என்பதே.

4. நீதிமானாக்கப்பட்டவனின் நிலைமை சொல்லமுடியாத மேன்மையும் மகிமையும் பொருந்தினதென்பது நிச்சயமே. அவன் மறுபடியும் பிறந்தவன். 'அவன் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனால் பிறந்தவன்.' அவன் தேவனுடைய பிள்ளையும் கிறிஸ்துவின் அவயவமும் பரலோக ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியுமா யிருக்கிறான்.

'எல்லாப் புத்திக்கு மேலான தேவ சமாதானம் அவன் இருதயத்தையும் சிந்தனையையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளுகிறது.' அவனுடைய சரீரம் 'பரிசுத்தாவியின் ஆலயமும்' அவர் மூலமாய் அதுவே 'தேவனுடைய வாசஸ்தலமாயுமிருக்கிறது. அவன் கிறிஸ்து இயேசுவுக்குள் புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான்.' அவன் கழுவப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்டவன். விசுவாசத்தால் அவன் இருதயம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலுண்டான கேட்டுக்கு நீங்கிச் சுத்தமாக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு அருளப்பட்ட பரிசுத்தாவியினாலே 'தேவ அன்பு அவனுடைய இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறது.' அவன் 'அன்பிலே நடந்துகொள்ளுங் காலமெல்லாம்' (எப்பொழுதும் நடந்துகொள்ளலாம்.) தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுகிறான். அவன் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய பார்வைக்குப் பிரியமானதைச் செய்கிறான். இதினால் அவன் தேவனுக்கும் மனுஷருக்கு முன்பாகக் குற்றமற்ற மனச்சாட்சியை யுடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறான். மேலும் அவன் நீதிமானாக்கப்பட்ட நியிஷமுதல் உள்ளான புறம்பான பாவங்களை மேற்கொள்ள வல்லமையுள்ளவனா யிருக்கிறான்.

III. 1. ஒருவன் நீதிமானாக்கப்பட்ட காலத்தில் எவ்வித பாவத்தினின்றும் விடுதலையடைந்து இருதயத்தில் பாவமற்றவனாகிறானல்லவா என்று யாராவது கேட்பானாகில், ஆம் என்று சொல்லமாட்டேன். அது கூடிய காரியமென்று நம்பவுமாட்டேன். ஏனென்றால் அப். பவுல் இதற்கு மாறாக கலாத்தியர், 5: 17-ல் 'மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறான்.— இதில் பரி. பவுல் விசுவாசிகளுடைய நிலைமையைக்குறித்து விசுவாசிகளுக்கு விவரிக்கிறான். இதைப் பார்க்கிலும் வேறென்ன தெளிவு வேண்டும். விசுவாசிகளிடத்திலுங்கூட மாம்சம் என்னும் கெட்ட சுபாவம் ஆவியானவருக்கு விரோதமா யிருக்கிறதென்றும், மறுபடியும் பிறந்தவர்களிடத்திலுங்கூட 'ஒன்றுக்கொன்று விரோதமான' இரண்டு பிரமாணங்கள் உண்டென்றும் அப். பவுல் இவ்வசனத்தில் தெளிவாக உரைக்கிறான்.



2. மேலும் கொரிந்து பட்டணத்தில் 'கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட' விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் எழுதினபோது அவன், 'சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்றெண்ணி உங்களுடனே பேசக்கூடாமல் மாம்சத்துக் குரியவர்களென்றும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று. பொறாமையும், வாக்குவாதமும் உங்களுக்குளிருக்கிறபடியால் நீங்கள் இன்னமும் மாம்சத்துக்குரியவர்களா யிருக்கிறீர்களல்லவா' என்று சொல்லியிருக்கிறான் (1 கொரி. 3: 1-3.). இவ்விடத்தில் அப்போஸ்தலன் மெய் விசுவாசிகளை நோக்கிப் பேசுகிறான். அவர்களைக் கிறிஸ்துவுக்குள் சகோதரர் என்று சொல்லும்போதே அவர்கள் இன்னும் ஒருவாறு மாம்சத்துக்குரியவர்களென்றும் சொல்லுகிறான். பொறாமை என்னும் துர்க்குணம் அவர்களுக்குளிருந்ததாகவும், அது அவர்களுக்குள் வாக்குவாதத்தை உண்டுபண்ணினதாகவும் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறான். ஆயினும் அவர்கள் விசுவாசத்தை விட்டு வழுவிப்போனதாக ஏதேனும் குறிப்பில்லை. ஆனால் இதற்கு மாறாக, அவர்கள் விசுவாசத்தை விட்டு விலகவில்லை என்று தெளிவாய் உரைத்திருக்கிறது. மற்றப்படி அவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்று சொல்ல முடியாதே. இதில் இன்னும் கவனிக்கத்தக்க ஒரு விசேஷமிருக்கிறது. அதென்னவெனில், மாம்சத்துக்குரியவர்கள் என்றாலும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் என்றாலும் ஒன்றுதான் என்பதாகச் சொல்லியிருக்கிறது. இதினால் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருக்கிறகாலத்தில் ஒருவாறு மாம்சத்துக்குரியவனென்றே பவுல் தெளிவாய்க் காண்பிக்கிறான்.

3. ஜென்ம சுபாவமும் கிருபையும், மாம்சமும் ஆவியும் ஆகிய ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு பிரமாணங்கள் விசுவாசிகளிடத்தில் உண்டென்கிற முக்கியமான கொள்கையைப் பவுலின் நிருபங்களிலும், சொல்லவேண்டுமானால் வேதம் முழுவதிலுமே காணலாம். ஏறக்குறைய வேதாகமத்திலுள்ள கட்டளைகள் புத்திமதிகள் யாவும் இதை உத்தேசித்தே சொல்லியிருக்கிறது. இதினாலே தான் தெய்வீக அருள்பெற்று எழுதின வேதாசிரியர் தாங்கள் விசு

வாசிகள் என்று ஒப்புக்கொண்டவர்களிடத்திலுள்ள தகாத குணங்களையும் பழக்க வழக்கங்களையும் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். மேலும் விசுவாசிகள் தங்களிடத்திலுள்ள விசுவாசத்தின் வல்லமையினாலே இந்தத் துர்க்குணங்கள், துர்ப்பழக்கங்களுடன் போராடி ஜெயமடையும்படி அவர்களுக்கு அடிக்கடி புத்தி சொல்லியிருக்கிறது.

4. நமதாண்டவர் எபேசு சபையின் தூதனை நோக்கி, 'உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், நீ பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்' என்று சொன்னபோது (வெளி. 2: 2–4.), அந்தச் சபையின் தூதனிடத்தில் விசுவாசமில்லையென்று யார் சந்தேகிக்கக்கூடும்? அப்படியிருந்தும் அச்சமயத்தில் அவனிருதயத்தில் பாவமில்லாதிருந்ததோ? மற்றப்படி அவர் அவனைப்பார்த்து, 'நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறையுண்டு' என்பதாகச் சொல்லியிருக்கமாட்டார். எபேசு சபையின் தூதனுடைய இருதயத்தில்-தேவன் கண்ட மெய்யான பாவம் இதுவே. ஆகையால் இப்பாவத்திற்காக அவன் மனந்திரும்பும்படி கட்டளையிட்டிருக்கிறது. ஆகிலும் அச்சமயத்தில் அவனிடத்தில் விசுவாசமில்லையென்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை.

5. இதுமாத்திரமல்ல, மனந்திரும்பவேண்டுமென்று பெர்கமு சபையின் தூதனுக்கும் கற்பித்திருக்கிறதைப் பார்க்கையில் அவனிடத்தில் பாவமிருந்ததாகத் தெரிகிறது. ஆகிலும் அவனைப்பார்த்து ஆண்டவர், 'என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்தாய்' என்று சொல்லியிருக்கிறார் (வெளி. 2: 13, 16.). சர்தை சபையின் தூதனைப்பார்த்து 'சாகிறதற் கேதுவா யிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து' என்று சொல்லியிருக்கிறது. அவனிடத்தில் மீந்திருந்த நன்மை சாகிறதற்கு ஏதுவாயிருந்தும் இன்னும் செத்துப்போகவில்லை. ஆகவே அவனிடத்திலுங்கூட விசுவாசம் முற்றிலும் அற்றுப் போகாமல் மீந்திருந்ததினால் அவன் அதை விடாதிருக்கும்படி (வெளி. 3: 3.) சொல்லியிருக்கிறது.

6. மேலும், பவுல் விசுவாசிகளைப்பார்த்து 'மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க சுத்திகரித்துக்கொள்



ளும்படி' புத்திசொல்லுகிறபடியினாலே (2 கொரி. 7: 1.) கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் எல்லா அசுசியினின்றும் சுத்தமாகவில்லையென்று பிரதியட்சமாய்க் காட்டுகிறான்.

'ஒருவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு' விலகுவதினால் எல்லா அசுசியும் நீங்கத் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் என்பாயோ? இதினால் அவன் ஒருபோதும் சுத்தமாகிறதில்லை. திருஷ்டாந்தமாக: ஒருவன் என்னை நிந்திக்கிறான். என் மனதில் கோபமுண்டாகிறது, இது ஆவியிலுண்டான அசுசி. ஆயினும் நான் யாதொன்றும் பதில் பேசவில்லை. இவ்விஷயத்தில் நான் 'பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகிக்கொண்டபோதிலும்' ஆவியிலுண்டான அசுசி என்னைவிட்டு விலகவில்லை. அது என்னிடம் இருப்பதாகத் துக்கத்துடன் உணருகிறேன்.

7. நாம் இதுவரையில் காண்பித்தபிரகாரம் விசுவாசியினிடத்தில் பாவமாவது, மாம்ச சிந்தையாவது, பின்வாங்குந் தன்மையாவது இல்லை என்பது வேதவசனத்துக்கு விரோதமாயிருப்பதுமன்றி, தேவனுடைய பிள்ளைகளின் அனுபவத்துக்கும் விரோதமாயிருக்கிறது. பின்வாங்குந் தன்மையுள்ள இருதயமும், தீமைக்கு நேராக சாயும் சுபாவமும், தேவனைவிட்டு விலகிப் பூமிக்குரியவைகளைப் பற்றிக்கொள்ளும் மனமும் தங்களிட முண்டென்று இவர்கள் எக்காலமும் உணருகிறார்கள். பெருமை, சுயசித்தம், அவிசுவாசமாகிய பாவங்கள் தங்கள் இருதயத்தி லிருப்பதாகவும், தங்கள் பேச்சிலும், செய்கையிலும் மாத்திரமல்ல, தாங்கள் நடப்பிக்கும் நற்கருமங்களிலும் பரிசுத்த நியமங்களிலுங்கூடப் பாவம் பற்றியிருப்பதாகவும் தினமும் அறிகிறார்கள். அப்படியிருந்தும் 'தாங்கள் தேவனாலுண்டானவர்கள்' என்று அவர்களுக்குத் தெரியும். அதைப்பற்றி அவர்களுக்குச் சற்றேனகிலும் சந்தேகமில்லை. அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று ஆவியானவர் அவர்களுடைய ஆவியுடனேகூட உறுதியாய்ச் சாட்சி கொடுக்கிறார். 'இப்பொழுது ஒப்புரவாகுதலை அவர்களுக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவர்கள் தேவனைப்பற்றி மேன்மை

பாராட்டுகிறார்கள்.' ஆகவே தங்களுக்குள் பாவம் உண்டென்றும், 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாகத் தங்களுக்குள் இருக்கிறார்,' என்றும் நிச்சயித்திருக்கிறார்கள்.

8. 'ஆனால், பாவமும் கிறிஸ்துவும் ஒரே இருதயத்தில் இருக்கக்கூடுமோ?' இருக்கக்கூடும். மற்றப்படி பாவ இருதயம் பாவத்தினின்று இரட்சிப்படைவதெப்படி? நோய் எங்கேயோ அங்கேதான் வைத்தியரும் இருப்பார். அவர்

'பவத்தைத் தொலைக்க வென்று
அகத்தில் விடாமல் நின்று'

முயற்சிசெய்கிறார். பாவம் ஆளுகிறவிடத்தில் கிறிஸ்து ஆளமாட்டார் என்பது மெய். பாவத்திற்கு இடங்கொடுக்கிறவர்கள் உள்ளத்தில் கிறிஸ்து வாசம் பண்ணவுமாட்டார். ஆயினும் சகல பாவத்தோடும் போர்செய்கிற ஒவ்வொரு விசுவாசியின் இருதயமும், பரிசுத்த ஸ்தலத்துக்கேற்ற சுத்தாங்கமாகாவிட்டாலும் தேவன் அதில் தங்கி அதில் வாசம்பண்ணுகிறார்.

9. விசுவாசிகளிடத்தில் பாவமில்லையென்கிற உபதேசம் கிறிஸ்துவின் சபையில் நூதனமாய் உண்டானதென்று முன்னே சொல்லியிருக்கிறோம். சின்செண்டார்வ் என்னும் பிரபு (Count Zinzendorf) இதை நூதனமாய்க் கண்டுபிடிக்கும்வரையில் ஆயிரத்தெழுநூறு வருஷக்காலமாய்த் திருச்சபை இதைப்பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. பூர்வீக தற்கால நூல்கள் ஒன்றிலும் இதைப்பற்றி யாதொரு குறிப்பும் இருக்கிறதாக எனக்கு ஞாபகமில்லை. அப்படியேயிருந்தாலும் அந்திநோமியர் (Antinomians) என்று சொல்லப்பட்ட சில முரட்டு நியாயவாதிகள்தான் இதைக்குறித்துச் சொல்லியிருக்கக்கூடும். தங்கள் இருதயத்தில் பாவமில்லாவிடினும் மாம்சத்தில் பாவமிருக்கிறதாக அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறபடியால் தாங்களே கட்டுகிறவர்களும் தாங்களே இடிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். பூர்வீக மார்க்கம் ஒன்றே மெய் மார்க்கமாதலால் நூதன உபதேசம் எதுவோ அது தப்பானதாயிருக்கவேண்டும். எந்த உபதேசமும் 'ஆதிமுதலாய் உண்டாயிராவிட்டால் அது சரியான உபதேசமாயிருக்கமாட்டாது.'



10. வேத விரோதமான இந்த நூதன உபதேசத்தை நிராகரிக்க அவ்வுபதேசத்தினால் விளையும் தீமைகளைக்கொண்டு இன்னும் ஒரு நியாயம் சொல்லலாம். ஒருவன் என்னிடம் வந்து 'இன்று எனக்குக் கோபம் வந்தது' என்று சொல்லுவானாகில் நான் அவனைப் பார்த்து, அப்படியானால் 'உன்னிடத்தில் விசுவாசமில்லை' என்று சொல்லலாமா? வேறொருவன் 'உங்கள் ஆலோசனை நல்லதுதான், ஆனால் என் சித்தம் அதற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது' என்று முறையிடுகிறான். 'அப்படியானால் நீ அவிசுவாசி, நீ தேவ கோபத்துக்கும் சாபத்துக்கும் உள்ளானவன்' என்று சொல்லவேண்டுமோ? இப்படிச் சொல்வேனாகில் அதிலுண்டாகும் கெடுதியென்ன? நான் சொல்வதை அவன் நம்புவானாகில் அவனுடைய ஆத்துமா வருத்தமடைந்து சஞ்சலப்படுவது மாத்திரமல்ல, ஒருவேளை முற்றிலும் கெட்டுப்போனாலும் போகும். அப்பொழுது 'மிகுந்த பலனுக்கேதுவான தன் தைரியத்தை' அவன் விட்டுவிடுவான். இப்படித் தன் கேடகத்தை எறிந்துவிடுவானாகில் 'பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம்' அவித்துப்போடுவதெப்படி? 'நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமானதால்' அதில்லாமல் அவன் உலகத்தை ஜெயிப்பதெப்படி? சத்துருக்கள் சூழ நின்று தன்னை எதிர்க்கும்சமயத்தில் அவன் நிராயுதபாணியாய் நிற்கிறான். அப்படிப்பட்ட சமயத்தில் அவன் அபஜெயமடைவது ஆச்சரியமல்ல. சத்துருக்கள் தங்களிஷ்டப்படி அவனைச் சிறையாக்கினால் அது ஆச்சரியமா? அவன் மேலும் மேலும் பாவத்தில் விழுந்து யாதொரு நன்மையு மற்றவனாய்ப் போகக்கூடும்.

ஆகையால் ஒருவன் நீதிமானாக்கப்பட்ட வேளைமுதல் அவனிடத்தில் பாவமில்லையென்கிற கொள்கையை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஏனென்றால் முதலாவது, அது வேதத்துக் கொவ்வாத விஷயம். இரண்டாவது, தேவனுடைய பிள்ளைகளின் அனுபவத்துக்கு மாறானது. மூன்றாவது, இது நூதனமாய் இடையிலுண்டானதேயன்றி பூர்வகாலமாய் உள்ளதல்ல. நான்காவது, இதை ஒப்புக்கொள்ளுவதினால் மோசமான தீமைகள் விளைகின்றன. தேவன் துக்கப்படுத்தாதவர்களை இது துக்கப்படுத்துவதுமன்றி நித்திய அழிவுக்கும் உட்படுத்தக்கூடும்.

IV. 1. என்றாலும் இவ்வுபதேசத்தை நிலைநிறுத்த விரும்புகிறவர்கள் சொல்லும் விசேஷித்த நியாயங்களை நாம் கவனியாமல் விடலாகாது. முதலாவது, வேதத்தைக்கொண்டே விசுவாசியிடத்தில் பாவமில்லை யென்று ரூபிக்க முயற்சி செய்கிறார்கள். அவர்கள் சொல்லும் ஆக்ஷேபனைகளாவன: — 'ஒரு விசுவாசி தேவனால் பிறந்தவனும், சுத்தனும், பரிசுத்தனும், பரிசுத்தமாக்கப்பட்டவனும், இருதயசுத்தமுள்ளவனும், புது இருதயமுள்ளவனும், பரிசுத்தாவியின் ஆலயமுமாயிருக்கிறான்' என்று வேதம் உரைக்கிறதல்லவா? ஆகவே 'மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாய்' அதாவது முற்றிலும் தீமையானதா யிருக்கிறதுபோல, 'ஆவியினால் பிறக்கிறதும் ஆவியாய்,' அதாவது முற்றிலும் நன்மையானதாயிருக்கிறது. மேலும், ஒருவன் ஏககாலத்தில் சுத்தனும் அசுத்தனும், பரிசுத்தமாக்கப்பட்டவனும் பரிசுத்தமாக்கப்படாதவனும், பரிசுத்தமுள்ளவனும் பரிசுத்தமற்றவனுமாயிருப்பது கூடியதல்ல. ஒரேசமயத்தில் அவனே சுத்தனும் அவனே அசுத்தனுமாயிருக்க முடியாது. அவனுக்குள் புது இருதயமும் பழைய இருதயமும் சேர்ந்திருக்கமாட்டாது. அவனுடைய ஆத்துமா பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கையில், அது அசுத்தமாயிருக்கமாட்டாது என்று சொல்லுகிறார்கள்.

இந்த ஆக்ஷேபனையின் முக்கியத்தை நன்றாய்க் காண்பிக்கும் பொருட்டு அதைக் கூடியவரை பலமாய் எடுத்துரைத்திருக்கிறேன். இப்போது அதைத் தனித்தனியாய்ப் பிரித்துப் பரிசோதிப்போமாக.

(i.) 'ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.' அதாவது, முற்றிலும் நன்மையானதாயிருக்கும் என்கிறார்கள். இதிலுள்ள வேதவசனத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதோடு அவர்கள் சேர்த்த வியாக்கியானத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன். ஏனென்றால், ஆவியினால் பிறந்தவன் எவனும் ஆவிக்குரியவனா யிருக்கிறான் என்பதே இவ்வசனத்தின் கருத்து. அவன் ஆவிக்குரிய மனுஷன் தான், ஆவிக்குரியவனாயினும் முற்றிலும் ஆவிக்குரியவனல்ல. கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் ஆவிக்குரியவர்களாய் இராவிட்டால் கிறிஸ்தவர்களாய் இருந்திருக்க மாட்டார்கள். என்றாலும் முற்றிலும் ஆவிக்குரியவர்களல்ல. ஒருவாறு மாம்சத்துக் குரியவர்களாயும்



இருந்தார்கள். அவர்கள் கிருபையினின்று விழுந்துபோனவர்கள் அல்லவா என்றால், பரி. பவுல் அவர்களைக்குறித்து அப்படிச் சொல்லாமல், அவர்களை அக்காலத்திலும் கிறிஸ்துவுக்குள், குழந்தைகள் என்கிறான்.

(ii.) 'சுத்தனும், பரிசுத்தமாக்கப்பட்டவனும், பரிசுத்தனுமாகிய ஒருவன் அதேகாலத்தில் அசுத்தனும், பரிசுத்தமாக்கப்படாதவனும், பரிசுத்த மற்றவனுமாயிருக்கக் கூடுமா?' என்றால், கூடும். கொரிந்தியர் அப்படித்தான் இருந்தார்கள். அப்போஸ்தலன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் கழுவப்பட்டீர்கள், நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்' என்கிறான். எதினின்று கழுவப்பட்டார்கள்? 'வேசித்தனம், விக்கிரகாராதனை, வெறி' முதலியவற்றினின்றும் மற்றெல்லாப் புறம்பான பாவங்களினின்றுமே (1 கொரி. 6: 9-11.). இப்படியிருந்தும் அவர்கள் அக்காலத்தில் வேறொரு கருத்தின்படி பரிசுத்தமாக்கப்பட்டவர்களல்ல. பொறாமை, பொல்லாத சமுசயங்கள், பட்சபாதம் முதலிய உள்ளான பாவங்களினின்று அவர்கள் சுத்திகரிக்கப்படவில்லை. ஆனால் ஏககாலத்தில் புது இருதயமும், பழைய இருதயமுமாகிய இரண்டும் அவர்களுக்குள் இருந்திருக்கமாட்டாதென்பது நிச்சயம் என்று சொன்னால், இவ்விரண்டும் அவர்களுக்குள் இருந்ததென்பதும் முழுநிச்சயமே. எப்படியெனில், அக்காலத்தில் அவர்கள் இருதயம் மெய்யாய்ப் புதுப்பிக்கப்பட் டிருந்தபோதிலும் பூரணமாய்ப் புதுப்பிக்கப்படவில்லை. அவர்களுடைய மாம்ச சிந்தை சிலுவையி லறையப்பட்டிருந்தபோதிலும் முற்றிலும் அழிந்துபோகவில்லை. 'அவர்கள் பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கையில் அசுத்தராயிருப்பது கூடியதா?', என்றால், கூடியதே. அவர்கள் பரிசுத்தாவியின் ஆலயமாயிருந்தது மெய்தான் (1 கொரி., 6: 19.). அப்படியே ஒருவாறு மாம்சத்துக் குரியவர்களாய், அதாவது பரிசுத்த மற்றவர்களாயிருந்ததும் மெய்யே.

**2. ஆக்ஷேபனை.** இவ்விஷயத்தைச் சந்தேகமற ரூபிக்க இன்னொரு வேதவசன மிருக்கிறது: 'ஒருவன் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமா யிருந்தால், அவன் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின,' எல்லாம் புதிதாயின' (2 கொரி. 5: 17.)

என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, ஒருவன் ஒரே சமயத்தில் புதுச் சிருஷ்டியாயும் பழைய சிருஷ்டியாயும் இருக்க முடியாது.

**நிராகரம்.** இரண்டு சிருஷ்டியாயு மிருக்கக்கூடும். ஒருவன் ஒருவாறு புதுப்பிக்கப்பட்டவனா யிருக்கக்கூடியதே, கொரிந்தியரின் நிலைமையும் அப்படியேதானிருந்தது. 'அவர்கள் உள்ளத்தில் புதிதான ஆவி யிருந்தது' என்பது மெய்யே. மற்றப்படி அவர்களைக் 'கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்' என்று சொல்லத்தகுமா? அப்படியாயினும் அவர்களுக்குள் பொறாமை யிருந்ததினால் கிறிஸ்துவிலிருந்த பூரண சிந்தை அவர்களிடத்தி லில்லை. இதற்கு உத்தரமாக, 'பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின' என்று பிரத்தியட்சமாய் உரைத்திருக்கிறதே என்று சொன்னால், அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைத் தாற்பரியப்படுத்தும்போது அவைகள் ஒன்றையொன்று விரோதிக்கத் தக்கவிதமாய்த் தாற்பரியப்படுத்தாமல் அவைகளை ஒன்றுக்கொன்று இசையத் தக்கவிதமாய் தாற்பரியப்படுத்துவோமாகில் இவ்வசனத்தின் சரியான கருத்துத் தோன்றும். நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தம், பாக்கியம் என்பவைகளையும், பொதுவாய்ப் பரம காரியங்கள் யாவையும் குறித்து விசுவாசியானவன் முன்போல் அபிப்பிராயம் கொள்ளுகிறதில்லை. அவ்வண்ணமாகவே அவனுடைய பழைய விருப்பங்கள், நோக்கங்கள், ஆசாபாசங்கள், குணங்கள், சம்பாஷணைகள் யாவும் ஒழிந்துபோயின. யாவும் புதிதாயிருக்கின்றன வென்பதை மறுக்க முடியாது. முன்னிருந்ததைவிடப் பெரிய மாறுதல்தான்; ஆனால் புதியவைகளா யிருந்தும் முற்றிலும் புதிதாகவில்லை. பழைய மனுஷனுக் குரியவைகளாகிய முந்தின குணங்கள், ஆசாபாசங்களின் குறிகள் தன்னிடத்தில் இன்னும் துலாம்பரமா யிருக்கக்கண்டு துக்கித்து வெட்கமடைகிறான். என்றாலும் அவன் விழித்திருந்து ஜெபஞ்செய்கிற காலம் எவ்வளவோ அவ்வளவுக்கு அவைகள் அவன்மேல் அதிகாரஞ் செலுத்தாது.

3. ஆக்ஷேபனை. 'ஒருவன் சுத்தன் என்றால் அவன் சுத்தன்தான். பரிசுத்தனென்றால் பரிசுத்தன்தான்.'

**நிராகரம்.** இவ்வாக்ஷேபனையானது வார்த்தைச் சம்பிரதாயமேயன்றி வேறல்ல. இஷ்டமானால் இவைபோன்ற வேறநேக



வாசகங்களையும் அடுக்கிக்கொள்ளலாம். எப்படியெனில் தர்க்க சாஸ்திர விதிப்படி, ஒரு திருஷ்டாந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, **பொதுப்பிரமாணம்** உண்டாக்குவதும், ஒரு விஷயத்தை வைத்துக்கொண்டு பொதுப்பிரமாணத்தை அநுமானிப்பதும் தப்பிதமாகும். அவ்வாக்கியத்தை விரித்துரைத்து 'ஒருவன் பரிசுத்தனா யிருக்கிறானென்றால் **முழுவதுமே** பரிசுத்தனாயிருக்கிறான்' என்று சொல்லும் இந்த அநுமானம் சரியானதல்ல. கிறிஸ்துவுக்குள்ளான குழந்தை ஒவ்வொன்றும் பரிசுத்தமாயிருந்தும் பூரண பரிசுத்தமுள்ளதல்ல. அவன் பாவத்தினின்று இரட்சிக்கப்பட்டும் முழுவதும் இரட்சிக்கப்படவில்லை. பாவம் **ஆளாவிட்டாலும்** பாவம் **அவனுக்குள் இருக்கிறது.** வாலிபர் பிதாக்களின் விஷயம் எப்படியிருந்தபோதிலும் குழந்தைகளிடத்திலாவது பாவமில்லை யென்றெண்ணினால் தேவனுடைய பிரமாணத்தின் உயரம் ஆழம் நீளம் அகலத்தை நீ கவனிக்கவில்லை யென்பது நிச்சயம். (அந்தப் பிரமாணம் அப். பவுல் 1 கொரி. 13-ல் சொல்லியிருக்கிற அன்பின் பிரமாணமே.) இப்பிரமாணத்துக்கு விலகுவதும் அதற்கு இணங்காதிருப்பதும் **பாவமே.** இருதயத்திலாவது ஜீவியத்திலாவது இந்தப் பிரமாணத்திற்கு இணங்காதிருந்த விசுவாசிகள் இல்லை யென்கலாமா? வயது முதிர்ந்த கிறிஸ்தவனின் விஷயம் எத்தன்மையானதென்பதை நாம் இப்போது விவரிக்கவேண்டியதில்லை. ஆயினும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளா யிருக்கிற ஒவ்வொருவரின் நிலைமையும் இதுவே என்றெண்ணிக்கொள்ளுகிறவன் மனுஷ சுபாவத்தை அறியாதவனென்றே சொல்லவேண்டும்.

4. ஆக்ஷேபனை. விசுவாசிகள் 'ஆவியின்படி நடக்கிறார்கள்' (ரோ. 8: 1.). பரிசுத்தாவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணுகிறார். ஆகையால் அவர்கள் பாவ தோஷத்தினின்றும், அதின் வல்லமையினின்றும், சுருக்கிச் சொன்னால், பாவ சுபாவத்தினின்றும் (the being of sin) விடுதலை யடைகிறார்கள்.

**நிராகரம்.** இவைகள் ஒரேவிஷயம் என்றாற்போல இவைகளை ஒன்றாய் இணைத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால் இவைகள் ஒன்றல்ல. **பாவதோஷம்** வேறு, பாவத்தின் **வல்லமை** வேறு, பாவ **சுபாவம்** வேறு.

விசுவாசிகள் பாவதோஷத்தினின்றும், அதின் வல்லமையினின்றும் விடுதலை யடைகிறார்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் பாவமுள்ள சுபாவத்தினின்று விடுதலை யடைந்திருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இந்த வேத வசனங்களைக்கொண்டு அதை ரூபிக்கவும் முடியாது. ஒருவனுடைய இருதயத்தில் தேவாவி வாசம்பண்ண அவன், 'ஆவியின்படியே நடக்கக்கூடும்.' அப்படியிருந்தும் 'மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறதென்றே' உணருகிறான்.

5. ஆக்ஷேபனை. 'சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது' (கொலோ. 1: 24.). இதினால் அதின் அவயவங்கள், எல்லா அசுசியும் நீங்கக் கழுவப்பட்டிருக்கின்றனவென்று கருத்தாகிறது. மற்றப்படி கிறிஸ்துவும் பேவியாளும் ஐக்கியமாயிருப்பதாகவல்லவா அருத்தமாகும்?

நிராகரம். அப்படியாகாது. கிறிஸ்துவின் ஞான சரீரமாயிருக்கிறவர்கள் மாம்சம் ஆவிக்கு விரோதமாக இன்னும் இச்சிக்கிறதென்று உணர்வதினாலே பிசாசோடாவது தாங்கள் எதிர்த்து ஜெயிக்கிற பாவத்தோடாவது கிறிஸ்துவுக்கு ஐக்கியமுண்டென்று அர்த்தப்படுத்தலாகாது.

6. ஆக்ஷேபனை. 'கிறிஸ்தவர்கள் தீட்டுள்ளதொன்றும் பிரவேசிக்கக்கூடாத பரம எருசலேமினிடத்திற்கல்லவோ வந்திருக்கிறார்கள்?' (எபி. 12: 22.)

நிராகரம். அது மெய்தான். அவர்கள் பரம எருசலேமினிடத்திற்கு மாத்திரமா, 'ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும் பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும்' வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

'விண்ணோர்-மண்ணோர் யாவுமே
ஓர் மகா குடும்பமே.'

அவர்கள் 'ஆவியின்படியே' நடக்குங் காலத்தில் பரிசுத்தரும், தீட்டற்றவர்களுமா யிருப்பது மெய்யே. ஆயினும் தங்களுக்குள் வே



றொரு பிரமாணம் இருக்கிறதென்றும் அது ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறதென்றும் அறிகிறார்கள்.

7. ஆக்ஷேபனை. கிறிஸ்தவர்கள் தேவனோடு ஒப்புரவானவர்கள். அவர்களிடத்தில் எவ்வளவேனும் மாம்ச சிந்தை யிருக்குமாயின் ஒப்புரவாகியிருக்க மாட்டார்களே, எப்படியென்றால் மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. ஆகையால் அது முற்றிலும் அழிந்தாலன்றி ஒப்புரவாகுதல் கூடியதல்ல.

நிராகரம். 'சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலமாய் நாம் தேவனோடு ஒப்புரவாகி யிருக்கிறோம்.' அந்நிமிஷமுதல் தேவனுக்கு விரோதமான பகையாகிய ஜென்மக்கேடு நமது பாதத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமுதல் நமதுபேரில் மாம்சத்துக்கு அதிகாரமில்லை. அதிகாரமில்லையானாலும் மாம்ச சிந்தை இன்னும் இருக்கிறதே. அது தேவாவிக்கு விரோதமாய் இச்சித்து தன் இயற்கையான சுபாவப்படி தேவனுக்கு விரோதமான பகையாகவே யிருக்கிறது.

8. ஆக்ஷேபனை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்களே. (கலா. 5: 24.)

நிராகரம். அறைந்திருப்பது நிச்சயந்தான். ஆயினும் அது இன்னும் அவர்களுக்குள் ளிருந்துகொண்டு சிலுவையை விட்டுத் தப்பிக்கொள்ள முயற்சிசெய்கிறது. 'அவர்கள் பழைய மனுஷனையும், அவன் செய்கைகளையும் களைந்துபோட்டவர்களாச்சுதே' (கொலோ. 3: 9.) என்றால் களைந்து போட்டது மெய்யே. முன் கூறிய கருத்தின்படி பழையவைகள் ஒழிந்துபோனதும் எல்லாம் புதிதானதும் மெய்யே. இவைபோன்ற நூற்றுக்கணக்கான வசனங்களை இன்னும் எடுத்துரைத்தாலும், அவை யாவுக்கும் இந்த ஒரே மறுமொழி தான் சொல்லத்தக்கது. சபை பரிசுத்தமும், பிழையற்றதுமா யிருக்கும்படிக்கு கிறிஸ்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே. 5: 25–27.) என்றால், முடிவில் இந்தச் சபை அப்படித்தானிருக்கும். ஆனால் ஆதிமுதல் இம்மட்டும் அது அப்படி யிருந்ததில்லை.

9. ஆக்ஷேபனை. நமது அனுபவத்தைப் பார்ப்போம். நீதிமான்களாக்கப்பட்ட யாவரும் நீதிமான்களாக்கப்பட்ட நேரத்தில் எப்பாவத்தினின்றும் விடுதலையடைந்ததாகக் காண்கிறார்களே.

**நிராகரம்.** இது சந்தேகம். அப்படிக் கண்டுகொள்ளுகிறதானாலும் அதற்குப்பின் எப்போதும் அப்படியே யிருக்கிறதாகக் காண்கிறார்களா? அப்படி யில்லையென்றால் இவ்வாக்ஷேபனையில் உபயோகமில்லை. இதற்கு 'அப்படிக் கண்டுகொள்ளாவிட்டால் அது அவர்கள் தப்பிதம்' என்றால் அப்படிச் சொல்வது போதுமா? சொன்னதை ரூபிக்கவேண்டும், அல்லவா?

10. ஆக்ஷேபனை. 'இயற்கைப்படி ஒருவனிடத்தில் பெருமையிருக்க அவன் பெருமைகொள்ளாமலும் கோபமிருக்க அவன் கோபங்கொள்ளாமலு மிருப்பது கூடியதா?'

**நிராகரம்.** ஒருவன் பெருமைகொண்டு சில விஷயங்களில் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணி அந்த விஷயத்தில்மாத்திரம் பெருமையுள்ளவனா யிருக்கலாம். ஆனாலும் அவன் வழக்கமாய்ப் பெருமையற்றவனா யிருக்கக்கூடும். அப்படியே அவனுக்குக் கோபம் உண்டாகலாம். கடுமையான கோபத்துக்கு உட்படும்படியான சுபாவமு மிருக்கலாம். அப்படியிருந்தும் அவன் கோபத்துக்கு இடங்கொடா திருக்கக்கூடும். அப்படியானால் சாந்தமும், தாழ்மையும்மாத்திரம் இருக்கிற இருதயத்தில் கோபமும், பெருமையு மிருப்பது கூடியதா? என்று கேட்டால், கூடியதல்ல. ஆயினும் சாந்தம், தாழ்மை மிகுந்திருக்கிற அதே இருதயத்தில் சற்றுக் கோபமும் பெருமையு மிருப்பது கூடியதே.

'இக்குணங்கள் இருதயத்திலிருப்பினும் அவைகள் ஆளமாட்டாது என்று சொல்லுவது வீண், ஏனென்றால் பாவத்தின் ஆளுகை எவ்விடத்திலில்லையோ, அவ்விடத்தில் எவ்வித பாவமு மிராது. அது எவ்வளவேனுமிராது. ஏனென்றால் பாவத்தின் தோஷமும், அதின் வல்லமையும் பாவத்துக்குரிய விசேஷித்த லட்சணங்கள். ஆகையால் இவைகளி லொன்றிருச்கும் இடத்தில் எல்லா மிருக்கவேண்டியதே' என்று சொல்லலாம்.



'பாவத்தின் ஆளுகை யில்லாதவிடத்தில் எத்தன்மையான பாவமு மிராது. அது எவ்வளவாயினு மிராது' என்று சொல்லுவது மகா ஆச்சரியம். சுருதி, யுத்தி, அனுபவமாகிய இம்மூன்றுக்கும் இது முற்றிலும் விரோதமாயிருக்கிறது. பிறர் நம்மை நிந்திப்பதினிமித்தம் கோபங்கொள்ளுவது பாவம், அது அன்பின் பிரமாணத்துக்கு விகற்பமானது. இது எத்தனையோமுறை என்னிடத்தில் இருந்திருக்கிறது. என்றாலும் அது என்னை ஆண்டதுமில்லை, ஆளுகிறதுமில்லை.'

தோஷம், வல்லமை என்பவைகள் பாவத்தின் முக்கிய லட்சணங்கள் என்றும், அவைகளில் ஒன்றிருந்தால் எல்லாம் இருக்கவேண்டுமே என்றும் சொன்னால், இருக்கவேண்டியதில்லை; எப்படியென்றால் இப்போது காட்டின திருஷ்டாந்தத்தின்படி என்னிலுண்டாகும் கோபத்துக்குச் சற்றென்கிலும் இடங்கொடாதபட்சத்தில், என்மேல் குற்றமில்லை. இதினிமித்தம் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பும் வராது. மேலும் இந்த விஷயத்தில் இதற்கு வல்லமையு மில்லை. இது 'ஆவிக்கு விரோதமாய் இச்சித்தும்' அதை மேற்கொள்ளமாட்டாது. ஆகவே, தோஷமும் வல்லமையும் இல்லாவிடினும் பாவம் இருக்கிறதென்று இவ்விஷயத்தில் அறிகிறோம். இப்படி எத்தனையோ ஆயிரம் திருஷ்டாந்தங்கள் சொல்லலாம்.

11. ஆக்ஷேபனை. விசுவாசியினிடத்தில் பாவமிருக்கிறது என்று எண்ணுவது அவனுக்குப் பயத்தையும், அதைரியத்தையும் உண்டாக்கத்தக்கது. இப்படி எண்ணுவதினால் பாவம் நமது சக்தியைத் தன் கைவசமாக்கி, நமதிருதயத்தை அநியாயமாய்ப் பறிமுதல் செய்து அதில் நமது மீட்பருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறதாக அர்த்தமாகுமே.

**நிராகரம்.** அப்படி அர்த்தமாகாது. சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனுஷன் தன்னை அறைந்தவர்களைத் தன் பெலத்துக் குட்படுத்துவது கூடியதா? அதுபோல, நம்மில் பாவமிருக்கிறதென்று சொல்லுவதினால் பாவம் நமது பெலத்தைத் தன் கைவசமாக்கி யிருக்கிறதென்று அர்த்தப்படுத்தக் கூடாது. அப்படியே பாவம் நமதிருதயத்தை அநியாயமாய் அபகரித்து ஆளுகிறதென்றும் அர்த்தமாகாது. நமதிருதயத்தை அபகரித்தாளுகிற எதிரி சிம்மாசனத்தினின்று தள்ளப்பட்

—டிருக்கிறான். முன் ஆளுகைசெய்த இடத்திலிருக்கிறான் என்பது மெய்யாயினும், இப்போது சங்கிலியினால் கட்டப்பட்டவனாயிருக்கிறான். அதினால் ஒரு கருத்தின்படி போர் நடத்துகிறான். என்றாலும் வரவரப் பலட்சயமடைகிறான். விசுவாசியோ, பெலத்தின் மேல் பெலமடைந்து ஜெயிக்கிறவனாகவும், ஜெயிப்பவனாகவும் முன்னேறிச் செல்லுகிறான்.

12. ஆக்ஷேபனை.—'என்ன சொல்லியும் என் மனதிற்குத் திர்ப்தியில்லை.' எவனிடத்தில் பாவமிருக்கிறதோ அவன் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். ஆகையால் ஒருவன் பாவத்துக்கு அடிமையாயிருக்க அவனை நீதிமானாக்கப்பட்டவனாக எண்ணிக்கொள்ளலாமா? 'மனிதருள்ளத்தில் பெருமை, கோபம், அவிசுவாசமிருந்தும் அவர்கள் நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களா யிருக்கலாமென்று ஒப்புக்கொள்ளுகிறதானால், அல்லது நீதிமான்களாக்கப்பட்ட யாவரிடத்திலும் இவைகள் சில காலமாவது உண்டு என்று சாதிக்கிறதாயிருக்குமானால், விசுவாசிகளில் அனேகர் பெருமையும், கோபமும், அவிசுவாசமு முள்ளவர்களாயிருப்பது ஆச்சரியமா?'

நிராகரம்.—நீதிமானாக்கப்பட்ட எவனும் பாவத்திற்கு அடிமையென்று நான் எண்ணுகிறதில்லை. ஆயினும் நீதிமான்களாக்கப்பட்ட எல்லாரிடத்திலும் சில காலமாவது பாவமிருக்கிறதென் றெண்ணுகிறேன்.

இதற்கு ஒருவன் 'ஒரு விசுவாசியினிடத்தில் பாவமிருக்குமாகில் அவன் பாவியே. திருஷ்டாந்தமாக, பெருமை யிருக்குமாகில் அவன் பெருமையுள்ளவன். சுயசித்த மிருக்குமாகில் அவன் அகங்காரி. அவிசுவாசமிருக்குமாகில் அவன் அவிசுவாசி. ஆகவே அவன் விசுவாசியல்ல. அப்படியானால் மறுஜனனமடையாத அவிசுவாசிகளுக்கும் இவனுக்கும் பேதம் என்ன?' என்று சொன்னால் இதுவும் வாய்ச் சம்பிரதாயமே. எப்படியென்றால், அவனிடத்தில் பாவம், பெருமை, சுயசித்தமிருக்குமாகில், பாவம் பெருமை சுயசித்தம் உண்டென்றே அர்த்தமாகிறது. இதை யார் மறுக்கக்கூடும். இக்கருத்தின்படி அவன் பெருமையும் அகங்காரமு முள்ளவன்தான். ஆகிலும் அவிசுவாசிகளைப் பெருமையுள்ளவர்கள் அகங்காரிகள் என்று சொல்லுங் கருத்



தில் இவனைச் சொல்லக்கூடாது. அதாவது, பெருமை சுயசித்தம் ஒரு அவிசுவாசியை ஆளுவதுபோல் இவனை ஆளுகிறதில்லை. மறுஜெனனம் அடையாதவர்களுக்கும் இவனுக்கும் இதில்தான் வித்தியாசம். அவர்கள் பாவத்துக்குக் கீழ்ப்படிகிறார்கள். இவன் பாவத்துக்குக் கீழ்ப்படிகிறதில்லை. இருவரிடத்திலும் மாம்சசிந்தை யிருக்கிறது. ஆனால் மறுஜெனன மடையாதவர்கள் 'மாம்சத்தின்படி நடக்கிறார்கள்.' இவனோ 'ஆவியின்படியே நடக்கிறான்.'

அப்படியிருக்க 'விசுவாசியினிடத்தில் அவிசுவாசம் இருப்பதெப்படி' என்று கேட்டால், 'அவிசுவாசம்' என்னும் பதத்துக்கு ஈரர்த்தமுண்டு. விசுவாசமின்மை யென்றாவது, அற்பவிசுவாசம் என்றாவது பொருள்படும். ஒன்று விசுவாசமின்மையையும் வேறொன்று பெலவீன விசுவாசத்தையும் குறிக்கும். முந்தின கருத்தின்படி விசுவாசியினிடத்தில் அவிசுவாசமில்லை. பிந்தின கருத்தின்படி கிறிஸ்துவுக்குள் குழந்தைகளான யாவரிடமும் அவிசுவாசம் உண்டு. அவர்களுடைய விசுவாசம் பொதுவாய்ச் சந்தேகத்தோடும் பயத்தோடும் கலந்திருக்கிறது. அதாவது பிந்தின கருத்தின்படி அது அவிசுவாசத்தோடு கலந்திருந்திருக்கிறது. 'அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள்' என்றும் 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்' என்றும் நமதாண்டவர் சொல்லியிருக்கிறார். இதில், விசுவாசிகளிடத்தில் அவிசுவாசமிருந்ததாகத் தெரிகிறது. அவர்களிடத்தில் கொஞ்ச விசுவாசமும் அதிக அவிசுவாசமு மிருந்தது.

13. ஆக்ஷேபனை.—விசுவாசியினிடத்தில் பாவமிருக்கிறது, அதாவது விசுவாசியினுடைய இருதயத்தில் பாவமிருக்கையிலேயே அவன் தேவதயவைப் பெற்றவனாயிருக்கக்கூடும் என்கிற இந்தக் கொள்கை மனிதர் பாவத்தில் நிலைத்திருக்கும்படி தைரியத்தை யுண்டுபண்ணுமே.

நிராகரம்.— இத்தாஷ்டாந்தத்தைத் திட்டமாய் அறிந்துகொண்டால் இப்படிப்பட்ட தவறுதலான அநுமானம் உண்டாகாது. ஒருவன் தனக்குள் பாவமிருக்கிறதென்று உணர்ந்தபோதிலும் அவன் தேவதயவைப் பெற்றவனாயிருக்கக்கூடும். பாவத்துக்கு இடங்கொடுப்பானாகில் அதைப் பெற்றவனாயிருக்க முடியாது. ஒருவனிடத்தில்

**பாவமிருப்பதினால்** தேவதயவு ஒழிந்துபோகாது. ஆனால் பாவத்துக்கு இடங்கொடுப்பானாகில் அதை இழந்துவிடுவான். உன்னிலுள்ள 'மாம்சம் ஆவிக்கு விரோதமாய் இச்சித்த' போதிலும் நீ தேவனுடைய பிள்ளையாயிருக்கக்கூடும். 'நீ மாம்சத்தின்படி நடப்பாயானால்' நீ பிசாசின் பிள்ளை. ஆகவே இந்த உபதேசம் பாவத்திற்குக் **கீழ்ப்படிவதற்கு** நம்மைத் தைரியப்படுத்தாமல் நமது முழுப்பலத்தோடும் அதை எதிர்க்கும்படியே நம்மைத் தைரியப்படுத்துகிறது.

V. 1. முன் சொன்னவைகளின் தொகுப்பு. ஒருவன் நீதிமானாக்கப்பட்ட பின்னும் அவனிடத்தில் ஜென்ம சுபாவம், கிருபை என்கிற ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு பிரமாணங்களிருக்கின்றன. அப். பவுல் இவைகளை மாம்சம் என்றும் ஆவி என்றும் சொல்லுகிறான். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறவர்கள் தங்கள் விசுவாசத்தின் அளவுக்குத் தக்கதாக ஆவிக்குரியவர்கள் ஆயினும் ஓரளவில் மாம்சத்துக்குரியவர்களே. ஆதலால் பிசாசு, உலகம், மாம்சம் என்பவைகளுக்கு விரோதமாய் விழித்திருக்கும்படி விசுவாசிகளுக்குப் பலமுறையும் புத்திசொல்லியிருக்கிறது. எக்காலத்திலுமுள்ள தேவனுடைய பிள்ளைகளின் அனுபவமும் இதற்கொத்திருக்கிறது. தங்களிடத்தில் இந்தச் சாட்சியிருக்கிறதாக அவர்கள் காணும்போதே தேவனுடைய சித்தத்துக்கு முற்றிலும் இணங்காத ஒரு சித்தம் தங்களிடமிருப்பதாகவும் காண்கிறார்கள், தாங்கள் அவருக்குள்ளிருப்பதாக அறிந்திருக்கிறார்கள். ஆயினும், அவரைவிட்டு எளிதில் விலகிப்போகக்கூடிய இருதயமும், அநேக சமயங்களில் தீமைக்குச் சாயும் மனமும், நன்மைக்குப் பின்வாங்கும் சுபாவமும் தங்களிடத்திலிருக்கிறதென்று உணருகிறார்கள். இதற்கு விரோதமான உபதேசம் முற்றிலும் நூதனமாய் நுழைந்தது. நமதாண்டவர் இப்பூலோகத்துக்கு வந்ததுமுதல் சின்செண்டார்வ் (Zinzendorf) பிரபுவின் காலம்வரையில் திருச்சபை இவ்வுபதேசத்தைக் கேள்விப்படவேயில்லை. இவ்வுபதேசத்தினால் பல தீமைகள் உண்டாகக்கூடியது. நம்மை மோசம் பண்ணுகிற துர்ச்சுபாவத்தினிமித்தம் நாம் பயந்து விழித்திருக்கவேண்டியவர்கள். இவ்வுபதேசமோ நம்மை விழித்திருக்க விடாமல், அக்கேடான இயல்பு நமது இருதயத்தில் இருந்தபோதிலும் அது நம்மை விட்டுப் போய்விட்டது



என்று சொல்லுகிறது. அது பெலவீன விசுவாசிகளின் கேடகத்தைப் பறித்தெறிந்து அவர்கள் விசுவாசத்தைக் கவிழ்த்து, உலகம், மாம்சம் பிசாசென்கிற முச்சத்துருக்களினாலுமுண்டாகும் அபாயங்களுக்கு அவர்கள் உட்படும்படி விட்டுவிடுகிறது.

**2.** ஆகையால், 'பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதும்' அவர்களால் எழுதப்பட்டுப் பின் சந்ததிக்கு அறிவிக்கப்பட்டதுமான இந்த நல் உபதேசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமாக. கிறிஸ்துவினிடத்தில் மெய் விசுவாசம் வைத்த அந்நேரத்திலே நாம் புதுப்பிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டபோதிலும் அச்சமயத்தில் நாம் முழுவதுமாய்ப் புதிதாகிச் சுத்திகரிக்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப்படுகிறதில்லை. துர்ச்சுபாவமாகிய மாம்சம் தாழ்த்தப்பட்டபோதிலும் இன்னும் அது நமக்குள்ளேயிருந்துகொண்டு ஆவிக்கு விரோதமாய்ப் போர்செய்கிறது என்பதே அந்த உபதேசம். அது எவ்வளவுக்கு அதிகமாய்ப் போராடுகிறதோ அவ்வளவுக்கு அதிக ஜாக்கிரதையுடன் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடக்கடவோம்; அவ்வளவுக்கு அதிக கவனமாய் நமக்குள்ளிருக்கும் சத்துருவுக்கு விரோதமாக 'விழித்திருந்து ஜெபிப்போமாக.' மாம்சத்தோடும் இரத்தத்தோடும் துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு. இவைகளோடு போராடினபோதிலும் தீங்குநாளில் அவைகளை நாம் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு ஜாக்கிரதையுடன் 'தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்வோமாக.'

## வினாக்கள்.

**1.** விசுவாசிகளினிடத்தில் பாவமுண்டென்கிற கொள்கை கிறிஸ்தவ சபைகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையா?

ஒப்புக்கொள்ளப்பட்டதே.

பிரிவு. I. 1, 2, 3, 4. பார்க்க.

**2.** விசுவாசிக்கும் அவிசுவாசிக்குமுரிய பேதம் தெரியாதவண்ணம் இவ்விஷயத்தில் அளவுகடந்து போகிறவர்களுண்டா?

'இவ்விஷயத்தில் சில சபைகள் அளவுகடந்து போகிறதாகவும் தோன்றுகிறது.'

பிரிவு. I. 4. பார்க்க.

3. 'நல்லெண்ணமுள்ள' எவராவது இத்தவறுதலான கொள்கைக்கு விலக விரும்பி வேறொரு தவறுதலுக் குட்பட்டதுண்டா?

உண்டு.

பிரிவு. I. 5. பார்க்க.

4. இதில் ஜெர்மனியர் எவ்வித மோசத்திற் குட்பட்டார்கள்?

பிரிவு. I. 6. பார்க்க.

5. மனிதன் நீதிமானாக்கப்படும் சமயத்திலேயே பாவத்தை உடையவனாயிருக்கும் நிலைமையினின்றும் அதாவது பாவ சுபாவமுள்ளவனாயிருக்கும் நிலைமையினின்றும் விடுதலையடைகிறான் என்கிற அபிப்பிராயம் உற்பத்தியான தெவ்வாறு?

பிரிவு. I. 7. பார்க்க.

6. ஒருவன் தேவனுடைய பிள்ளையான பின்னும், பாவம் அவனுக்குள் ஒருவாறிருக்கக்கூடும் என்பதை உவெஸ்லி ஐயர் வேதத்தைக்கொண்டு எவ்வாறு ரூபிக்கிறார்.

பிரிவு. III. 2, 3, 4, 5. பார்க்க.

7. கிறிஸ்துவும் பாவமும் ஏககாலத்தில் ஒரே இருதயத்தில் இருக்கக்கூடுமா?

'இருக்கக்கூடும்.'

பிரிவு. III. 8. பார்க்க.

8. விசுவாசியினிடத்திலுள்ள பாவத்திற்கும் மறுபிறப்படையாதவனுடைய பாவத்திற்கும் பேதமுண்டா?

பாவம் ஆளுகிற இடத்தில் கிறிஸ்து ஆளமாட்டார் என்பது மெய்.

பிரிவு. III. 8. பார்க்க.

9. நீதிமானாக்கப்படும் அச்சமயந்திலேயே, மனிதன் தன்னிலிருக்கும் பாவத்தினின்று முற்றிலுமாய் விடுதலையடைகிறான் என்கிற தப்பான உபதேசத்தைச் சொன்னவர் யார்?



சின்செண்டார்வ் பிரபு.

பிரிவு. III. 9. பார்க்க.

10. கிறிஸ்துவுக்குள் குழந்தைகளா யிருக்கிறவர்களின் நிலைமையை உவெஸ்லி ஐயர் நான்கு வார்த்தைகளில் குறித்திருக்கிறார். அவை எவை?

'மெய்யாய்ப் புதிப்பிக்கப்பட்டபோதிலும் பூரணமாய்ப் புதிப்பிக்கப்படவில்லை.

11. அப்படியானால் ஏககாலத்தில் ஒருவனுக்குப் புது இருதயமும் பழைய இருதயமு மிருக்கக்கூடுமா?

'இருக்கக்கூடும்.

12. சின்செண்டார்வ் பிரபு இவ்விஷயமாய் உரைத்திருக்கும் நியாயங்கள் யாவும் தவறுதலானவை என்று காட்டும்படி உவெஸ்லி ஐயர் சொல்லும் நியாயங்களெவை?

பிரிவு. IV. 3. பார்க்க.

13. ஒருவனிடத்திலிருக்கும் பாவத்தை மூன்றுவிதமாய்ப் பேதப்படுத்தலாம். அவை எவை?

'பாவதோஷம் வேறு, பாவத்தின் வல்லமை வேறு, பாவ சுபாவம் வேறு.'

14. தோஷமும் வல்லமையு மில்லாவிடினும் பாவமிருக்கக் கூடுமா?

கூடும் என்பதற்கு எத்தனையோ ஆயிரம் திருஷ்டாந்தங்கள் சொல்லலாம்.

பிரிவு. IV. 10. பார்க்க.

15. சின்செண்டார்வ் பிரபுவின் உபதேசத்தினால் விளையும் தீமை என்ன?

'நம்மை மோசம் பண்ணுகிற நமது துர்ச்சுபாவத்தினிமித்தம்...... ...............விழித்திருக்க விடாமல்' ஐ.

பிரிவு. V. 1. பார்க்க.

# ஒன்பதாம் பிரசங்கம்.

## THE REPENTANCE OF BELIEVERS.

## விசுவாசிகளின் மனந்திரும்புதல்.

'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.'

*மாற். 1: 15.*

1. மனந்திரும்புதலும் விசுவாசமும் மெய்ப்பக்திக்கு வாசலேயன்றி வேறல்லவென்றும், ஒருவன் கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பித்து தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிற அக்காலத்தில்தான் இவைகள் அவனுக்கு அவசியமானவை என்றும் பொதுவாய் எண்ணிக்கொள்ளுகிறதுண்டு. எபிரெயர் நிருபத்தை எழுதின அப்போஸ்தலனும் இதை உறுதிப்படுத்துகிறாற்போல் தோன்றுகிறது. எப்படியெனில், அவன் எபிரெய கிறிஸ்தவர்களைப் பார்த்து 'பூரணராகும்படி' புத்தி சொல்லுகையில் 'கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம் என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடவேண்டாம்' என்று கற்பிக்கிறான். இதைக் கவனிக்கையில் 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடரும்பொருட்டு' ஆரம்பத்தில் தாங்கள் அதிகமாய்ச் சிந்தித்துவந்த இவ்வுபதேசங்களை இனிமேல் ஓரளவாயாவது விட்டுவிட வேண்டுமென்பதே இதின் கருத்தெனத் தெரிகிறது.

2. மனந்திரும்புதலும் விசுவாசமும் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பகாலத்தில் இருக்கவேண்டியதென்பது உண்மையே. அந்த மனந்திரும்புதல் யாதெனில், நமது பாவத்தன்மையையும் நமது பாவதோஷத்தையும் நமது சக்தியின்மையையும் உணர்ந்துகொள்ளுதலேயாம்.



நமதாண்டவர் 'நமக்குள்ளிருப்பதாக' சொல்லுகிற தேவனுடைய இராஜ்யத்தை நாம் ஏற்றுக்கொள்ளுமுன் நமக்குள் உண்டாகவேண்டிய மனந்திரும்புதல் இதுவே. அந்த விசுவாசம் யாதெனில் 'நீதியும் சமாதானமும் பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷமுமாகிய தேவனுடைய இராஜ்யத்தை' பெற்றுக்கொள்ளுவதற்கு ஏதுவாயிருக்கிற விசுவாசமேயாம்.

3. ஆயினும் இந்த மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் தவிர வேறொரு மனந்திரும்புதலும் விசுவாசமுமுண்டு. இவ்விடத்தில், மனந்திரும்புதல் விசுவாசம் என்னும் பதங்களை முன் சொன்ன கருத்திலுமல்ல, அதற்கு முற்றிலும் விகற்பமான கருத்திலுமல்ல, சற்று வித்தியாசமான கருத்தில் உபயோகித்திருக்கிறோம். இந்த மனந்திரும்புதலும் விசுவாசமும் நாம் சுவிசேஷத்தை விசுவாசித்த பின் இருக்கவேண்டியவைகளாம். 'சுவிசேஷத்தை விசுவாசித்த' பின் மாத்திரமல்ல, இதற்குப் பின்னுள்ள கிறிஸ்தவ ஜீவியம் முழுவதிலுமே இவை நம்மிடத்தில் காணப்படவேண்டியவைகளாம். மற்றப்படி 'நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில்' ஓட முடியாது. நாம் தேவனுடைய இராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதற்கு, முந்தின விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியமாயிருக்கிறது போலவே இந்த மனந்திரும்புதலும் விசுவாசமும் நாம் கிருபையில் வளர்ந்து நிலைத்திருப்பதற்கு அவசியமாயிருக்கிறது.

நீதிமான்களாக்கப்பட்டபின் நாம் மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டுமென்பதின் கருத்தென்ன? இது மகா முக்கியமான கேள்வி, இதை நுட்பமாய்ச் சிந்திப்பது தகுதி.

### I. நாம் மனந்திரும்ப வேண்டுமென்பதின் கருத்தென்ன?

1. மனந்திரும்புதல் என்று சொல்லும்போது, நமது மனம் பாவத்தைவிட்டுப் பரிசுத்தத்துக்குத் திரும்புகிற உள்ளான மாறுதலைச் சாதாரணமாய்க் குறிக்கும். ஆனால் இப்பதத்துக்கு நாம் இப்பொழுது கொடுக்கிற கருத்து வேறே. நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அறிந்திருந்தும் இன்னும் தோஷிகளும் சக்தியற்ற பாவிகளுமாயிருக்கிறோமென்று நம்மை நாமே கண்டுகொள்ளுதல் என்

னும் கருத்தில் இதை உபயோகிக்கிறோம். இதுவும் ஒருவகையாய்த் தன்னை அறிகிற அறிவுதான்.

2. முதல் முதல் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்றுணர்ந்து, இயேசுவின் திரு இரத்தத்தினால் மீட்பைப் பெற்று நம்முடைய இருதயங்களில் தேவன்பு ஊற்றப்பட்டு நம்மில் அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட அக்காலத்தில் இனி நாம் பாவிகளல்லவென்றும், நமது பாவங்கள் யாவும் மூடப்பட்டதுமன்றி நிர்மூலமாயிற்றென்றும் எண்ணிக்கொள்ளுவது இயல்பு.

அக்காலத்தில் நமதிருதயங்களில் தீமை யிருப்பதாக நாம் உணராதபடியால் நம்மில் தீமையே யில்லை என்றும் எண்ணிக்கொள்ளுகிறோம். நல்நோக்கமுள்ள சிலர் அக்காலத்தில் மாத்திரமல்ல அதற்குப்பின் எக்காலத்திலும் தங்களிடத்தில் தீமையே யில்லை என்பதாகத் தப்பாய் எண்ணிக்கொள்வதுமுண்டு. தாங்கள் நீதிமான்களாக்கப்பட்டபோதே பூரண பரிசுத்தமடைந்ததாகவும் பாவித்துக்கொள்ளுகிறார்கள். அதுமாத்திரமா? சுருதி, யுக்தி, அநுபவம் இதற்கு மாறாயிருந்தும் இதையே யாவருக்கும் பொதுப்பிரமாணமாகச் சாதிக்கிறார்கள். நாம் நீதிமான்களாக்கப்பட்ட அப்போதே பாவம் முழுவதும் நிர்மூலமாகிவிட்டது என்றும், விசுவாசியின் இருதயத்தில் அப்புறம் பாவமில்லையென்றும், அந்நேரமுதல் விசுவாசியின் இருதயம் பாவமறச் சுத்திகரிக்கப்பட் டிருக்கிறதென்றும், உண்மையாய் நம்பி உறுதியாய்ச் சாதிக்கிறார்கள். 'விசுவாசிக்கிறவன் எவனும் தேவனால் பிறந்தவன்' என்றும், 'தேவனால் பிறந்தவன் எவனும் பாவஞ்செய்யான்' என்றும் நாம் தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறோம். ஆயினும் பாவம் அவனுக்குள்ளிருப்பதாக அவன் உணருகிறதில்லை என்று சொல்லமாட்டோம். பாவம் அவனை ஆளவில்லை யாயினும் அது அவனி லிருக்கவேயிருக்கிறது. அது நமதிருதயத்தில் இன்னும் இருப்பதாக உணருகிற உணர்வே நாம் இப்போது சொல்லிக்கொண்டுவருகிற மனந்திரும்புதலின் ஓர் முக்கிய பாகமாம்.

3. எப்படியெனில் பாவம் யாவும் தன்னைவிட்டுப் போய்விட்டதாக எண்ணிக்கொண்டவன் தன் இருதயத்தில் இன்னும் பெருமை



யிருப்பதாக வெகு சீக்கிரத்தில் உணர்ந்துகொள்ளுகிறான். அநேக விஷயங்களில் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணினதாகவும், தான் பெற்றுக்கொண்டவைகளினிமித்தம் தன்னையே புகழ்ந்துகொண்டதாகவும், அதைப் பெற்றுக்கொள்ளாதவன்போல் மேன்மை பாராட்டினதாகவும் உணருகிறான். அப்படியிருந்தாலும் தான் தேவனிடத்தில் தயவு பெற்றிருக்கிறதாக அறிகிறான். அவன் 'தன் விசுவாசமாகிய தைரியத்தை விட்டுவிட' மாட்டான். விட்டுவிடவும் கூடாது. 'அவன் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறான் என்று ஆவியானவர்தாமே 'அவனுடைய ஆவியுடனேகூட' இன்னும் சாட்சி கொடுக்கிறார்.

4. தேவ சித்தத்திற்கு விரோதமான சுயசித்தம் தன்னிடமிருப்பதாகவும் சீக்கிரத்தில் கண்டுகொள்ளுவான். மனுஷன் பகுத்தறிவுள்ளவன், ஆகையால் அவனுக்கோர் சித்தமு மிருக்கவேண்டியது அவசியம். இது மனுஷ சுபாவத்திற்குரிய முக்கிய லட்சணம். மனுஷ சுபாவத்திற்கு மாத்திரமல்ல பகுத்தறிவுள்ள எந்த வஸ்துவின் சுபாவத்திற்குமே உரியது. மகிமையுள்ள நமதாண்டவருக்குங் கூட மனுஷீக சித்தமிருந்தது. மற்றப்படி அவர் மனுஷனல்ல. ஆனால் அவருடைய மனுஷீக சித்தம் தன் பிதாவின் சித்தத்திற்குக் கீழடங்கினதாகவே யிருந்தது. எக்காலத்திலும் எச்சமயத்திலும் கொடிய துன்பத்திலுங்கூட 'என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று சொல்லக் கூடியவராயிருந்தார். ஆனால் கிறிஸ்துவில் மெய்விசுவாசம் வைத்திருக்கிற ஒரு விசுவாசி எப்பொழுதும் இப்படிச் சொல்ல முடியாது. தன் சித்தம் தேவசித்தத்திற்கு அடிக்கடி மேற்படுகிறதாகக் காண்கிறான். ஏதேனும் ஒரு விஷயம் தேவனுக்குப் பிரியமில்லாததாயிருந்தும் தன் சுபாவத்திற்குப் பிரியமாயிருக்குமாகில் அதைச் செய்யச் சித்தங்கொள்ளுகிறான். தான் செய்யும்படி தேவன் சித்தங்கொண்டிருக்கிற ஒரு விஷயம் தன் சுபாவத்திற்குப் பாரமாயிருப்பதினாலே அதைச் செய்யச் சித்தமற்றிருக்கிறான். தான் விசுவாசத்தில் நிலைத்திருக்குங் காலத்தில் தன் முழுப் பெலத்தோடும் இதற்கு எதிர்த்து நிற்கிறான் என்பது உண்மையே. இப்படி எதிர்த்துப் போராடுகிறதினாலேயே

அவனுக்குச் சுயசித்த மிருக்கிறதென்றும் அது தனக்கிருப்பதாகத் தனக்கே தெரியுமென்றும் அர்த்தமாகிறதல்லவா?

5. சுயசித்தம் பெருமை என்கிற இவை இரண்டும் விக்கிரக ஆராதனையைச் சேர்ந்தது. இரண்டும் தேவன்புக்கு நேர் விரோதமானவைகள். உலகநேசத்தைக் குறித்தும் இவ்வாறே சொல்லலாம். இது தங்களிடமில்லையென்று மெய் விசுவாசிகள்கூடச் சொல்லக்கூடியவர்களல்ல. அவர்கள் யாவரும் எக்காலத்திலாவது, எவ்வளவாயாவது, எவ்விதமாயாவது, இவ்வுலக நேசம் தங்களுக்குள் இருப்பதாக உணர்ந்திருக்கிறார்கள். விசுவாசி ஒருவன் 'மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்படுகிற' ஆரம்பகாலத்தில் அவன் தேவனைத்தவிர வேறொன்றையும் வாஞ்சிக்கிறதில்லையென்பது திண்ணம். 'உமது நாமமும், உம்மை நினைக்கும் நினைவும் என் ஆத்தும வாஞ்சையாயிருக்கிறது.' 'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? பூலோகத்தில் உம்மைத்தவிர வேறே விருப்பமில்லை' என்று அவன் உண்மையாய்ச் சொல்லக்கூடும். ஆனால் எப்போதும் அப்படிச் சொல்லக்கூடாது. நாளாவட்டத்தில், 'மாம்சத்தின் இச்சையாவது, கண்களின் இச்சையாவது, ஜீவனத்தின் பெருமையாவது' கொஞ்சநேரமாகிலும் தன்னிடம் திரும்பவும் வருவதாகக் காண்கிறான். இவ்வளவுதானா? அவன் இடைவிடாமல் விழித்திருந்து ஜெபிக்காவிட்டால் இச்சை மறுபடியும் தன்னில் உயிரடைவதாக அறிகிறான். உயிரடைவதாக மாத்திரமல்ல, அந்த இச்சையானது அவனைக் கீழே விழத்தள்ளி அவன் பெலன் ஒடுங்கிப்போகும்வரையில் அவனோடு போர் செய்கிறதாகவும் காண்கிறான். மிதமிஞ்சின பாசம் தன்னை அலைக்கழிப்பதாகவும் உணருகிறான். எப்படியெனில் பிள்ளையோ, பிதாவோ, புருஷனோ, மனைவியோ, 'அவன் பிராணனைப்போலிருக்கிற சிநேகிதனோ' யாராயிருந்தாலுஞ் சரி, சிருஷ்டிகரைப் பார்க்கிலும் சிருஷ்டியையே அதிகமாய் நேசிக்கும்படியான எண்ணமுண்டாகிறது. இன்னும் இதைப்போன்ற அநந்தமான லௌகீகப் பொருட்களையாவது, லௌகீக இன்பங்களையாவது, தான் விரும்புவதாக அவன் உணருகிறான். இவைகளின்பேரிலிருக்கிற பற்று எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு அவன் தன் சந்தோஷத்தைத் தேவனுக்குள் நாடித்



தேடாமல் அவரை மறந்துபோகிறான். அதினால் 'தேவப்பிரியனாயிராமல் சுகபோகப் பிரியனாகிறான்.' (2 தீமோ. 3: 4.)

6. ஒவ்வொரு நிமிஷமும் அவன் தன்னை ஆண்டுகொள்ளாவிட்டால் கண்களின் இச்சை தனக்குள் திரும்பவும் இருப்பதாகக் காண்பான். பெருமையும் அருமையுமான பொருட்களினால் தன்னைத் திருப்தி செய்யவேண்டுமென்கிற தகாத ஆசை உண்டாகிறது. இந்த இச்சையினால் அவனுடைய ஆத்துமாவுக்குண்டாகிற சோதனை எத்தனையோ ஏராளம். அழிவற்ற ஆத்துமாவின் தாகத்தைத் திருப்தி செய்யக்கூடாத துணிமணி தட்டுமுட்டுச் சாமான்முதலிய அற்ப பொருட்களின்மேலும் அவனுக்குத் தகாத விருப்பமுண்டாகக் கூடும். 'இனிவரும் உலகத்தின் பெலன்களை' (எபி. 6: 5.) ருசிபார்த்தபிறகும் 'உபயோகத்தினால் அழிந்துபோகிற பொருட்களை' மறுபடியும் இழிவாய் இச்சிப்பது இயல்பே. கண்களின் இச்சையில் ஒன்று விநோத காட்சியைப் பார்க்கும் விருப்பம். தாங்கள் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிந்திருக்கிறவர்கள் முதலாய் இந்த விருப்பத்தை ஜெயிப்பது எவ்வளவு கஷ்டம். இதைத் தங்கள் காலின்கீழ் மிதித்து ஒரு பொருள் நூதனமாயிருப்பதினிமித்தம் அதை அபேக்ஷியாதிருப்பது எளிதல்ல.

7. மேலும் ஜீவனத்தின் பெருமையை முற்றிலும் ஜெயிப்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு முதலாய் எவ்வளவோ கஷ்டம். உலகத்தார் கனம், கண்ணியம் என்று சொல்வதையே பரி. யோவான் ஜீவனத்தின் பெருமையென்று சொல்லுவதாகத் தோன்றுகிறது. இதுவே 'மனுஷரால் வரும் மகிமையை' விரும்பி அதில் சந்தோஷப்படுவதாம். இதுவே மற்றவர்களால் வரும் புகழ்ச்சியை விரும்பி ஆசிப்பதாம். புகழ்ச்சியை நாடுவதற்குத் தக்கதாய் இகழ்ச்சி உண்டாகும் என்கிற பயமும் கலந்தேயிருக்கும். வெட்கப்படக்கூடாதவைகளில் வெட்கப்படுவதும் இதற்குச் சம்பந்தமானதே. நாம் மேன்மை பாராட்டவேண்டியவைகளில் வெட்கப்படுகிறதில்லையா? மனுஷருக்குப் பயப்படுதலும் இதைச் சேர்ந்ததுதான். இது ஆத்துமாவுக்கு எண்ணிறந்த கண்ணிகளை விரிக்கும். இத்தன்மையான குணம் தன்னிடம் இல்லையென்று சொல்லக்கூடியவன் பலத்த விசு

வாசிகளுக்குள்ளும் உண்டோ? இவர்களுடைய இருதயத்தில் இன்னும் பாவ வேர் எடுபடாதிருப்பதினால் இவர்களும் பூரணமாயல்ல ஒருவாறாகமாத்திரம் 'உலகத்துக்குச் சிலுவையி லறையப்பட்டிருக்கிறார்கள்.'

8. தேவ நேசத்துக்கு விரோதமான இக்குணங்கள் நம்மிடமிருக்கிறாப்போல —பிறர் நேசத்துக்கு விரோதமான குணங்களும் நம்மிடம் இல்லையா? 'அன்பு தீங்கு நினையாது.' நம்மிடத்தில் தீங்கு நினைக்கும் சுபாவமே இல்லையோ? **எரிச்சலும் பொல்லாத சமுசயமும்** நம்மிடம் இல்லவே இல்லையோ? நியாயமின்றி பிறன்மேல் சந்தேகங் கொள்ளுகிறதில்லையா? இவ்விஷயங்களில் குற்றமற்றவனும் உண்டோ? சகோதர சிநேகத்துக்குப் பொருந்தாத வேறு குணங்களும் நினைவுகளும் தனக்குள் உண்டென்று சில வேளைகளில் உணராதவன் எவன்? **வன்மம், பகை, விரோதம்** இல்லையானாலும் **பொறாமை** கொஞ்சமேனுமில்லையா? விசேஷமாய் நாம் விரும்பியும் பெற்றுக்கொள்ள ஏதுவில்லாத நன்மையானவைகளையாவது நன்மையாய்த் தோன்றுகிறவைகளையாவது பிறர் அநுபவிக்கிறார்களாகில் அவர்கள்மேல் பொறாமை உண்டாகிறதில்லையா? நாம் அதிகமாய் நேசித்தவர்கள், அல்லது நம்மிடத்தில் அதிக நன்மையையும் சகாயத்தையும் பெற்றுக்கொண்டவர்கள் நமக்குத் தீமை செய்து அவமானமாய்ப் பேசும்போது நமக்குள் சற்றெனிலும் **கோபமுண்டா**கிறதில்லையோ? பிறர் செய்த அநியாயமும் நன்றிக்கேடும், **பழிவாங்கும் சுபாவத்தை** ஏவிவிட்டதில்லையா? 'தீமையை நன்மையினால் வெல்லுவதற்குப் பதிலாக' தீமைக்குத் தீமை செய்யும்படி விரும்பினதில்லையா? ஆகவே பிறன்பேரில் நமக்கிருக்கவேண்டிய அன்புக்கு மாறான எத்தனையோ பொல்லாப்பு இன்னும் நம்மிடத்திலிருக்கிறதாகவே இதினாலும் அறிந்துகொள்ளுகிறோம்.

9. **பொருளாசையானது** எத்தன்மையதாயும் எவ்வளவாயும் இருப்பினும் அது தேவ நேசத்துக்கும் பிறர் நேசத்துக்கும் விரோதமானதென்பது நிச்சயம். அதில் இருவிதமுண்டு. ஒன்று **பண ஆசை** (*Greek: philarguria*). 'இதுவே எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது.' மற்றது **பேராசை** (*Greek: pleonexia*) அதாவது



'பொருளை அதிகமாய்ச் சேர்க்கவேண்டுமென்கிற ஆசை.' தேவனுடைய உத்தம பிள்ளைகளுக்குள்ளும் இவ்விரண்டாசையும் அற்றவர்கள் எவ்வளவோ சொற்பம். மகாத்துமாவாகிய மார்டின் லூதர் (*Martin Luther*) தான் குணப்பட்டபின் மாத்திரமல்ல 'தான் பிறந்த காலம்முதல் ஒருகாலத்திலாயினும் தனக்குப் பொருளாசை உண்டானதில்லை' என்று சொன்னதுண்டு. அப்படியானால் (தேவனும் மனுஷனுமாயிருந்த நமதாண்டவரைத் தவிர) மனுஷர்களுக்குள் இவர் ஒருவர்தான் பொருளாசையற்றவர் என்று தாராளமாய்ச் சொல்லலாம். அதுமாத்திரமல்ல, குணப்பட்ட பின்னும் சிலகாலம் உயிரோடிருந்தவர்களில், பொருளாசை, விசேஷமாய், நாம் முன் சொன்ன பேராசை தனக்குள் கொஞ்சமேனும் இல்லாத மனுஷன் இருந்திருக்க மாட்டானென்று எண்ணுகிறேன். ஆகையால் நீதிமான்களாக்கப்பட்டவர்களி னிருதயத்திலும் பொருளாசை, பெருமை, சுயசித்தம், கோபம் என்பவைகள் உண்டென்று உறுதியாய்ச் சாதிக்கலாம்.

**10.** விசுவாசிகள் தங்கள் இருதயத்தில் பாவம் உண்டென்கிற அநுபவமுள்ளவர்களாய் இருப்பதினாலே, ரோமர் நிருபம், 7—ம் அதிகாரத்தின் பின்பாகத்தில் அப். பவுல் பாவத்தை உணர்ந்து நியாயப்பிரமாணத்துக் குட்பட்டிருக்கிறவர்களைக் குறித்துச் சொல்லியிருந்தும், கிறிஸ்துவிலுள்ள மீட்பைக்கொண்டு இலவசமாய் நீதிமான்களாகி கிருபைக் குட்பட்டவர்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறதாகச் சில பக்திமான்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் இப்படி எண்ணுவது ஒருவிதமாய் நியாயமே. எப்படியெனில், நீதிமான்களாக்கப்பட்டவர்களிடத்தில் கூட மாம்சத்துக்குரிய சிந்தை இன்னும் **ஒருவாறிருக்கிறது**. (அதினாலேதான் அப். பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைப் பார்த்து, 'நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறீர்கள்' என்று சொல்லுகிறான்). **பின்வாங்கிப் போகத்தக்கதும்** 'ஜீவனுள்ள தேவனை விட்டு விலகிப்போகக் கூடியதுமான' இருதயம் இன்னும் நீதிமான்களிடத்தி லிருக்கிறது. பெருமை சுயசித்தம் கோபம் பழிவாங்குதல் உலக சிநேகம்முதலிய சகல தீமைக்கும் நேராய்ச் சாயக்கூடிய இருதயம் அங்கே இருக்கிறது. பகையின் வேர் பூரணமாய் அற்றுப்போகவில்லை. அதை மூடியிருக்கும்

அடைப்பைத் திறந்துவிட்டால் ஒரு க்ஷணப்பொழுதில் அது மூளைத்தெழும்பும். இவ்விதமாக இருதயத்தின் சீர்கேடு மகா கொடியது. தேவனுடைய ஒளி வீசினாலன்றி அதின் கொடுமையைக் கண்டுகொள்ளுவது அசாத்தியம். இத்தன்மையான பாவங்கள் யாவும் தங்களிடத்தி லிருப்பதாக உணர்ந்துகொள்ளும் உணர்வே நீதிமான்களாக்கப்பட்டவர்களிடத்தில் இருக்கிற மனந்திரும்புதல்.

11. மேலும் பாவமானது நமது இருதயங்களில் இருப்பதாக நாம் உணர்ந்துகொள்ளுவதுபோலவே நமது வார்த்தைகள் கிரியைகள் யாவிலும் அது ஒட்டிக்கொண்டிருக்கிறதாகவும் உணர்ந்துகொள்ளவேண்டும். நமது வார்த்தைகள் பெரும்பாலும் பாவம் கலந்ததாயும் பாவம் நிறைந்ததாயும் இருக்கின்றனவென்று சொல்லவேண்டியது. அன்பற்ற சம்பாஷணை யெல்லாம் இத்தன்மையானதே. சகோதர சிநேகத்தினா லுண்டாகாத யாவும், அதாவது: 'மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று இருக்கிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' என்கிற இராஜரீகப்பிரமாணத்துக்குப் பொருந்தாத யாவும் இதைச் சேர்ந்ததே. பின்புறணி, கோட்சொல்லுதல், தீமை பேசுதல் அதாவது பிறர் குற்றங்களைக்குறித்து அவர்கள் இல்லாத இடங்களில் தூற்றுதல், முதலிய யாவும் இவ்வினத்தைச் சேர்ந்ததே. தான் இல்லாத இடங்களில் பிறர் தன் குற்றங்களை எடுத்துப் பேச யாருக்கும் பிரியமிராது. விசுவாசிகளுக்குள்ளும் இக்குற்றத்தில் சிறிதளவாகிலும் அகப்படாதவர்கள் மிகவும் சொற்பம். மரித்துப்போனவர்களையும் அருகில் இல்லாதவர்களையுங்குறித்து நன்மையேயன்றித் தீமை பேசாதே என்னும் முதுமொழியை எக்காலமும் அநுசரித்து வருகிறவர்கள் விசுவாசிகளுக்குள்ளும் அபூர்வம். இந்தப் பிரமாணத்தைக் கைக்கொண்டு வருகிறதாகவே வைத்துக்கொண்டாலும் பிரயோஜனமற்ற சம்பாஷணைக்கு விலகியிருக்கிறார்களா? இவைகள் யாவும் பாவமாயும் 'தேவனுடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்துகிறது' மாயிருக்கின்றன. அதுமாத்திரமல்ல 'மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கு ஒப்புவிக்கவேண்டுமே.'



12. அவர்கள் இடைவிடாமல் 'விழித்திருந்து ஜெபம் செய்கிறதினால்' இந்தச் சோதனைக்கு உட்படுகிறதில்லை என்றும்; அவர்கள் எப்போதும் தங்கள் வாய்க்குக் காவல் வைத்துத் தங்கள் உதடுகளின் வாசலைக் காத்துவருகிறார்கள் என்றும்; தங்கள் சம்பாஷணை முழுவதும் 'கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரம் ஏறினதாயும், கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுள்ளதாயும்' இருக்கும்படி முயற்சிக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுவோம். இவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தும் தினமும் அவர்கள் பிரயோஜனமற்ற சம்பாஷணைக் குட்படுகிறதில்லையா? அவர்கள் தேவனுக்கென்று பேச முயற்சிக்கிற சமயத்திலும் அவர்களுடைய வார்த்தைகள் கலப்பற்ற சுத்தமான வார்த்தைகளா யிருக்கின்றனவா? பேசும் நோக்கத்தில் பிசகு இருக்கிறதாக அவர்கள் காண்கிறதில்லையா? தேவனைப் பிரியப்படுத்தும்படிமாத்திரம் பேசுகிறார்களா? தங்களைப் பிரியப்படுத்தும்படியாகவும் பேசுகிறதில்லையா? தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி மாத்திரமா? தங்கள் சித்தத்தையும் நிறைவேற்றும்படி பேசுகிறதில்லையா? அப்படியே ஒரே நோக்கத்துடன் ஆரம்பித்தபோதிலும் தங்கள் அயலாரோடு பேசிக்கொண்டிருக்கும் நேரமுழுவதும் 'இயேசுவை நோக்கிப் பார்ப்பதும்' அவரோடே பேசிக்கொண்டிருப்பதும் உண்டா? பாவத்தைக் கண்டிக்கும்போது பாவியின்மீது கோபம் வருகிறதில்லையா? அறிவீனருக்குக் கற்றுக்கொடுக்கையில் பெருமையும் சுயமேன்மையும் உண்டாகிறதில்லையா? துன்பப்படுகிறவர்களை ஆறுதல்படுத்தும்போதும், அன்பும் நற்கிரியைகளு முள்ளவர்களா யிருக்கும்படி ஒருவரை யொருவர் ஏவும்போதும், 'நான் நன்றாய்ப் பேசினேன்' என்கிற தற்புகழ்ச்சி தங்களிடம் இருக்கிறதாக அவர்கள் பார்க்கிறதில்லையா? அல்லது மற்றவர்களும் தங்களைக்குறித்து அவ்வாறே எண்ணி அதினிமித்தம் தங்களை மதிக்கவேண்டுமென்கிற வீண்பெருமை உண்டாகிறதில்லையா? இந்தப்பிரகாரமாக விசுவாசிகளின் நற்சம்பாஷணையிலுங்கூடப் பாவம் எவ்வளவாய் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இதை உணர்ந்துகொள்ளும் உணர்வே நீதிமான்களாக்கப்பட்டவர்களிடத்தில் இருக்கவேண்டிய மனந்திரும்புதலோடு இணைந்திருக்கிறது.

13. இவர்களுடைய மனச்சாட்சி கூர்மையாய் இருக்குமாகில் **தங்கள் கிரியைகளிலுங்கூட** எவ்வளவோ பாவம் ஒட்டிக்கொண்டிருப்பதாக அவர்கள் காண்பார்கள். இக்கிரியைகளில் அநேகம் உலகத்தார் பார்வையில் குற்றமற்றதாயினும், தேவ வசனத்தைக் கொண்டு சீர்தூக்கிப் பார்க்கையில் அவை புகழத்தக்கவைகளுமல்ல; பொறுத்துக்கொள்ளத்தக்கவைகளுமல்ல; தேவனுடைய மகிமைக்கானவைகளுமல்ல; தேவமகிமையை நாடாமலும் அவருக்கென்றே ஆரம்பியாமலு மிருக்கிறவைகளும் அநேகம். தேவ மகிமைக்கென்று ஆரம்பித்தவைகளிலும் பூரணமாய் அவருக்கென்று செய்யப்படாதவைகள் அநேகம். தேவசித்தத்தை நிறைவேற்றும்படி செய்கிற கிரியைகளிலே சுயசித்தத்தை நிறைவேற்றுகிறதுமுண்டு. தேவனைப் பிரியப்படுத்தும்படி விரும்புகிறாப்போலத் தங்களையும் பிரியப்படுத்த விரும்புகிறதுண்டு. மேலும் பிறருக்கு நன்மைசெய்கிற வேளையில் பற்பல தகாத குணங்கள் இவர்களிடத்தி லுண்டாகிறதில்லையா? ஆகவே நற்கிரியைகளென்று சொல்லிக்கொள்ளுகிறவைகள் வாஸ்தவத்தில் நற்கிரியைகளல்ல. ஏனென்றால் இவைகளில் பலவித தீமை கலந்திருப்பதினாலே அவைகள் தீட்டுப்பட்டுப் போயிருக்கின்றன. அவர்களுடைய **காருண்ணிய கிரியைகள்** இத்தன்மையானவைகளே. இனிப் **பக்திக்கடுத்த** கிரியைகளைக் கவனிப்போம். அவைகளாவது பாவக் கலப்பற்றவைகளாய் இருக்கின்றனவோ? தங்கள் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ள திருவசனத்தைக் கேட்கையில் அவ்வசனம் தங்கள் இரட்சிப்புக்கல்ல, ஆக்கினைக் கேதுவாயிருக்கிறதென்று அச்சம் பிறப்பிக்கத்தக்க எண்ணங்கள் அவர்களிடத்தில் அடிக்கடி உண்டாகிறதில்லையா? பகிரங்கத்திலாவது அந்தரங்கத்திலாவது தேவனை நோக்கி ஜெபிக்கையில் இவ்வித எண்ணங்கள் உண்டாகிறதில்லையா? இவ்வளவுதானா? கர்த்தருடைய இராப்போஜனத்தில் சேர்வதைப்போன்ற மிகவும் பக்திவிநயமான ஆராதனைகளிலுங்கூட எவ்வித எண்ணங்கள் அவர்களுக்குள் உண்டாகின்றன? சில வேளைகளில் அவர்களுடைய நினைவுகள் சிதறிப் பூமியெங்கும் அலைந்து திரிகிறதில்லையா? தங்கள் ஆராதனையாகிய பலி கர்த்தருக்கு அருவருப்பாயிருக்குமோவெனப் பயப்படத்தக்கதான எண்ணங்கள் அவர்களுக்குள் உண்டானதில்லையோ? இவ்விதமாக முன் ஒருகாலத்தில் அசுத்தமான தங்கள் பாவங்களினிமித்தம் அவர்கள் வெட்கப்பட்டதைப்பார்க்கிலும் இப்போது தங்கள் நற்செய்கைகளினிமித்தம் அதிகமாய் வெட்கப்படுகிறார்கள்.



14. இன்னும் பார்ப்போம்; **செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்ட பாவங்கள்** அவர்களிடத்தில் எத்தனையோ இருக்கின்றன. 'ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்' என்று யாக்கோபு (யாக். 4: **17.**) அப்போஸ்தலன் சொல்லி யிருப்பதாக அறிவோம். சத்துருக்கள், அந்நியர் அல்லது சகோதரர் முதலியவர்களுடைய சரீர ஆத்துமவிஷயமாய் நன்மை செய்யவேண்டிய அளவிறந்த சமயங்களில் நன்மை செய்யாமல் விட்டுவிட்டதாக அவர்களுக்குத் தெரியாதா? தேவனுக்குச் செய்யவேண்டிய எத்தனையோ கடமைகளைச் செய்யாமல் விட்டுவிட்ட குற்றம் அவர்கள்பேரில் இல்லையா? கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பெறவும் அவருடைய திருவசனத்தைக் கேட்கவும் தக்க எத்தனையோ சமயங்களையும் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் ஜெபிக்கவேண்டிய பற்பல வேளைகளையும் அவர்கள் அசட்டை செய்ததுண்டு. அஷர் என்ற சிரேஷ்ட அத்தியக்ஷர் (Archbishop Usher) கர்த்தருக்கென்று அதிகமாய் உழைத்துவரும் பரிசுத்தவானுமாய் இருந்தும் தமது மரணப்படுக்கையில் 'ஆண்டவரே! செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டதினால் உண்டான பாவங்களை எனக்கு மன்னியும்' என்று கெஞ்சி மன்றாட வேண்டியதாயிருந்ததே.

15. செய்யவேண்டியவைகளைச் செய்யாததினால் வருவித்துக்கொண்ட புறம்பான இப்பாவங்களைத்தவிர, கணக்கற்ற **உள்ளான தவறுதல்கள்** இருக்கின்றனவென்றும் அவர்கள் அறியார்களோ? எத்தனைவிதமான குறைவுகளோ உண்டு. தேவனிடத்தில் அவர்களுக்கிருக்கவேண்டிய அன்பும் பக்தியும் நம்பிக்கையும சரியானபிரகாரம் இல்லை. தங்கள் அயலாருக்கும் மற்ற மனுப்புத்திரர் யாவருக்கும் அன்பு காட்டவேண்டியபிரகாரம் அவர்கள் காட்டுகிறதில்லை இவர்களுக்குமாத்திரமல்ல, தங்களுடன் அதிகமாய்ச் சம்பந்தப்பட்டும் சம்பந்தப்படாமலும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய தங்கள்

சகோதாருக்குங்கூட அவர்கள் காட்டவேண்டியபிரகாரம் அன்பு காட்டுகிறதில்லை. பரிசுத்த குணங்கள் அவர்களிடத்தில் இருக்கவேண்டிய அளவுப்பிரகாரம் இருக்கவில்லை. எவ்விஷயத்திலும் அவர்கள் குறைவுள்ளவர்களே. இக்குறைவுகள் தங்களிடம் உண்டென்று அவர்கள் உண்மையாய் உணர்ந்துகொள்ளுவதினால், டிரெண்டி (De Renty) என்பவரைப்போல 'நான் முட்கள் அடர்ந்த நிலம்' என்றும், அல்லது யோபுவைப்போல 'நான் நீசனாகையால் நான் தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்' என்றும் இவர்கள் அறிக்கையிட்டுப் புலம்புகிறார்கள்.

16. தேவனுடைய பிள்ளைகளிடத்தில் இருக்கவேண்டிய மனந்திரும்புதலில் வேறொரு பாகம் அடங்கியிருக்கிறது. அதாவது: தங்கள் பாவதோஷத்தை உணர்ந்துகொள்ளுதலே. இப்பதத்தை இவ்விடத்தில் விசேஷித்த கருத்தில் உபயோகித்திருக்கிறது. அதைக் கவனமாய் அர்த்தப்படுத்தவேண்டும். எப்படியெனில் 'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து' அவரில் விசுவாசம் வைத்து அவ்விசுவாசத்தின் வல்லமையினால் 'மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை' என்பது மெய்யே. ஆயினும் அவர்கள் விசுவாசிகளாகுமுன் தேவனுடைய கண்டிப்பான நீதியைச் சகிக்கக்கூடாதவர்களா யிருந்ததுபோலவே, இப்போதும் சகிக்கக்கூடாதவர்களா யிருக்கிறார்கள். முன்சொன்ன உள்ளான பாவங்களினிமித்தம் அவர்கள் இன்னும் **மரணத்துக்குப் பாத்திரராகவே** யிருக்கிறார்கள் என்று இந்த நீதி கூறுகிறது. இயேசுகிறிஸ்துவின் பிராயச்சித்த இரத்தமில்லாவிடில் இந்த நீதி அவர்களை முற்றிலும் ஆக்கினைத்தீர்ப்புக் குட்படுத்தும். இதினிமித்தம் அவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு விலகிக்கொண்டபோதிலும் இன்னும் தண்டனைக்குப் **பாத்திரர்** என்றே பூரணமாய் உணருகிறார்கள். இவ்விஷயத்தில் இருவித தப்பான அபிப்பிராயம் உண்டாகக்கூடும். இந்தத் தப்பான அபிப்பிராயமாகிய ஆற்றின் இருகரைகளிலும் மோதாமல் நடுமத்தியில் கப்பலோட்டக் கூடியவர்கள் சிலர்தான். அநேகர் இக்கரையிலாவது அக்கரையிலாவது மோதிச் சேதப்பட்டுப் போகிறார்கள். எப்படியெனில் அநேகர் தாங்கள் ஆக்கினைத்தீர்ப்புக் குட்படாதிருக்கையில் உட்பட்டதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். அல்லது ஆக்



கினைக்கு விலகிக்கொள்ளப் **பாத்திரராயிருப்பதாக** எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால் சத்தியம் இவ்விரண்டுக்கும் இடையிலிருக்கிறது. நியாயப்படி பார்த்தால், அவர்கள் இன்னும் நரக ஆக்கினைக்குப் **பாத்திரரே**. ஆனால் வரவேண்டிய தண்டனை அவர்களுக்கு வராது. ஏனென்றால், 'அவர்களுக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிற' ஒருவருண்டு. அவருடைய ஜீவனும், மரணமும், பரிந்துபேசுதலும், நியாயமாய் இவர்களுக்கு வரவேண்டிய ஆக்கினைத்தீர்ப்பு வராதபடி தடுக்கிறது.

17. தங்களை **முற்றிலும் அசக்தர்** என்றுணர்வதே விசுவாசிகளிடத்தில் இருக்கவேண்டிய மனந்திரும்புதலின் வேறொரு லட்சணம். இதில் இரண்டு விஷயம் அடங்கியிருக்கிறது. முதலாவது, அவர்கள் நீதிமான்களாக்கப்படுவதற்குமுன் தாங்களாக நல் நினைவுகளை நினைத்து நற்காரியங்களை நாடி நல் வார்த்தைகளைப் பேசி நற்கிரியைகளைச் செய்ய எப்படி அசக்தராய் இருந்தார்களோ அப்படியே இன்னும் அசக்தராயிருக்கிறார்கள். சுயபலம் எவ்வளவேனுமில்லை. நன்மை செய்யவும் கூடாது. தீமைக்கு எதிர்த்து நிற்கவும் முடியாது. பிசாசு உலகம் மாம்சம் என்னும் முச்சத்துருக்களை ஜெயிக்க அசக்தர். அவைகளுக்கு எதிர்த்து நிற்கக்கூட வல்லமை கிடையாது. இவை யாவையும் செய்யக்கூடுமென்பது நிச்சயம். ஆனால் தங்கள் சுயபெலத்தினால் செய்யக்கூடியவர்களல்ல. இச்சத்துருக்களை யெல்லாம் மேற்கொள்ளத்தக்க வல்லமை அவர்களுக்குண்டு. ஏனென்றால் 'பாவம் அவர்களை மேற்கொள்ளமாட்டாது.' இந்த வல்லமை கொஞ்சமேனும் இயல்பிலில்லை. இது தேவனுடைய ஈவேயன்றி வேறல்ல. மேலும் அநேக வருஷங்களுக்குச் சேர்த்து வைத்துக்கொள்ளும்படி இந்த வல்லமை மொத்தமாய்க் கொடுக்கப்படுகிறதுமில்லை. வேளைக்கு வேளைதான் அருளப்படுகிறது.

18. அசக்தர் என்பதில் அடங்கியிருக்கும் இரண்டாம் விஷயம் என்ன? நமது மனம் இன்னும் நமக்குள் அறிக்கையிடுகிற பாவதோஷத்தினின்றும், பாவத்துக்கு நியாயமாய் வரவேண்டிய தண்டனையினின்றும், நம்மை விடுவித்துக்கொள்ளத் திராணியற்றவர்கள் என்பதே. எப்படியெனில், மறுபிறப்படைந்தவர்களின் இருதயத்தில் இருக்கிற

தாக நாம் அனுபவத்தினால் அறிந்திருக்கிற பெருமை சுயசித்தம் உலகநேசம் கோபம் தேவனைவிட்டு விலகிப்போகத்தக்க சுபாவம் முதலியவைகளை நாம் பெற்றிருக்கிற எவ்வித கிருபையையுங்கொண்டு விலக்க அசக்தராயிருக்கிறோம். அல்லது எவ்வளவாய் முயற்சித்தும் நமது வாக்கு கிரியைகளில் இன்னும் ஒட்டிக்கொண்டேயிருக்கிற தீமையை விலக்கி அகற்றவும் அசக்தராயிருக்கிறோம். அதுவுமன்றி அன்பும் பிரயோஜனமுமற்ற சம்பாஷணையை முற்றிலும் விட்டுவிட நமக்குச் சக்தியில்லை. மேலும் செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிடுவதினாலுண்டாகும் பாவங்களுக்கு விலகவும் ஏலாதவர்களாயிருக்கிறோம். இன்னும் எண்ணிறந்த குறைவுகள் நம்மிலிருப்பதாக அறிவோம். விசேஷமாய் தேவனுக்கும் மனிதருக்கும் காட்டவேண்டிய அன்பு முதலிய சற்குணங்களில் குறைவானவைகளை நிறைவாக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறோம்.

19. நான் இம்மட்டும் சொன்னவைகளில் திருப்தியடையாமல் நீதிமானாக்கப்பட்ட ஒருவன் தன் இருதயத்திலும் தன் ஜீவியத்திலுமிருந்து இப்பாவங்களை விலக்கிவிடக் கூடும் என்று நம்புவானாகில் அவன் தன்னைப் பரீட்சித்துப் பார்க்கக்கடவன். தனக்கு இப்போது கிடைத்திருக்கும் கிருபையைக்கொண்டு பெருமை சுயசித்தம் முதலிய உள்ளான பாவங்களை அகற்றிவிடக் கூடுமாவென்று சோதித்துப் பார்க்கட்டும். அவன் தன் வார்த்தைகள் செய்கைகளில் தீமை கலவாதபடி சுத்திகரித்துக்கொள்ளக் கூடுமா? அன்பும் பிரயோஜனமுமற்ற சம்பாஷணைகள் செய்யாதபடி விலகிக்கொள்ளக் கூடுமா? செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டதினால் வந்த பாவங்களுக்கு நீங்கியிருக்க அவனாலாகுமா? கடைசியாக இன்னும் தன்னிடத்தில் இருக்கிற எண்ணிறந்த குறைவுகளை நிறைவாக்கிக் கொள்ள முடியுமா? இவைகளைப் பரீட்சித்துப் பார்க்கட்டும். இரண்டொருதடவையில் அதைரிய மடைந்துவிடாமல், திரும்பத் திரும்பப் பரீட்சைசெய்து பார்க்கட்டும். எவ்வளவுக்கதிகமாய்ப் பரீட்சித்துப் பார்க்கிறானோ அவ்வளவுக்கதிகமாய்த் தன் சக்தியின்மையைக் கண்டு கொள்ளுவான்.

20. ஆகவே, 'நாம் ஆவியினால் சரீரத்தின் கிரியைகளை அழித்து' உள்ளான புறம்பான பாவங்களுக் கெதிர்த்து நின்று அவைகளை



ஜெயித்து, நாளுக்குநாள் நமது சத்துருக்களைப் பலவீனப்படுத்தக் கூடுமாயினும் அவைகளைத் துரத்திவிட நம்மால் முடியாது. இது பிரத்தியட்சமான சத்தியம். உலகமெங்கும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் யாவரும் மற்ற விஷயங்களில் ஒருவருக்கொருவர் ஒவ்வாதிருந்தும் பொதுவாய் இவ்விஷயத்தில் ஒத்திருக்கிறார்கள். நாம் நீதிமான்களாக்கப்பட்டபோது பெற்றுக்கொண்ட கிருபை அனைத்தையும் ஒன்று திரட்டினாலும் அது நமது பாவத்தை நிர்மூலமாக்காது. எவ்வளவாய் விழித்திருந்து ஜெபித்தபோதிலும் நம்முடைய இருதயங்களையும் செய்கைகளையும் பூரணமாய்ச் சுத்திகரித்துக்கொள்ளக் கூடியவர்களல்ல நமது கர்த்தர் மறுபடியும் தயவாய் நமதிருதயத்தைப் பார்த்து 'சுத்தமாகு' என்று இரண்டாம்முறை சொல்லும்வரையில், நாம் நம்மைச் சுத்திகரித்துக்கொள்ள முடியவே முடியாது. அவர் சொன்னபிறகுதான் இந்தக் குஷ்டரோகம் சுகமாகும். இதற்கப்புறந்தான் கெட்டவேராகிய மாம்சசிந்தை அழியும். அப்புறந்தான் உள்ளான பாவம் இல்லாமல் தொலையும். ஆனால் நாம் நீதிமான்களாக்கப்பட்ட பிற்பாடு படிப்படியாய்த் தேவன் நடப்பிக்கும் மாறுதலைத் தவிர சடுதியான விடுதலையாகிய இரண்டாம் மாறுதல் நமக்கு அருளப்படாவிட்டால், மரணபரியந்தம் பாவமுள்ள நிலைமையில் இருப்போம் என்பது நிச்சயம் (படிப்படியாயும் கிரியை நடக்கிறதென்பதை ஒருவரும் மறுக்கிறதில்லை.). இந்தச் சடுதியான மாறுதல் உண்டாகாத பட்சத்தில் எப்போதும் தண்டனைக்குப் பாத்திரரான குற்றவாளிகளாகவே யிருக்கவேண்டியது. ஏனென்றால் எவ்வளவுகாலம் பாவம் நமதிருதயத்தி லிருந்துகொண்டு நம்முடைய வார்த்தைகளிலும் செய்கைகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ அவ்வளவுகாலமும் பாவதோஷம் நம்மைவிட்டு நீங்கப்போகிறதில்லை. அல்லது நாம் தண்டனைக்குரியவர்கள் என்கிற உணர்வு நம்மைவிட்டு நீங்குவதுமில்லை. இவ்வளவுதானா? நீதிப்பிரகாரம் பார்த்தால் நாம் நினைப்பதும் பேசுவதும் செய்வதும் நமது பாவதோஷத்தை எப்போதும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

II 1. நாம் நீதிமான்களானபிற்பாடும் **மனந்திரும்பவேண்டும் என்பதின்** கருத்து இதுவே. இப்படி மனந்திரும்பாதபட்சத்தில் நாம் தேவபக்தியில் தேற முடியாது. ஏனென்றால் நமக்குள்ளிருக்கும்

ரோகத்தை அறிந்துகொள்ளும்வரையில் பரிகாரம் செய்யோம்.' இவ்வாறு மனந்திரும்பினபின், நாம் செய்யவேண்டியதென்ன? 'சுவிசேஷத்தை விசுவாசிக்கவேண்டும்.'

2. 'மனந்திரும்புதல்' என்பதைப்போலவே 'விசுவாசம்' என்பதையும் விசேஷித்த கருத்தில் உபயோகித்திருக்கிறது. இந்த 'விசுவாசம்' வேறே, நீதிமான்களாக்கப்படுவதற்கு நமக்கிருந்த 'விசுவாசம்' வேறே. சகல ஜனங்களுக்கும் தேவன் ஆயத்தம் செய்திருக்கிற பெரிதான இரட்சிப்பின் நற்செய்தியை விசுவாசி. 'தமது பிதாவினுடைய மகிமையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறவர்' 'தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்' என்று விசுவாசி. அவர் உன்னிருதயத்தில் இன்னும் இருக்கிற பாவம் யாவையும் நீக்கி இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். உன் வார்த்தைகளிலும் கிரியைகளிலும் ஒட்டிக்கொண்டிருக்கிற சகல பாவத்தையும் நீக்கி இரட்சிக்கக் கூடியவராயிருக்கிறார். செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டதினால் உண்டான பாவங்களினின்று அவர் உன்னை இரட்சிக்கவும் உன்னில் குறைவாயிருக்கிறதை நிறைவாக்கவும் கூடியவர். மனுஷனால் இது கூடாததுதான். ஆனால் தேவனும் மனுஷனுமாகிய அவரால் எல்லாம் கூடும். 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுமுள்ளவரால்' கூடாதகாரியம் உண்டோ? அவர் இதைச் செய்வாரென்றும் இவ்விதமாகத் தமது வல்லமையைக் காட்டுவாரென்றும் நாம் நம்புவதற்கு அவர் வல்லவர் என்பதுமாத்திரம் போதுமான ஆதாரமாகாது. அவருடைய வாக்குத்தத்தமும் அவசியம். அவர் அப்படியே வாக்கும் செய்திருக்கிறார். ஒருமுறையல்ல, பலமுறை பலமாய் வாக்குச்செய்திருக்கிறார். 'மகா மேன்மையும் அருமையுமான இந்த வாக்குத்தத்தங்களை' பழைய புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் பார்க்கலாம். வேதாகமங்களில் பூர்வீகமான நியாயப்பிரமாணத்தில் 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம் பண்ணுவார்' என்று வாசிக்கிறோம் (உபா. 30: 6.).



அப்படியே அவர், 'தமது இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்ளுவார்' என்று சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது. தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் 'அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள், உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன். உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி உங்களை இரட்சிப்பேன்' (எசேக். 36: 25, 27, 29.) என்று சொல்லியிருக்கிறது. புதிய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்குண்டு. 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக! உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்குத் தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்.' (லூக். 1: 68–75.)

3. ஆகையால் உன் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க உன்னைச் சுத்திகரிக்கவும், 'உன் அசுத்தங்களையெல்லாம் நீக்கி உன்னை இரட்சிக்கவும்' தேவன் வல்லமையுள்ளவராய் மாத்திரமல்ல சித்தமுள்ளவராயு மிருக்கிறார் என்று நீ விசுவாசிக்கிறதற்குத் தகுதியான முகாந்தரமுண்டு. நீ இப்பொழுது வாஞ்சிக்கிற விஷயம் இதுதானல்லவா? என் ஆத்தும நேசராகிய சிறந்த வைத்தியன் என்னைச் சுத்திகரிக்கச் சித்தமுள்ளவரா யிருக்கிறார் என்கிற விசுவாசமே உனக்கு இப்போது வேண்டியது. இதை நாளைக்குச் செய்யச் சித்தமுள்ளவரா யிருக்கிறாரோ? இன்றைக்குச் செய்யச் சித்தமுள்ளவரா யிருக்கிறாரோ? என்றால், அவரே இதற்கு உத்தரவு சொல்லட்டும். 'இன்று என்னுடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்' என்று சொல்லுகிறார். நாளைக்கென்று கடத்துவாயானால் உன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறாய். அவருடைய சத்தத்தைக் கேட்க மனமற்றிருக்கிறாய்.

ஆகையால் இன்று அவர் உன்னை இரட்சிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார் என்று விசுவாசி. இப்போதே உன்னை இரட்சிக்கச் சித்தமாயிருக்கிறார். 'இப்பொழுதே அநுக்கிரககாலம்.' 'சுத்தமாகு' என்று இந்த நேரத்தில் சொல்லுகிறார். இதை நீ விசுவாசி. விசுவாசிப்பாயானால் அக்ஷணமே 'விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் ஆகும்' என்றும் கண்டுகொள்வாய்.

4. உன்னில் அன்புகூர்ந்து உனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவரும் தம்முடைய சரீரத்திலே உன் பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தவருமான அந்த இரட்சகரிடத்தில் விசுவாசம் வைத்து நிலைத்திரு. அப்போது அவர் தமது இரத்தத்தை இடைவிடாமல் உன்மேல் தெளித்து ஆக்கினையினின்றும் உன்னை விலக்கி இரட்சிப்பார். நாம் நீதிமான்களாக்கப்பட்ட நிலைமையில் நிலைத்திருக்கிறது இப்படித்தான். இவ்விதமாக 'விசுவாசத்தின்மேல் விசுவாசம்' உள்ளவர்களாகி, உள்ளான பாவத்தினின்று நம்மைச் சுத்திகரிக்கவும், சகல அசுத்தங்களுக்கும் நம்மை விலக்கி இரட்சிக்கவும் தக்க விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அப்போது முன் நம்மில் இருப்பதாக உணர்ந்த பாவ தோஷத்தினின்றும் தண்டனைவரும் என்கிற பயத்தினின்றும் நீங்கி இரட்சிக்கப்படுகிறோம். ஆகையால் இதற்கப்புறம்,

'உந்தன் சாவின் புண்ணியம்
வேண்டும் எந்த நேரமும்'

என்று மாத்திரமல்ல, விசுவாசத்தினால் பூரண நிச்சயமுள்ளவர்களாய்,

'உந்தன் சாவின் புண்ணியம்
உண்டெனக் கெந்நேரமும்'

என்றும் பாடக்கூடும்.

ஏனென்றால் அவருடைய ஜீவன் மரணம் பரிந்துபேசுதல் என்பவைகளில் விசுவாசம் வைப்பதினால் நாம் நிமிஷந்தோறும் புதுப்பிக்கப்பட்டு முழுவதும் சுத்தமாகிறோம். நமது கர்த்தர் நமது இருதயத்தையும் நடக்கையையும் சுத்திகரித்திருக்கிறார். அதினால்



இப்போது நமக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. நாம் முன்போல் தண்டனைக்குப் பாத்திரருமல்ல.

5. இந்த விசுவாசத்தினாலேயே கிறிஸ்துவின் வல்லமை ஒவ்வொரு நிமிஷமும் நமக்குள் நிலைத்திருக்கிறதென்று காண்கிறோம். நாம் இந்த நிலைமையிலிருக்கிறதும் அந்த விசுவாசத்தினாலேதான். ஆவிக்குரிய ஜீவியத்தில் நிலைத்திருக்கச் செய்கிறதும் இதுவே. அந்த விசுவாசமில்லாவிட்டால் நாம் இப்போது எவ்வளவு பரிசுத்தராயிருந்தபோதிலும் மறுநிமிஷத்தில் பிசாசுகளாகிப்போவோம். ஆனால் அவர்மேலுள்ள விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங் காலமெல்லாம் 'இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து தண்ணீர் மொண்டுகொள்வோம்.' விசுவாசத்தினால் கிறிஸ்து நமதிருதயங்களில் வாசஞ்செய்து தேவனுடைய வலதுபாரிசத்தில் நமக்காக எப்போதும் வேண்டுதல் செய்கிறார். நமது மகிமையின் நம்பிக்கையும் நமது நேசருமாகிய அவர்மேல் சார்ந்துகொள்வதினால் அவருடைய திருப்பார்வைக்குப் பிரியமானதைப் பேசவும் நினைக்கவும் செய்யவும் நமக்குச் சகாயம் கிடைக்கிறது. இவ்விதமாக அவரை விசுவாசிக்கிறவர்கள் தங்கள் மனோவாக்குக்கிரியைகளிலெல்லாம் 'அவருக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடிக்கும்படி அவர் தமது கிருபாகடாட்சத்தோடு அவர்களுக்கு முந்திக்கொள்ளுகிறார்.' மேலும், அவர்கள் 'அவரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும் தமது பரிசுத்தநாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும் தமது பரிசுத்தாவியின் ஏவுதலால் அவர்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணுகிறார்.'

6. இவ்விதமாக தேவனுடைய பிள்ளைகளிடத்தில் மனந்திரும்புதலும் விசுவாசமும் ஒன்றைவிட்டொன்று பிரிக்கக்கூடாதபடி பொருந்தியிருக்கின்றன. எப்படியெனில் மனந்திரும்புதலினால் நமது இருதயங்களில் பாவமிருக்கிறதென்றும் அது நமது வார்த்தைகள் செய்கைகளில் ஒட்டிக்கொண்டிருக்கிறதென்றும் அறிகிறோம். விசுவாசத்தினால் நமதிருதயங்களைச் சுத்திகரித்து நமது கிரியைகளைப் பரிசுத்தமாக்குகிற தேவ வல்லமையைக் கிறிஸ்துவில் பெற்றுக்கொள்ளுகிறோம். மனந்திரும்புதலினால், நமது குணங்கள்

வார்த்தைகள் கிரியைகளினிமித்தம் நாம் இன்னும் தண்டனைக்குப் பாத்திரர் என்று உணர்ந்துகொள்ளுகிறோம். விசுவாசத்தினால், கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசி நமக்காக எப்பொழுதும் வேண்டுதல் செய்கிறார் என்றும் அதினால் நம்மை ஆக்கினைத்தீர்ப்புக்கும் தண்டனைக்கும் எப்போதும் விலக்கி இரட்சிக்கிறார் என்றும் அறிகிறோம். மனந்திரும்புதலினால் நமக்கு யாதொரு சக்தியுமில்லை என்கிற உணர்வு எப்போதும் நம்மிலிருக்கக் காண்கிறோம். 'விசுவாசத்தினாலோ இரக்கத்தை மாத்திரமல்ல, 'ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையையும் அடைந்துகொள்ளுகிறோம்.' மனந்திரும்புதலானது நாம் எவ்வித சகாயத்துக்கும் உரியவர்களல்ல என்று உணர்த்துகிறது. விசுவாசமோ, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுமுள்ள இரட்சகரிடத்திலிருந்து நமக்கு வேண்டிய எவ்வித சகாயத்தையும் வாங்கிக்கொள்ளுகிறது. மனந்திரும்புதல், 'அவரையல்லாமல் என்னால் ஒன்றும் செய்யக்கூடாது' என்று சொல்லுகிறது. விசுவாசமோ, 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு' என்கிறது. அவராலே நான் என் ஆத்துமத்தின் சத்துருக்களை மேற்கொள்ளவும், அவர்களைத் துரத்திவிடவும் கூடும். அவரால் என் தேவனாகிய கர்த்தரிடத்தில் என் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் முழுப் பெலத்தோடும் அன்புகூர' எனக்குச் சக்தியுண்டு. நான் 'இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவருக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் நடக்க அவரால் எனக்கு வல்லமை உண்டு' என்றும் விசுவாசம் சொல்லுகிறது.

III. 1. நாம் நீதிமான்களாக்கப்படுகிறபோதே முழுவதும் பரிசுத்தமாக்கப்படுகிறோம் என்பதும், அச்சமயத்திலேயே சகல பாவத்தினின்றும் நமதிருதயம் சுத்திகரிக்கப் படுகிறதென்பதும், சிலருடைய அபிப்பிராயம். நாம் இம்மட்டும் சொன்னவைகளைக் கொண்டு இந்த அபிப்பிராயத்தினால் உண்டாகும் தீமைகளை எளிதில் கண்டுகொள்ளலாம். முன் சிந்தித்துக்கொண்டபடி நாம் நீதிமான்களாக்கப்படும்போது புறம்பான பாவத்தின் ஆளுகையினின்று விடுதலையடைகிறோம் என்பது மெய்யே. மேலும் இனி உள்



ளான பாவத்துக்கு இடங்கொடாமலும் இணங்காமலும் இருக்கத்தக்கதாகப் பாவத்தின் வல்லமை அக்காலத்தில் அதிகமாய்க் குறைந்துபோனதும் மெய்யே. ஆயினும் உள்ளான பாவம் அப்போதே சமூலமாய் அழிக்கப்பட்டுப்போயிற்று என்று சொல்லக்கூடாது. பெருமை, சுயசித்தம், கோபம், உலகநேசம் என்னும் பாவங்களின் வேர் இருதயத்தைவிட்டு அறுபடவில்லை. மாம்ச சிந்தையும், பின்வாங்கும் மனமும், நம்மை விட்டுக் கட்டோடே ஒழியவில்லை. இதற்கெதிரிடையான அபிப்பிராயம் சிலர் நினைக்கிறதுபோல குற்றமற்றதும் தீங்கற்றதுமாயிராமல் பெரிய தீமையை விளைவிக்கத்தக்கது. இனிமேல் எவ்வித மாறுதலும் நம்மிலுண்டாகாதபடி அது தடுக்கிறது. 'பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை' என்பது பிரத்தியட்சமல்லவா? ஆகவே நம்மைப் பூரண ஆரோக்கியமுள்ளவர்களென்று எண்ணிக்கொள்ளுவோமாகில் பரிகாரம் தேடமாட்டோமே. இப்படி எண்ணிக்கொள்ளுகிறவர்கள் படிப்படியாயாவது திடீரெனவாவது மறுபடியும் பாவத்தினின்று விடுதலையடையும்படி எதிர்பார்க்கவே மாட்டார்கள்.

2. மறுபட்சம் பார்த்தால், நாம் இன்னும் பூரண ஆரோக்கியம் அடையவில்லையென்றும், நமதிருதயம் இன்னும் சுத்திகரிக்கப்படவில்லையென்றும், தன் சுபாவப்படி 'தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிற' மாம்சசிந்தை இன்னும் நம்மில் இருக்கிறதென்றும், குறைந்துபோயிருப்பினும் முற்றிலும் சாகாத பாவசரீரம் இன்னும் நமக்குள் உண்டென்றும் நமது மனமே திட்டமாய் ஒத்துக்கொள்ளுகிறது. இதைப் பார்க்கும்போது இன்னும் நமக்குள் மாறுதல் வர வேண்டியது அத்தியந்த அவசியம் என்பதாகச் சந்தேகமறக் காணலாம். ஒருவன் நீதிமானாக்கப்படுகிற சமயத்திலே மறுபடியும் பிறக்கிறான் என்பது மெய். அந்நிமிஷத்திலே அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியையும், மிருகம் பிசாசு இவைகளின் சாயலை விட்டுத் தேவனுடைய சாயலையும், லௌகிக சம்பந்தமானதும் ஜென்ம சுபாவத்திற்குரியதும் பேய்த்தனத்துக்கு அடுத்ததுமான சிந்தையை விட்டுக் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையையும் நமது இருதயத்தில் அடையும்படியான மாறுதல் உண்டாகிறதை அறிவோம். ஆகி

னும அவ்வேளையில் **பூரணமாய்** மாறுதலடைகிறோமா? நம்மை சிருஷ்டித்தவரின் சாயலுக்கொப்பாக **சமூலமாய்** மறுரூபமாகிறோமா? இல்லையே. இன்னும் நமக்குள் பாவம் அடங்கியிருக்கிறது. பாவம் இன்னும் நமக்குள் இருக்கிறதாக நமது மனம் சாட்சியிடுவதினால்தான், நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கிப் பூரண இரட்சிப்புக்காகப் புலம்பிக் கதறும்படி ஏவப்படுகிறோம். சில விசுவாசிகள் தங்கள் இருதயத்தின் சீர்கேட்டைத் திட்டமாய் உணரவில்லை. அல்லது இதை ஒரு அபிப்பிராயம்போல் நினைத்து, அற்பசொற்பமாய் உணருகிறார்கள். அதினாலேதான் அவர்கள் **பூரண பரிசுத்தத்தைக்** குறித்து ஏனோதானோவென்று ஆத்திரமற்றிருக்கிறார்கள். அந்திய காலத்தில் ஆவது, அதற்குமுன் எப்போதாயினும் ஒருகாலத்தில் ஆவது இந்தப் பூரண பரிசுத்தம் உண்டாகும் என்கிற எண்ணம் அவர்களுக்குள் இருக்கக்கூடும். ஆனால் இப்பரிசுத்தம் தங்களுக்கில்லாததினிமித்தம் சஞ்சலப்படுகிறதில்லை. அதைப்பற்றிய பசிதாகமும் கிடையாது. இதைப்பற்றிய மனக்கவலை அவர்களுக்கு உண்டாகவேண்டுமானால் தங்கள் நிலைமையை முன்னிலும் நன்றாய் அறியவேண்டும். முன்கூறியிருக்கும் கருத்தில் மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய உள்ளான பாவத்தின் அகோரத்தைத் தேவனும் அவர்களுக்குத் திறந்து காட்டி அவர்களுடைய ஆத்துமாவின் சரியான நிலைமையை வெளிப்படுத்தவேண்டும். தங்கள் பாவப்பாரத்தைக் கண்டுணரும்போதுதான் அதினின்று விடுதலையடைய வேண்டுமென்றும் கெஞ்சுவார்கள். அதற்கப்புறந்தான் ஆத்தும வியாகுலமுள்ளவர்களாய்,

C. M.

உள்ளான பாவ நுகத்தை
முறித் தெறிந்து போடுமேன்
இப்போதே மனச் சுத்தத்தைத்
தாராவிடில் நான் சகியேன்

என்று கதறி அழுவார்கள்.

**3.** இரண்டாவது, தேவன் நம்மை அங்கீகரித்தபின்னும் நமது **அபாத்திரத் தன்மையைத்** திட்டமாய் உணர்ந்துகொள்வது அத்தி



யந்த அவசியமென அறிந்துகொள்ளுகிறோம். இந்த அபாத்திரத் தன்மையை ஒரு கருத்தில் **பாவதோஷம்** என்றே சொல்லவேண்டும். இந்த உணர்வு இருந்தால்மாத்திரம், பிராயச்சித்த இரத்தத்தின் அருமையைக் கண்டுகொள்வோம். மேலும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்குமுன் அந்தப் பிராயச்சித்தம் அவசியமா யிருந்ததுபோலவே, அப்புறமும் அவசியமானதுதான் என்று அறிந்துகொள்ளுவதற்கும் இந்த உணர்வு வேண்டியதே. நமது அபாத்திரத் தன்மையைப்பற்றிய உணர்வு இல்லாவிட்டால் உடன்படிக்கையின் இரத்தத்தைச் **சாதாரணமானதாய் எண்ணி**, நமது முந்தின பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறபடியினால் அது இப்போது நமக்கு அவசியமில்லாததாகவும் நினைத்துக்கொள்ளக்கூடும். இவ்விதமாக நம்முடைய இருதயமும் ஜீவியமும் அசுத்தமாயிருக்குமேயாகில் நாம் நிமிஷந்தோறும் ஒருவிதமான தோஷத்தை நமதுமேல் வருவித்துக் கொள்ளுகிறோம். அதினால் ஒவ்வொரு நிமிஷமும் புதிதாய் ஆக்கினைத்தீர்ப்பு அடையவேண்டியவர்களாவோம்.

‘திரு ரத்தம் ஏந்தி
மீட்பின் அன்பைச் சாற்றி
பரிந்து பேசியே
நிற்கிறார் என்றுமே.’

இந்த மனந்திரும்புதலையும் இதோடு நெருங்கிச் சம்பந்தப்பட்ட விசுவாசத்தையும் குறித்துத்தான் அடியில் வரும் கவியில் தெளிவாய்ப் பாடியிருக்கிறது.

நான் மூச்சுவிடும் போதெல்லாம்
பாவந்தான் என்னிலே உண்டாம்
விண்ணின் நாதரைப்போல் இங்கும்
உம் சித்தமும் கட்டளையும்
நிறைவேற்று திருந்துமே
திறந்திருக்கும் ஊற்றிலே
ஸ்நானம் செய்து சுத்தமாவேன்
அன்பில் பூரணப்படுவேன்.

4. மூன்றாவதாக, இதில் நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன? நாம் முற்றிலும் அசுத்தர் என்றும், நாம் பெற்றுக்கொண்டவைகளை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளக் கூடாதவர்கள் என்றும் நமது இருதயத்திலும் ஜீவியத்திலுமுள்ள எண்ணிறந்த தீமையினின்று நம்மை விடுவித்துக் கொள்ள ஏலாதவர்கள் என்றும், உண்மையாய் உணருவோமாகில் கிறிஸ்துவை நமது பிரதான ஆசாரியராகவும், இராஜாவாகவும் அங்கீகரித்து, விசுவாசத்தினால் அவரில் பிழைக்கவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுவோம். இவ்விதமாய் 'அவரை மகிமைப்படுத்தி' 'அவருடைய கிருபையின் மகிமைக்காக' அவரைப் புகழ்ந்து போற்றி, சகலத்திலும் அவரையே நமக்கு கிறிஸ்துவாகவும் இரட்சகராகவும் அங்கீகரித்து, 'அவர் சிரசில் முடிசூட்டும்படி' நாம் ஏவப்படுவோம். இந்தச் சிறந்த வார்த்தைகளை நாம் அடிக்கடி உபயோகித்தபோதிலும், அவைகளின் கருத்தை அறிகிறதில்லை; இந்த வார்த்தைகளின் பொருளை நாம் உண்மையாய் உணர்ந்துகொண்டதுண்டானால், நம்மை நாம் மறந்து அவருக்குள் இருப்போம். அவரே சகலத்திலும் சகலமுமா யிருக்கும்பொருட்டு நம்மைச் சுத்த சூனியமாக்கிக்கொள்வோம். அப்படிச் செய்யும்போது சர்வ சக்தியுள்ள அவருடைய கிருபையினால் அவருக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையும் நிர்மூலமாகிப்போக எந்தக் குணமும் யோசனையும் வார்த்தையும் கிரியையும் கிறிஸ்துவுக்குக் கீழடங்கிப்போகும்.

லண்டன்டரி, ஏப்பிரல், 1767.

## வினாக்கள்.

1. நீதிமானாக்கப்பட்டவனின் ஆத்துமாவில் பாவத்துக்குக் கொஞ்சமேனும் வல்லமை கிடையாதோ? அவனுடைய கிரியை, வார்த்தைகளில் பாவம் அதிகாரமற்றுப்போயிற்றோ?

'பாவமானது நமது இருதயங்களி லிருப்பதாக நாம் உணர்ந்துகொள்ளுவதுபோலவே, நமது வார்த்தைகள், கிரியைகள் யாவிலும் அது ஒட்டிக்கொண்டிருக்கிறதாகவும் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.'

பிரிவு I. 11. பார்க்க.



2. விசுவாசியின் நோக்கம் எப்போதும் சுத்தமா யிருக்கிறதா?

இல்லை.

பிரிவு I. 12. பார்க்க.

3. விசுவாசிகளினிடத்தி லிருக்கவேண்டிய மனந்திரும்புதல் இவ்வாறென்பதைப்பற்றி உவெஸ்லி ஐயர் திரட்டிச் சொல்லுவதென்ன?

'முன் ஒருகாலத்தில் அசுத்தமான தங்கள் பாவங்களினிமித்தம் அவர்கள் வெட்கப்பட்டதைப்பார்க்கிலும், இப்போது தங்கள் நற்செய்கைகளினிமித்தம் அதிகமாய் வெட்கப்படுகிறார்கள்.'

4. விசுவாசிகள் மனந்திரும்பவேண்டுமென்பதின் கருத்தென்ன? அவர்கள் எவைகளுக்காக மனந்திரும்பவேண்டும்?

பிரிவு I. 16, 17, 18. பார்க்க.

5. பாவசுபாவம் விசுவாசியை விட்டு முற்றிலும் எடுபட்டுப் போவது கூடியதா? அது அழிக்கப்படும்படியாக நாம் தேவனை நோக்கிப் பிரார்த்திப்பதற்கு வேத அத்தாட்சியுண்டா? அது அழிக்கப்படும்படியாக நாம் எதிர்பார்க்கவேண்டியவர்கள் என்பதைக் காண்பிக்கும் வேத சாட்சியுண்டா?

ஆம்.

பிரிவு II. 2, 3. பார்க்க.

6. இந்த நிலைமையிலிருக்கையில், தனக்குத் தண்டனை வருமென்று பயப்படுகிற விசுவாசியை ஆக்கினைத்தீர்ப்பினின்று விலக்கக் கூடியதென்ன?

கிறிஸ்து இயேசுவின் மரண புண்ணியம்.

பிரிவு II. 4. பார்க்க.

7. விசுவாசிகளிடத்தில் பாவம் உண்டென்பதைக்கொண்டும் அவர்கள் மனந்திரும்புவதைக்கொண்டும் உவெஸ்லி ஐயர் என்ன விசேஷித்த விஷயத்தை அநுமானிக்கிறார்?

'இன்னும் நமக்குள் மாறுதல் வரவேண்டியது அத்தியந்த அவசியம்.'

8. பூரண பரிசுத்தத்தைக்குறித்துச் சிலர் ஏனோ தானோவென்று கவலையற்றிருப்பதேன்?

'அவர்கள் தங்கள் இருதயத்தின் சீர்கேட்டைத் திட்டமாய் உணராததினால்.'

பிரிவு III. 2. பார்க்க.

9. நாம் நீதிமான்களாக்கப்பட்டபின் நமதிருதய சீர்கேட்டின் கொடுமையை உணராததினால் உண்டாகும் வேறொரு பெருந்தீமையென்ன?

கிறிஸ்துவினுடைய பிராயச்சித்த இரத்தத்தின் அருமையையும் அவருடைய பரிந்துபேசுதலையும் தகுந்தவிதமாய் மதியாதிருக்கிறோம்.

பிரிவு III. 3. பார்க்க.

# பத்தாம் பிரசங்கம்.

## UPON OUR LORD'S SERMON ON THE MOUNT, PART II.

## நமதாண்டவர் செய்த மலைப்பிரசங்கம். (2-ம் பாகம்.)

'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.' (மத். 5: 5-7.)

I. 1. 'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்' என்கிற திருவசனம் திட்டமாய் நிறைவேறுங் காலம் எப்போ? மாரிகாலஞ் சென்று, குருவிகள் பாடுங் காலம் வந்து, காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிற காலமெதுவோ அதுவே அந்தக் காலம். 'துயரப்படுகிறவர்களை ஆறுதல்படுத்துகிறவர் என்றென்றைக்கும் நம்முடனே கூடவிருக்கும்படிக்கு' திரும்பிவருகிற காலமே அந்தக் காலம். அவருடைய மகத்துவ பிரசன்னத்தினால் சந்தேகம் என்னும் கார்மேகம் அகன்று போக, பயமாகிய புயல் பறந்தோட, துக்கசாகர அலைகளின் கோஷ்டம் அடங்க, துக்கப்பட்டவர்களின் ஆவி அவர்கள் இரட்சகராகிய தேவனில் களிகூருகிற காலம் எதுவோ அதுவே அந்தக் காலம். அப்போதான் 'சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்' என்று தேவன் அருளும் ஆறுதலை அடைந்தவர்கள் சாட்சியிடுவார்கள்.

2. 'சாந்தகுணமுள்ளவர்கள் யார்?' அறியாமையினால் அற்ப விஷயங்களில் துக்கப்படுகிறவர்களல்ல, நன்மை தீமை இன்னதென்று கண்டுகொள்ளக் கூடாததினால் தீமை நேரிட்ட காலத்தில் கலங்காதி

ருக்கிறவர்களுமல்ல, மூடத்தனத்தினால் உலகத்தில் நடக்கும் கொடுமையான சம்பவங்களைக் கண்டும் உணர்வற்றுப்போனவர்களுமல்ல, இயற்கையினாலாவது செயற்கையினாலாவது கல் கட்டைகளைப்போல் யாதொரு உணர்வுமின்றி விசாரமற்றிருக்கிறவர்களுமல்ல. ஸ்தோயிக்கியர் (Stoick) கற்பித்த அநுதாபமின்மை சாந்தகுணம் அல்ல. அநுதாபமின்மைக்கும் உருக்க சிந்தைக்கும் சம்பந்தம் இல்லை. அப்படியே அநுதாபமின்மைக்கும் சாந்தகுணத்துக்கும் சம்பந்தம் கிடையாது. அப்படியிருக்க ஆதிக் கிறிஸ்தவர்களும் விசேஷமாய்த் திருச்சபைப் பிதாக்களும் இவைகளைப் பேதப்படுத்தாமல் புறமதங்களின் தவறுதல்களி லொன்றாகிய இதைக் கிறிஸ்தவ ஜீவியத்துக்குரிய நற்காரியங்களி லொன்றாக எண்ணிக்கொண்டது மிகவும் நூதனமே.

3. அறிவீனமும் உணர்வின்மையும் சாந்தகுணம் அல்லாதது போல் தேவனுக்கேற்ற வைராக்கியம் அற்றிருப்பதும் சாந்தகுணம் ஆகாது. சாந்தகுணமானது எவ்வித விருப்பத்தையும் அளவுக்கு மிஞ்ச விடாது, குறைந்துபோகவும் விடாது; நடுநிலையிலேயே நிற்கச்செய்யும். தேவன் நமக்குள் அமைத்திருக்கும் இயற்கையான விருப்பங்கள், நமக்குக் கிடைத்திருக்கும் கிருபையினால் அழிந்துபோகாமல் கிரமப்பட வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம். இந்த நோக்கத்துக்கிசைய சாந்தகுணமானது, அவ்விருப்பங்களை அழித்துப்போடாமல் சமநிலைக்குக் கொண்டுவருகிறது. மனம் அலைகுலையாதபடி அதை ஒழுங்குபடுத்துகிறது. கோபம் துக்கம் பயம் முதலியவைகளைச் சாந்தகுணமானது மட்டுப்படுத்துகிறது நமது ஜீவியத்தில் நேரிடுகிற பற்பல சம்பவங்களில் இவைகள் கூடவும் குறையவும் விட்டுவிடாமல் நடுநிலையிலேயே நிற்கும்படி காத்துக்கொள்ளுகிறது.

4. ஆகவே சாந்தகுணம் என்பது நியாயப்படி அவரவர்க்குச் சம்பந்தமான விஷயங்களில் காணப்படவேண்டிய குணம் என்று தோன்றுகிறது. ஆயினும் தேவனுக்கடுத்த விஷயங்களிலும் பிறர்க்கடுத்த விஷயங்களிலும் இது நமக்குள் காணப்படவேண்டிய குணமே. சாந்தகுணம் என்னும் மன அமைதியைத் தேவனுக்கடுத்த விஷயமாய் நாம் பாராட்டும்போது அதை **‘ஒப்புக்கொடுத்தல்’** என்று சொல்வது



உண்டு. ஒப்புக்கொடுத்தல் என்றாலென்ன? தேவனுடைய சித்தம் நமது இயற்கையான சுபாவத்திற்குப் பிரியமில்லாதிருந்தும் ‘அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானபடி செய்வாராக’ என்று இடைவிடாமல் சொல்லி அவருடைய சித்தத்துக்கு இணங்குகிறதேயாம். நமது சுய சம்பந்தமாய் இக்குணத்தைக் காட்டும்போது அதைப் **‘பொறுமை’** அல்லது **‘மனாஸ்மியம்’** என்று சொல்லுகிறோம். பிறர் விஷயமாய் இச்சாந்தகுணத்தைக் காண்பிக்கும்போது இரு பதங்களை உபயோகிக்கிறோம். நல்லவர்கள் விஷயமாய் **‘அமைதி’** என்றும் கெட்டவர்கள் விஷயமாய் **‘தயை’** என்றும சொல்லுகிறோம்.

5. மெய்யான சாந்தகுணமுள்ளவர்கள் தீமை யின்னதென்று தெளிவாய்க் கண்டறிந்து கொள்ளுகிறார்கள். கண்டறிவதோடு அதைச் சகித்துக்கொள்ளவும் கூடும். தீமையானவைகளையெல்லாம் அவர்கள் அறிந்துகொண்டு சாந்தகுணத்தினால் அதை அடக்கி ஆளுகிறார்கள். அவர்கள் ‘சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கிய முள்ளவர்கள்தான்.’ ஆனால் எவ்விஷயத்தையும் தங்கள் பக்தி வைராக்கியத்துக் கேற்றபடி செய்யாமல் அறிவினால் நிதானித்துச் செய்கிறார்கள். மேலும் மனுஷன்மீதும் தேவன்மீதுமிருக்கவேண்டிய அன்பு அவர்களுடைய நினைவு வார்த்தை கிரியை ஒவ்வொன்றிலும் கலந்திருப்பதினால் அந்த வைராக்கியம் மிதமிஞ்சிப் போகாதபடி தடுக்கும். தேவன் நல்நோக்கத்தோடு தங்கள் சுபாவத்தில் அமைத்திருக்கும் ஆசாபாசங்களை அவர்கள் அழித்துப்போடும்படி விரும்பாமல் அவைகளை ஆண்டுகொண்டு அவைகள் யாவையும் தங்களுக்குக் கீழ்ப்படுத்துகிறார்கள். மேலும் தேவன் அவைகளை, உண்டுபண்ணின நோக்கத்துக்கு அநுகூலமாகமாத்திரம் அவைகளை உபயோகிக்கிறார்கள். இவ்விதமாக கடுமையும் வெறுப்புமான ஆசாபாசங்களைக்கூட நல்நோக்கமாய் உபயோகிக்கக்கூடியது. பகை கோபம் அச்சம் முதலியவைகளைப் பாவத்துக்கு விரோதமாய் உபயோகித்து விசுவாசம் அன்பு என்பவைகளால் கிரமப்படுத்தும்போது இத்தீக்குணங்கள் அவர்கள் ஆத்துமாவுக்கு மதிலும் அரணுமாயிருக்கும். அதினால் அவர்கள் ஆத்துமாவுக்குத் தீங்கு செய்யும்படி பொல்லாங்கன் அணுகான்.

6. இத்திவ்விய குணம் நம்மில் நிலைத்திருப்பதுமல்லாமல் தினமும் நம்மில் பெருகவும்வேண்டும். நாம் இந்த உலகத்தில் இருக்கும் காலமெல்லாம் இதை உபயோகிக்கவும் உபயோகிப்பதினால் அதை விர்த்தியாக்கவும் அடிக்கடி சமயம் வாய்க்கும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்து பாடனுபவித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை நமக்கு வேண்டியது. 'என் சித்தத்தின்படி யல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று எந்த நிலைமையிலும் சொல்லத்தக்கதாகத் தேவ சித்தத்துக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்படியே, எல்லா மனிதரிடத்திலும் விசேஷமாய்ப் பொல்லாதவர்களும் நன்றியற்றவர்களுமானவர்களிடத்திலும் தயையுள்ளவர்களா யிருக்கவேண்டியது. மற்றப்படி நாம் தீமையை நன்மையினால் வெல்லாமல் தீமையினால் வெல்லப்படுகிறவர்களாயிருப்போம்.

7. சாந்தகுணமானது, புறம்பான கிரியையைமாத்திரம் கட்டுப்படுத்தினால் போதும் என்று பூர்வத்திலுள்ள வேதபாரகரும் பரிசேயரும் கற்பித்தார்கள். தேவனால் போதிக்கப்படாத போதகர்கள் இந்தப்பிரகாரமாகவே எக்காலத்திலும் போதிப்பார்கள். நமதாண்டவர் இத்தப்பான போதனையைக்குறித்து எச்சரித்து இதின் பூரண கருத்தின்னதென்று விளக்கிக் காண்பித்திருக்கிறார். அந்த வசனத்தைப் பார்ப்போம்: 'கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பானென்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்.' (மத். 5: 21, 22.)

8. கோபத்தினால் வெளிக்குத் தோன்றக்கூடிய அன்பற்ற செய்கையையும் கடுமையான வார்த்தைகளையு மாத்திரமல்ல, வெளிக்குத் தோன்றாமல் இருதயத்துக்குள்ளே மறைந்திருக்கும் கோபக்குணத்தையும் நமதாண்டவர் கொலை யென்பதற்குள் சேர்த்திருக்கிறார். 'தன்



சகோர்தரனை நீயாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்' என்கிறார். இதன் கருத்தென்ன? சகல மனிதரும் நமக்குச் சகோதரரா யிருக்கிறபடியினால் 'தன் சகோதரன்' என்பது ஒவ்வொரு மனுஷனையும் குறிக்கும். போதுமான முகாந்தரமின்றி அல்லது முகாந்தரத்துக்கு மிஞ்சினவிதமாய் யார்பேரிலாவது அன்பற்றவனும் அன்புக்கு விரோதமான குணமுள்ளவனுமிருப்பானாகில் அப்படிப்பட்டவன் 'நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்.' அவன் அந்நிமிஷமே தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கு உட்படுவான் என்று மூலபாஷை அர்த்தம்கொள்ளுகிறது. பல வேதசாஸ்திரிகளின் அபிப்பிராயப்படி இந்தச் சுவிசேஷத்தின் ஆதிக் கையெழுத்துப் பிரதிகளில் 'நியாயமில்லாமல்' என்னும் பொருள்படுகிற கிரேக்கு பதம் விடப்பட்டிருக்கிறது. அப்படி விட்டிருப்பதை ஒப்புக்கொள்ளலாம் என்றும், 'நியாயமில்லாமல்' என்னும் வார்த்தை அனுவசியமானதுதானே என்றும், சிலர் நினைக்கக்கூடும். பிறர்மேல் கோபம் கொள்ளுவது அன்புக்கு நேர்விரோதமான சுபாவமாயிருக்குமாகில், கோபப்படுவதற்குத் தகுந்த முகாந்தரம் காட்ட முடியுமா? முகாந்தரம் சொன்னாலும் அது தேவனுக்கு முன்பாகச் சொல்லத் தக்கதாயிருக்குமா?

பாவத்தின்மேல் கோபம் கொள்ளலாம் என்று ஒத்துக்கொள்ளுகிறோம். இந்தக் கருத்தின்படி நாம் கோபங் கொண்டாலும் நாம் பாவஞ்செய்கிறதில்லை. 'அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டுக் கோபத்துடனே சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்தார்' (மாற். 3: 5.) என்று ஒருமுறை நமதாண்டவரைக்குறித்தும் வாசிக்கிறோம். பாவிகளின்பேரில் துக்கப்பட்டார். பாவத்தின்பேரில் கோபப்பட்டார். இது தேவனுக்கு முன்பாக நியாயமானதே.

9. 'தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன்' என்பதின் கருத்தென்ன? கோபத்துக்கு இடங்கொடுத்து அவதூறான வார்த்தையைச் சொல்லுகிறவன் என்பதே. வியாக்கியானிகள் சொல்லுகிறபடி 'ராகா' என்னும் சீரிய பதத்துக்கு ஒன்றுக்கும் 'உதவாதவன்' 'வீணன்' 'புத்திஹீனன்' என்பது பொருள். ஆதலால் நமக்குப் பிரியமில்லாத ஒருவனைப்பார்த்து 'ராகா' என்று சொன்னபோதி

லும் அது அவனுக்கு அதிக விசனமுண்டாக்கத்தக்க வார்த்தையல்ல. அப்படியிருந்தும் இந்த வார்த்தையைச் சொல்லுகிறவன் 'ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்' என்று நமது ஆண்டவர் சொல்லுகிறார். வேறுவிதமாய்ச் சொன்னால், அவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு உட்படவேண்டியவனா யிருப்பான். அவனும் சர்வலோக நியாயாதிபதியின் தண்டனையான தீர்ப்புக்கு உட்பட ஏதுவாயிருப்பான்.

'மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.' இதின் கருத்தென்ன? பிசாசுக்கு இடங்கொடுத்துத் தன் சகோதரனை நிந்தித்து மனதார இழிவும் அவதூறுமான வார்த்தைகளைச் சொல்லுகிறவன் அந்தக்ஷணமே மகா கொடிய ஆக்கினைக்குட்படுவான். இவைகளைச் செய்கிறவர்கள் மரண தண்டனைக்கு உட்படுவார்கள் என்று நமதாண்டவர் சொல்லுகிறார். கீழ் நியாயஸ்தலங்களில் தீர்ப்புப் பெற்றவர்களைச் சாதாரணமாய்க் கழுத்தை நெறித்துக் கொலைசெய்வது வழக்கம். முதல் குற்றத்துக்கு இந்தத் தண்டனை விதிக்கப்படும். இரண்டாம் குற்றத்துக்குக் கல்லெறிந்து கொல்லவேண்டியது. எருசலேமிலுள்ள பெரிய சங்கத்தாரால் தீர்ப்புப் பெறுகிறவர்களுக்கு இந்தத் தண்டனை கிடைக்கும். மூன்றாம் குற்றத்துக்கு உயிரோடே தகனிக்கவேண்டியது. மகா பெரிய குற்றவாளிகளை இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கில் போட்டு உயிரோடே தகனிப்பதுண்டு. ('இன்னோம்' என்னும் பதத்தை 'நரகம்' என்று மொழிபெயர்த்திருக்கிறது.)

10. அன்றியும், சில கடமைகளைத் திட்டவட்டமாய்ச் செய்வதினிமித்தம் மற்றக் கடமைகளில் குறைவிருந்தபோதிலும் தேவன் பொறுத்துக்கொள்ளுவார் என்பது சாதாரண எண்ணம். நமதாண்டவர் இவ்வித சாதாரண வீண் எண்ணத்தை எடுத்துப்போடும்படி முயற்சி செய்கிறார். எந்தப்பாவியும் தேவனிடத்தில் ஒன்றுக்குப் பதிலாக ஒன்றை நிறைவேற்றி **மாற்றிக்கொள்வது** கூடியதல்லவெனக் காட்டுகிறார். தேவன் ஒரு கடமைக்குப் பதிலாக வேறொரு கடமையை ஒப்புக்கொள்ளார். அல்லது கடமையின் ஒரு பாகத்தை மாத்திரம் செய்ய அக்கடமை முழுவதையும் செய்ததாகவும் ஒப்புக்



கொள்ளமாட்டார். தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வதினிமித்தம் மனிதருக்குச் செய்யவேண்டிய கடமையை விட்டுவிடக்கூடாது. அதினிமித்தம் தேவன் இதைப் பொறுத்துக்கொள்வார் என்றெண்ணாதபடி எச்சரிக்கிறார். பக்திக்கடுத்த கிரியை என்று சொல்லிக்கொள்ளுகிற கிரியையைச் செய்தும் அன்பற்றவர்களாயிருப்போமாயின் அக்கிரியை நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது. அன்பில்லாமையினிமித்தம் அக்கிரியை யாவும் கர்த்தருக்கு அருவருப்பாகவே யிருக்கும் என்றும் எச்சரிக்கிறார்

'ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து' உன் சகோதரனை அன்பற்றவிதமாய் நடத்தினதினிமித்தமும் அவனை வீணனென்றாவது மூடனென்றாவது சொன்னதினிமித்தமும் 'உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்' உன் காணிக்கை உன் கோபத்தை நிவாரணமாக்கும் என்றெண்ணிக்கொள்ளாதே. நீ அந்தப் பாவத்திற்காக மனந்திரும்பாதிருந்தால் உன் மனச்சாட்சி அசுத்தமாயிருக்கையில் தேவன் உன் காணிக்கையை அங்கீகரிப்பாரென்றும் எண்ணாதே. ஆகையால், 'அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முன்பு உன் சகோதரனோடே' ஒப்புரவாகுவதற்கு உன்னால் செய்யக்கூடியதெல்லாம் செய்து, 'ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.' (மத். 5: 23, 24.)

11. உன் ஆத்துமசம்பர்தமான இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் தாமதமாய் இராதே. 'எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக நீ உன் எதிராளியோடு வழியிலிருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.' இதின் கருத்தென்னவென்று பார்ப்போம். உன் எதிராளி சர்வலோக நியாயாதிபதியாகிய தேவனுக்கு அபயமிடாமலும், அந்த நியாயாதிபதி தேவகோபத்தை நிறைவேற்றுகிற சாத்தானிடத்தில் உன்னை ஒப்புக்கொடாமலும், நீ நரகத்திலே தள்ளப்பட்டு அவ்விடத்தில் மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று வைக்கப்படாமலும், இருக்கும்படியாக இப்போதே இந்த

இடத்திலேயே, அவன் உன்னைவிட்டுப் போய்விடுமுன்னமே; அவனோடு நல்மனம் பொருந்து. 'பொருந்தாவிட்டால் நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாயென்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.' இதின் அர்த்தம் என்ன? கடனைத் தீர்க்க உனக்கு நிர்வாக மில்லாத படியால் நீ சிறைச்சாலையிலிருந்து புறப்படுவது அசாத்தியம். ஆகவே நீ அந்தச் சிறைச்சாலைக்குள் ஒருமுறை அகப்பட்டுக்கொள்வாயாகில் உன் தண்டனை நித்தியமாய் இருக்கும்.

12. இது இப்படியிருக்க, 'சாந்தகுண முள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.' இதில் லௌகிக ஞானத்தின் மதியீனத்தைப் பாருங்கள். உலக ஞானிகள் சாந்தகுண முள்ளவர்களைப்பார்த்து, மற்றவர்கள் உங்களை அவமதிக்கும்போது பொறுமையாய்ச் சகிப்பீர்களாகில் நீங்கள் பூமியில் குடியிருக்க முடியாது; உங்களுடைய ஜீவனார்த்தத்துக்கு வேண்டியவைகளை ஒருபோதும் சவதரிக்க முடியாது; உங்களுக்கு இருக்கிறவைகளை முதலாய்க் காப்பாற்ற முடியாது; உங்களுக்குச் சமாதானமும் இராது; நீங்கள் ஒன்றையும் சாவதானமாய் அனுபவிக்க முடியாது' என்று பலமுறையும் எச்சரித்ததுண்டு. இவ்வுலகத்தில் தேவனே யில்லையென்றும் அவருக்கு மனுபுத்திரரைப்பற்றிய கரிசனையே யில்லையென்றும் வைத்துக்கொண்டால் உலக ஞானிகள் சொல்லும் இந்த வார்த்தை மெய்யென்கலாம். ஆனால் 'நியாயம் விசாரிக்கவும் பூமியில் சாந்தகுண முள்ளவர்கள் யாவரையும் இரட்சிக்கவும் தேவன் எழுந்தருளும்போது அவர் இந்த உலக ஞானத்தை இகழ்ந்து மனிதருடைய கோபம் தமது மகிமையை விளங்கப் பண்ணும்பொருட்டு' அதை மாற்றுகிறார் அல்லவோ? அவர்களுடைய சரீர ஜீவனுக்கும் அவர்களுடைய தேவ பக்திக்கும் அவசியம் வேண்டிய யாவையும் கவனமாய் நியமித்துவைக்கிறார். தாம் நியமித்து வைத்ததை உலகத்தாருடைய மூர்க்கம் வஞ்சகம் பகை முதலியவற்றிற்கு விலக்கிக் காப்பாற்றுகிறார். தாம் காப்பாற்றுகிறதை சாந்தகுணமுள்ளவர்கள் திரளாய் அநுபவிக்கும்படி அவர்களுக்கு அதை அருளிச்செய்கிறார். அது கொஞ்சமோ அதிகமோ அவர்களுக்குத் திவ்வியமாய் இருக்கிறது. பொறுமையினால் தங்கள் ஆத்துமாவைக் காத்துக்கொண்டதுபோலவே தேவன் தங்களுக்கு அருளிச்



செய்திருக்கிறதையும் உண்மையாய்க் காத்துக்கொள்ளுகிறார்கள். எப்போதும் மனரம்மியமும் தங்களுக் குரியவைகளில் சந்தோஷமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். அது தேவனுக்குப் பிரியமானதினால் இவர்களுக்கும் பிரியந்தான். ஆகவே அவர்களுடைய இருதயமும் வாஞ்சையும் சந்தோஷமும் பாத்தை நோக்கியிருக்கும்போதே அவர்கள் 'பூமியைச் சுதந்தரிக்கிறார்கள்' என்று உண்மையாய்ச் சொல்லலாம்.

13. இவ்வார்த்தைகளில் வேறொரு கருத்து அடங்கியிருப்பதாகவும் தோன்றுகிறது. அதென்னவெனில், 'நீதி வாசமாயிருக்கும், புதியபூமியில்' அவர்களுக்கு விசேஷித்த சுதந்தாம் இருக்கிறதென்பதே. அந்தச் சுதந்தாத்தைக்குறித்து அப். யோவான் வெளிப்படுத்தின விசேஷம் 20-ம் அதிகாரத்தில் பொதுவாய் விஸ்தரித்திருக்கிறான். அதைக்குறித்து இனிமேல் விவரமாய் அறிவோம். 'ஒரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து அதை ஆயிர வருஷமளவும் கட்டிவைத்தான். இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள், மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாய் இருக்கிறான். இவர்கள்மேல் இரண்டாம் மாணத்துக்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமுன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.'

II. 1. மெய்ப்பக்திக்குத் தடையாயிருக்கிறவைகளை நீக்குவதைக் குறித்து இம்மட்டும் நமதாண்டவர் அதிகமாய்ச் சொல்லிக்கொண்டு வந்தார். இவைகளில் ஒன்று பெருமை. இதுவே மெய்ப்பக்திக்கு

பெரிய முதல்தடை. ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கு இத்தடை எடுபட்டுப்போம். கவனமின்மையும் நிர்விசாரமும் வேறு சில தடைகள். இவைகள் ஆத்துமாவில் தேவபக்தி வேர்கொள்ளாதபடி தடுக்கின்றன. உத்தம துயரமிருக்குமாகில் இது மாறும். சோடமும், பொறுதியின்மையும், திருப்தியின்மையும் மெய்ப்பக்திக்குத் தடைகளே. இம்மூன்றும் கிறிஸ்தவ சாந்தகுணத்தினால் ஆரோக்கியமாகும். தகாதவிருப்பங்களையும் கள்ளப்பசியையும் ஆத்துமாவில் இடைவிடாமல் எழுப்பின கொடிய ஆத்ம ரோகங்களாகிய இத்தடைகள் நீங்கிப்போகும்போது உன்னதத்திலிருந்துவந்த ஆவிக்குரிய இயற்கையான பசி திரும்பவும் உண்டாகிறது. அப்போதுதான் ஆத்துமாவுக்கு நீதியின்மேல் பசியும் தாகமும் உண்டாகும். 'நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்.'

2. முன் சொன்னபிரகாரம், நீதியென்பது தேவ சாயலைக் குறிக்கும். கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையென்பதும் இது தான். ஒருவனிடத்தில் இருக்கவேண்டிய பரிசுத்த பரம குணங்கள் யாவும் நீதியாம். தேவன் நமக்குப் பிதாவும் மீட்பரும் என்று அவர்மேல் வைக்கிற அன்புக்கும், அவர்நிமித்தம் மனுஷர் யாவர் பேரிலும் வைக்கிற அன்புக்கும் இந்த நீதியே மூலமும், அதுவே அதற்கு முடிவுமாயிருக்கிறது.

3. இந்த 'நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.' இந்த வசனத்தின் கருத்தை நன்றாய் அறிந்துகொள்ள வேண்டுமாகில் மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டியது.

**முதலாவது**,—நமது சரீரத்துக்குரிய பசிகளிலெல்லாம் வயிற்றுப் பசியும் தாகமுந்தான் கடுமையானவை. இதேபிரகாரம், நீதியைப் பற்றிய பசியும் தேவனுடைய சாயலைப்பற்றிய தாகமும் ஒருதரம் நம்முடைய இருதயத்தில் தோன்றுமாகில், அதுவே நமது ஆவிக்குரிய பசிகளிலெல்லாம் மகா முக்கியமானதாகும். நம்மைச் சிருஷ்டித்தவரின் சாயலுக்கொப்பாய் புதிதாக்கப்பட வேண்டுமென்கிற இந்த ஒரே விருப்பம் மற்ற விருப்பத்தையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொள்ளத்தக்கது.

**இரண்டாவது**, — சரீர பசியும் தாகமும், ஆரம்பித்த காலமுதல் இடையில் நின்றுபோகாமல் அவைகள் மேலும் மேலும்



அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. நாம் ஆகாரம் சாப்பிட்டு, பானம் பண்ணினாலன்றிப் பிழைக்கமாட்டோம். அவ்வண்ணமே, கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தை நமக்குள் பூரணமாய்த் தோன்றும்படி நமக்குப் பசியும் தாகமும் ஆரம்பித்த காலமுதல் ஆவிக்குரிய இந்த விருப்பங்கள் நமக்குள் நின்றுபோகாமல் தங்களுக்கு ஞானஆகாரம் மேலும் மேலும் வேண்டுமென்று ஆத்திரத்தோடு அலட்டிக்கொண்டேயிருக்கின்றன. ஆவிக்குரிய ஜீவன் இருக்குமாகில் இந்தப் பசிக்குத் திருப்தி செய்தாலன்றி அது நிற்கப்போகிறதில்லை.

**மூன்றாவது**,—போஜன பானத்தினாலேயன்றி வேறொன்றினாலும் நமது பசியும் தாகமும் திருப்தியடையாது. பசியாயிருக்கிற ஒருவனுக்கு அன்னபானாதிகளைத்தவிர முழு உலகத்தையும், சிறந்த ஆடையாபரணங்களையும், இராஜ கோலத்தையும், பூமியிலுள்ள சொத்துக்களையும், லட்சாதி லட்சம் வெள்ளி பொன்னையும், மிகுந்த கண்ணியத்தையும் கொடுத்தபோதிலும் அவன் அவைகளை மதிப்பானோ? பசியினால் வருந்துகிறவேளையில் இவை யாவும் அவனுக்கு உதவமாட்டாது. 'இவைகள் எனக்கு வேண்டாம், எனக்கு வேண்டியது சாப்பாடு, மற்றப்படி பிழைக்கமாட்டேன்' என்றுதான் சொல்லுவான். நீதியின்மேல் உண்மையான பசியும் தாகமுமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவின் நிலைமையும் இவ்விதமாகவேயிருக்கிறது. நீதியைத்தவிர வேறொன்றும் அவனுக்கு ஆறுதல் அளியாது. அதைத் தவிர அவனைத் திருப்தி செய்யக்கூடியது யாதுமில்லை. ஐசுவரியமோ, கனமோ, இன்பமோ அவனுக்கு இவைகளைப்பற்றி மதிப்பில்லை. 'எனக்கு வேண்டியது இவை அல்ல, வேண்டியது அன்பு, மற்றப்படி எனக்கு மரணமே' என்றே சொல்லுவான்.

4. ஜீவனுள்ள தேவன்பேரில் தாகமாயிருக்கிற ஆத்துமாவை உலகத்தார் பாக்கியம் என்றெண்ணுகிறவைகள் திருப்தி செய்வது அசாத்தியம். அதுபோலவே உலகத்தார் பக்தி என்றெண்ணுகிறவைகளும் திருப்தி செய்யமாட்டாது. உலகத்தார் தேவபக்தியென்றெண்ணிக்கொள்ளுகிறவைகள் மூன்று. (1) தீங்கு செய்யாமை, அதாவது கொள்ளை, திருட்டு, ஆணையிடுதல், குடிவெறி முதலிய புறம்பான பாவங்களுக்கு விலகியிருத்தல். (2) நன்மை செய்தல்,

அதாவது ஏழைகளைப் பராமரிக்கும் தர்மச்செய்கை. (3) கோவில் ஆராதனைக்கும் நற்கருணைக்கும் போகுதல். இந்த மூன்றும் எவனிடமிருக்கிறதோ அவனைத்தான் உலகத்தார் 'பக்திமான்' என்கிறார்கள். ஆனால் தேவன்பேரில் பசிதாகமுள்ளவனை இவைகள் திருப்தி செய்யுமா? செய்யவே செய்யாது. இது அவனுடைய ஆத்துமாவுக்கு ஆகாரமாகாது. இதைப்பார்க்கிலும் சிறந்த உள்ளான உன்னத பக்தி அவனுக்கு வேண்டும். அவன் 'தன் வயிற்றைக் கொண்டல் காற்றினால் நிரப்பக்கூடுமாகில் இவ்வித அற்ப ஆகாரமாகிய புறம்பான ஆசாரக் கிரியைகளினால் தன் ஆத்தும பசியைத் தீர்க்கக்கூடும். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகிக் கொள்ளக் கவனமாயிருக்கிறான் என்பது மெய்யே. நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியங்கொள்ளுகிறான். தேவனுடைய நியமங்கள் யாவையும் அநுசரிக்கிறான் என்றபோதிலும் அவன் வாஞ்சித்து நாடுகிறவைகள் இவைகளல்ல. இது அவன் ஆருப்பசியுடன் வாஞ்சிக்கிற மெய்ப்பக்தியின் வெளிப்புறமேயன்றி வேறல்ல. அப்படியானால் அவன் வாஞ்சிக்கிற பக்தி எது? கிறிஸ்து இயேசுவில் தேவனை அறிகிற அறிவு, 'கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற ஜீவன்,' 'கர்த்தருடனே ஒரேஆவியாய் இசைந்திருத்தல்,' 'பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியமாயிருத்தல்,' 'அவர் ஒளியிலேயிருப்பதுபோல் தானும் ஒளியிலே நடக்குதல்,' 'அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோல் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளல்' என்பவைகளே. அவனுக்கு வேண்டிய பக்தி இதுவே. அவன் வாஞ்சித்து நாடுகிற நீதி இதுதான். தேவனிடத்தில் அவன் இவ்விதமாய் ஆறுதலடையும்வரையில் அவன் இளைப்பாறமாட்டான்.

5. 'நீதியின்மேல்' இவ்வித 'பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்.' அவர்கள் தாங்கள் ஆவலாய் வாஞ்சிக்கிற நீதியையும் மெய்யான பரிசுத்தத்தையும் பெற்று திருப்தியடைவார்கள். தேவன் தமது தயவுள்ள ஆசீர்வாதங்களினாலும், தாம் தெரிந்துகொண்டவர்களுக்குரிய பாக்கியத்தினாலும், 'அவர்களைத் திருப்தியாக்குவார். வானகாரத்தினாலும் தமது அன்பாகிய மன்னாவினாலும் அவர்களைப் போஷிப்பார். ஆற்று ஜலத்தில் பானம் பண்ணுவதுபோல் தமது பேரின்ப நதியில் பானம் பண்ணச்செய்



வார். அதில் பானம் பண்ணுகிறவன் ஒருபோதும் தாகமடையான், ஜீவத் தண்ணீரின்பேரிலே அவனுக்கு மேன்மேலும் தாகமுண்டாகும். அந்தத் தாகம் என்றைக்கும் நிலைத்திருக்கும்.

6. 'நீதியின்மேல் பசிதாகமுள்ளவனே! நீ யாரானாலுஞ் சரி, திவ்விய பசியாகிய விலையுயர்ந்த இந்தத் தேவ ஈவை நீ இழந்துபோகாதபடி அவரை நோக்கி மன்றாடு! உன்னை அதட்டி நீ பேசாமல் இருவென்று அநேகர் சொன்னபோதிலும் நீ அதைக் கவனியாதே. 'இயேசு ஐயரே! எனக்கு இரங்கும். நீர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நானும் பரிசுத்தனாய் ஜீவியாவிட்டால் நான் உயிரோடிருந்தென்ன?' என்று அவரை நோக்கி முன்னிலும் அதிகமாய்க் கூப்பிடு. இனிமேல் 'அப்பமில்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உன் பிரயாசத்தையும் செலவழிக்கவேண்டாம். பூமிக்கடுத்த காரியங்களில் பாக்கியத்தைக் கண்டடையலாம், என்றெண்ணுகிறாயோ? உலக இன்பங்களை உன் காலின்கீழ் மிதித்து அதின் மேன்மைகளை மதியாமல் அதின் சம்பத்தைக் குப்பையென்றெண்ணுவாயாக. மேலும் 'கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காகவும்,' உன் ஆத்துமா ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட தேவசாயலை திரும்பக் கண்டடையும்படியாகவும், சூரியன் கீழ்கண்ட யாவற்றையும், அற்பமென்றும் குப்பையென்றும் எண்ணுவாயாக. உலகத்தார் 'தேவபக்தி' என்று சொல்லிக்கொள்ளுகிறவைகளிருந்தால், போதும் என்றெண்ணி உன்னிலுள்ள இந்த மேலான பசிதாகம் குன்றிப்போகாதபடி ஜாக்கிரதையாயிரு! அந்தப் பக்தி சடங்காசாரத்துக்கும், வெளித்தோற்றத்துக்கும் உரியதாயிருப்பதினால் இருதயமானது முன்போல் லௌகீக சம்பந்தமுள்ளதும், சிற்றின்ப மயக்கமுள்ளதுமாயிருக்கிறது. தேவபக்தியின் பெலன் அதாவது ஆவியும் ஜீவனுமாயிருக்கிற பக்தி உனக்குக் கிடைத்தாலன்றித் திருப்தியாயிராதே! நீ தேவனிலும், தேவன் உன்னிலும் வாசமாயிருப்பதும், நீ நித்தியகாலத்துக்குரியவனாயிருப்பதும், நீ தெளிக்கப்பட்ட இரத்தத்தினால் திரைக்குள் பிரவேசித்து, கிறிஸ்து இயேசுவோடு உன்னதங்களில் உட்கார்ந்திருப்பதுமன்றி வேறொன்றும் உன் ஆத்துமாவைத் திருப்தி செய்யாதிருக்கட்டும்.

III. 1. மேலும், இவர்கள் எவ்வளவுக்கு தேவனுடைய ஜீவனால் நிரப்பப்பட்டிருக்கிறார்களோ அவ்வளவுக்கு இந்த உலகத்தில் இன்னும் தேவனற்றவர்களாய் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் செத்துப்போயிருக்கிறவர்கள்மேல் கரிசனையுள்ளவர்களாவார்கள். இந்தக் கவலைக்கும் கரிசனைக்குமுரிய பலன் அவர்களுக்குக் கிடையாமற்போகாது. ஏனெனில் 'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம்பெறுவார்கள்.'

நமதாண்டவர் இவ்விடத்தில் உபயோகிக்கும் பதம் முக்கியமாய்ப் பரிதாபமுள்ளவர்களையும் உருக்க நெஞ்சுள்ளவர்களையும் குறிக்கும். தேவன்மேல் பசிதாகமற்றிருக்கிறவர்களை அவமதிக்காமல் அவர்களுக்காக உண்மையாய்த் துக்கப்படுகிறவர்களையே இரட்சகர் இரக்கமுள்ளவர்கள் என்கிறார்.

இந்த மேலான லட்சணமாகிய இரக்கம் சகோதர சிநேகத்தின் ஓர் பாகம். இதை இந்த இடத்தில் அன்புக்குப் பதிலாக உவமானித்திருக்கிறது. ஆகையால் 'இரக்கமுள்ளவர்கள்' என்று சொல்லும்போது தங்களிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருகிறவர்கள் என்பதே சரியான கருத்தாம்.

**2.** இந்த அன்பு மகா முக்கியமானதாகையால் ஞானமுள்ள தேவன் அப். பவுலைக்கொண்டு, இவ்வன்பைக்குறித்து விஸ்தாரமாய்த் தெரிவித்திருக்கிறார் (1 கொரி. 13-ம் அதி.). 'நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், நான் தீர்க்கதரிசன வரத்தை யுடையவனாயிருந்து சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.' இதை விவரமாய் ஆலோசனைசெய்து பார்ப்போமாகில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதான இரக்கமுள்ளவர்கள் யார் என்று பரிஷ்காரமாய் அறிந்துகொள்ளலாம்.

**3.** கிறிஸ்து நம்மை நேசிப்பதுபோல நாம் பிறனை நேசிக்கிறதான இந்த அன்பு 'நீடிய சாந்தமுள்ளது.' அது யாவரிடத்திலும் பொறுமையாயிருக்கும். தேவனுடைய பிள்ளைகளிடத்திலுள்ள பெலவீனம், அறிவீனம், தவறுதல்கள், குறைவுகள், தகாத விசுவாசம், அற்ப விசுவாசம் யாவையும் பொறுத்துக்கொள்ளும். இவ்வுலகத்தாரின் பகை, பொல்லாப்பு யாவையும் அன்பு சகித்துக்கொள்ளும். இவைகளைச் சிலகாலத்துக்குமாத்திரம் அல்ல, கடைசிவரைக்கும் பொறுத்துக்கொள்ளும். மேலும் இந்த அன்பை உடையவன் தன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனம் கொடுப்பான். அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங் கொடுப்பான். இவ்விதமாய் சத்துருவின் மனதை இளகும்படி செய்யத்தக்க அன்பாகிய அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவித்துக்கொண்டேயிருப்பான்.



4. தீமையை நன்மையினால் வெல்லவேண்டுமென்கிற நல் நோக்கம் அன்புக்கு உண்டு. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் 'அன்பு தயவுள்ளது.' இதற்குரிய கிரேக்குப் பதத்தைச் சரியானபடி மொழிபெயர்ப்பது எளிதல்ல. மொழிபெயர்த்தால், 'அன்பு மிருதுவானது,' **'சாதுவானது,' 'காருண்ணியமுள்ளது'** எனப் பொருள்படும். அன்புக்கு வெடுவெடுப்பு, கடுமை, கடினமனம் என்பவைகள் இல்லை. அது உடனே தன் இனிய சுபாவத்தினாலும் உருக்கமான பட்சத்தினாலும் துன்பப்படுகிறவனை உற்சாகப்படுத்துகிறது.

5. ஆதலால் 'அன்புக்குப் பொறாமையில்லை.' பொறாமைப்படுவது அதற்குக் கூடியதல்ல. பொறாமை என்னும் தீயகுணத்துக்கு அது நேர் எதிரிடையானது. தேவன் படைத்த ஒவ்வொரு ஆத்துமாவின்பேரிலும் உருக்க சிந்தையுள்ளவனாய் அவர்களுடைய இகபர வாழ்வுகளையும் ஆத்தும சரீர நன்மைகளையும் ஆவலாய் வாஞ்சிக்கிற ஒருவன் யாருக்காவது இந்நன்மைகள் கிடைக்கும்போது அவர்கள்மேல் மனவருத்தமடைவானோ? அந்த நன்மைகளைத் தான் அநுபவித்து வருவானாகில் மற்றவனுக்கும் இந்தப் பொது நன்மையில் ஒரு பங்கு கிடைத்ததற்காகச் சந்தோஷப்படுவானேயன்றி சஞ்சலப்படான். இந்த நன்மைகள் தனக்குக் கிடையாதிருக்குமானாலும் தன் சகோதரனுக்காவது அவைகள் கிடைத்ததினிமித்தமும் அவன் தன்னிலும் பாக்கியசாலியா யிருப்பதினிமித்தமும் தேவனை ஸ்தோத்திரிக்கிறான். அவனுடைய அன்பு பெருகப் பெருக மனுஷ

ருக்கு அருளப்படும் ஆசீர்வாதங்களைக்கண்டு அவனுக்குண்டாகும் சந்தோஷமும் பெருகும். அதினிமித்தம் அவன் எவ்வளவேனும் பொருமை கொள்ளுகிறதில்லை.

6. 'அன்பு தன்னைப் புகழாது.' இதில் கிரேக்குப் பதத்தின் முழு அர்த்தமும் அடங்கவில்லை. தீர்ப்புச்செய்வதில் அன்பு ஆத்திரப்படாது, அல்லது துடுதுடுப்பாயிராது என்பதுதான் கிரேக்கு வார்த்தையின் சரியான கருத்தாம். அன்பு திடீரென யாரையும் குற்றப்படுத்தாது. பார்த்தவுடன் அதீ கண்டிப்பாய்த் தீர்ப்புச்செய்யாது. முதலில் சகல சாட்சியையும், விசேஷமாய்க் குற்றவாளிக்குச் சார்பாகச் சொல்லப்படும் சாட்சியையும், அது சீர்தூக்கிப் பார்க்கிறது. பிறரிடத்தில் உத்தமமாய் அன்புகூருகிறவன் மற்றவர்கள் பெரும்பாலும் செய்கிறதுபோலச் செய்யமாட்டான். பெரும்பான்மையோர் கொஞ்சம் கவனித்து அதிகம் உத்தேசித்து, உடனே முடிவு சொல்லிவிடுகிறார்கள். இவனோ அப்படியல்ல. இவன் கவனத்தோடும் விழிப்போடும் ஆராய்ந்து தான் விசாரிக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் குறித்து ஜாக்கிரதையாயிருக்கிறான். பூர்வீககாலத்தில் கிறிஸ்துவினுடைய போதகத்தை அறியாத ஒரு வித்துவான் இவ்விஷயத்தைக்குறித்துச் சொல்லும் விதியை இரக்கமுள்ளவன் மனதார அநுசரிக்கிறான். அந்த விதி என்னவெனில் 'ஒருவன் மற்றவனுக்கு விரோதமாய்ச் சொல்லுவதை நான் நம்பாததுபோல, அவன் தனக்குத்தானே விரோதமாய்ச் சொல்லுவதையும் நான் எளிதல் நம்புகிறதில்லை. அதைக்குறித்து அவன் யோசித்துப் பார்க்கவும், பலதரம் பிறரோடு ஆலோசித்துக்கொள்ளவும், அவனுக்கு எப்போதும் இடங்கொடுப்பேன்' என்பதே. தற்கால கிறிஸ்தவனின் பிரமாணம் இதுவோ?

7. ஆதலால் 'அன்பு இறுமாப்பாயிராது.' அன்பு ஒருவன் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணும்படி இடங்கொடாமல் தன்னைக்குறித்து நிதானமாய் எண்ணும்படி செய்கிறது. மேலும் அன்பு ஆத்துமாவைத் தரைமட்டும் தாழ்த்துகிறது. பெருமைக்கு உறைவிடமாயிருக்கிற மேட்டிமைச் சிந்தைகளை அது நிர்மூலமாக்கி நாம் அற்பராயும் நீசராயும் தாழ்ந்தவர்களாயும் சகலருக்கும் ஊழியக்காரராயும் இருப்பதற்காக நம்மைச் சந்தோஷப்படுத்து



கிறது. 'சகோதர சிநேகத்திலே ஒருவர்மேல் ஒருவர் பட்சமாயிருக்கிறவர்கள் கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுவார்கள். ஏக அன்பினால் இசைந்த ஆத்துமாக்களாயிருக்கிறவர்கள் மனத்தாழ்மையினால் ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுவார்கள்.

8. 'அன்பு அயோக்கியமானதைச் செய்யாது.' அது மரியாதை செய்வதில் குறைவாயிராது; வேண்டுமென்று ஒருவரையும் விசனப்படுத்தவும் மாட்டாது. அது யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்துகிறது. எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படும். எவனைக் கனம் பண்ணவேண்டியதோ அவனைக் கனம் பண்ணும். சகலருக்கும் செய்யவேண்டிய உபசாரம், மரியாதை, தயை யாவையும் அன்பு செய்யும். அவரவர் அந்தஸ்துக்குத் தகுந்ததாக யாவரையும் கனம்பண்ணும் நல்லொழுக்கம் என்னும் மரியாதை என்னவென்றால், 'நமது நடக்கைகளிலெல்லாம் மற்றவர்களைப் பிரியப்படுத்த வேண்டுமென்கிற ஆவலே' என்று காலஞ்சென்ற நூலாசிரியன் ஒருவன் சொல்லுகிறான். அப்படியானால் சகல மனுஷரையும் நேசிக்கும் கிறிஸ்தவனைப்போல நல்லொழுக்கமுள்ளவன் எவனுமில்லை. அவன் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்க விரும்புகிறான். இந்த விஷயமும் மறைந்திருக்கவும் மாட்டாது. அவனுடைய சகல நடபடிக்கைகளிலும் இது எப்படியாவது விளங்கும். அவனுடைய 'அன்பு மாயமற்றதாய்' இருக்கிறபடியால், அது அவனுடைய நடக்கை, பேச்சு, வார்த்தைகளில் காணப்படும். அவன் தந்திரமாகவல்ல, உண்மையாகவே 'எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு எல்லாருக்கும் எல்லாமுமாயிருக்கத்தக்கதாக' இந்த அன்பு அவனை நெருக்கி ஏவும்.

9. இப்படி எல்லாருக்கும் எல்லாமுமாயிருக்கும்போது அன்பு 'தற்பொழிவை நாடாது.' சர்வ ஜனங்களையும் நேசிக்கிறவன் மற்றவர்களுக்குப் பிரியமாய் நடக்கும்படி முயற்சிக்கும்போது தன் சொந்த உலக ஆதாயத்தை நாடுகிறதேயில்லை. ஒருவனுடைய வெள்ளி பொன்னையாவது ஆடையாபரணங்களையாவது அவன் இச்சிக்கிறதில்லை. அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பேயன்றி அவனுக்கு

வேறு விருப்பமில்லை. உலக ஆதாயத்தை நாடாததுபோலவே தன் ஆவிக்குரிய நன்மைகளையும் நாடாதிருக்கிறான் என்று ஒரு கருத்தின்படி சொல்லலாம். எப்படியெனில் அவர்களுடைய ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சிக்க வேண்டுமென்கிற ஒரே நோக்கமுள்ளவனாயிருக்கும்போது தன்னை மறந்தவன்போலாகிறான். தேவ மகிமையைப் பற்றிய வைராக்கியத்தினால் நிறைந்திருக்கும்போது தன்னைப்பற்றிய ஞாபகமே அவனுக்கு இல்லை. இவ்வளவுதானா? சில சமயங்களில் அன்பின் மிகுதியினால் அவன் தன் சரீரத்தையும் ஆத்துமாவையும் தன்னையுமே முற்றிலும் எண்ணாதவனாகத் தோன்றுவான். அக்காலங்களில், மோசேயும், பவுல் அப்போஸ்தலனும் சொன்னதுபோல இவனும் சொல்லக்கூடும், 'ஐயோ, இந்த ஜனங்கள் மகா பெரிய பாவஞ் செய்திருக்கிறார்கள். ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்' (யாத். 32: 31, 32.); மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவை விட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே.' (ரோ. 9: 3.)

10. இத்தன்மையான அன்பு சினமடையுமா? 'அது சினமடையாது' என்று சொல்லியிருப்பது ஆச்சரியப்படத் தக்கதல்ல. இங்கிலீஷ் Authorized Version என்னும் மொழிபெயர்ப்பு செய்தவர்கள் அன்பு 'எளிதில் சினமடையாது' என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். 'எளிதில்' என்னும் பதம் மூலபாஷையிலில்லை. [Revised Version என்னும் மொழிபெயர்ப்பிலோ 'எளிதில்' என்னும் பதம் விடப்பட்டிருக்கிறது.] பரி. பவுல், 'சினமடையாது' என்கிற வார்த்தையை மாத்திரம் எழுதியிருக்கிறான். சினமடையும்படியான சமயங்கள் அடிக்கடி நேரிடும். சினத்தை மூட்டக்கூடிய பலவித புறம்பான சம்பவங்களும் நேரிடும். ஆனால் அன்பு சினத்துக்கு இடங்கொடாமல், சகலத்தையும் ஜெயித்து வெற்றி சிறந்து சோதனைகளிலெல்லாம் இயேசுவை நோக்கிப்பார்த்து அவருடைய அன்பினால் முற்றும் ஜெயங்கொள்ளுகிறது.



இங்கிலீஷ் வேதாகமத்தில் 'எளிதில்' என்னும் பதம் வந்த காரணம் என்ன? அதை மொழிபெயர்த்தவர்கள் அப். பவுலின் செய்கையை மறைக்கும்படி இதை உபயோகித்ததாகத் தோன்றுகிறது. இவ்வளவு நேர்த்தியாய் விஸ்தரித்திருக்கிற அன்பில் அப்போஸ்தலன் தானே குறைவுள்ளவனாயிருந்ததாக எண்ணிக்கொண்டார்கள். அவர்கள் இப்படி எண்ணிக்கொண்டதற்குக் காரணம் அப்போஸ்தலர் நடபடிகளில் வருகிற ஒரு வாசகந்தான். அந்த வாசகமும் சரியானபடி மொழிபெயர்க்கப்படவில்லை. பவுலுக்கும் பர்னபாவுக்கும் யோவானைக்குறித்து வாதுண்டானபோது 'இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபம் மூண்டபடியினால் அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்' என்று அப். 15: 39-ல் சொல்லியிருக்கிறது. தங்களை விட்டு முன்னே பிரிந்துபோன யோவானைத் திரும்பவும் தங்களுடன் அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்று பரி. பவுல் சொன்னதே நியாயமானாலும் அவன் கோபமூண்டவனானான் என்றும், பர்னபா தான் பரிசுத்தாவியினால் தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியத்தை விட்டு விடத்தக்கதான கோபங்கொண்டான் என்றும் தோன்றுகிறது. இம்முகாந்தரங்களினால் பர்னபாவைப்போலவே பவுலும் கோபப்பட்டானென்று வாசிக்கிறவர்கள் எண்ணக்கூடியதே. மூல பாஷையிலோ இவ்வித கருத்தில்லை. பரி. பவுல் கோபம் மூட்டப்பட்டதாகவும், அதில் சொல்லப்படவில்லை. கோபத்தை உண்டுபண்ணும் கொடிய உக்கிரம் என்றுமாத்திரம் சொல்லியிருக்கிறது. [Revised Version-லும் அப்படியே.] அதனால் பர்னபா பவுலை விட்டுப் பிரிந்து யோவானைக் கூட்டிக்கொண்டு போய்விட்டான். 'பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு சகோதரரால் தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டு' தான் நிர்ணயித்தபிரகாரம் 'சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.' 'தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு' என்பதாகப் பர்னபாவைக்குறித்துச் சொல்லப்படவில்லை.

11. 'அன்பு தீங்கு நினையாது.' அது தீங்கு நினையாததினால் கோபம் மூளத்தக்க தீரான சம்பவங்கள் நேரிடாதபடி பார்த்துக் கொள்ளுகிறது. இரக்க சுபாவமுள்ள மனுஷன் தீமையான அநேக காரியங்களை அறியாதிருக்க முடியாது. அவைகளைத் தன் கண்களால்

பார்த்துத் தன் காதுகளால் கேட்கவேண்டியவனே. இவ்வித தீமையான விஷயங்களை அவன் பாராதபடிக்கு அன்பு அவன் கண்களைக் குருடாக்குகிறதில்லை. மேலும், அன்பு அவனுடைய புலன்களைக் கெடுத்துப்போடாததுபோலவே அவனுடைய புத்தியையும் கெடுத்துப்போடுகிறதில்லை. அதினால் இவைகள் தீமையானவைகள்தான் என்று அவன் எப்படியும் கண்டுகொள்வான். திருஷ்டாந்தமாக: ஒருவன் தன் அயலானை அடிக்கிறதை அவன் பார்க்கிறான், அல்லது ஒருவன் தேவநாமத்தைத் தூஷிக்கிறதைக் கேட்கிறான். அடித்ததையும் பேசினதையுங்குறித்து அவன் சந்தேகிக்கிறதில்லை. அல்லது அது தீமைதான் என்பதைக்குறித்தும் அவன் சந்தேகிக்கிறதில்லை. என்றாலும், 'அன்பு தீங்கு நினையாது.' 'நினைத்தல்' என்றருத்தங்கொள்ளுகிற கிரேக்குப் பதம் நாம் பார்ப்பதையும் கேட்பதையும் குறிக்கிறதில்லை. அல்லது திடமானவாவது, நற்செயலாயாவது நமது புத்தியினால் அறிந்துகொள்ளுவதையும் குறிக்காது. அப்படியானால் அந்த வார்த்தையின் பொருள் என்ன? நினைக்க அவசியமில்லாததை மனதார நினைக்கிறதையும், தீமை தோன்றாதிருக்கையில் தீமையென்று அனுமானிக்கிறதையும், நாம் பாராதவிஷயங்களை யூகித்து அறிகிறதையும், பாராததும் கேள்விப்படாததுமானவைகளை உத்தேசிப்பதையும் குறிக்கும். மெய் அன்பு இத்தன்மையான தீமைகளை முற்றிலும் அழித்துவிடுகிறது. தீமானமாய் அறியாதிருக்க உத்தேசித்தெண்ணிக்கொள்ளுவதை அன்பு ஒப்புக்கொள்ளாது. அன்பு, சகல சமுசயங்களையும் தகாத உத்தேசங்களையும் தீமையை நம்பும்படிக்கான சுபாவத்தையும் நம்மைவிட்டு எடுத்துவிடும். அன்பு களங்கமும் கபடுமற்றது. அது சந்தேகங்கொள்ளாது. அது தீமையைப் பிணைப்படுவதுமில்லை, தீமைக்குப் பட்சபடுவதுமில்லை.

12. 'அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது.' அநியாயத்தில் சந்தோஷப்படுவது கிறிஸ்துவின் திருநாமத்தைத் தரித்துக்கொண்டவர்களுக்குள்ளும் சாதாரணமாயிருக்கிறது. தங்கள் சத்துரு டம்பத்திலாவது தப்பிதத்திலாவது பாவத்திலாவது அகப்பட்டுக்கொள்வானாகில் அவர்கள் அதிகமாய்ச் சந்தோஷப்படுகிறார்கள். விசேஷமாய்த் தாங்கள் ஒரு பிரிவைச்சேர்ந்த வைராக்கியசாலிகளாய் இருந்தால் இக்குற்றத்துக்கு விலகியிருப்பது மகா அபூர்வம்.



எதிரிகளுடைய போதனையிலாவது சாதனையிலாவது மெய்யாகவேனும் பொய்யாகவேனும் குற்றம் காணும்போது அக்குற்றத்தினிமித்தம் சந்தோஷப்படாதிருப்பது எளிதல்ல. ஒரு விவகார விஷயத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்த விரும்புகிறவர்களில் எவன் இக்குற்றத்துக்கு விலகினவன்? இதற்கு முற்றிலும் விலகியிருக்கத்தக்கதான அவ்வளவு அமைதலாயிருக்கிறவன் யார்? எதிரியின் தவறுதல் தன் காரியத்துக்கு அநுகூலமாயிருக்குமாகில் அதற்காகச் சந்தோஷப்படாதவன் எவன்? அன்புள்ளவன் எவனோ அவன் அப்படிச் சந்தோஷம் அடையான். தன் சத்துரு செய்த பாவத்தினிமித்தமாவது புத்தியீனத்தினிமித்தமாவது துக்கப்பட்டு அழுகிறவன் அவன்தான். அதைக்குறித்துக் கேள்விப்படவும் அவனுக்குப் பிரியமில்லை. மற்றவர்களுக்குச் சொல்லவும் பிரியமில்லை. அதை என்றைக்கும் மறந்துபோகவே விரும்புகிறான்.

13. ஆனால் அன்புள்ளவன் 'சத்தியத்தில் சந்தோஷப்படுவான்.' அது எங்கே காணப்பட்டாலுஞ் சரி. இருதய பரிசுத்தம், நடக்கைப் பரிசுத்தமாகிய கனிகளைக் கொடுக்கிற தேவபக்திக் கேதுவான சத்தியத்தில் சந்தோஷப்படுவான். அபிப்பிராயங்களிலாவது பழக்கவழக்கங்களிலாவது தனக்கு விரோதிகளாயிருக்கிறவர்கள் இவ்விஷயத்தில் விரோதிகளாயிருந்தும் அவர்கள் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்கள் என்றும் மற்ற விஷயங்களில் குற்றமற்றவர்களென்றும் அறிவானாகில் சந்தோஷப்படுகிறான். அவர்களைக்குறித்து நன்மையானவைகளைக் கேள்விப்படுவது அவனுக்குச் சந்தோஷம். சத்தியத்துக்கும் நீதிக்கும் பங்கமில்லாமல் அவர்களைக் குறித்துப்பேசக்கூடியதெல்லாம் பேசப் பிரியப்படுகிறான். நன்மையானவைகள் மனுஷருக்குள் எவ்விடத்தில் காணப்பட்டாலும், அது அவனுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவன் உலகத்தின் பிரஜைகளில் ஒருவனாயிருப்பதினால், அதில் வாசஞ்செய்கிற மற்றப் பிரஜைகளின் வாழ்வில் தனக்கும் பங்குண்டென்று நினைக்கிறான். தானும் மனுஷனாயிருப்பதினாலே மற்ற மனுஷரின் வாழ்வில் ஏனோதானோ வென்றிராமல், தேவனுக்கு மகிமை யுண்டு பண்ணக்கூடியவைகளில் பிரியப்பட்டு, மனிதருக்குச் சமாதானத்தையும் பிரியத்தையும் விருத்திபண்ணும்படி முயற்சி செய்கிறான்.

14. இந்த 'அன்பு சகலத்தையும் மூடும்.' ('தாங்கும்' என்னும் பதத்தை 'மூடும்' என்றே மொழிபெயர்க்கவேண்டியது. மற்றப்படி இதுவும் இதற்குப் பின்வரும் 'சகலத்தையும் சகிக்கும்' என்ற வாசகமும் ஒரே பொருள் கொடுக்கும்.) இரக்கமுள்ளவன் அநியாயத்தில் சந்தோஷப்படாமலும், அதைக்குறித்து மனதாரச் சொல்லிக்கொள்ளாமலும் இருப்பான். மற்றவர்கள் 'செய்யும் பாவங்களுக்கு உடன்படாதவனாய்' தான் கண்டும் கேட்டும் அறிந்துமிருக்கிற தீமையைத் தன்னாலானமட்டும் மறைக்கிறான். தான் எந்த இடத்திலிருந்தாலும் யாரோடிருந்தாலும் தனக்குப் பிரியம் இல்லாத ஒன்றைப் பார்த்தால், அதைக்குறித்துத் தன் வாயைத் திறந்து வெளியிடான். வெளியிட்டாலோ இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட சகோதரனை ஆதாயப்படுத்தலாமென்று எண்ணி அவனிடத்தில் நேரே அதை அறிவிப்பான். மற்றவர்களுடைய குற்றம் குறைவுகள் அவனுடைய சம்பாஷணையில் காணப்படாது. சம்பாஷிக்குமிடத்தில் இல்லாதவர்களைக் குறித்து அவன் பேசுகிறதேயில்லை. பேசினாலோ புகழ்ந்தே பேசுவான். கோள் குண்டணி சொல்லுகிறவன், தீமை பின்புறணி பேசுகிறவன் எவனும் இவன் பார்வையில் கொலைபாதகன். பிறனுடைய கழுத்தை அறுக்க எப்படித் துணியானோ, அப்படியே பிறனுடைய நற்கீர்த்தியைக் கெடுக்கவும் துணியான். ஒருவன் 'அம்புகளையும் கொள்ளிகளையும் சாவுக் கேதுவானவைகளையும் எறிந்து,' நான் விளையாட்டுக்கல்லவோ செய்தேனென்று சொல்லி, அவன் அயலான்வீட்டுமச்சு விளையாட்டுக்காகத் தீக்கொளுத்திவிடுவதுபோல் கோட்சொல்லுவதும் இருக்கிறதென்று எண்ணுகிறான். அன்புள்ளவன் பிறனுடைய குற்றத்தை வெளியிடும் சமயமுண்டு. சில வேளைகளில் தேவனுடைய மகிமைக்காகவாவது பிறனுடைய நன்மைக்காகவாவது (இரண்டும் ஒன்றுதான்) தீமையை மூடிவைக்கக் கூடாதென்று அவன் மனதுக்குப் படுகிறதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் குற்றமற்றவனின் நன்மைக்காகக் குற்றவாளியை அவன் வெளிப்படுத்தவேண்டியது நேரிடும். இவ்வித சமயங்களிலுங்கூட (1) உன்னத அன்பு அவனை ஏவினாலன்றி, பிறனுடைய குற்றத்தைக் குறித்துப் பேசமாட்டான். (2) பிறன் செய்த குற்றத்தை வெளியிட நேரிடும்போது, விசேஷித்த நோக்கத்தையாவது திட்டமான கண்



மையையாவது தன் மனதில் வைத்தவனாய் வெளியிடுவானேயன்றி, ஏதேனும் ஒரு நன்மை யுண்டாகலாம், அல்லது பொதுவாய்த் தேவ நாமத்துக்கு மகிமையாயிருக்கலாம் என்றெண்ணி அப்படிச் செய்யான். (3) அப்படி இருந்தாலும், தான் நாடின நோக்கம் நிறைவேறுவதற்கு, தான் கையாடக்கூடிய யத்தனம் இந்த ஒன்றுதான் என்றும், வேறெந்தவகையாலும் தன் நோக்கம் அவ்வளவாய்ப் பலிதப்படாதென்றும், அவன் பூரணமாய் அறிந்துகொண்டாலன்றிப் பேசமாட்டான். (4) பேசப்போனாலோ, இதைக் கடைசியாகக் கொடுக்கும் கொடிய மருந்துபோலவும், நம்பிக்கையற்ற வியாதிக்குச் செய்யும் முரட்டு வைத்தியம்போலவும், நஞ்சைப் பரிகரிப்பதற்காகமாத்திரம் கொடுக்கும் நஞ்சாகவும் பாவித்து, மிகுந்த துக்கத்தோடும் வேண்டா வெறுப்போடும் பேசுவான். (5) ஆனபடியால் அவன் பேச்சு மிகச் சொற்பமாயிருக்கும். பேசாதிருப்பது அன்பின் பிரமாணத்துக்கு விரோதமாய் இருக்கிறாப்போலவே அதிகம் பேசுவதும் அந்தப் பிரமாணத்துக்கு விரோதம் என்றெண்ணிப் பயத்தோடும் நடுக்கத்தோடும் பேசுகிறான்.

15. 'அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும்.' எதைக்குறித்தும் எப்போதும் நன்மையாகவே நினைக்கவும் நல் அருத்தப்படுத்தவும் விரும்புகிறது. ஒருவனுடைய நல் நடக்கைக்கு அநுகூலமாயிருக்கத்தக்கவைகளை யெல்லாம் அன்பு உடனே நம்பும். எவனாயிருப்பினும் அவனுடைய குற்றமின்மையையும் நேர்மையையும் (யாவரும் இப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டுமென்று விரும்புகிறது.) எளிதில் விசுவாசிக்கும். அவன் ஒருகாலத்தில் தவறிப்போய் மனந்திரும்பியிருப்பானாகில் அதை உண்மையென ஒப்புக்கொள்ளும். குற்றத்தைச் சந்தோஷத்தோடு பொறுத்துக்கொள்ளும். குற்றவாளிக்குக் கூடியவரை ஆக்கினை குறைய விரும்புகிறது. தேவனுடைய சத்தியத்திற்குப் பங்கம் வராது என்று கண்டால், அன்பு மனுஷருடைய பெலவீனத்தை எவ்வளவுதூரம் தாங்கக்கூடுமோ அவ்வளவுக்குச் சந்தோஷத்தோடு தாங்கும்.

16. விசுவாசிக்கக் கூடாதிருக்குமாகில் 'அன்பு சகலத்தையும் நம்பும்.' யாரைக்குறித்தும் தீமை கேள்விப்படுமாகில், தான் கேள்விப்பட்டது உண்மையல்லவென்றும், கேள்விப்பட்ட காரியம்

ஒருபோதும் நடக்கவில்லையென்றும் அன்பு நம்புகிறது. சங்கதி வாஸ்தவமென்று கண்டால், காரியம் நடந்த சந்தர்ப்பம் ஒருவேளை சொன்னபிரகாரம் இராது என்றும்; சங்கதி உண்மையாயிருந்தபோதிலும், கேள்விப்பட்டபிரகாரம் அவ்வளவு கெடுதியானதாய் இருக்கமாட்டாது என்றும் அன்பு நம்புகிறது. நடந்த சங்கதி உண்மையாகவே தீமையானதெனத் தோன்றுமாகில், அதைச் செய்த நோக்கம் தீமையாயிராது என்று அன்பு நம்புகிறது. நோக்கமும் தீமைதான் என்று தெளிவாய்த் தெரியுமாயின், 'இதைச் செய்தவன் ஆத்திரத்தில் செய்திருக்கவேண்டும். ஏதோ திடீரென உண்டான கோபத்தினாலோ, அல்லது சோதனை பலமாயிருந்ததினாலோ, தன்னை அடக்க முடியாமல், இப்படிச் செய்துவிட்டான்' என்று அன்பு நம்புகிறது. நடந்தகாரியம், அதைச் செய்த நோக்கம், செய்தவன் குணம் ஆகிய எல்லாம் ஒன்றுபோலத் தீமைதான் என்று சந்தேகமறக் கண்டுகொண்டபிற்பாடும், கடவுள் எப்படியாவது கடைசியில் ஜெயமடைவார் என்றும், 'மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷமுண்டாகிறதைப்பார்க்கிலும் மனந்திரும்புகிற' இந்த 'ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும்' என்றும் அன்பு நம்புகிறது.

17. கடைசியாக அன்பு 'சகலத்தையும் சகிக்கும்.' மெய்யான இரக்கமுள்ளவனின் குணசீலம் இந்த லட்சணத்தோடு முடிவடைகிறது. அவன் சிலவற்றையும், அநேகத்தையும், சகலத்தையும் முற்றிலும் சகித்துக்கொள்ளுவான். மனுஷர் செய்யக்கூடிய அநியாயமோ, வன்மமோ, குரூரமோ யாவற்றையும் அவன் சகித்துக்கொள்ளக்கூடும். ஒன்றையும் சகிப்பதற்கு அசாத்தியமானதாக நினையான். 'இது என்றால் சகிக்கத்தக்கதல்ல' என்று ஒன்றையுங் குறித்து அவன் சொல்லுகிறதேயில்லை. தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்யவுங்கூடும். எல்லாவற்றையும் சகிக்கவும் கூடும். அவனுக்கு நேரிடும் துன்பங்கள் அவன் அன்பை அழித்து தணித்துப்போடுகிறதில்லை. இந்த அன்பு ஒன்றினாலும் சேதப்படாது. அது சமுத்திரத்தின் ஆழத்திலும் எரியக்கூடிய நெருப்புச் சுவாலை. 'திரளான தண்ணீர்கள்' அவனுடைய நேசத்தை அவிக்கமாட்டாது' (உன்னத. 8: 7.). அது சகலத்தையும் ஜெயித்து வெற்



றியடையும். அன்பு ஒருக்காலும் ஒழியாது; அது இம்மையிலும் ஒழியாது; மறுமையிலும் ஒழியாது. இவ்விதமாக 'இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்.' அவர்கள் வழிகளில் எல்லாம் கடவுள் தமது ஆசீர்வாதத்தைப் பொழிந்து, அவர்கள் பிறருக்குப் பாராட்டுகிற அன்புக்குப் பதிலாக இம்மையிலே ஆயிரமடங்கு பலன் அளிக்கிறார். உலகமுண்டானதுமுதல் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தில் 'அதிகமான நித்திய கன மகிமையும்' அருளப்படும். ஆகவே 'இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்.'

18. 'ஐயோ! நான் மேசேக்கிலே சஞ்சரித்தது போதும், கேதாரின் கூடாரங்கள் அண்டையிலே குடியிருக்கும்படி நேரிட்டதும் போதும்' என்று இன்னும் சொல்லுவது சரி: களங்கமற்ற உத்தம அன்பு பூமியில் அற்றுப்போயிற்றே, இப்படியும் நேரிட்டதே என்று உன் மனம் உருகி வியாகுலப்படும். இந்தக் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறதைப் பாருங்கள் என்று பூர்வத்தில் நல்ல கருத்தில் மற்றவர்கள் சொன்னார்கள். நாம் அவ்வார்த்தைகளை வேறு கருத்தில் சொல்லவேண்டியதாயிற்று. இக்காலத்தில் கிறிஸ்தவ இராஜ்யங்கள் ஒன்றையொன்று சின்னபின்னப்படுத்தி, அக்கினியினாலும் பட்டயத்தினாலும் ஒன்றையொன்று பாழாக்கிக்கொண்டு வருகின்றன. கிறிஸ்தவ சேனைகள் சிறிது நேரத்துக்குள் ஆயிரக்கணக்காக, ஒன்றையொன்று பாதாளத்துக்குள் அனுப்புகின்றன. கிறிஸ்தவ ஜனங்களைக் கவனித்தால், ஒரு கட்சி வேறொரு கட்சிக்கு விரோதமாகவும், ஒரு பிரிவார் வேறொரு பிரிவாருக்கு விரோதமாகவும் கலகம் செய்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ பட்டணங்களைப் பார்த்தாலோ கபடும், வஞ்சனையும், கொடுமையும், அநியாயமும், திருட்டும், கொலைபாதகமும் அவைகளின் வீதிகளை விட்டு இன்னும் போகக்காணோம். கிறிஸ்தவ குடும்பங்களோ பொறாமை, காய்மகாரம், கோபம் முதலியவற்றினாலும் கணக்கற்ற சச்சரவுகளினாலும் எண்ணிறந்தகாலமாய் ஒன்றோடொன்று ஒட்டாமல், பிரிந்துபோயிருக்கின்றன. இதிலும் அதிக பயங்கரமானதும் துக்கப்படத் தக்கதுமான ஒரு விஷயம் கிறிஸ்தவ சபையின் நிலைமையே. கிறிஸ்தவ சபையும் இப்படியிருக்குமா? ஐயோ! அதைக் காத் பட்டணத்தில் அறிவியாதேயுங்கள். ஆனால் யூதர்களுக்காவது, மகமதியர்களுக்காவது, புறமதஸ்தர்களுக்காவது அறிவி

யாமல் மறைத்து வைக்கக்கூடுமோ? இந்தச் சபைகள் சமாதானப் பிரபுவாகிய கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருந்தும், ஒன்றோடொன்று போர்செய்துகொண்டே யிருக்கின்றன. அவைகள் பாவிகள் மனந்திரும்பும்படியாக அவர்களை உயிரோடே தகனித்து, 'பரிசுத்தவான்களின் இரத்தத்தினால் வெறிகொண்டிருக்கின்றன. வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாயாகிய மகா பாபிலோன்' ஒன்றுதானா இவ்வித பேரெடுத்தது? ஐயோ! சீர்திருத்த சபைகள் என்று சொல்லிக்கொள்ளுகிற சபைகளும் ரோமான் சபை போன வழியிலே போகக் கற்றுக்கொண்டிருக்கின்றன. புரோட்டெஸ்டாண்டு சபைகளும் தங்களுக்கு அதிகாரமிருக்கும்போது, மற்றவர்களைத் துன்பப்படுத்தி உயிர்வதை செய்ய அறிந்திருக்கின்றன. அவைகள் தங்களுக்குள் ஒன்றையொன்று சபித்து, கீழான நரகத்துக்குப் போவதாக ஒன்றையொன்று தீர்க்கின்றன. பிரதானமான சத்தியங்களில் ஒற்றுமையிருந்தும், அபிப்பிராயங்களிலாவது, அற்ப சொற்பமானவைகளிலாவது இருக்கும் விகற்பத்தினிமித்தம், எவ்வளவு மூர்க்கம், சண்டை, பகை, கடுஞ்சொல் அச்சபைகளுக்குள் காணப்படுகின்றன. 'சமாதானத்துக் கேற்றவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி யுண்டாக்கத் தக்கவைகளையும்மாத்திரம்' நாடுகிற சபை எது? ஆண்டவரே! இன்னும் எவ்வளவுகாலம் செல்லும்! உமது வாக்குத்தத்தம் ஒழிந்துபோகுமோ? பயப்படாதே, சிறு மந்தையே! நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், நம்பிக்கையோடே இரு. பூமியை மறுரூபப்படுத்த உன் பிதா சித்தமுள்ளவராய் இருக்கிறார். நிச்சயமாகவே அநீதியாகிய யாவுக்கும் முடிவு வரும். அப்பொழுது பூச்சக்கரத்துக் குடிகள் நீதியைக் கற்றுக்கொள்ளுவார்கள். 'ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.' 'கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.' 'உலகத்தின் இராஜ்யங்களெல்லாம் தேவனுக்குரிய இராஜ்யங்களாகும்.' அப்பொழுது 'அவருடைய பரிசுத்த பர்வதம் எங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாரும் இல்லை.' அவர்கள் தங்கள் 'மதில்களை இரட்சிப்பென்றும் தங்கள் வாசல்களைத் துதி' என்றும் சொல்லுவார்கள். கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்ததுபோலக் கிறிஸ்த



வர்களும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கறையற்றவர்களும் குறையற்றவர்களுமா யிருப்பார்கள். இந்த உத்தம நிலைமை இப்பொழுது திரளாய் உண்டாகாவிட்டால் நீயே இதை உண்டாக்கும்படி பிரயாசப்படு. நீ உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. நீ பிறனுக்காக உன் ஜீவனையும் விட்டுவிட ஆயத்தமாயிருக்கத்தக்கதாக தேவனாகிய கர்த்தர் ஒவ்வொரு ஆத்துமாவையும்பற்றிய அன்பினால் உன்னை நிரப்புவாராக. நீ தேவனோடு என்றென்றும் அரசாளும்படி, அவர் உன்னைத் தமது அன்பின் இராஜ்யத்துக்கு அழைத்துக்கொள்ளுமட்டும், உன் ஆத்துமா தன்னிலுள்ள அன்பற்ற அசுத்த குணங்களை அடக்கி, எப்போதும் அன்பினால் நிறைந்திருப்பதாக.

## வினாக்கள்.

1. 'பகை, கோபம், அச்சம்' என்பவைகள் எக்காலத்திலும் தீமையும் மோசமுமானவைகள் என்று எண்ணலாமா?

'கடுமையும் வெறுப்புமான ஆசாபாசங்களைக்கூட நல்நோக்கமாய் உபயோகிக்கக்கூடியது. பகை, கோபம், அச்சம் முதலியவைகளை பாவத்துக்கு விரோதமாய் உபயோகித்து.........அனுகான்.'

பிரிவு. I. 5. பார்க்க.

2. 'நியாயமில்லாமல்' என்பதின் கருத்தென்ன?

பிரிவு. I. 8. பார்க்க.

3. அளவில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான மூன்றுவித ஆக்கினைத்தீர்ப்பைக் குறித்தும் உவெஸ்லி ஐயர் சொல்லுகிற வியாக்கியானம் எவை?

பிரிவு. I. 8, 9, 10. பார்க்க.

4. தேவன்பேரில் தாகமாயிருக்கிற ஆத்துமாவை உலகத்தார் பாக்கியம் என்றெண்ணுகிறவைகள் திருப்தி செய்யாததுபோல வேறெவை திருப்தி செய்யமாட்டாது?

'உலகத்தார் பக்தி யென்றெண்ணுகிறவைகள்.'

5. ஆட்சிக்காரருக்குள்ளிருக்கும் சிந்தையைக்குறித்து உவெஸ்லி ஐயர் எவ்வாறு விவரிக்கிறார்?

பிரிவு. III. 12. பார்க்க.

6. 'அன்பு சகலத்தையும் தாங்கும்' என்பதை உவெஸ்லி ஐயர் எவ்வாறு மொழி பெயர்க்கிறார்?

பிரிவு. III. 14. பார்க்க.

7. 'அன்பு சகலத்தையும் நம்பும்' என்பதின்பேரில் உவெஸ்லி ஐயர் சொல்லுகிற வியாக்கியானம் என்ன?

8. 'அன்பு' சகிக்கிறவை இன்னின்னவை என்று மட்டுப்படுத்தக்கூடுமா?

பிரிவு. III. 17. பார்க்க.

# பதினோராம் பிரசங்கம்.

## THE ORIGINAL, NATURE, PROPERTY AND USE OF THE LAW.

## நியாயப்பிரமாணம்: அதின் உற்பத்தி, தன்மை, லட்சணம், உபயோகம்.

*'ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.'*
(ரோம. 7: 12.)

1. வேதசாஸ்திரத்துக்குரிய விஷயங்களிலெல்லாம் இதைப்போல் விளங்காதவிஷயம் வேறொன்று மில்லையெனச் சொல்லலாம். இந்நிருபத்தில் 'நியாயப்பிரமாணம்' என்று சொல்லும்போது பரி. பவுல் யூதருடைய சடங்காசாரப்பிரமாணத்தைத்தான் குறிக்கிறான் என்பதாகப் பொதுவாய் அர்த்தப்படுத்துகிறதுண்டு. இதினிமித்தம் இந்நிருபத்தை வாசிக்கிற ஒருவன் இது தனக்கடுத்த விஷயமல்லவென்றெண்ணி இதைக்குறித்து அதிகம் சிந்தியாமல் விட்டுவிடுகிறான். சிலருக்கு இந்தத் தாற்பரியம் திருப்தியில்லை. அப்போஸ்தலன் இந்நிருபம் ரோமைச் சபையாருக்கு எழுதப்பட்டிருப்பதினால் இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் பூர்வீக ரோமைச் சட்டத்தைக் குறிக்கிறதாக அநுமானிக்கிறார்கள். ஆனால் மோசேயின் சடங்காசாரப் பிரமாணத்தைப்போலவே இதுவும் தங்களுக்குச் சம்பந்தப்பட்டதல்லவென்று எண்ணிக்கொள்ளுவதினாலும் வேறொரு காரியத்தைத் திருஷ்டாந்தப்படுத்தும்பொருட்டு இதை இவ்விடத்தில் தற்செயலாய் உபயோகித்திருக்கிறதாக எண்ணிக்கொள்ளுவதினாலும் இதை நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்கிறதில்லை.

2. ஆனால், அப்போஸ்தலனுடைய நியாயதோரணையை உற்றுப்பார்க்கிறவனுக்கு இப்போலி வியாக்கியானங்களினால் திருப்தி உண்டாகாது. அவன் அப்போஸ்தலனின் வார்த்தைகளை எவ்வளவுக்

குச் சீர்தூக்கிப் பார்க்கிறானோ அவ்வளவுக்கு 'நியாயப்பிரமாணம்' என்று சொல்லும்போது பரி. பவுல் இந்த அதிகாரத்தில் ரோமருடைய பூர்வீக நியாயப்பிரமாணத்தையாவது மோசேயின் சடங்குப் பிரமாணத்தையாவது குறிக்கவில்லை என்றறிந்துகொள்ளுவான். பவுலுடைய நியாயதோரணையின் போக்கைக் கவனிக்கிற யாவருக்கும் இது தெளிவாய் விளங்கும். அப்போஸ்தலன் இவ்வதிகாரத்தின் ஆரம்பத்தில் 'நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடு இருக்கும் அளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது என்று அறியாமல் இருக்கிறீர்களா?' என்கிறான். அப்போஸ்தலன் சிறுவயதுமுதல் நியாயப்பிரமாணத்தில் போதிக்கப்பட்டவர்களுடனே இவ்விதமாய்ப் பேசி, ரோமைச் சட்டமும் சடங்காசாரப் பிரமாணமுந்தானா ஆளுகிறது, சன்மார்க்கப் பிரமாணமும் ஆளுகிறதில்லையா என்று கேட்கிறான். இதை அப்புறம் திருஷ்டாந்தப்படுத்துகிறான். 'எப்படியென்றால் புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும்' சன்மார்க்கப் 'பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். ஆகையால் புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரி என்னப்படுவாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையானபடியால் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல.' இந்தத் திருஷ்டாந்தத்தைக்கொண்டு இதன் அடியில் வரும் பொதுச் சத்தியத்தை அப். பவுல் அநுமானிக்கிறான். 'அப்படிப்போல,'–இந்தத் திருஷ்டாந்தத்தின்படி,– என் சகோதரரே! நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த'—தாம் உயிரோடெழுந்ததினால் உங்களை மாற்றத்தக்க அதிகாரம் தமக்குண்டென்பதை ரூபித்த—'கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி'—கிறிஸ்துவோடு குற்றமற்றவர்களாய் இணைக்கப்பட்டு, 'தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி' (கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்ட பின்புதான் கனிகொடுக்கக் கூடும். அதற்குமுன் கூடாது.) 'கிறிஸ்துவின் சரீரத்தினாலே' — உங்களுக்காகக் கொடுக்கப்பட்டதும் உங்களைப் புதிய ஏற்பாட்டுக் குட்படுத்தினதுமான அவருடைய சரீரத்தினாலே,–



'நியாயப்பிரமாணத்திற்கு'—'மோசேயின் ஏற்பாடு அனைத்திற்கும்'—'மரித்தவர்களானீர்கள்.' 'நாம் மாம்சத்துக்குட்பட்டிருந்த காலத்தில்'–மாம்சமாகிய ஜென்ம சுபாவத்தின் அதிகாரத்துக் குட்பட்டிருந்த காலத்தில்–(நாம் கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறியும்வரையில் அப்படித்தானிருப்போம்), 'நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள்'—மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் வெளியேறி அதிகரித்ததேயன்றி ஜெயிக்கப்படாதிருக்கிற பாவ இச்சைகள்—'மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது'—பலவிதமாய் வெளிப்பட்டது. 'இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல'—மோசேயின் ஏற்பாட்டில் வரைந்திருக்கிற புறம்பான கிரியையின்படியல்ல—'புதுமையான ஆவியின்படி.'—ஆவிக்குரிய புதிய நிபந்தனையின்படி—'ஊழியஞ் செய்யத்தக்கதாக'—நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தவருக்கு ஊழியஞ் செய்யத்தக்கதாக—'நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி,'—மரித்துப்போன புருஷனுடைய அதிகாரத்துக்கு மனைவி நீங்கலானதுபோல, மோசேயின் நியாயப்பிரமாணம் 'மரித்துப்போனதினால்' நமதுமேல் அதற்கிருந்த அதிகாரம் அற்றுப்போயிற்று. ஆதலால் 'அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'—சன்மார்க்கப் பிரமாணம் சடங்காசாரப் பிரமாணம் என்னும் பிரமாணங்களுக்கு நீங்கலாய் இருக்கிறோம். (ரோ. 7: 1–6.)

3. ஆகவே, ஒரு கிறிஸ்தவன் யூத ஏற்பாட்டுக் குட்பட்டவனல்ல என்றும், சன்மார்க்கப் பிரமாணமானது ஒருக்காலும் ஒழிந்து போகாதாயினும் முன்போலல்ல வேறு நிலைமைக்குட்பட்டிருக்கிறது என்றும் இதுவரையில் அப்போஸ்தலன் ரூபித்தான். இதற்குமல் எதிரியின் ஆட்சேபனையை எடுத்துரைத்து அதை நிராகரிக்கிறான். 'ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ?' என்கிறான். 'நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள்' என்னும் வாசகத்தை (5–ம் வச.) சிலர் தப்பாய் அர்த்தப்படுத்தி அதைக்கொண்டு நியாயப்பிரமாணம் பாவம் என்று அநுமானிக்கலாம். அப்போஸ்தலன் இவ்வாட்சேபனைக்கு உத்தரமாக 'அல்லவே' அதாவது நாம் அப்படிச் சொல்லக்கூடாதே

என்று சொல்லுகிறான். ஏனென்றால் நியாயப்பிரமாணம் பாவத்துக்குக் கொடிய சத்துரு, பாவம் எங்கேயிருந்தாலும் நியாயப்பிரமாணம் அதைத் தேடிக் கண்டுபிடிக்கும். 'பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை. இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால் இச்சை' என்னும் தகாத ஆசை 'பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே' என்று 7-ம் வசனத்தில் சொல்லுகிறான். இதற்கடுத்த நாலு வசனங்களிலும் இதைக்குறித்தே மறுபடியும் விளக்கிக் காண்பித்து, பின்பு முன் சொன்ன திருஷ்டாந்தத்திற்கு ஆதாரமாயிருந்த சன்மார்க்கப் பிரமாணத்தைப்பற்றி அடியில் வரும் பொதுச் சித்தாந்தத்தை ஸ்தாபிக்கிறான். அதென்ன? 'ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்த முள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது' என்பதே. (12-ம் வச.)

4. அநேகர் ஆழ்ந்த கருத்துள்ள இந்த வார்த்தைகளை நன்றாய் அறிந்துகொள்ளாததினால் அவைகளை நன்றாய் மதிக்கிறதுமில்லை. ஆகையால் இவ்வாக்கியத்தின் கருத்தை உணர்த்தும்பொருட்டு நான்கு விஷயங்களை எடுத்துரைக்கப் போகிறேன்:—

1. நியாயப்பிரமாணத்தின் உற்பத்தி,
2. அதின் தன்மை,
3. பரிசுத்தம், நீதி, நன்மை என்னும் அதின் லட்சணங்கள்,
4. அதின் உபயோகம்.

## I. நியாயப்பிரமாணத்தின் உற்பத்தி.

1. முதலாவது, சன்மார்க்கப் பிரமாணத்தின் உற்பத்தியைக் குறித்து அறிவிக்கப்போகிறேன். சன்மார்க்கப் பிரமாணத்தை அதின் சிறப்பினிமித்தம் 'நியாயப்பிரமாணம்' என்றே அடிக்கடி சொல்லுவதுண்டு. இது சிலர் எண்ணிக்கொள்ளுகிறபிரகாரம் மோசேயின் காலமாகிய பிற்காலத்திலுண்டான ஏற்பாடல்ல. மோசேக்கு வெகு காலத்துக்கு முன்னுள்ள நோவாவும், நோவாவுக்கு முன்னுள்ள ஏனோக்கும் இதை மற்றவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். உலகத் தோற்றத்துக்கு முந்தியே அது இருந்ததாகவும் பார்க்கலாம். அந்



தக் காலம் எப்போவென்று மனுஷர் அறியார்கள். 'விடியற்காலத்து நட்சத்திரங்கள்' புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டு அவைகள் 'ஏகமாய்ப் பாடின காலமாகிய' நித்தியத்தின் சரித்திரத்தில் இது எழுதப்பட்டிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. தங்களைச் சிருஷ்டித்தவர் இன்னாரென்று அறிந்துகொள்ளும்பொருட்டுத் தமது முதற்பேறான புத்திரரைப் பகுத்தறிவுள்ளவர்களாகப் படைப்பது சிருஷ்டிகர்த்தாவின் சித்தமாயிருந்தது. இந்நோக்கமாய் அவர்களுக்குப் புத்தியைக் கொடுத்து சத்தியம் அசத்தியம், நன்மை தீமை யின்னதென்று அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்திருக்கிறார். இதினால் சத்தியத்தையும் நன்மையையும் தெரிந்துகொண்டு அசத்தியத்தையும் தீமையையும் தள்ளிப்போடும்படியான சுயாதீன சக்தியும் கிடைக்கிறது. இவ்வித சுயாதீனமிருப்பதினால் அவருக்குக் கைமாறின்றி மனதார ஊழியஞ் செய்யத்தக்க திராணியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. கருணை நிறைந்த கர்த்தருக்கு இவ்வித ஊழியத்தின்மேல் அதிக பிரியம். இந்த ஊழியத்துக்குப் பலன் கிடையாமலும் போகாது.

2. அவர்களுக்கு அருளிச்செய்திருக்கிற சகல யனோதத்துவங்களையும், விசேஷமாய் அவர்கள் தங்கள் புத்தியையும் சுயாதீனத்தையும் உபயோகிக்கும்பொருட்டு ஒரு பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுத்தார். இப்பிரமாணம் விளங்கிக்கொள்ளக்கூடிய எல்லாச் சத்தியத்திற்கும் பூரண மாதிரியாயிருக்கிறது. அப்படியே சம்மனசுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நன்மையானவைகள் எவைகளோ அவைகளுக்கும் அது மாதிரியாயிருக்கிறது. காருண்ய கர்த்தாவாகிய ஆண்டவர் இப்பிரமாணத்தைக் கொடுத்ததற்கு வேறொரு நோக்கமுண்டு. என்னவெனில் அவர்கள் ஆநந்த பாக்கியம் குறையாமல் விருத்தியடைவதற்கு இது ஏதுகரமாயிருக்கிறது. எப்படியென்றால் இந்தப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியும்போதெல்லாம் அவர்களுடைய நற்சுபாவம் பூரணமாகிக்கொண்டே வரும். மேலும் இதற்குக் கீழ்ப்படிவதினால் நீதியுள்ள நியாயாதிபதி ஏற்றகாலத்தில் அவர்களுக்கு அருளிச்செய்யப்போகிற மேலான பலனுக்கும் அவர்கள் தகுதியுள்ளவர்களாவார்கள்.

3. அவ்வாறே, தேவன் தமக்குச் சித்தமான காலத்தில் பகுத்தறிவுள்ள வேறு புதிய சிருஷ்டியாகிய மனுஷனைப் படைத்து,

நன்மை தீமையைக் கண்டுகொள்ளக்கூடிய ஜீவாத்துமாவாக்கின போது, சுயாதீன சித்தமும் பகுத்தறிவுமுள்ள இவனுக்கும் இதே பிரமாணத்தை அருளிச்செய்தார். இதைக் கற்பலகைகளிலாவது அழிந்துபோகக்கூடிய வேறெந்தப் பொருளிலாவது எழுதாமல் தமது விரலினால் அவனுடைய இருதயத்தில் வரைந்தார். இது தூரமாயும் விளங்குவதற்கு நிரடானதாயுமிராமல் கைக்கெட்டினதாயும், நடுவானத்திலுள்ள சூரியனைப்போல ஜோதியாய்ப் பிரகாசிக்கிறதாயும் இருக்கவேண்டுமென்ற நோக்கமாய் இப்பிரமாணம் மானிடர் தேவதூதருடைய உள்ளான மனதில் பதிக்கப்பட்டிருக்கிறது.

4. இதுவே தேவனுடைய சன்மார்க்கப் பிரமாணத்தின் ஆரம்பம். இதை மனுஷன் விஷயமாய்க் கவனித்தால், அவனுக்குரிய சுபாவமுண்டான அன்றைக்கே இப்பிரமாணமும் அவனுக்குள் அமைக்கப்பட்டது. தேவனுடைய முதற் புத்திரராகிய தூதர்கள் விஷயமாய்க் கவனித்தாலோ 'பர்வதங்கள் தோன்றுமுன்னும் அவர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும்' இப்பிரமாணம் பூரண காந்தியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆனால் மனுஷன் கொஞ்சக்காலத்துக்குள் தேவனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி இந்த மகத்துவப் பிரமாணத்தை மீறிவிட்டதால் இது அவன் இருதயத்தினின்று கொஞ்சங்குறைய அழிந்துபோயிற்று. எவ்வளவுக்கு அவனுடைய ஆத்துமா 'தேவனுடைய ஜீவனுக்கு அந்நியமாயிற்றோ,' அவ்வளவுக்கு அவனது புத்தியின் கண்களும் அந்தகாரப்பட்டுப் போயின. ஆயினும் தேவன் தமது கரத்தின் கிரியைகளை வெறுக்காமல், தமது நேசகுமாரனின் மூலமாய் மனிதரோடு ஒப்புரவாகி அந்தகாரமும் பாவமும் நிறைந்த இந்தச் சிருஷ்டியின் இருதயத்தில் இதை ஒருவாறு மறுபடியும் பதித்தார். ஆதியில் அறிவித்தபிரகாரமாய் இராவிடினும் 'மனுஷனே! அவர் உனக்கு நன்மை இன்னதென்றும் நியாயஞ்செய்து இரக்கத்தைச் சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது' இன்னதென்றும் மறுபடியும் 'அறிவித்திருக்கிறார்.'

5. இதை நமது ஆதித்தாய்தந்தையருக்கு மாத்திரமல்ல, 'உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான



ஒளி' ஆகிய இயேசுவின் மூலமாய் அவர்களுடைய பின் சந்ததியாருக்கும் காண்பித்தார். இவ்வொளி பிரகாசித்தும் மனுஷர்கள் யாவரும் நாளடைவில் 'தங்கள் வழிகளைக் கெடுத்துக்கொண்டார்கள்.' பின்பு தேவன் மனிதருக்குள் ஒரு விசேஷித்த ஜனத்தைத் தெரிந்தெடுத்துத் தமது பிரமாணத்தை அவர்களுக்கு முன்னிலும் அதிக தெளிவாய் வெளிப்படுத்தினார். அவர்கள் மந்த இருதயமுள்ளவர்களானதினிமித்தம் இரண்டு கற்பலகைகளில் எழுதின தமது பிரமாணத்தின் பொருட்சுருக்கத்தைப் பிதாக்கள் பின்னடியாருக்குக் கற்றுக்கொடுக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

6. தேவனை அறியாதவர்கள் அவருடைய பிரமாணத்தை அறிந்துகொள்ளும் விதம் இதுவே. நமக்குப் போதனையாக முற்காலத்தில் எழுதப்பட்டவைகளை அவர்கள் காதினால் கேட்கிறார்கள். ஆனால் இது போதாது. கேள்வியின் மூலமாய் இப்பிரமாணத்தின் நீளம் ஆழம் அகலம் உயரம் என்பவைகளை அவர்கள் அறிந்துகொள்ள முடியாது. தேவன் ஒருவரே இதைத் தமது ஆவியினால் வெளிப்படுத்தக்கூடும். தேவன் தமது இஸ்ரவேலருக்குச் செய்த கிருபைநிறைந்த வாக்குத்தத்தத்தினிமித்தம் மெய்யாய் விசுவாசிக்கிற யாவருக்கும் இதை வெளிப்படுத்துகிறார். அந்த வாக்குத்தத்தம் என்ன? 'இதோ, நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் இஸ்ரவேல் குடும்பத்தோடு பண்ணப்போகிற உடன்படிக்கையாவது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.' (எரே. 31: 31–33.)

## II. நியாயப்பிரமாணத்தின் தன்மை.

1. தூதர்களுக்குப் பரலோகத்திலும், மனுஷனுக்குப் பரதீசிலும் அருளப்பட்டதும் உத்தம விசுவாசிகளின் இருதயத்தில் திரும்பவும் வரையப்படுவதாகத் தேவன் வாக்கருளியிருக்கிறதுமான இந்தப் பிரமாணத்தின் தன்மை என்னவென்று பார்ப்போம். இதுவே நாம்

சிந்திக்கவேண்டிய இரண்டாம் விஷயம். இதில் நாம் கவனிக்கவேண் டிய ஒரு காரியம் என்னவெனில், 'நியாயப்பிரமாணம்' 'கற்பனை என்னும் பதங்களில், 'கற்பனை' என்பது 'நியாயப்பிரமாணத்தின் ஒரு பாகத்தைமாத்திரம் குறிக்கும். இவை இரண்டும் சிலசமயங்க ளில் வெவ்வேறு கருத்தில் உபயோகிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வசனத்தில் இவைகள் ஏககருத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கின் றன. ஆனால் இவைகளில் ஒன்றாயினும் இவ்விடத்தில் சடங்கா சாரப் பிரமாணத்தைக் குறிக்கிறதாக எண்ணக்கூடாது. 'பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனே யன்றி மற்றப்படியல்ல' என்னும் வார்த்தைகளில் அப்போஸ்தலன் சட காசாரப் பிரமாணத்தைக் குறிக்கவில்லை. இது பிரத்தியட்சமாக தினால் இதை ரூபிக்க அவசியமில்லை. மேலும் 'இச்சியாதிருப்ப யாக' என்னும் அடுத்த கட்டளை சடங்காசாரப் பிரமாணமல்ல ஆதலால் நாம் இப்பொழுது பேசிக்கொண்டுவருகிற சந்தர்ப்பத்தில் சடங்காசாரப் பிரமாணமே குறிக்கப்படவில்லை.

2. பிரசங்கவாக்கியத்தில், 'நியாயப்பிரமாணம்' என்னும் பதம் மோசேயின் ஏற்பாட்டைக் குறிக்கிறதென்றும் சொல்லக்கூடாது. அந்த வார்த்தையைச் சில சமயங்களில் இக்கருத்தில் வழங்கியிருப்பது மெய்தான். திருஷ்டாந்தமாக, கலா. 3: 17-ல் அப்போஸ்தலன் கலாத்தியரைப் பார்த்து, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமுடனே 'முன் உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப் பது வருஷத்துக்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது' (அதாவது மோசேயின் ஏற்பாடானது) 'தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது' என்று சொல்லுகிறான். இந்த வசனத் தில் 'நியாயப்பிரமாணம்' என்பது மோசேயின் ஏற்பாட்டைக் குறித்தபோதிலும் நமது பிரசங்க வாக்கியத்தில் இதின் கருத்து வேறு. ஏனெனில் அப்போஸ்தலன் குறைவும் நிழலாட்டமுமான அந்த ஏற்பாட்டைக்குறித்து எவ்விடத்திலாவது இவ்வளவு மேன் மையாய்ப் புகழ்ந்து பேசினதில்லை; மோசேயின் நியாயப்பிரமா ணம் ஆவிக்குரியதென்றாவது பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயு மிருக்கிறதென்றாவது ஓரிடத்திலும் சொல்லக்காணோம். மேலும் எவர்களுடைய அக்கிரமங்களை இனி நினையாதிருக்கிறாரோ அவர்க



ரின் இருதயத்தில் அவர் இப்பிரமாணத்தை எழுதுவார் என்பதும் மெய்யல்ல. ஆதலால் நியாயப்பிரமாணம் என்பது சன்மார்க்கப் பிரமாணத்தையே குறிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

3. இந்த நியாயப்பிரமாணமானது நித்தியவாசியாகிய உன்னத பரிசுத்தரின் சாயலைக் காட்டுகிற அழிவற்ற சித்திரமாயிருக்கிறது. ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமான மகத்துவ தேவனை மனிதருக்கும் தேவதூதருக்கும் காண்பிக்கிறது நியாயப்பிரமாணமே. மறைந்திருந்த தேவனுடைய திருமுகத்தை நியாயப்பிரமாணமானது திறந்து காட்டுகிறது. இது சிருஷ்டிகளின் திராணிக்குத் தக்கதாக அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவசாயல். தேவனைத் தரிசித் தும் உயிரோடிருக்கும்படி அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ பிரசன்னம் அதுவே. இது ஜீவனை அழிப்பதற்கல்ல, ஜீவனை உண் டாக்கவே கொடுக்கப்பட்டது. தேவன் தமது திருவுளத்தை இதில் மனிதனுக்குக் காட்டுகிறார். அப்போஸ்தலன் தேவ குமாரனைக் குறித்துச் சொல்லியிருப்பதை ஒரு கருத்தின்படி நாம் இந்த நியாயப் பிரமாணத்தைக் குறித்தும் சொல்லலாம். இது 'அவருடைய மகி மையின் பிரகாசமும் அவருடைய தன்மையின் சொரூபமுமா யிருக் கிறது.' (எபி. 1: 3.)

4. 'நற்குணமானது ரூபந்தரித்துக்கொண்டு நம்முடைய கண் ணுக்குப் புலப்படத்தக்கபிரகாரம் நமக்குமுன் நிற்கக்கூடுமாயின், அது எவ்வளவோ அன்பை நமக்குள் உண்டுபண்ணும்' என்று பூர்வீக வித்துவான் ஒருவன் சொல்லியிருக்கிறான். ஆனால் நற்குண மானது ரூபந்தரித்திருக்கிறது, அதென்ன? அதுதான் நியாயப்பிரமா ணம். தேவன் யார் யாருடைய கண்களைத் திறந்திருக்கிறாரோ, அவர்கள் எல்லாரும் பார்க்கத்தக்கதாக, சகல நற்குணமும் ஒன் றாய்ச் சேர்ந்து நியாயப்பிரமாணம் என்ற வடிவெடுத்திருக்கிறது. தெய்வீக நற்குணமும் ஞானமும் கண்களுக்குத் தோன்றக்கூடிய ரூபந்தரித்து நியாயப்பிரமாணமாகிறது. சத்தியத்தையும் நன்மை யையும்பற்றி தேவனுடைய திருவுளத்தில் அநாதிகாலமாய் அமைந் திருந்த எண்ணங்கள் மானிட புத்திக்குக்கூட விளங்கத்தக்கபிரகாரம் பிரத்தியட்சமாய்த் தோன்றி நிற்பதைத்தான் நியாயப்பிரமாணம் என்கிறோம்.

5. இன்னும் நியாயப்பிரமாணத்தை வேறுவிதமாய் ஆராய்ந்து பார்த்தால், அது மாறாததும் உன்னதமுமான நீதி. அது மாற்றக்கூடாத உத்தம சத்தியம், அது சிருஷ்டிக்கப்பட்ட யாவற்றோடும் எக்காலமும் விகற்பமின்றிப் பொருந்துகிறது. அரைகுறையான இந்த திருஷ்டாந்தங்களைக்கொண்டு தேவனுடைய ஆழங்களை ஒருவாறு விளக்கிக் காண்பிக்கப் பிரயாசப்படும்போது தகுந்த வார்த்தைகளில்லை என்றும், உபயோகித்திருக்கும் வார்த்தைகள் தகுதியற்றவைகள் என்றும் எனக்குத் தெரியும். ஆகிலும் நமது பாலிய பிராயமான இக்காலத்தில் அவைகளை விளக்கிக் காட்டத்தக்க வேறு சிரேஷ்டமான முறையில்லை. வேறு எந்த முறையுமே இல்லை. இப்பொழுது நம்முடைய அறிவு குறைவுள்ளது. ஆகையால் நாம் 'தீர்க்கதரிசனம் சொல்லுதலும்' அதாவது திவ்விய காரியங்களைக் குறித்துப் பேசுவதும் குறைவாகத்தானிருக்கக்கூடும். நமது சரீரமாகிய மண் குடிசையில் வாசஞ்செய்யும் காலத்தில் 'அந்தகாரத்தினிமித்தம் அலட்டிப் பேசுகிறோம்.' நான் 'குழந்தையாயிருக்கும்போது' 'குழந்தையைப்போலவே பேசவேண்டும். ஆனால் சீக்கிரத்தில் குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிடுவேன்.' ஏனெனில் 'நிறைவானது வரும்போது (   )ந்து ஒழிந்துபோம்.'

6. இது நிற்க, தேவனுடைய நியாயப்பிரமாணமானது நித்தியவாசியாகிய அவருடைய சிந்தையைக் காட்டுகிற பிரதி என்றும் பெயர்த்தெழுதப்பட்ட தெய்வீக சுபாவம் என்றும் வணக்கமாய்ச் சொல்லலாம். மேலும் அது நித்திய பிதாவினுடைய மகத்துவ ஞானப்பிரவாகமும் உன்னதமானவரின் அழகிய சொரூபமுமாயிருக்கிறது. கேருபீம் சேராபீம் முதலிய பரிசுத்த சேனையும் மற்ற மோட்சவாசிகளும் இதில் மகிழ்ந்து ஆச்சரியப்படுகிறார்கள். ஞானமுள்ள விசுவாசிக்கும் தேவனால் போதிக்கப்பட்ட பிள்ளைகளாகிய உலகவாசிகளுக்கும் இந்த நியாயப்பிரமாணமானது மகிமையும் மகிழ்ச்சியுமாயிருக்கிறது.

## III. நியாயப்பிரமாணத்தின் லட்சணங்கள்.

1. தேவனுடைய மகத்துவ நியாயப்பிரமாணத்தின் தன்மை இதுவே. மூன்றுவதாக இதின் லட்சணங்களைப் பார்ப்போம். இதின்



லட்சணங்கள் யாவையும் எடுத்துரைக்க முடியாது. வானத்திலுள்ள தேவதூதனின் ஞானமும் இதற்குப் போதாது. ஆதலால் நமது பிரசங்க வாக்கியத்தில் கூறியிருக்கிறவைகளைமாத்திரம் சிந்திப்போம். அவை மூன்று: பரிசுத்தம், நீதி, நன்மை என்பவைகளே.

2. முதலாவது, நியாயப்பிரமாணம் பரிசுத்தமாயிருக்கிறது. நியாயப்பிரமாணம் பரிசுத்தமாயிருக்கிறது என்று சொல்லும்போது அப்போஸ்தலன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக்குறித்து அல்ல, அதின் தன்மையைக்குறித்தே சொல்லுவதாகத் தோன்றுகிறது. இதைத்தான் பரி. யாககோபு 'பரத்திலிருந்து வருகிற ஞானம்' என்கிறான். பரத்திலிருந்து வருகிற ஞானமென்பதும் நமது இருதயத்தில் வரையப்பட்டிருக்கிற நியாயப்பிரமாணம் என்பதும் ஒன்றுதான். பரத்திலிருந்து வருகிற இந்த ஞானமானது முதலாவது சுத்தமுள்ளதாயிருக்கிறது (யாக். 3: 17.). 'சுத்தம்' என்பதற்கு மூலபதத்தின் அர்த்தம் 'தூய்மை' 'மாசில்லாமை' என்பதே. அதாவது அது நித்தியகாலமாய்ப் பரிசுத்த தன்மை நிறைந்தது. ஆகையால் அது நமது ஆத்துமாவிலும் ஜீவியத்திலும் தோன்றுமாகில் இந்த அப்போஸ்தலன் 1: 27-ல் சொல்லுகிறபிரகாரம் அதுவே மாசில்லாத சுத்தமான பக்தி. வேறுவிதமாய்ச் சொன்னால் அதுவே சுத்த பரிசுத்தமாய்த் தேவனைத் தொழுதுகொள்ளுதலாம்.

3. மெய்யாகவே அது தூய்மையும் துப்புரவும் பரிசுத்தமுமுள்ளது. மற்றப்படி அது பரிசுத்த சொரூபியாகிய தேவனிடத்திலிருந்து எப்படி உற்பத்தியாகக்கூடும்? எப்படி அவருடைய பரிபூரண சாயலைப் பெற்றதாயிருக்கக்கூடும். அது பாவமில்லாமல் தூய்மையானதும், தீமையினால் கிஞ்சித்தும் கறைப்படாததுமா யிருக்கிறது. அசுத்தமாக்கக் கூடாமலும் அசுத்தமான யாவற்றோடும் கலக்கக்கூடாமலுமிருக்கிறது. எவ்வகைப் பாவத்தோடும் இதற்கு சம்பந்தம் கிடையாது. ஏனெனில் 'ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?' பாவம் தேவனுக்கு ஜென்மப்பகையா யிருக்கிறதுபோல அவரது நியாயப்பிரமாணமும் பாவத்துக்குப் பகையாயிருக்கிறது.

4. தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் பாவமென்றுவது, பாவத்துக்குக் காரணமென்றுவது எண்ணினால் அது தேவதூஷணமான எண்ணம். அப்போஸ்தலன் அந்த எண்ணத்தை வெறுத்துத்

தள்ளுகிறான். நியாயப்பிரமாணமானது பாவத்தைக் கண்டுபிடித்து இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியாக்கிப் பகிரங்கமாக்குவதினால் அது பாவத்துக்குக் காரணமென்று சொல்லவேகூடாது. பரி. பவுல் ரோமர் 7: 13–ல் சொல்லுகிறபிரகாரம் நியாயப்பிரமாணம் மறைந்திருக்கிறவைகளை வெளியாக்குவதினிமித்தம் 'பாவம் பாவமாகவே' விளங்குகிறதென்பது மெய்தான். அதை மூடியிருக்கிற வெளிவேஷம் யாவும் நீங்கிப்போக அது தனக்குரிய இயல்பான அவலட்சண ரூபத்துடன் தோன்றுகிறது. அப்படியே 'பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகிறது' என்பதும் நிச்சயம். எப்படியென்றால், வெளிச்சமும் அறிவும் வந்தபின் செய்த பாவம் அறியாமையினால் செய்தது என்று சொல்ல ஏதுவில்லாதிருப்பதினால், போக்குச்சொல்ல வழியில்லை; அதை மூடிவைக்கவும் முடியாது. அதினால் பாவம் கடவுளுக்கும் மனிதனுக்கும் அதிக அரோசிப்பை உண்டுபண்ணுகிறது. மேலும் 'பாவமானது நன்மையானதைக்கொண்டு' அதாவது தூய்மையும் பரிசுத்தமுமான கற்பனையைக்கொண்டு 'எனக்கு மரணத்தை உண்டாக்கினது' என்பது மெய்யே. அதை வெளியே விடும்போது அதிக மூர்க்கங்கொள்ளுகிறது. அதைக் கட்டிவைக்கும்போது கட்டுகளைப் பலாத்காரமாய் அறுத்து வெளிப்படுகிறது. பாவ உணர்வடைந்தும் அதினின்று விடுதலைபெறாத ஒருவனாகத் தன்னைப் பாவித்துப் பேசும்போது அப்போஸ்தலன் தன்னைக் கண்டுபிடித்து அடக்கும்படி முயற்சிக்கிற கற்பனையினாலே 'பாவமானது சமயம்பெற்று' 'தன் கட்டை அவமதித்ததுமன்றி, பின்னும் அதிகமாய்ச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது' என்கிறான் (8–ம் வசனம்.). அதாவது அந்தக் கற்பனையானது தான் தடுக்க முயன்ற தீமையான தகாத இச்சைகளையெல்லாம் என்னில் நடப்பித்தது என்கிறான். ஆகவே 'கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது' (9–ம் வசனம்.). கற்பனை வந்தபோது அது அதிக மூர்க்கங்கொண்டு சீறினது. ஆயினும் இது கற்பனையின் குற்றமன்று. அது அவமதிக்கப்பட்டபோதிலும் தீட்டுப்படவில்லை. இதினால் அறிந்துகொள்ளுவதென்ன? 'இருதயம் மகா கேடுள்ளது' என்றும், தேவனுடைய கற்பனையோ இன்னும் பரிசுத்தமாகவேயிருக்கிறது என்றும் ரூபகாரமாகிறது.



5. கற்பனை இரண்டாவது நீதியாயிருக்கிறது. அது அவரவருக்குக் கிடைக்கவேண்டியதை அவரவருக்குச் செலுத்துகின்றது. நமது சிருஷ்டிகர் விஷயமாயும் நமது விஷயமாயும் தாம் சிருஷ்டித்த ஒவ்வொரு சிருஷ்டியின் விஷயமாயும் நாம் நியாயமாய்ச் செய்யவேண்டியவைகள், சொல்லவேண்டியவைகள், எண்ணவேண்டியவைகள் எவைகளோ அவைகளைத் திட்டமாய்க் கட்டளையிடுகின்றது. அது சமஸ்த வஸ்துக்களின் தன்மைக்கும் சமஸ்த லோகத்தின் தன்மைக்கும் சர்வ ஜனங்களின் தன்மைக்கும் ஏற்றபடி எவ்விஷயத்திலும் பொருந்தியிருக்கிறது. அது ஒவ்வொருவருடைய காரியாதிகளுக்கும் அவர்களுக்குரிய அந்நியோந்நிய சம்பந்தங்களுக்கும் விகற்பமின்றி ஒத்திருக்கும். அந்தச் சம்பந்தங்கள் ஆதிமுதலுள்ளவைகளானாலும் சரி, இடையிலே தோன்றினவைகளானாலும் சரி, நியாயப்பிரமாணமானது அவைகளுக்கு ஏற்றதாயிருக்கும். இயற்கையாயாவது தற்செயலாயாவது உண்டாகும் எவ்வித விஷயங்களோடும் இது திட்ப நுட்பமாய்ப் பொருந்தும். இவைகளில் ஒன்றுக்கும் சற்றாவது விரோதமாயிராது. இவைகளுடன் சம்பந்தப்படாமல் விலகியும் நிற்காது. நியாயப்பிரமாணம் நீதியாயிருக்கிறது என்பதை இவ்வாறு தாற்பரியப்படுத்துவதினால் அது கொடுங்கோன்மையும் சுயேச்சையுமுள்ளதென்று அருத்தமாகாது. ஆயினும், நியாயப்பிரமாணமும் அதின் ஒவ்வொரு பாகமும் தேவனுடைய திருச்சித்தத்துக்குக் கீழடங்கினதே. 'உம்முடைய சித்தம் ஆகக்கடவது' என்பது பூலோக பரலோகம் முழுமைக்குமுரிய மேலான பிரமாணம்.

6. அப்படியானால் தேவனுடைய பிரமாணத்துக்குக் காரணம் அவருடைய சித்தந்தானோ? ஆம் என்றால், தீமை உற்பத்தியானதற்கு அவருடைய சித்தந்தானோ மூலாதாரம்? இது தேவனுடைய சித்தம், ஆகையால் இது சரிதான் என்றாவது, இது சரியாயிருக்கிறது, ஆகையால் இது அவருடைய சித்தம் என்றாவது சொல்லலாமா?

பேர்பெற்ற இவ்விவகாரம் விநோத விஷயமேயன்றி பிரயோஜனமானது அல்ல என்று எண்ணுகிறேன். இவ்விஷயத்தைக்குறித்துப் பொதுவாய் ஆராய்ச்சிசெய்கிற விதத்தைக் கவனித்தால்,

சிருஷ்டிக்கப்பட்ட ஒரு வஸ்து தன்னைச் சிருஷ்டித்து ஆண்டு நடத்திவருகிற கர்த்தாவுக்குக் காண்பிக்கவேண்டிய மரியாதையைக் காண்பித்தாப்போலில்லை. மகத்துவமுள்ள தேவனைப் பார்த்து அவரது செய்கைக்குக் கணக்குக் கேட்பது அற்ப மனுஷனுக்குத் தகுதியா? ஆயினும் தகுந்த பயத்தோடும் வணக்கத்தோடும் சற்றே பேசுவோம். நாம் தப்பாய்ப் பேசுவோமாகில் தேவன் அதைப் பொறுத்துக் கொள்ளுவாராக.

7. தேவசித்தம் வேறு, தேவன் வேறு என்று எண்ணிக்கொள்ளுவதினால்தான் இதில் சந்தேகம் தோன்றுகிறது. மற்றப்படி இதில் சந்தேகம் இல்லை. தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குத் தேவனே காரணம் என்பதைச் சந்தேகிப்பாரில்லை. தேவனுடைய சித்தந்தான் தேவன். இன்னின்னபிரகாரம் சித்தங்கொண்டிருக்கிறார் என்று தேவனைக்குறித்து நினைக்கும்போது, அது தேவசித்தம் என்கிறோம். ஆகையால் நியாயப்பிரமாணத்துக்குக் காரணம் தேவசித்தம் என்று சொன்னாலும், தேவனே என்று சொன்னாலும், இரண்டும் ஒன்றே.

8. மேலும் சரி, தப்பிதம் என்பவைகளைப்பற்றிய மாறாத சட்டமாகிய நியாயப்பிரமாணம் காரியாதிகளின் தன்மை தகுதிக்குத் தக்கபடியும், அச்சட்டங்கள் ஒவ்வொன்றுக்குமுரிய இயற்கையான சம்பந்தங்களுக்குத் தக்கபடியுந்தானிருக்கிறது. அதாவது, நியாயப்பிரமாணம் காரியாதிகளின் தன்மை சம்பந்தங்களுக்கு உட்பட்டதானால், அது தேவனுக்கும் அல்லது அவருடைய சித்தத்துக்கும் உட்பட்டே இருக்கவேண்டும். (இதில் சம்பந்தங்கள் என்று சொல்லும்போது, நித்தியகால சம்பந்தம் என்பது என் கருத்தல்ல. ஏனென்றால் தற்காலத்துக் கடுத்தவைகளைக் குறித்துப் பேசும்போது நித்தியகால சம்பந்தம் என்பது ஒவ்வாது.). ஏனென்றால் இக்காரியாதிகளும் அவைகள் ஒவ்வொன்றுக்குமுரிய சம்பந்தங்களும் அவருடைய கரத்தின் கிரியைகளாகவே இருக்கின்றன. அவருடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கின்றன.

9. மேலும், மனிதர் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும் என்பதைப்போலொத்த ஒரு விஷயம் நியாயமானதும்,



காரியாதிகளின் தகுதிக்கும் அவைகளுக்குரிய சம்பந்தங்களுக்கும் பொருந்தினதாயும் இருக்கிறபடியால், இது தேவசித்தம் என்று ஒத்துக்கொள்ளவேண்டியது. (புத்திசாலி ஒருவன் வாதாடுவதெல்லாம் இதற்காகத்தானே.)

10. அப்படியானால் நியாயப்பிரமாணமானது எவ்விஷயத்திலும் நியாயமும் நீதியுமாயிருக்கிறது. அது நீதியாயிருக்கிறது போலவே நன்மையுமாயிருக்கிறது. நியாயப்பிரமாணம் உற்பத்தியாகிற ஊற்றைக் கவனிப்போமாகில் அது நன்மையானதென்பதை எளிதில் அநுமானிக்கலாம். இந்த ஊற்று தேவதயவே. பரிசுத்த தூதர்கள் தமது திவ்விய சாயலைத் தரித்துக்கொள்ளும்படி அவரை ஏவினதும் அவருடைய தயவுதான். தேவன் தமது சுபாவத்தின் சாயலை மனிதருள்ளத்தில் பதித்திருப்பதற்கு அவருடைய அன்பைத்தவிர நாம் சொல்லத்தக்க வேறு முகாந்தரம் உண்டோ? 'தேவமகிமையை இழந்துவிட்ட' ஆதாமும் அவன் சந்ததியாருமாகிய கெட்டுப்போன மனிதருக்குத் தமது சித்தத்தைத் திரும்பவும் வெளிப்படுத்தும்படி அவரை நெருக்கி ஏவினதும் அவருடைய உருக்கமான அன்பேயன்றி வேறென்ன? மனிதரின் புத்தி அந்தகாரப்பட்டுப் போனபின் அவர்களுக்குத் தமது பிரமாணத்தைப் பிரசித்தப்படுத்தும்படி அவரை ஏவினதும் அன்பு. நிர்விசாரிகளாய் அந்தகாரத்திலிருந்த மனுப்புத்திரருக்கு அப்பிரமாணத்தைக் கூறியறிவிக்கும்படி தமது தீர்க்கதரிசிகளை அனுப்பினதும் அவரது அன்பல்லவோ? நீதியைப்பற்றிப் பிரசங்கிக்கும்படி ஏனோக்கு, நோவா என்பவர்களையும் தமது சத்தியத்தைக்குறித்துச் சாட்சியிடும்படி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களையும் எழும்பப்பண்ணினது அவரது காருண்ணியம் என்பதற்குச் சந்தேகமில்லை. 'இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடியிருக்கையில்' மோசேக்கும் அவன் மூலமாய்த் தாம் தெரிந்துகொண்ட ஜாதியாருக்கும் நியாயப்பிரமாணத்தை எழுதிக்கொடுத்ததற்கு அவருடைய தயவுதான் காரணம். ஜீவனுள்ள இந்த வசனங்களைத் தாவீதைக் கொண்டும் அவனுக்குப் பின்னுள்ள தீர்க்கதரிசிகளைக்கொண்டும் விளக்கிக் காண்பித்தார். பிற்பாடு 'நியாயப்பிரமாணத்தை அழிக்கவல்ல அதை நிறைவேற்றவும்' அதிலுள்ள எழுத்தையாவது எழுத்தின்

உறுப்பையாவது ஒழித்துப்போடாமல் உறுதிப்படுத்தவும் காலம் நிறைவேறினபோது தமது ஒரேபேறான குமாரனை அனுப்பினார். அவர் இந்தப் பிரமாணத்தைத் தமது பிள்ளைகளின் இருதயங்களில் வரைந்து எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கித் 'தேவனே சகலத்திலும் சகலமுமாயிருக்கும்படி' மத்தியஸ்தராகிய தமக்குரிய ராஜ்யத்தை பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார். இவை யாவும் அவருடைய பேரன்பே.

11. ஆதியில் தேவனால் தயவாய் அருளப்பட்டதும் அதுமுதல் அவரால் எக்காலமும் பாதுகாக்சப்பட்டு வந்ததுமான இந்த நியாயப் பிரமாணமானது, தான் உற்பத்தியான ஊற்றைப்போலவே நன்மையும் காருண்ணியமும் நிறைந்ததாய் இருக்கிறது. இது சாந்தமும் பட்சமுமுள்ளது. சங்கீதக்காரன் சொல்லுகிறதுபோல, 'இது தேனிலும் தேன் கூண்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுமானது.' இது மனதுக்கு இனிமையானதும் விரும்பப்படத் தக்கதுமாயிருக்கிறது. 'அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ' அவைகளெல்லாம் இதற்குள் அடங்கியிருக்கின்றன. தேவனுக்கும் அவருடைய பரிசுத்த தூதருக்கு முன்பாக 'புண்ணியம் எதுவோ, புகழெதுவோ,' அவைகள் எல்லாவற்றையும் இதில் காணலாம். இதில் திவ்விய ஞானம், அறிவு, அன்பு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன.

12. நியாயப்பிரமாணத்தின் தன்மை எப்படி நன்மையாயிருக்கிறதோ, அப்படியே அதின் கிரியையும் நன்மையானதே. மரத்தைப் போலவே அதின் கனிகளும் இருக்கும். நமது இருதயத்தில் வரையப்பட்டிருக்கிற நியாயப்பிரமாணத்தினாலுண்டாகும் கனிகள் நீதியும் சமாதானமும் நிச்சயமுமே. வேறுவிதமாய்ச் சொன்னால் நியாயப்பிரமாணந்தான் நீதி. அது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினால் நமது ஆத்துமாவை நிரப்பி, தேவனுக்கு முன்பாக நல்மனச்சாட்சி யுடையவர்களாய் எப்பொழுதும் சந்தோஷப்படச் செய்கிறது. 'கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட சொத்தின்' ஒரு பாகம் ஆகையால் இதை 'நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரம்' என்கலாமேயொழிய 'ஈடு' என்று சொல்ல முடியாது. நியாயப்பிரமாணமானது, மாம்சத்தில் வெளிப்பட்டு நித்தியஜீவனை



நமக்குக் கொண்டுவந்த தேவன் என்கலாம். 'நாம் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரிக்கப்பட்டிருக்கிறோமென்றும், ஒரு மனுஷன் தனக் கூழியஞ்செய்கிற தன் குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நம்மைக் கடாட்சிப்பார்' என்றும், 'மகிமையுள்ள வாடாத கிரீடம் நமக்கு வைக்கப்பட்டிருக்கிறது' என்றும், அவரது மாசற்ற பூரண அன்பினால் நமக்கு நிச்சயத்தை உண்டுபண்ணுகிறார். இதினால் நியாயப்பிரமாணத்தின் கிரியை நன்மையானது என்று அறிகிறோம்.

## IV. நியாயப்பிரமாணத்தின் உபயோகம்.

1. கடைசியாக நியாயப்பிரமாணத்தின் பிரயோஜனங்கள் எவை எனப் பார்க்கவேண்டியது. பாவத்தைக்குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவதுதான் இதின் முதற் பிரயோஜனம் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம். இது பரிசுத்தாவியினால் செய்யப்படுகிற கிரியையென்பது மெய்தான். அவர் யாதொரு ஏதுவின்றியும், தமக்குச் சித்தமான எந்த ஏதுவைக்கொண்டும், இதை நிறைவேற்றக்கூடும். அந்தப் படி, புறம்பான யாதொரு காரணம் இல்லாமல், அசௌக்கியமா யிருக்கையிலோ சௌக்கியமா யிருக்கையிலோ, சிலருடைய இருதயம் ஒரு நிமிஷத்துக்குள் நொறுங்கிப்போவதுண்டு. வேறு சிலர் 'தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தை ஒப்புரவாக்கினார்' என்று கேள்விப்பட்டுத் தேவகோபம் தங்கள்மேல் தங்கியிருப்பதாக அறிந்துகொண்டதுமுண்டு. ஆனால் நியாயப்பிரமாணத்தைக்கொண்டு பாவிகளை உணர்த்துவதே பரிசுத்தாவியானவர் சாதாரணமாய்க் கையாடுகிற முறை. நியாயப்பிரமாணமானது நமது மனச்சாட்சியில் அழுந்தப் பதியும்போது, கடினமான இருதயங்களும் நொறுங்கிப்போகும். தேவவசனத்தில் இந்தப் பாகந்தான் ஜீவனும் வல்லமையுமுள்ளது. இதுதான் 'இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானது.' தேவனும் அவரால் அனுப்பப்பட்ட ஊழியர்களும் இதைக் கையாடும்போது, இது திருக்குள்ள இருதயத்தைப் பிளந்து 'ஆத்துமாவையும் ஆவியையும்' மாத்திரமல்ல 'கணுக்களையும் ஊனையுங்கூடப் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறது.' பாவி தன்னைத்தானே பார்க்கும்படி செய்கிறது இதுவே. இதினால் அவன் தான் 'நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத் தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாய்' இருக்கிறதாகக்

காண்கிறான். நியாயப்பிரமாணமானது அவன் குற்றத்தை எப்பக்கத்திலும் பலமாய்க் கண்டிக்க, அவன் தன்னை முற்றிலும் பாவி என்று உணர்ந்துகொள்ளுகிறான். கடனைச் செலுத்தித் தீர்க்கவோ அவனுக்கு நிர்வாகமில்லை. அவனுடைய வாய் அடைபட்டுப்போயிற்று. அவன் 'தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறான்.'

2. ஆகையால் முதலாவது நியாயப்பிரமாணம் பாவியைச் சங்காரஞ்செய்கிறது. பாவி தனக்கு ஜீவனும் பெலனுமாக நம்பினதை நியாயப்பிரமாணம் அழித்து, அவன் உயிரோடிருக்கும்போதே செத்தவன் என்று உணர்த்திக்காட்டுகிறது. அவன் மரணதண்டனைக்கு உட்பட்டவன் என்று மாத்திரமல்ல, இப்போதே தேவனுக்கு முன்பாகச் செத்துப்போனவன் என்றும், ஆவிக்குரிய ஜீவனற்றவனாய் 'அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்துப்போனவன்' என்றும் உணர்த்துகிறது. இதின் இரண்டாம் உபயோகம் என்னவெனில், பாவி பிழைத்திருக்கும்படி அவனை ஜீவனுக் குட்படுத்துவதும் கிறிஸ்துவினண்டை கொண்டுவருவதுமே. இவ்விரண்டு கடமைகளையும் நிறைவேற்றுவதில் அது கண்டிப்பான உபாத்தியாருக் கொப்பாயிருப்பது மெய்தான். அது அன்பினால் நம்மை அழைத்துக்கொண்டு போகாமல் பலாத்காரமாய்த் தள்ளிக்கொண்டுபோகிறது. என்றாலும் இப்படிச் செய்வதற்குக் காரணம் அன்பே. நாம் மாம்சத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையை இவ்விதக் கண்டிப்பினால் பிடுங்கி எறிவது அன்பே. பாவி எவ்வித நம்பிக்கையு மற்றவனாய், மனச்சஞ்சலத்தோடும் ஆத்தும வியாகுலத்தோடும் அழுது புலம்பி, தான் ஆக்கினைக்குப் பாத்திரன் என்றும், இயேசுகிறிஸ்துவே தனக்காக ஜீவனைக் கொடுத்தவர் என்றும் அறியும்படி ஏவுகிறது.

3. மூன்றாவது நியாயப்பிரமாணம் நம்மைப் பிழைத்திருக்கச் செய்கிறது. விசுவாசியானவன் தேவனுடைய ஜீவனை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளும்படி அவனைப் பக்குவப்படுத்துவதற்கு இது பரிசுத்தாவியானவர் கையாடும் சிறந்த யத்தனமாயிருக்கிறது.

இந்த மேலான முக்கிய சத்தியத்தை, உலகத்தை நம்பினவர்கள் மாத்திரமல்ல, உலகத்தை விட்டு தேவனால் பிரித்தெடுக்கப்பட்டு விசுவாசத்தினால் அவருக்கு உத்தமப் பிள்ளைகளாய் இருக்கிறவர்களிலும்



அநேகர் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை என்றெண்ணுகிறேன். இவர்களில் அநேகர் தாங்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்தபின் நியாயப்பிரமாணத்துக்கும் தங்களுக்குமிருந்த சம்பந்தம் விட்டுப்போயிற்று என்றும், இந்தக் கருத்தில் 'விசுவாசிக்கிற யாவருக்கும் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்' என்றும் சாதிக்கிறார்கள். 'விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி யுண்டாகும்படி,' அதாவது, விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்கள் ஆக்கப்படும்படி 'அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்' என்பது மெய்யே. நியாயப்பிரமாணம் இத்தோடே முடிவடைகிறது. அது நம்மை நீதிமான்களாக்காமல் நம்மைக் கிறிஸ்துவினண்டை கொண்டுபோய்விடுகிறது. இதினிமித்தம் அவரே நியாயப்பிரமாணத்தின் நோக்கமாய் இருக்கிறார் என்கலாம், ஏனென்றால் நியாயப்பிரமாணம் இடைவிடாமல் நோக்கிக்கொண்டிருக்கிற விஷயம் இதுவே. ஆனால், நம்மை அவரிடம் கொண்டுவந்து சேர்த்தபின் அது செய்யவேண்டிய வேறொரு கடமையுண்டு. அதென்னவெனில், அவரை விட்டு நாம் விலகிப்போகாமலிருக்கச்செய்வதே. எப்படியெனில், விசுவாசிகள், நியாயப்பிரமாணத்தின் உயரம் ஆழம் நீளம் அகலத்தை எவ்வளவுக் கதிகமாய்ப் பார்க்கிறார்களோ அவ்வளவுக் கதிகமாய் ஒருவருக்கொருவர் புத்திசொல்லும்படி அது அவர்களை இடைவிடாமல் ஏவிக்கொண்டிருக்கிறது.

4. அப்படியானால் 'நியாயப்பிரமாணமானது' யூதரின் சடங்காசாரப் பிரமாணத்தையும் மோசேயின் ஏற்பாடு முழுவதையும் குறிக்கும்போது, விசுவாசியானவன் அதற்கு விலகினவனே. (ஏனெனில் இவைகளைக் கிறிஸ்து விலக்கியிருக்கிறார்.) அப்படியே, நியாயப்பிரமாணம் நம்மை நீதிமான்களாக்கக்கூடியதாயிராததினால் அதற்கும் நாம் விலகினவர்களே. ஏனெனில் நாம் 'இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம்.' இந்தக் கருத்தின்படி நாம் நியாயப்பிரமாணத்துக்கு விலகினவர்களேயாகிலும் வேறொரு கருத்தின்படி நாம் அதற்கு விலகினவர்களல்ல. அது முதலாவது நமது இருதயத்திலும் ஜீவியத்திலும் இன்னும் மீந்திருக்கிற பாவங்களை நமக்கு உணர்த்திக் கிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கும்பொருட்டு நாம் அவரண்டையில் நெருங்கி நிற்கச்செய்கிறது. இரண்டாவது [illegible]

கிறிஸ்துவினிடத்திலிருந்து ஜீவனுள்ள அவருடைய அவயவங்களாகிய நமக்குச் சக்தியுண்டாகும்படி செய்கிறது. அதினால் அவருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படியான வல்லமை கிடைக்கிறது. மூன்றாவது, நமக்கு இன்னும் கிட்டிவாராதது எதுவோ அது கிடைக்குமென்கிற நம்பிக்கையை இப்பிரமாணம் உறுதியாக்குகிறது. அவருடைய வாக்குகளை உண்மையாய்ச் சுதந்தரித்துக்கொள்ளும்வரையில் 'நாம் கிருபையின்மேல் கிருபை பெற்றுக்கொள்ளுவோம்' என்கிற நம்பிக்கையை நம்மில் உறுதிப்படுத்துகிறது.

5. உத்தம விசுவாசி ஒவ்வொருவனுடைய அனுபவமும் இதற்கு ஒத்திருக்கிறதல்லவா? 'உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்; நாள்முழுதும். அது என் தியானம்' என்று அவன் சொல்லுகையில் தன் பாவத்தன்மையை அந்தத் திவ்விய கண்ணாடியில் அதிகமதிகமாய்த் தினமும் காண்கிறான். சகல விஷயத்திலும் தான் இன்னும் பாவியாகவே யிருப்பதாகவும் தன் இருதயமும் தன் வழிகளும் தேவனுக்குமுன் செவ்வையாயிராததாகவும் தான் நிமிஷந்தோறும் கிறிஸ்துவினண்டைக்கு ஓடவேண்டியவனாகவும் மேன்மேலும் உணருகிறான். யாத்திராகமம், 28: 36, 38–ல் சொல்லியிருக்கிற வசனத்தின் கருத்தென்னவென்று அவனுக்கு இப்போது விளங்குகிறது. 'பசும் பொன்னினால் ஒரு பட்டத்தைப் பண்ணி 'கர்த்தருக்குப் பரிசுத்தம்' என்று அதிலே வெட்டுவாயாக. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பரிசுத்தக் காணிக்கைகளாகப் படைக்கும் பரிசுத்தமானவைகளின் தோஷத்தை (நமது மகா பிரதான ஆசாரியருக்கு முன்னடையாளமாகிய) ஆரோன் சுமக்கும்படி அது ஆரோனுடைய நெற்றியின்மேலிருப்பதாக.' (நம்முடைய ஜெபங்களாவது பரிசுத்த கிரியைகளாவது நமது மீதியான பாவத்தை நிவிர்த்திசெய்யாது.) 'கர்த்தருடைய சந்நிதியில் அவர்கள் (ஜனங்கள்) அங்கீகரிக்கப்படும்படி அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருக்கவேண்டும்.'

6. இதை ஒரு திருஷ்டாந்தத்தினால் விளக்கிக் காண்பிக்கிறேன். 'கொலை செய்யாதிருப்பாயாக' என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. நமதாண்டவர் போதிக்கிறபிரகாரம் நாம் புறம்பான கிரியைகளை மாத்திரமல்ல, அன்பற்ற எவ்வித வார்த்தையையும் நினைவையும் விலக்கிவிடவேண்டியவர்கள். குறைவற்ற இந்தப் பிரமாணத்தை நான்



எவ்வளவுக்கு ஆராய்ந்து பார்க்கிறேனோ அவ்வளவுக்கு அதை நிறைவேற்றுவதில் குறைவுள்ளவனாயிருக்கிறேன் என்று காண்கிறேன். எவ்வளவுக்கு என் குறைவைப் பார்க்கிறேனோ அவ்வளவுக்கு என் பாவங்களை நிவிர்த்தி செய்ய அவரது திரு இரத்தம் அவசியமென்றுணருகிறேன். மேலும் அவ்வளவுக்கு என் இருதயத்தைச் சுத்திகரித்து 'நான் ஒன்றிலும் குறைவுள்ளவனாயிராமல் பூரணனாயும் நிறைவுள்ளவனாயும்' இருப்பதற்கு அவருடைய ஆவியானவர் அவசியம் என்றும் உணருகிறேன்.

7. ஆகையால் கிறிஸ்து இல்லாமல் நான் ஒரு நிமிஷமும் இருக்க முடியாததுபோல நியாயப்பிரமாண மில்லாமலும் நான் ஒரு நிமிஷமாவ திருக்க முடியாது. கிறிஸ்துவினிடத்தில் என்னைக் கொண்டுபோவதற்கு அது வேண்டியதா யிருந்ததுபோல என்னை இப்பொழுது கிறிஸ்துவுடன் நிலைத்திருக்கச் செய்வதற்கும் அது வேண்டியதே. மற்றப்படி 'அவிசுவாசமுள்ள' இந்தப் 'பொல்லாத இருதயம் ஜீவனுள்ள தேவனை விட்டு உடனே விலகிப்போகும்.' இதை நாம் பார்த்தால் நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்திற்குப் போகும்படி ஏவுகிறது. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தினிடத்திற்கு நம்மைப் போகும்படி ஏவுகிறார். ஒருபக்கத்தில் நியாயப்பிரமாணமானது உயரமும் ஆழமுமாயிருப்பதினால் கிறிஸ்து இயேசுவில் தேவன் காண்பித்திருக்கும் அவருடைய அன்பை நோக்கி ஓடும்படி என்னை நெருக்கி ஏவுகிறது. மறுபக்கத்திலோ, கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவ அன்பானது நியாயப்பிரமாணத்தைப் பொன்னிலும் விலையுயர்ந்த இரத்தினங்களிலும் சிறந்ததாக்குகிறது. ஏனென்றால் அதின் ஒவ்வொரு பாகமும் என் ஆண்டவருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தமாயிருக்கிறதென்றும் அதை அவர் தகுந்த காலத்தில் நிறைவேற்றுவார் என்றும் அறிவேன்.

8. அப்படியானால் மனுஷனே, நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்தி அதற்கு விரோதமாய்ப் பேசுகிறதற்கு நீ யார்? அதைப் பாவம், பிசாசு, மரணம் என்பவைகளுக்கு ஒப்பாக்கி நரகத்திற்குரியதாக்குகிறதற்கு நீ யார்? சகோதரரைக் குற்றப்படுத்திப் பேசுகிறதைப்போல நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்தி அதற்கு விரோதமாய்ப் பேசுவது பெரிய தப்பிதம் என்று அப். யாக்கோபு தீர்மா

னித்து 'நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால் நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்' என்று எழுதினான். உன்னை நியாயந் தீர்க்கும்படி தேவன் நியமித்திருக்கிற நியாயாதிபதிக்கு நீ நியாயாதிபதியாகிறாய்! ஆகவே, நீ கிறிஸ்துவின் நியாயாசனத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கென்று வைத்திருக்கிற சட்டத்தைத் தள்ளிப்போடுகிறாய்! இதினாலே சாத்தான் உன்னைத் தனக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டான் 'என்றறிந்துகொள். தேவனுடைய கிருபையை நமக்குக் கொண்டுவருகிற இந்த அருமையான யத்தனத்தை இனிமேல் அற்பமாய் நினையாதே. இதைக்குறித்து அலட்சியமாயும் பேசாதே. இதை நமக்கு அருளிச்செய்தவர் நிமித்தமும், நம்மை வழி நடத்துகிறவர் நிமித்தமும் நீ இதை நேசித்து அருமையாய் எண்ணவேண்டும். கிறிஸ்துவின் சிலுவைக்கு இரண்டாவது இதுவே. இது உன் மகிமையும் மகிழ்ச்சியுமாயிருப்பதாக! யாவர் முன்பாகவும் இதைப் புகழ்ந்து மேன்மைப்படுத்துவாயாக!

9. நியாயப்பிரமாணமானது தேவனிடத்திலிருந்து உற்பவித்ததென்றும், அது நாம் பின்பற்றக்கூடிய அவருடைய நற்குணங்களின் பிரதியாய் இருக்கிறது என்றும், அது யாவருக்கும், விசேஷமாய் விசுவாசிகளுக்கு, 'பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும்' இருக்கிறது என்றும் நீ திட்டமாய் நம்பினால் அதைத் தீட்டுள்ள பொருள்போல் எறிந்துவிடாமல் மேன்மேலும் உறுதியாய்ப் பற்றிக்கொள். கிருபை, சத்தியம், தேவனுக்கும் மனுஷருக்குமுரிய அன்பு, தாழ்மை, சாந்தம், பரிசுத்தம் ஆகிய இவைகளைப்பற்றிய இந்த நியாயப்பிரமாணம் ஒருபோதும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக. 'நீ அதை உன் கழுத்திலே பூண்டு, அதை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.' நீ கிறிஸ்துவை விட்டு விலகாதிருக்க வேண்டுமானால் நியாயப்பிரமாணத்தை விட்டு விலகாதே. அதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள். பிடித்த பிடியை விட்டுவிடாதே. 'உன்னிடத்தில் நியாயப்பிரமாணத்தின் சகல நீதியும் நிறைவேறி' நீ 'தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படும்வரைக்கும்' பாவப் பிராயச்சித்த இரத்தத்தினிடத்திற்கு இது உன்னை எப்பொழுதும் வழி நடத்தி உன் நம்பிக்கை எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கச் செய்வதாக.



10. உன் ஆண்டவர் இப்பொழுதே தமது பிரமாணத்தை உன் இருதயத்தில் எழுதித் தமது வாக்கின்படி செய்திருப்பாரானால் 'கிறிஸ்து உனக்குண்டாக்கின சுயாதீன நிலைமையில் நிலைகொண்டிரு.' நீ யூத சடங்காசாரங்களுக்கும், பாவ தோஷத்துக்கும் நரக பயத்துக்கும் நீங்கலாகிச் சுயாதீனம் அடைந்திருக்கிறாய். (கிறிஸ்தவனுக்குரிய பூரண சுயாதீனத்திற்கு இது ஆரம்பம்.). இவைகளினின்று மாத்திரமல்ல, இவைகளைப்பார்க்கிலும் மேன்மையானவைகளாகிய பாவ அதிகாரத்தினின்றும், பிசாசைச் சேவிப்பதினின்றும், தேவனை விசனப்படுத்துவதினின்றும் விடுதலையடைந்திருக்கிறாய். இந்தச் சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிரு! மற்ற யாவும் இந்தச் சுயாதீனத்தோடு ஒப்பிடப் பாத்திரமானவையல்ல. உன் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூர்ந்து உன் முழுப்பலத்தோடும் அவருக்கு ஊழியஞ்செய்வதில் உறுதியாயிரு. அவருடைய பிரமாணத்தை இவ்விதமாய்க் கைக்கொண்டு அவருடைய சகல கற்பனைகளின்படியும் குற்றமற்றவர்களாய் நடப்பதே மெய்ச்சுயாதீனம். 'மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாதே.' அப்படிச் சொல்லும்போது யூதருடைய சடங்காசாரப் பிரமாண அடிமைத்தனத்தையாவது, நரக பயத்துக்குரிய அடிமைத்தனத்தையாவது, நான் குறிக்கிறதில்லை. நீ இவைகளுக்கு விலகியிருக்கிறாய் என்று நம்புகிறேன். ஆனால் உள்ளான புறம்பான கற்பனையை மீறி மறுபடியும் பாவ அடிமைத்தனத்தின் நுகத்துக் குட்படாதபடி எச்சரிக்கையாயிரு. மரணத்தையும் நரகத்தையும்விடப் பாவத்தை அதிகமாய் வெறுத்துத் தள்ளு. பாவ தண்டனையைப்பார்க்கிலும் பாவத்தையே வெறுக்கவேண்டும். பெருமை இச்சை கோபமாகிய அடிமைத்தனத்துக்கும் துர்க்குணம் துர்வார்த்தை துர்க்கிரியைகளாகிய அடிமைத்தனத்துக்கும் உட்படாதபடி ஜாக்கிரதையாயிருந்து 'இயேசுவை நோக்கிப்பார்.' அவரை நோக்கிப் பார்க்கும்பொருட்டு 'சுயாதீனப் பிரமாணமாகிய' பூரணப் பிரமாணத்தை மேன்மேலும் உற்றுப்பார்த்து 'அதிலே நிலைகொண்டிரு. அப்பொழுது, நீ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறியும் அறிவிலும் வளருவாய்.'

## வினாக்கள்.

1. கிறிஸ்துவின் மரணத்தினால் விசுவாசிகள் எந்தப் பிரமாணத்தினின்று விடுதலையாகிறார்கள்?

'சன்மார்க்கப் பிரமாணம் சடங்காசாரப் பிரமாணம் என்னும் பிரமாணங்களுக்கு நீங்கலாகிறார்கள்.'

பிரிவு. 2. பார்க்க.

2. விசுவாசிகள் நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாகிறார்கள் என்பதின் கருத்தென்ன?

கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் 'பழமையான எழுத்தின்படியல்ல'—'மோசேயின் ஏற்பாட்டில் வரைந்திருக்கிற புறம்பான கிரியையின் படியல்ல, 'புதுமையான ஆவியின்படி'—ஆவிக்குரிய புதிய நிபந்தனையின்படி அவரை இப்பொழுது சேவிக்கிறார்கள்.

பிரிவு. 2. பார்க்க.

3. நியாயப்பிரமாணத்தின் உற்பத்தி யாது?

பிரிவு. I. 1. பார்க்க.

4. நியாயப்பிரமாணம் மனிதனுக்கு முதலாவது எப்படி, எப்போது கொடுக்கப்பட்டது?

பிரிவு. I. 3. பார்க்க.

5. மனுஷன் தவறி விழுந்தபின் இந்தப் பிரமாணம் அவனை விட்டு முற்றிலும் எடுபட்டுப்போயிற்றோ?

எடுபடவில்லை. தேவன் 'அந்தகாரமும் பாவமும் நிறைந்த இந்தச் சிருஷ்டியின் இருதயத்தில் இதை ஒருவாறு மறுபடியும் பதித்தார்.'

6. இருதயத்தில் வரையப்பட்டிருக்கிற இந்தப் பிரமாணத்துக்கும் பத்துக் கற்பனைகளுக்கும் சம்பந்தமுண்டா?

பிரிவு. I. 5. பார்க்க.

7. கிறிஸ்து இயேசுவினால் சடங்காசாரப் பிரமாணத்தினின்று மாத்திரம் விசுவாசிகள் விடுதலையடைகிறதில்லை என்பதை உவெஸ்லி ஐயர் எவ்வாறு ரூபிக்கிறார்?

பிரிவு. II. 2. பார்க்க.



8. தேவனுடைய நியாயப்பிரமாணமாவது இன்னதென்று உவெஸ்லி ஐயர் சொல்லுகிறதை எடுத்துரை?

'அது மாறாததும் உன்னதமுமான நீதி. அது மாற்றக்கூடாத உத்தம சத்தியம்: அது சிருஷ்டிக்கப்பட்ட யாவற்றோடும் எக்காலமும் விகற்பமின்றி பொருந்துகிறது.'

9. நியாயப்பிரமாணம் நீதியாயிருக்கிறது என்பதை உவெஸ்லி ஐயர் எவ்வாறு விஸ்தரிக்கிறார்.

பிரிவு. III. 5. பார்க்க.

10. சரி, தப்பிதம் என்பவைகளின் உற்பத்தியைக்குறித்த விஷயத்தில் உவெஸ்லி ஐயர் செய்த தீர்மானம் என்ன?

பிரிவு. III. 6, 7, 8. பார்க்க.

11. நியாயப்பிரமாணத்தின் பிரயோஜனங்களெவை?

பிரிவு. IV. 1, 2. பார்க்க.

12. நியாயப்பிரமாணத்தைக்குறித்த விஷயத்தில், அதற்காக வழக்காடுகிற லௌகீக மனுஷரின் கொள்கைக்கும் அதைத் தள்ளிவிடுகிற அந்திநோமியரின் கொள்கைக்கும் இடங்கொடாமல் உவெஸ்லி ஐயர் இருபட்சத்தாரையும் கண்டிப்பதெப்படி?

பிரிவு. IV. 3, 4. பார்க்க.

13. பக்திக்கடுத்த மேது கிரியைகளினால் நமது பாவங்கள் நிவிர்த்தியாகிறதில்லை என்பதை உவெஸ்லி ஐயர் எவ்வாறு ரூபிக்கிறார்.

பிரிவு. IV. 5, 6. பார்க்க.

14. விசுவாசியானவன் நியாயப்பிரமாணம் இல்லாமல் இருக்கப்படாதா?

பிரிவு. IV. 7, 8. பார்க்க.

15. கிருபையின் இராஜ்யத்தில் நியாயப்பிரமாணத்துக்குக் கிடைக்கவேண்டிய மேன்மை என்ன?

'அது கிறிஸ்துவின் சிலுவைக்கு இரண்டாவது.'

# பன்னிரண்டாம் பிரசங்கம்.

## SATAN'S DEVICES.

## சாத்தானின் தந்திரங்கள்.

'அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.'
(2 கொரி. 2: 11.)

1. தேவனுடைய பிள்ளைகளைக் கெடுத்துப்போடும்படி 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்' எண்ணிறந்த உபாயங்களைக் கையாடுகிறான். அவர்களைக் கெடுத்துப்போடுவது அசாத்தியம் எனக் காண்பானாயின், அவர்களை வேதனைப்படுத்திக் கலங்கச்செய்து, தங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற பந்தய ஓட்டத்தில் ஓடாதபடியாவது தடுத்துப்போடும்படி முயற்சி செய்கிறான். இதற்கென்று அவன் கையாடுகிற உபாய தந்திரங்கள் அநந்தம். வானத்தின் நட்சத்திரங்களையும் கடற்கரை மணலையும் எண்ணக்கூடுமானாலும் இவைகளை எண்ண முடியாது. ஆயினும் இவைகளில் ஒன்றைக்குறித்துமாத்திரம் நான் இப்போது பேசப்போகிறேன். (இந்த ஒன்றே பலவாறாக நடப்பிக்கப்படுகின்றது.) இதினால் அவன் சுவிசேஷ சத்தியங்களை ஒன்றுக்கொன்று விகற்பமாக்கி அதின் ஒரு பாகத்தைக்கொண்டு வேறொரு பாகத்தைக் குலைக்கும்படி முயற்சி செய்கிறான்.

2. மனந்திரும்பிச் சுவிசேஷத்தை விசுவாசிக்கிற யாவருடைய இருதயத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பரலோக இராஜ்யம் என்பது 'நீதியும் சமாதானமும் பரிசுத்தாவியினாலுண்டான சந்தோஷமும்' அல்லவா? கிறிஸ்து இயேசுவில் விசுவாசம் வைக்கிற அந்நிமிஷமே, நாம் இவைகளுக்குப் பங்காளிகளாகிறோம் என்பது கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருக்கிறவர்கள் யாவரும் அறிந்தவிஷயமே. ஆனால் இவைகள் 'ஆவியின் முதற்பலன்களே' அன்றி முழு அறுப்பல்ல. அறுப்பு இனிமேல்தான் வரும். இவ்வாசீர்வாதங்கள் எண்ணுதற்கரியவைகளாயினும் இவைகளிலும் சிறந்த ஆசீர்வாதங்கள் இனிமேல் உண்டாகும் என்று நம்புகிறோம். நமது தேவனாகிய கர்த்தரிடத்தில் நமக்கு இப்பொழுதிருக்கும் அன்பு உண்மையானதாயினும் குறைவானதே. அவரிடத்தில் இப்போது அன்புகூருகிற பிரகாரமாத்திரமல்ல, 'நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அன்புகூருவோம்' என்று நம்புகிறோம். 'எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவும், இடைவிடாமல் ஜெபம்பண்ணவும், எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ்செய்யவும்' நமக்கு வல்லமை கிடைக்குமென்று எதிர்நோக்கியிருக்கிறோம். இப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைக்குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

3. 'அன்பில் பூரணப்படுவோம்' என்று எதிர்பார்க்கிறோம். அந்தப் பூரண அன்பு வேதனையுண்டாக்கும் பயத்தைப் புறம்பே தள்ளும். அந்த அன்பு, நாம் நேசிக்கிறவரை மகிமைப்படுத்தி மேன்மேலும் அவரை நேசித்து அவருக்கு ஊழியஞ் செய்யவேண்டும் என்கிற வாஞ்சையைத்தவிர, மற்ற எவ்வித வாஞ்சையையும் நமக்குள் உண்டுபண்ணாது. நமது இரட்சகராகிய தேவனைப்பற்றிய அறிவில் வளர்ந்து அவரிடத்திலுள்ள அன்பில் பெருகவேண்டுமென்று நாடுகிறோம். இதில் வளர்ந்து பெருகுவோமாகில் 'அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும்' எப்பொழுதும் 'ஒளியில் நடந்துகொள்ளுவதற்குத் தகுதியுள்ளவர்களாவோம்.' 'கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தை' முற்றிலும் நம்மில் உண்டாகும் என்றும், பிறனுக்காக நமது ஜீவனையும் ஒப்புக்கொடுக்கத் தக்கவிதமாய் அவனிடத்தில் அன்புகூருவோம் என்றும், இந்த அன்பினாலே கோபம், பெருமை, பட்சமற்ற சுபாவங்களுக்கு விலகியிருப்போமென்றும் விசுவாசிக்கிறோம். நம்மிலுள்ள 'விக்கிரகங்களும்' 'மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும்' நீங்கிச் சுத்திகரிக்கப்படவும், உள்ளும் புறம்பும் காணப்படுகிற அசுத்தங்களெல்லாம் நீங்கி ரட்சிக்கப்படவும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல நாமும் சுத்தமாக்கப்படவும் எதிர்பார்க்கிறோம்.

4. பொய்யுரையாத தேவன் பல வாக்குகள் அருளியிருக்கிறார். அவர் வாக்கின்படி, அவரது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது

போல அது இந்தப் பூமியிலேயும் நமது வார்த்தை கிரியையிலும், செய்யப்படும். அவ்வாக்கின்படி, நமது பேச்சு 'உப்பால் சாரமேறினதும்' கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாக்கக் கூடியதுமாயிருக்கும். நாம் புசித்தாலும், குடித்தாலும், எதைச்செய்தாலும் அதைத் தேவனுடைய மகிமைக்கென்று செய்வோம். நாம் பேசுகிறவைகள் செய்கிறவைகளை யெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிப்போம். இப்படிப்பட்ட காலம் வருமென்று நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்.

5. பிசாசானவன் செய்கிற பெரிய தந்திரம் என்ன? நமதாத்துமாவில் உண்டாயிருக்கும் தேவனுடைய ஆரம்பக் கிரியையை அழித்துப்போடுகிறான். அல்லது இதிலும் மேலான கிரியை நம்மில் நடக்கப்போகிறதென்று நாம் எதிர்பார்ப்பதினால் இந்த ஆரம்பக் கிரியை வளராதபடி தடுக்கப் பார்க்கிறான். ஆகையால், இதை நிறைவேற்றுவதற்கு அவன் கையாடுகிற பல முறைகளை முதலாவது எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இரண்டாவது; இந்தப் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களைத் தடுக்கும்படி நாம் என்ன செய்யலாம் என்றும், நம்மைக் கெடுக்கும்படி அவன் செய்யும் உபாயத்திற்கு இணங்காமல் சோதனையினாலே ஆத்மதேர்ச்சி யடைவதற்கு நாம் உபயோகிப்பது எவ்வாறு என்றும் காட்டுவேன்.

I. நமதாத்துமாவில் உண்டாயிருக்கிற தேவனுடைய ஆரம்பக் கிரியையை அழித்துப்போடவும் இதிலும் மேலான கிரியையை எதிர்பார்ப்பதினால் இந்த ஆரம்பக் கிரியை வளராதபடி தடுக்கவும் சாத்தான் கையாடுகிற பிரயத்தனங்கள் எவையென முதலாவது காட்டுவேன்.

1. நாம் நீசர்; பாவிகள், அபாத்திரர் என்கிற எண்ணத்தையும், இம்மட்டும் நமக்குள்ளிருக்கிற மாறுதலிலும் பெரிய மாறுதல் உண்டாகாவிட்டால் நாம் தேவனைத் தரிசிக்க முடியாது என்கிற எண்ணத்தையும் அவன் நம்மில் உண்டுபண்ணி கர்த்தருக்குள் நமக்கு இருக்கும் சந்தோஷத்தைக் கெடுத்துப்போட யத்தனிக்கிறான். நமது மரணகாலபரியந்தம் நாம் இப்பொழுது இருக்கிற நிலைமையிலே



எப்பொழுதும் இருக்கவேண்டியது அவசியம் என்று அறிந்திருப்போமாகில், அப்படிப்பட்ட அவசியத்தினிமித்தம் இது தாழ்வான நிலைமையாயிருந்தபோதிலும் அதில் ஒருவகையாய் ஆறுதல் அடையவேண்டியதே. ஆனால் நாம் இந்த நிலைமையிலே யிருக்கவேண்டிய அவசியமில்லையென்று அறிவோம். ஏனெனில் இன்னும் பெரிதான மாறுதல் நமக்குள் உண்டாகுமென்றும் இந்த ஜீவியத்திலே நமது பாவங்கள் அனைத்தும் ஒழிந்துபோகாவிட்டால் மகத்துவமுள்ள தேவனைத் தரிசிக்க முடியாதென்றும் நிச்சயமாய் அறிவோம். ஆகையால் தந்திரமுள்ள எதிராளியாகிய பிசாசானவன், நாம் இம்மட்டும் பெற்றுக்கொள்ளாத ஆசீர்வாதத்தையும் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் குறித்து நம்மில் முறுமுறுப்பு உண்டாக்கி இப்போது நாம் அனுபவித்துவருகிற ஆசீர்வாதங்களினிமித்தம் நமக்கு இருக்கவேண்டிய சந்தோஷத்தைக்கூட அடிக்கடி கெடுத்துப்போடுகிறான். ஆகவே, நாம் பெற்றுக்கொள்ளாதவைகள் இன்னும் அதிகமாய் இருப்பதினால் இம்மட்டும் பெற்றுக்கொண்டவைகளுக்காகச் சந்தோஷப்பட ஏதுவில்லை. தேவன் நமக்குச் செய்யாத மேலான காரியங்கள் இன்னும் அநேகமாய் இருப்பதினிமித்தம் இம்மட்டும் பெரிய காரியங்களைச் செய்ததில் நமக்குப் பாராட்டியிருக்கும் அவரது தயவை நாம் நன்றாய் உணர்ந்துகொள்ள ஏதுவில்லை. அவ்விதமாகவே, நமது தற்கால அசுத்த நிலைமையை நன்றாய் உணரச்செய்து நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற பூரண பரிசுத்தத்தின்மேல் எவ்வளவுக்கு வாஞ்சையை உண்டாக்குகிறானோ அவ்வளவுக்கு, நமக்குக் கிடைத்திருக்கிற தேவனுடைய ஈவுகளை அற்பமாய் எண்ணவும், பெற்றுக்கொள்ளாதவைகளினிமித்தம் பெற்றுக்கொண்டவைகளைக் குறைவாய் மதிக்கவும் ஏவப்படுகிறோம்.

2. இவ்வளவாக நமது சந்தோஷத்தைக் கெடுத்துப்போட்டபின் நமது சமாதானத்தையும் கெடுக்கப் பார்ப்பான். அவன் 'நீ தேவனைத் தரிசிக்கத் தகுதியுள்ளவனா? அவர் தீமையைப் பார்க்காத சுத்தக்கண்ணனாயிருக்கிறாரே. அப்படியிருக்க, அவர் உன்மேல் சந்தோஷமாயிருக்கிறார் என்றெண்ணி உன் மனதை வீணாய்த் தேற்றிக்கொள்ளலாமா? தேவன் பரிசுத்தர்; நீயோ அசுத்தன். ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? நீ அசுத்தனாயிருக்க தேவனோடு ஒப்புரவாயிருக்

கிறது கூடிய காரியமா? நீ அழைக்கப்பட்ட பரம அழைப்பின் பந்தயப்பொருளாகிய இலக்கை நோக்கிப் பார்க்கிறாய் என்பது மெய்யே. ஆயினும் அது உன் கண்களுக்கு எட்டாத தூரத்திலல்லவோ தோன்றுகிறது? அப்படியிருக்க உன் பாவங்களெல்லாம் முந்தியே மன்னிக்கப்பட்டாயிற்று என்று எண்ணிக்கொள்ளத் துணியலாமா? நீ தேவனுக்குச் சமீபமாய் வந்து அவருடைய சாயலைத் தரித்துக்கொண்டாலன்றிப் பாவம் மன்னிக்கப்படுமா?' என்கிற இப்பேர்ப்பட்ட எண்ணங்களைக்கொண்டு வந்துவிடுவான். இவ்விதமாய் உன் சமாதானத்தைக் குலைத்துப்போடவும், உன் சமாதானத்தின் ஆதாரத்தைத் தகர்த்துப்போடவும் முயற்சி செய்வான். உனக்குத் தெரியாதவண்ணம் கொஞ்சம் கொஞ்சமாய் நீ புறப்பட்ட இடத்திற்கே உன்னை மறுபடியும் கொண்டுபோய்த் தள்ளப் பார்ப்பான். அதாவது நீ உன் கிரியையினாலும் உன் சுய நீதியினாலும் நீதிமானாக்கப்படலாம் என்றெண்ணும்படி செய்வான். அல்லது தேவன் உன்னை அங்கீகரித்துக்கொள்ளும்பொருட்டு உனக்கு ஆதாரமாயிருக்கும்படி நீ முன்னதாகவே செய்யவேண்டியவைகள் உண்டே என்று பொய்யாய்க் காண்பிப்பான்.

3. 'போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலுங் கூடாது. நான் இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன்' என்று ஒருவன் உறுதியாயிருந்தாலும், அவன் விடமாட்டான். இதற்கு அவன் 'அது மெய்தான், ஆனாலும் மரமானது அதன் கனிகளினால் அறியப்படுமே. நீதிமானாக்கப்பட்டவனுக்குரிய கனி உன்னிடமிருக்கிறதா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை உன்னிடமுண்டா? நீ பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கிறாயா? நீ கிறிஸ்துவின் மரணத்துக்கொப்பான மரணத்திற்குள்ளாகியிருக்கிறாயா? அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிவாயா?' என்று கேட்டு நம்மை ஓயாமல் அலட்டிக்கொண்டேயிருப்பான். அப்போது, தேவன் நமக்கருளிச்செய்வதாகச் சொல்லியிருக்கும் திரளான வாக்குகளோடு நமது ஆத்துமாவில் தோன்றுகிற அற்ப சொற்ப கனிகளை ஒப்பிட்டுப்பார்த்து 'என் பாவங்கள் மன்னிக்கப்பட்ட



தாக் தேவன் எனக்குச் சொல்லவில்லை. நான் இன்னும் பாவமன்னிப்புப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களோடு எனக்குப் பங்கில்லை' என்று நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்துத் திகைப்போம்.

4. விசேஷமாய் வியாதி துன்பம் நேரிடுங்காலங்களில் இவ்வித சந்தேகத்தை நம்மில் அதிகப்படுத்தித் தன் முழுப்பலத்தோடும் நம்மைக் கெடுக்கப் பார்க்கிறான். 'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தம்மைத் தரிசிப்பதில்லை என்று பொய்யுரையாத தேவன் சொல்லியிருக்கிறாரே, உனக்கோ பரிசுத்தமில்லை, அது உனக்கே தெரியும். பரிசுத்தம் என்பது தேவனுடைய பூரண சாயலல்லவா? இது உன் கண்ணுக்கு எட்டாத தூரத்திலல்லவோ இருக்கிறது. அதைக் கிட்டிச்சேர உன்னால் முடியாது. ஆகையால் உன் பிரயத்தனமெல்லாம் வீணாய்ப் போயிற்று. இவ்வளவுதூரம் பட்டபாடெல்லாம் விருதாவாகவே முடிந்தது. வீணும் வியர்த்தமுமாய் உன் பெலனைச் செலவழிக்கிறாய். நீ இன்னும் உன் பாவங்களை விட்டு விலகவில்லை. அழிவுதான் உன் முடிவு' என்று சொல்லிப் பலவிதமான சந்தேகத்தை நம்மில் உண்டாக்குவான். நமது பாவங்களையெல்லாம் சுமந்து தீர்த்தவரை நமது கண்கள் எப்போதும் நோக்கிக்கொண்டிருந்தாலன்றி, நம்மை வெகுகாலமாய் அடிமைப்படுத்தியிருந்த 'மரணபயம்' திரும்பவும் நம்மை ஆட்கொள்ளும்படி செய்வான். இதினால் நம்மிலுள்ள சமாதானத்தையும் பரிசுத்தாவியினாலுண்டாகும் சந்தோஷத்தையும் முற்றிலும் அழித்துப்போடாவிட்டாலும் அதிகமாய்க் குறைத்துப்போடுவான்.

5. பிசாசானவனின் தந்திரங்களில் எல்லாம் பெரியது இதற்கும் பின்னுக்குக் காணப்படும். நமது சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பங்கப்படுத்தினது போதும் என்றிராமல் நம்மிலுள்ள நீதியையும் கெடுத்துப்போடும்படியாக முயற்சி செய்வான். நாம் அதிக பரிசுத்தத்தைப் பெற்று, தேவசாயல் முழுவதையும் அடைந்துகொள்ள எதிர்பார்ப்பதினால் நம்மில் இப்பொழுது இருக்கிற பரிசுத்தத்தைக் குலைத்துப்போடவும், கூடுமானால் அதை முற்றிலும் அழித்துப்போடவும் பிரயாசப்படுவான்.

6. இதை நிறைவேற்றுவதற்கு அவன் கையாடுகிற முறையென்னவென்பதை இம்மட்டும் சிந்தித்துக்கொண்டவைகளினால் ஒருவாறு கண்டுகொள்ளலாம். முதலாவது, கர்த்தருக்குள் நமக்கிருக்கும் சந்தோஷத்தைக் கெடுத்துப்போடும்படி பிரயாசப்படுவதினால் நம்முடைய பரிசுத்தத்தையும் எடுத்துப்போடும்படி யத்தனிக்கிறான். ஏனென்றால், நம்மில் பரிசுத்த குணங்கள் விருத்தியடைவதற்குப் பரிசுத்தாவியின் சந்தோஷம் ஒரு சிறந்த யத்தனமாயிருக்கிறது. ஒரு விசுவாசியின் இருதயத்தில் தமது கிரியையை நடப்பிக்கிறதற்குத் தேவன் இதை ஒரு விசேஷித்த ஏதுவாக உபயோகிக்கிறார். உள்ளான பரிசுத்தத்திற்கு மாத்திரமல்ல புறம்பான பரிசுத்தத்திற்கும் இந்தச் சந்தோஷம் மிகவும் அநுகூலமானதே. விசுவாசத்தின் கிரியையிலும் அன்பின் பிரயாசத்திலும் நாம் பெருகுவதற்கு இது நமது கைகளைத் திடப்படுத்துகிறது. 'விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைத் தைரியமாய்ப் போராடவும் நித்தியஜீவனைப் பற்றிக்கொள்ளவும்' இது நமக்குப் பெலன் அளிக்கிறது. உள்ளும் புறம்பும் நேரிடுகிற துன்பங்களில் மனம் பேதலியாதிருக்கவும் 'தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தவும்' சித்தங்கொண்டு தேவன் இதை நியமித்திருக்கிறார். ஆகையால் கர்த்தருக்குள் நமக்கிருக்கும் சந்தோஷத்தைக் குறைக்கிறதெதுவோ, அது அந்தச் சந்தோஷம் குறைந்துபோகிற அளவுக்குத் தக்கதாக நமது பரிசுத்த வளர்ச்சியையும் தடுக்கிறது. ஆகவே, சாத்தான் எவ்வளவாய் நமது சந்தோஷத்தைக் குலைக்கிறானோ அவ்வளவாய் நமது பரிசுத்த வளர்ச்சிக்கும் இடையூறு செய்கிறான்.

7. அப்படியே அவன் நமது சமாதானத்தை எவ்வகையாயினும் அழித்துப்போடுவதினாலும் குறைத்துப்போடுவதினாலும் நமது பரிசுத்த வளர்ச்சியையும் குறைத்துப்போடுவான். ஏனென்றால் தேவசாயல் நம்மில் வளர்ந்து பெருகுவதற்குத் தேவ சமாதானமும் ஒரு நல்ல யத்தனமாயிருக்கிறது. எவ்வேளையிலும் நமதாவியிலிருக்கும் அமைதலும், தேவன்பேரிலுள்ள நம்பிக்கையினால் மனதுக்குண்டாகும் அமரிக்கையும், இயேசுகிறிஸ்துவின் திரு இரத்தத்தின்மேலுள்ள விசுவாசத்தினால் கிடைக்கும் ஆறுதலும் அல்லவோ சமாதானம்? இந்தச் சமாதானத்தைப்பார்க்கிலும் பரிசுத்தத்திற்கு அநுகூலமானது வேறென்ன?



இந்தச் சமாதானமில்லாமல் கிருபையில் வளருவதும், இதில்லாமல் 'நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷித்த அறிவில்' வளருவதும் அசாத்தியம். ஏனெனில் பிள்ளையடைவான அன்புள்ள பயத்தைத்தவிர மற்றெவ்வித பயமும் நமது ஆத்துமாவைக் கடினப்படுத்தி அதை உணர்வற்றுப்போகும்படி செய்யும். அந்தப் பயம், ஆவிக்குரிய ஜீவன் உண்டுபண்ணும் ஊற்றுக்கண்களை அடைத்து நமதிருதயம் தேவனைக் கிட்டிச் சேராதபடி தடுக்கும். அதினால் சந்தேகம் என்னும் உளையில் நமதாத்துமா விழுந்து புதைந்துபோகிறது. ஆகவே பயமும் சந்தேகமும் நம்மில் அதிகரிக்கிற அளவுக்குத் தக்கதாகப் பரிசுத்த வளர்ச்சியும் நம்மில் குன்றிப்போம்.

8. பூரண அன்பு நமக்குள் உண்டாகவேண்டுமென்று நாம் ஆவலாய் உணருகிற சமயமே தனக்கு நற்சமயமென்று தந்திரவாதியாகிய அச்சத்துரு நினைத்து சந்தேகத்தினாலும் பயத்தினாலும் நமது சமாதானத்தைக் குறைத்துப்போடும்படி அவன் பிரயாசப்படுகிற அவ்வேளையிலேயே நமது விசுவாசத்தையும் குறைத்துப்போடும்படி முயற்சி செய்கிறான். விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடாவிட்டாலும் அதைப் பெலவீனப்படுத்தப் பார்க்கிறான். சமாதானமும் விசுவாசமும் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கின்றன. அவை நிலைத்திருந்தால், இரண்டும் சேர்ந்து நிலைநிற்கும்; விழுந்துபோனால் இரண்டும் சேர்ந்து விழும். விசுவாசம் நிலைத்திருக்குங் காலமெல்லாம் நமக்குச் சமாதானமுண்டு. நாம் நமது ஆண்டவர்பேரில் விசுவாசமுள்ளவர்களாயிருக்குங்காலத்தில் நமது இருதய சமாதானமும் உறுதியாயிருக்கும். ஆனால் நமது விசுவாசத்தை இழந்து, அன்பும் இரக்கமுமுடைய தேவன்பேரில் நமக்கிருக்கிற பிள்ளையடைவான நம்பிக்கையை நெகிழ விடுவோமாகில், சமாதானத்துக்கு ஆதாரமாயிருந்த விசுவாசம் புரண்டுபோக, நமது சமாதானமும் பறந்துபோகும். சமாதானத்துக்கும் பரிசுத்தத்துக்கும் ஆதாரமாயிருப்பது விசுவாசம். ஆகையால் விசுவாசத்தை அசைக்கக்கூடியது எதுவோ அதுவே பரிசுத்தத்திற்கு மூலாதாரமாயிருக்கிறதையும் அசைத்து விழத்தள்ளும். எப்படியென்றால், 'கிறிஸ்து என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்' என்கிற உறுதியும், தேவன் கிறிஸ்துவினிமித்தம் பாவியாகிய என்மேல் கிருபையாயிருக்கிறார் என்கிற

நிலையான உணர்வும் என்னுள்ளத்தில் இராவிட்டால் நான் தேவனிடத்தில் அன்புகூருவது அசாத்தியம். 'அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.' அவர் நம்மில் அன்புகூர்ந்து தமது குமாரனுக்குள் நம்மை அங்கீகரித்திருக்கிறார் என்கிற உணர்வு நமக்குள் எவ்வளவு உறுதியாயும் தெளிவாயுமிருக்கிறதோ, அதற்குத் தக்கதாகத்தான் நாம் அவரில் அன்புகூரக்கூடும். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்தாலன்றி நம்மிடத்தில் அன்புகூர்வதுபோலப் பிறரிடத்தில் அன்புகூர முடியாது. பிறரிடத்தில் அன்புகூராததினால் மனிதரிடத்திலாவது தேவனிடத்திலாவது சரியான பற்றுதலுள்ளவர்களாய் இருப்பது கூடியதல்ல. ஆகையால் நமது விசுவாசத்தைக் குறைப்பது எதுவோ, அது, அதே அளவுக்கு நமது பரிசுத்தத்தையும் தடுக்கும் என்று இதினால் திட்டமாய் அநுமானிக்கலாம். நமது பரிசுத்தம் யாவையும் அழிப்பதற்கு இது பலிதமான வழியாயிருப்பதுமன்றி சுருக்கமான வழியாயுமிருக்கிறது. ஏனென்றால் இது நடக்கேறும்பொழுது நற்குணத்தையாவது, கிருபையையாவது, பரிசுத்தாவியின் கனியையாவது கெடுத்துப்போடுகிறதுமல்லாமல் தேவனுடைய கிரியை யாவக்கும் ஆதாரமாயிருக்கிற மூலவேரையும் அடியோடு பிடுங்கியும் போடுகிறது.

9. ஆகையால் இவ்விஷயத்தில் இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதி தன் முழுப்பலத்தையும் உபயோகிக்கிறது ஆச்சரியமல்ல. இதை நாம் அநுபவத்தில் காணலாம். இந்தச் சோதனையானது, நீதியினிமித்தம் பசிதாகமுள்ளவர்களிடத்தில்தான் அடிக்கடி பலமாய் உண்டாகிறது. அந்தச் சோதனையின் கொடுமையை வாயினாற் சொல்லுவது அரிது. ஒரு பக்கத்தில் திருக்குள்ள தங்கள் இருதயத்தின் அசுத்தத்தையும், மறுபக்கத்தில் கிறிஸ்து இயேசுவில் தாங்கள் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்புக்குரிய மாசில்லாத பரிசுத்தத்தையும், ஒருபுறத்தில் தங்கள் இருதயக் கறையினால் தேவனுக்கு முற்றிலும் அந்நியராயிருப்பதையும், மறுபுறத்தில் தேவ மகிமைக்காகத் தாங்கள் புதிப்பிக்கப்பட்டு அடையவேண்டிய பரிசுத்தரின் சாயலையும், அவர்கள் துலாம்பரமாய்ப் பார்க்கும்போது, அநேகந்தரம் அவர்களுக்குள் தைரியமற்றுப் போகிறதுண்டு. அப்போது இது, 'தேவனால் கூடாது' என்று சத்தமிட்டு அலறக்கூடியவர்கள்



போலாகிறார்கள். அப்போது தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் விட்டுவிட ஏதுவாயிருக்கிறார்கள். தங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் ஜெயிக்கவும், 'தேவனுடைய சித்தத்தின்படி செய்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப்' பெற்றுக்கொள்ளவும் தங்களுக்கு வேண்டியதாயிருக்கிற இந்த நம்பிக்கையை விட்டுவிடக் கூடியவர்களாகிறார்கள்.

10. அவர்கள் ஆரம்பத்திலேகொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்பார்களேயாகில் இம்மை மறுமைக்குரிய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொள்ளுவது நிச்சயமே என்றாலும் சாத்தான் விரித்திருக்கிற வேறொரு கண்ணியை இதில் பார்க்கலாம். இம்மையிலே நிறைவேறப்போகிற வாக்குத்தத்தத்தின் ஒருபாகம் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனமே. இந்தச் சுயாதீனத்தை ஆவலாய் வாஞ்சித்துக்கொண்டிருக்கும்போது நாம் இனிமேல் வெளிப்படப்போகிற மகிமையைப் பற்றி எண்ணமற்றவர்களாய் இருக்கலாம். நீதியுள்ள நியாயாதிபதி 'தமது பிரசன்னமாகுதலை விரும்புகிற யாவருக்கும்' அந்த மகா நாளிலே அருளுவதாக வாக்குச்செய்திருக்கிற கிரீடத்தைப் பாராதபடி நம்மை அறியாமலே நமது கண்களை நாம் விலக்கிக்கொள்ளலாம். ஒருவேளை பரலோகத்தில் நமக்கு வைக்கப்பட்டிருக்கிற அழியாத அந்தச் சுதந்தரத்தை நோக்காதபடி நமது மனம் சிதைந்து வேறுபக்கம் செல்லக்கூடும். இதுவும் நமதாத்துமாவுக்கு நஷ்டமும் நமது பரிசுத்தத்திற்கு இடையூறுமாகும். ஏனென்றால் நமது இலக்கை மறந்துவிடாமல் 'இனிவரும் பலன்மேல் நோக்கமாய் இருப்பது' நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடுவதற்கு மிகவும் அவசியம். 'அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதைத் தெரிந்துகொண்டு எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணும்படி' பூர்வத்திலுள்ள மோசேயைத் தைரியப்படுத்தினது இதுவே. அவனைப் பார்க்கிலும் பெரியவராகிய நமதாண்டவரைக் குறித்தும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறதைப் பாருங்கள். 'அவர் தமக்குமுன்

வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.' இதினால் தேவன் ஞானமாய் நமது மேல் சுமத்துகிற சிலுவை எதுவோ அதை நாம் சகித்துப் பரிசுத்தத்தின் மூலமாய் மகிமையில் பங்கு அடையும்படி நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் சந்தோஷத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பது நமக்கு அதிக அவசியமென்று அறிகிறோம்.

11. ஆனால் இவையும் இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிற அந்த மகிமையான சுயாதீனத்தையும் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கையில் தேவனுடைய பிள்ளைகளை விழத்தட்டும்படி நமது பரம எதிரியாகிய பிசாசானவன் வைத்திருக்கிற வேறொரு கண்ணியில் நாம் விழுந்துவிடக்கூடியது. அதென்ன? நாளையத்தினத்துக்காக மிதமிஞ்சிக் கவலைப்பட்டு இன்றைக்குச் செய்யவேண்டியதை அலட்சியம் பண்ணக்கூடும். பூரண அன்பை எதிர்பார்த்து நமதுள்ளத்தில் இப்போதிருக்கிற அன்பை உபயோகியாமல் விட்டுவிடக்கூடும். இவ்வித சோதனையினால் அதிகமாய்த் துன்பப்பட்டவர்கள் பலருண்டு. இனிமேல் பெற்றுக்கொள்ளப்போகிறதில்மாத்திரம் அவர்கள் சிந்தை வைத்தபடியால் இதற்குமுன் பெற்றுக்கொண்டவைகளை அவர்கள் மதிக்கவில்லை. இன்னும் ஐந்து தாலந்து பெற்றுக்கொள்ள விரும்புகையில் கையிலுள்ள ஒரு தாலந்தையும் பூமிக்குள் புதைத்துப்போடுகிறார்கள். புதைத்துப்போடாவிடினும் அவர்கள் அதை உபயோகித்திருக்கவேண்டியபிரகாரம் தேவனுடைய மகிமைக்கும் தங்கள் சொந்த ஆத்தும நன்மைக்கும் ஏதுவாக உபயோகிக்கவில்லை.

12. இவ்வண்ணமாய்த் தேவனுக்கும் மனிதனுக்கும் சத்துருவாகிய அந்தத் தந்திரவாதி சுவிசேஷத்தைச் சுவிசேஷத்துக்கு விரோதமாய்ப் பிரித்துக் காட்டி, அதின் ஒரு பாகத்தைக்கொண்டு வேறொரு பாகத்தை மடக்கும்படி செய்வதினால் தேவனுடைய ஆலோசனையை அவமாக்க முயற்சி செய்கிறான். எப்படியெனில், தேவன் நமதாத்துமாவில் தமது கிரியையைப் பூரணப்படுத்தப் போகிறார் என்று நாம் எதிர்பார்ப்பதினால் அவர் இப்போது நடப்பித்திருக்கும் ஆரம்பக்



கிரியையை அழித்துப்போடுகிறான். இவைகளைச் செய்யும்பொருட்டு என்னென்ன விதங்களைக் கையாடுகிறானென்று இம்மட்டும் பார்த்திருக்கிறோம். இதைவிட அவன் நேர் நேராகவே செய்யும் தீமைகள் உண்டு. நமக்குள் இருக்கும் நம்பிக்கையைக் குறைத்து, நாம் நம்பும் சமயமே நமக்குள் துர்க்குணங்களைப் பிறப்பிக்கும் சமயம் ஆகும்படி மாற்றுகிறான்.

13. எப்படியென்றால், மேன்மையும் அருமையுமான தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மேல் நமக்குத் திடம் உண்டாகி, மானானது நீரோடைகளின்மேல் வாஞ்சித்துக் கதறுமாப்போல், நாம் பூரணராகும்படி வாஞ்சித்துக் கதறி 'அவருடைய இரதம் வராமல் பிந்திப் போனதென்ன?' என்று ஆவலாய் ஏங்கி நிற்கும் காலத்தில் நமது பரம சத்துரு இதுவே தனக்கு நல்ல சமயம் என்று நினைத்து, நாம் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி நம்மை ஏவுகிறான். நமது ஆண்டவருடைய வருகை தாமதமாயிருப்பதினிமித்தம் நாம் எச்சரிக்கையா யிராதவேளையில், இதைச் செய்வதற்கென்று தன் புத்தி சக்தி யாவையும் உபயோகிக்கிறான். நம்மில் ஆத்திரமும் பொறுமைத் தாழ்ச்சியும் உண்டாகும்படி செய்வான். பரமஅழைப்பின் பந்தயப் பொருளை முன்னமே பெற்றுக்கொண்ட விசுவாசிகள்பேரில் ஒருவேளை பொறாமை யுண்டாகும்படியும் பிரயத்தனிப்பான். இத்தன்மையான கெட்ட குணங்களுக்கு நாம் இடங்கொடுப்போமாகில் நாம் கட்ட விரும்புகிறதை நாமே பிடுங்கி யெறிகிறோம் என்று அவன் அறிவான். இவ்விதமாய்ப் பூரணர் ஆகும்படி நாடுவதினால் முன்னிலும் அசுத்தராகிறோம். மேலும் நமது முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிக கேடுள்ளதாகக்கூடும். இவ்விதமாய் அப்போஸ்தலன் 'அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்' என்று சொல்லியிருக்கிற பயங்கரமான வார்த்தைகளுக்கு நாமும் உட்படக்கூடியதே.

14. இதினால் பிசாசானவன் வேறொரு விதமாயும் கெடுதி செய்யப் பார்க்கிறான். அதென்னவெனில், நல்மார்க்கத்தைக்குறித்து துர்ச்

செய்தி பரப்புகிறான். ஒரு உபதேசத்தை அதின் இயற்கையான தன்மைப்படி பார்க்கிறதற்கும், அதைத் தப்பாய் உபயோகித்துப் பார்க்கிறதற்கும் வித்தியாசமுண்டு. இவ்வித்தியாசத்தை அறிந்துகொள்ளக்கூடியவர்கள் வெகு சொற்பமென்றும் இதை அறிய மனமற்றவர்களோ ஏராளம் என்றும் பிசாசானவனுக்குத் தெரியும். ஆகையால் பூரண பரிசுத்தத்தைப்பற்றிய உபதேசத்திலும் இவ்விரண்டு விஷயங்களையும் ஒன்றோடொன்று குழப்புகிறான். எச்சரிக்கையாயிராத மனிதர், தேவனுடைய மகிமையான வாக்குகளைப்பற்றித் தப்பான எண்ணங்கொள்ளட்டும் என்பதே அவன் இப்படிச் செய்வதின் நோக்கம். இதில் அவன் அடிக்கடி சித்தியடைகிறதுண்டு. அடிக்கடி மாத்திரமல்ல, பெரும்பாலும், சொல்லவேண்டுமானால் எவ்விடத்திலும் சித்திபெறுகிறான். எப்படியெனில், ஒருவன் இவ்வுபதேசத்தைத் தப்பாய் உபயோகிப்பதினால் உண்டாகிற தீமையான பலன்களில் ஒன்றைக் கண்டு, இதற்குக் காரணம் இவ்வுபதேசமேயென்று தடையின்றி அநுமானிப்பான் அல்லவா? 'இவ்வித உபதேசம் கொடுக்கக்கூடிய இயற்கையான கனிகள் இவைகளே' என்று தீர்க்காலோசனையின்றிச் சொல்லுகிறவர்கள் அநேகர் அல்லவா? ஆனால் அப்படிச் சொல்லுவது சரியல்ல. இத்தீமையான கனிகள், அருமையும் பெருமையுமான ஒரு சத்தியத்தைத் தப்பாய் உபயோகிப்பதினால் தற்செயலாய் உண்டாகக்கூடியவைகளேயன்றி, இவ்வுபதேசத்தினாலுண்டாகிறவைகள் அல்ல. இந்த உபதேசத்தையாவது வேறெந்த வேதோபதேசத்தையாவது தகுதியானபிரகாரம் கைக்கொள்ளாததினாலே அது கெடாது. மனுஷன் தன் உண்மைத் தாழ்ச்சியினால் சத்தியமார்க்கத்தைப் புரட்டுவதினிமித்தம் தேவனுடைய வாக்குத்தத்தம் விருதாவாய்ப் போகாது. தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக! தேவனுடைய வசனமே நிலைநிற்கும். 'வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.' அப்படியானால் 'சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாதிருப்போமாக!' இனிமேல் நாம் சிந்திப்பதாகச் சொன்ன இரண்டாவது விஷயத்தைப் பார்ப்போம். இந்தப் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை எவ்வாறு எதிர்த்துத் தடுக்கலாம் என்றும் நம்மைக் கெடுக்கும்படி அவன் செய்யும் உபாயத்திற்கு இணங்



காமல் நாம் சோதனையினால் ஆத்மதேர்ச்சியடைவதற்கு எவ்வாறு உபயோகிப்பது என்றும் கவனிப்போமாக.

II. 1. முதலாவது, நீ பாவசுபாவியாய் இருப்பதினாலும் பூரண பரிசுத்தமின்றித் தேவனைத் தரிசிக்கக் கூடாதாகையினாலும் கர்த்தருக்குள் உனக்கிருக்கும் சந்தோஷத்தைக் குறைக்கச் சாத்தான் பிரயாசப்படுவானாகில் அவன் எய்த இந்த அம்பைத் திருப்பவும் அவன் பேரிலேயே எய்யலாம். எப்படியெனில் உன் அசுத்த நிலைமையை எவ்வளவுக்கு உணருகிறாயோ அவ்வளவுக்குத் தேவ ஒத்தாசையை முன்னிட்டு அதை அவித்துப்போடலாமென்றும் நீ உறுதியாய் நம்பிச் சந்தோஷப்படவேண்டியது. இந்த நம்பிக்கையில் நீ நிலைத்திருப்பாயாகில், உன்னிலிருக்கிற தீய குணத்தை நீ முழுப்பகையாய்ப் பகைத்து அது உன்னிலுள்ள சந்தோஷத்தைக் குறைப்பதற்கல்ல, அந்தச் சந்தோஷத்தை வளரச்செய்வதற்கு ஏதுவாயிருக்கும் என்று அறிவாய். இன்னின்ன தீய குணம் அவர் சமுகத்துக்கு முன்பாக அழிந்துபோகும் என்றும், மெழுகு அக்கினிக்குமுன் உருகுவதுபோல இது அவருக்குமுன் உருகி அழிந்துபோகும் என்றும் நீ சொல்லுவாய். உன் ஆத்துமாவில் இன்னும் உண்டாகவேண்டிய மாறுதல் எவ்வளவுக்கு அதிகமாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு, இந்த நம்பிக்கையினாலே நீ கர்த்தருக்குள் ஜெயமடைந்து உன் இரட்சகராகிய தேவனில் களிகூரலாம். அவரே இதுவரையில் உனக்குப் பெரிய காரியங்களைச் செய்தவர். இதைப்பார்க்கிலும் பெரிய காரியங்களைச் செய்கிறவரும் அவரே.

2. இரண்டாவது, 'தேவன் பரிசுத்தர், நீயோ அசுத்தன்; நீ பரிசுத்தத்திற்கு எட்டாத தூரத்தில் நிற்கிறாய்; அதினால் நீ தேவனைத் தரிசிக்க முடியாது; அப்படியிருக்க நீ தேவதயவைப் பெற்றுக்கொள்வதெப்படி? நீ நீதிமானாக்கப்பட்டிருப்பதாக எப்படி எண்ணலாம்' என்று சொல்லி உன் சமாதானத்தை எவ்வளவுக்குப் பலமாய்க் கெடுக்க முயற்சி செய்கிறானோ அவ்வளவுக்கு நீ உறுதியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டிய உதவி ஒன்றுண்டு. அதென்னவெனில், 'நான் செய்த நீதியினிமித்தம் நான் அவருக்குள் இருக்கிறவனாகக் காணப்படவில்லை. நான் சுயநீதியை உடையவனாயிராமல் கிறிஸ்துவைப்

பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாய்ப் பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறேன்' என்பதே தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதற்கு முழுவதுமாயாவது கொஞ்சமாயாவது நமது நீதி காரணமாயிருக்கிறதில்லை. இந்தச் சத்தியத்தை உன் கழுத்திலே பூண்டு உன் இருதயமாகிய பலகையில் எழுதிவை. 'இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்' என்பது உன் கையில் அஸ்தகடகமாகவும் உன் கண்களின் நடுவில் ஞாபகக்குறியாகவும் இருக்கக்கடவது. 'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்' என்னும் அருமையான சத்தியத்தை அதிகமதிகமாய் மதித்து, மேன்மைப்படுத்து. 'தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்புகூர்ந்ததில்' தேவன் காண்பித்திருக்கிற இலவசமான கிருபையை நீ அதிகமாய் வியந்து மதிக்கவேண்டும். அப்படியானால் ஒருபுறத்தில் உன்னிலுள்ள பாவத்தன்மையைப் பற்றிய உணர்வும் மறுபுறத்தில் நீ எதிர்பார்க்கிற பரிசுத்தத்தைப் பற்றிய உணர்வுமாகிய இவ்விரண்டும் உன் சமாதானத்தை ஸ்திரப்படுத்தும். வியாதியோ துன்பமோ மரணமோ உனக்குள் எவ்வித சந்தேகத்தையும் பயத்தையும் உண்டுபண்ணமாட்டாது. ஒரு நாளோ ஒரு மணியோ ஒரு நிமிஷமோ, அது கர்த்தருக்கு ஆயிரம் வருஷம்போலிருக்கிறதென்று அறிவாயே. உன் ஆத்துமாவில் இன்னும் நிறைவேற்றப்படாதிருப்பதை நிறைவேற்றக் காலமில்லையே என்று அவர் கஷ்டப்படுகிறவரல்ல. அவர் குறித்திருக்கும் காலமே உத்தமகாலம். ஆகையால் நீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் உன் விண்ணப்பங்களைப் பயத்தோடும் சந்தேகத்தோடுமல்ல ஸ்தோத்திரத்தோடே தேவனுக்குத் தெரியப்படுத்து, அவர் உனக்கு நன்மையை வழங்காதிரார். இது நிச்சயமாய் முன்னமே உனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

3. மூன்றாவது, உன் விசுவாசமாகிய கேடகத்தை, அதாவது தேவனுடைய அன்பைப்பற்றிய உன் நம்பிக்கையை விட்டுவிடத்தக்கதான சோதனை உண்டாகும்போது, நீ முன்னமே அடைந்



திருப்பது எதுவோ அதை விட்டுவிடாமல் பற்றிக்கொள்ளும்படி எச்சரிக்கையாயிரு. உனக்குண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி ஜாக்கிரதையாயிரு. நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து எனக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நான் இப்பொழுது பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்னும் சத்தியங்களை ஒருபோதும் நெகிழவிடாதே. இதுவே உன் மகிமையும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பதாக. ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி கவனமாயிரு. 'என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பாரென்றும் அறிந்து, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்குண்டாயிருக்கிறது' என்னும் சத்தியத்தை விடாமல் பிடித்துக்கொள். இவ்விதமாய், விசுவாசத்தினால் சமாதானமும் சந்தோஷமும் நிறைந்தவனாகிறாய். விசுவாசத்தினாலாகும் சமாதானமும் சந்தோஷமுமுள்ளவனாய், உன்னைச் சிருஷ்டித்தவரின் சாயலாக உன் ஆத்துமா முழுவதும் புதிப்பிக்கப்படும்பொருட்டு ஆவலாய் முன்செல்லக்கடவாய். இதற்கிடையில் நீ அழைக்கப்பட்டிருக்கிற மேலான அழைப்பின் பந்தயப்பொருளை சாத்தான் உனக்குக் காண்பிக்கிறபிரகாரம் பயங்கர ரூபமுள்ளதாய்ப் பாராமல் அதற்குரிய யதார்த்தமான அழகோடு பார்க்கும்படி தேவனை நோக்கி ஓயாமல் மன்றாடு. அந்தப் பந்தயப்பொருளை நீ நோக்கும்போது, 'மோட்சம் சேர அது கட்டாயமாய் வேண்டியது, மற்றப்படி நான் நரகம் சேருவேன்' என்றெண்ணாமல் 'நான் அந்தப் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொண்டு, மோட்சம் சேருவேன்' என்றெண்ணு. தேவன் தமது கிருபாகளஞ்சியத்தில் சேர்த்து வைத்திருக்கிறவைகளில் எல்லாம் இதுவே அதிகமாய் வாஞ்சிக்கத்தக்க ஈவு என்று நினைத்துக்கொள். இவ்விதமாய் இதின் யதார்த்த மேன்மையைக் கண்டுகொள்வாயாகில் இதின்மேல் உனக்கு அதிகமதிகமாய்ப் பசி உண்டாகும்; தேவன்பேரிலும் அவருடைய மகிமையான சாயலின்பேரிலும் உன் முழு ஆத்துமாவுக்கும் தாகம் உண்டாகும். தேவகிருபையினால் இதைப் பெற்றுக்கொள்ளுவதான நம்பிக்கையும் ஆறுதலும் கிடைக்குமாகில், எவ்வித மனச்

சோர்புமின்றி அதைப் பெற்றுக்கொள்ளும்வரையில் நின்றுபோகாமல் இருப்பாய்.

4. மேலும் இந்த விசுவாசத்தின் வல்லமையினால் இனிவரும் மகிமையின்மேல் நோக்கமாயிரு. இனிமேல் நீ எதிர்பார்க்கவேண்டியது இதல்லவோ? பாவமன்னிப்பு பரிசுத்தம் மோட்சம் ஆகிய இம்மூன்றையும் தேவன் ஆதிமுதல் ஒன்றாய் இணைத்திருக்கிறார். அவர் இணைத்ததை மனுஷன் பிரிப்பானேன்? இதைக்குறித்து எச்சரிக்கையாயிரு. இந்தப் பொற்சங்கிலியிலுள்ள ஒரு கண்ணியாவது தெறித்துப்போகாதிருப்பதாக. தேவன் கிறிஸ்துவினிமித்தம் என் பாவங்களை மன்னித்திருக்கிறார். அவர் தமது சாயலின்படி என்னைப் புதிப்பித்துக்கொண்டுவருகிறார். சீக்கிரத்தில் அவர் என்னைத் தமக்குத் தகுந்தவனாக்கித் தமது சமுகத்துக்குமுன் கொண்டுபோவார். அவருடைய குமாரனின் திரு இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டிருக்கிற நான், அவருடைய பரிசுத்தாவியினால் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டு ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய புது எருசலேமுக்குச் சீக்கிரமாய் எடுத்துக்கொள்ளப்படுவேன். இன்னும் கொஞ்சக்காலந்தான், அப்புறம் 'முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும் யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும்' போவேன். நிழலாட்டமான இப்பிரபஞ்சம் யாவும் சீக்கிரமாய்ப் பறந்துபோக நித்தியஜீவன் ஆரம்பிக்கும். 'தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிற ஜீவநதியில் இன்னும் கொஞ்சக்காலத்தில் பானம் பண்ணுவேன். அங்கே அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்கள் நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலம் இராது. விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டியதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.'

5. நீ இவ்வாறு தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிபார்த்ததுண்டானால், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்திற்கு நீ இன்னும் தகுதியுள்ளவனாகாததினி



மித்தம் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கமாட்டாய். பூரணமாய் விடுதலையாக்கப்படாததினிமித்தம் மனவருத்தமடையாமல் இம்மட்டும் தேவன் உன்னை விடுதலையாக்கியிருக்கிறதற்காக அவரை ஸ்தோத்திரிப்பாய். இம்மட்டும் உனக்குச் செய்த நன்மைகளுக்காகத் தேவனை மகிமைப்படுத்தி இனிமேலும் அவர் உன்னில் செய்யப்போகிற நன்மைக்கு இது அச்சாரம் என்று நினைத்துக்கொள். இன்னும் நீ புதிதாக்கப்படவில்லை என்று அவர்பேரில் குறைவு சொல்லாமல், புதிதாக்கப்படப்போகிறதினாலும் நீ விசுவாசியானபோது இரட்சிப்பு உனக்குச் சமீபமாயிருந்ததைப்பார்க்கிலும் இப்பொழுது அதிக சமீபமாயிருப்பதினாலும் அவரை நீ ஸ்தோத்திரிக்கவேண்டியது. அந்தக் காலம் இன்னும் வராததினால் உன் மனதை அனாவசியமாய் வருத்தப்படுத்திக்கொள்ளாமல் 'அந்தக் காலம் வரும், தாமதியாது' என்று அறிந்து அந்தக் காலத்திற்காகப் பொறுமையோடு அமைதியாய்க் காத்திருப்பாய். ஆகவே, உன்னில் இப்பொழுதிருக்கிற பாவப்பாரம் எப்பொழுதும் இருக்கமாட்டாதாகையால் நீ இதை உற்சாகமாய்ச் சகித்துக்கொள்ளலாம். இன்னும் சிலகாலத்துக்குள் அது உன்னை விட்டுச் சமூலமாய் நீங்கிப்போகும். கர்த்தருடைய வேளைக்காகக் காத்திரு, திடமனதாயிரு; 'அவர் உன் இருதயத்தைத் தேற்றுவார்.' கர்த்தர்பேரில் நம்பிக்கையுள்ளவனாயிரு.

6. தேவன் ஒருவரே இருதயத்தை ஆராய்ந்தறிகிறவர். ஆனால் மனுஷர் அறியக்கூடியபிரகாரம் பார்க்கையில் யாராவது முன்னமே நம்பிக்கையில் பங்குள்ளவர்களும் அன்பில் பூரணப்பட்டவர்களுமாயிருக்கக் காண்பாயானால் அவர்களுக்கு அருளப்பட்ட தேவகிருபையினிமித்தம் பொறாமைப்படாதே. அது உன் இருதயத்தைச் சந்தோஷப்படுத்தி உனக்கு ஆறுதல் உண்டுபண்ணட்டும். அவர்கள்நிமித்தம் தேவனை மகிமைப்படுத்து. 'ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும்கூடச் சந்தோஷப்படும்.' அவர்களைக்குறித்துப் பொறாமையும் பொல்லாத சமுசயமும் கொள்ளாமல் அவர்கள்நிமித்தம் உண்டாகும் ஆறுதலுக்காக ஸ்தோத்திரி. தேவன் தமது வாக்குகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர் என்பதற்கு வேறொரு அத்தாட்சி கிடைத்ததற்காகச் சந்தோஷப்படு. அப்படிச் சந்தோஷப்படுவதோடு கிறிஸ்து இயேசுவினால் நீ எதற்காகப்

பிடிக்கப்பட்டிருக்கிறாயோ அதைப் பிடித்துக்கொள்ளும்படி அதிக மதிகமாய் ஜாக்கிரதைப்படு.

7. இதற்காகக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள். இந்த நிமிஷத்தையே ஆதாயப்படுத்து. கிருபையில் வளர்ந்து நன்மை செய்யத்தக்க சமயத்தை விட்டுவிடாதே. நாளையத்தினத்தில் அதிக கிருபையைப் பெற்றுக்கொள்ளலாமென்கிற எண்ணத்தினால் இன்றையத்தினத்தை அலட்சியம் செய்யாதே. இப்பொழுது உன்னிடத்தில் ஒரு தாலந்திருக்கிறது. இன்னும் ஐந்து தாலந்து கிடைக்கும்படி எதிர் பார்ப்பாயாகில் கையிலுள்ள ஒன்றை விர்த்திசெய். எவ்வளவு அதிகமாய் இனிமேல் பெற்றுக்கொள்ள எதிர் பார்க்கிறாயோ, அவ்வளவு அதிகமாய் இப்பொழுது தேவனுக்கென்று உழைக்கவேண்டும். அந்தந்த நாளுக்கு அதினதின் கிருபை போதும்: தேவன் இப்பொழுது தமது கிருபைகளை உன்மேல் அருள்மாரியாகப் பொழிந்திருக்கிறார். ஆகையால் இப்பொழுது பெற்றுவருகிற தேவகிருபைக்கு உன்னை உண்மையுள்ள உக்கிராணக்காரனாக விளங்கப்பண்ணு. நாளையத்தினம் எப்படியிருந்தாலுஞ்சரி, சுத்தமும் பூரணமுமான அந்த அன்பு உன் உள்ளத்தில் உண்டாகும்வரையில் 'விசுவாசத்தோடே தைரியத்தையும், இச்சையடக்கத்தையும், பொறுமையையும், சகோதர சிநேகத்தையும்' தேவ பயத்தையும் சேர்க்கும்படி இன்று மகா சுறுசுறுப்போடு பிரயாசப்படு. இவைகள் இப்பொழுதே உன்னிடத்தில் உண்டாயிருந்து பெருகட்டும். நீ இப்போது சோம்பலாயும் இருக்கக்கூடாது; கனியற்றவனாயும் இருக்கக் கூடாது. அப்படியானால் 'நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உனக்கு அளிக்கப்படும்.'

8. கடைசியாக, அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நானும் பரிசுத்தனாயிருக்கலாம் என்கிற இந்தச் சிறந்த நம்பிக்கையை இதற்குமுன் அசட்டைசெய்திருப்பாயானால் அதினிமித்தம் அந்த நம்பிக்கையை விட்டுவிடாதே. அதை முன்போல் தகாதவிதமாய் உபயோகியாமல் தகுதியாய் உபயோகி. தேவனுக்கு மகிமையும் உன் சொந்த ஆத்துமாவுக்கு நன்மையும் உண்டாகும்படி உபயோகி. விசுவாசத்தில் உறுதியும் ஆவியில் அமைதலும் நம்பிக்கையில் நிச்சயமும் உள்ளவனாய் தேவன் செய்திருக்கிற கிருபைக்காக எப்பொழுதும் களி



கூர்ந்து பூரணமாகும்படி முன்செல்வாயாக. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் தினமும் வளர்ந்து, பெலத்தின்மேல் பெலன்அடைந்து முன் பெற்றுக்கொண்டதும் இனிமேல் பெற்றுக்கொள்ளப்போகிறதுமான ஆசீர்வாதங்களுக்காகத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்து. மேலும் நீ பூரணஅன்பு அடைந்து மகிமையில் பிரவேசிக்கும்வரையில் 'இயேசுவை நோக்கி' உனக்கு நியமித்திருக்கிற பந்தய ஓட்டத்தில் அமைதலோடும் பொறுமையோடும் ஓடுவாயாக.

## வினாக்கள்.

1. சாத்தானின் தந்திரங்களில் பரிசுத்தத்திற்கு அதிக தடையாயிருக்கிறவைகள் எவை?

நமதாத்துமாவில் உண்டாயிருக்கிற தேவனுடைய ஆரம்பக் கிரியையை அழித்துப்போடவும் இதிலும் மேலான கிரியையை நாம் எதிர்பார்ப்பதினால் இந்த ஆரம்பக் கிரியையை வளராதபடி தடுக்கவும் சாத்தான் பிரயத்தனப்படுகிறான்.

பிரிவு. I. 1, 2. பார்க்க.

2. விசுவாசியின் சமாதானத்தைக் கெடுக்கும்படி இதை எவ்வாறு கையாடுகிறான்?

மரமானது அதின் கனிகளினால் அறியப்படுமே என்னும் பலவித கேள்வி கேட்டு நம்மை ஓயாமல் அலட்டிக்கொண்டே யிருப்பான்.

பிரிவு. I. 3. பார்க்க.

3. இச்சோதனை நேரிடுகிற விசேஷித்த சமயமெப்போ?

வியாதி துன்பம் நேரிடுங் காலங்களில்.

பிரிவு. I. 4. பார்க்க.

4. சாத்தானின் தந்திரங்களிலெல்லாம் பெரியது எது?

உன் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பங்கப்படுத்தினது போதுமென்றிராமல் உன்னிலுள்ள நீதியையும் கெடுத்துப்போடும்படியாக முயற்சி செய்வான்.

பிரிவு. I. 5, 6. பார்க்க.

5. சந்தோஷம் பரிசுத்தத்தை எவ்வாறு விர்த்தியடையச் செய்கிறது?

பிரிவு. I. 6. பார்க்க.

6. சமாதானம் பரிசுத்தத்தை விர்த்தியடையச் செய்வது எவ்வாறு?

பிரிவு. I. 6. பார்க்க.

7. அடிமைத்தனத்தின் பயத்தினால் உண்டாகும் தீமை என்ன?

பிள்ளையடைவான அன்புள்ள பயத்தைத்தவிர மற்றெவ்வித பயமும் நமதாத்துமாவைக் கடினப்படுத்தி அது உணர்வற்றுப்போகும்படி செய்யும்.

பிரிவு. I. 7. பார்க்க.

8. இதற்கப்புறம் கிறிஸ்தவனுக்குரிய எந்தக் கிரியையைக் குலைக்கும்படி சாத்தான் பிரயத்தனிக்கிறான்?

அவன் விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடாவிட்டாலும் அதைப் பெலவீனப்படுத்தப் பார்க்கிறான்.

பிரிவு. I. 8. பார்க்க.

9. விசுவாசிக்குரிய எந்தச் சிலாக்கியத்தை இடித்துப்போடும்படி அப்புறம் முயற்சி செய்கிறான்?

'இனிமேல் வெளிப்படப்போகிற மகிமையைப்பற்றிய நம்பிக்கையை.'

பிரிவு. I. 10. பார்க்க.

10. விசுவாசியை அகப்படுத்தும்படி சாத்தான் விரிக்கிற வேறொரு கண்ணி எது?

'பூரண அன்பை எதிர்பார்த்து நமதுள்ளத்தில் இப்போதிருக்கிற அன்பை உபயோகியாமல் விட்டுவிடக்கூடும்.'

பிரிவு. I. 11. பார்க்க.

11. இக்கண்ணியில் நம்மை அகப்படுத்துவதற்குத் தகுந்த சமயம் எது?



'மேன்மையும் அருமையுமான தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மேல் நமக்குத் தாகம் உண்டாகும் சமயமே.'

பிரிவு. I. 13. பார்க்க.

12. இந்தப் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை எப்படி எதிர்த்துத் தடுக்கலாம்?

பிரிவு. II. 1, 2. பார்க்க.

13. பூரண கிறிஸ்தவன் ஆகுவதைப்பற்றி ஒருவன் அறிந்துகொள்ள வேண்டியதென்ன?

அந்தப் பந்தயப்பொருளை நீ நோக்கும்போது, 'மோட்சம் சேர அது கட்டாயமாய் வேண்டியது. மற்றப்படி நான் நரகம் சேருவேன்' என்றெண்ணாமல் நான் அதைப் பெற்றுக்கொண்டு 'மோட்சம் சேருவேன்' என்றெண்ணு. பூரணமாய் விடுதலையாக்கப்படாததினிமித்தம் மனவருத்தமடையாமல் இம்மட்டும் தேவன் உன்னை விடுதலையாக்கியிருக்கிறதற்காக அவரை ஸ்தோத்திரிப்பாய்.

CHRISTIAN LITERATURE SOCIETY

என்னும்

கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தார்

விற்பனை செய்யும் புஸ்தகங்கள்.

# வேதியர் விளக்கு.

CHRISTIAN LITERATURE SOCIETY

The **Tamil Preacher's Magazine** is a Monthly Magazine edited by the Rev. **A. C. Clayton.**

It contains Bible Readings, Biblical Notes, Sermon Illustrations, Sermon Outlines, and other articles of special interest to Tamil Preachers. There can be no question as to the help and stimulus that it brings to its readers, especially to Preachers, Catechists, Evangelists, and Teachers in charge of congregations in far away villages and hamlets. Many of them are very lonely and nearly all need help in Biblical study and thinking.

The **Tamil Preacher's Magazine** is very cheap, only half an anna a month, or six annas a year, three cents a month and thirty-six cents a year in Ceylon. The postage is of course extra, but as five copies can be sent in one wrapper for half an anna (three cents) the postage need not be a heavy item if a number of copies are taken at one centre.

The circulation of the **Tamil Preacher's Magazine** is already good, but there are many Tamil Mission stations where it is not taken. Perhaps this reminder of its existence will gain some new subscribers.

Orders and remittances may be sent to the Business Manager of the C.L.S., *P. O. Box 3, Madras.*

# வேதியர் விளக்கு.

## இது ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

சங்: A. C. கிலேத்தன் இதின் பத்திராதிபர்.

இதில் வேத வியாக்கியானங்கள், பிரசங்க திருஷ்டாந்தங்கள், பிரசங்கக் குறிப்புகள் ஆகிய இவைகளும், பிரசங்கிமாருக்கு அதிக பிரயோஜனமான வேறு விஷயங்களைப் பற்றிய நிபந்தங்களும் எழுதப்படும். இதை வாசிப்போர் விசேஷமாய் அதிக தூரமான சிறு கிராமங்களிலும் பட்டிக்காடுகளிலும் வசிக்கும் பிரசங்கிமார், சுவிசேஷகன்மார், உபாத்திமார் இதிலிருந்து நல் உதவியும் தேர்ச்சியும் அடைவார்கள் என்பதற்கு ஐயமே யில்லை. அவர்களில் அனேகர் தனிமையாய் வேலை செய்கிறார்கள். அவர்கள் யாவரும் வேதத்தைப் படிப்பதற்கும் ஆராய்வதற்கும் இப்படி யோர் உதவி யிருப்பது அத்தியாவசியம்.

இதின் விலை சுருக்கம். மாதம் ஒன்றுக்கு அரை அணா, அல்லது வருஷம் ஒன்றுக்கு ஆறு அணா. இலங்கைக்கு மாதம் ஒன்றுக்கு மூன்று சதம், வருஷம் ஒன்றுக்கு முப்பத்தாறு சதம். இதில் தபால் கூலி உட்படவில்லை. ஆனால் ஒரே யிடத்திலிருக்கும் கையொப்பக்காரர் ஒரே மேல்விலாசத்துக்குத் தருவித்தால் தபாற்கூலி லேசாகும் அதாவது ஆறு பிரதிகளுக்குத் தபாற்கூலி அரை அணா (மூன்று சதம்).

**வேதியர் விளக்கு** எந்த இடத்திலும் யாவருக்கும் நல் ஒளியைக் கொடுக்கக்கூடியது. ஆனால் அது போகாத மிஷன் ஸ்தானங்கள் சில இருக்கின்றன. இப்பத்திரிகை அற்றுப்போகாமல் இன்னும் இருக்கிறது என ஞாபகப்படுத்துகிறதினால் இதுவரையும் வாங்காதவர்கள் இனிமேல் கையொப்பக்காரர் ஆவார்கள் என்று நம்புகிறோம்.

கடிதங்கள், கையொப்பப்பணம் அனுப்புவோர் அவைகளை அடியில் கண்ட மேல்விலாசத்துக்கு அனுப்பவேண்டும்:—

THE BUSINESS MANAGER OF THE C.L.S.,
P. O. BOX 3,
*Madras.*

# BOOKS FOR PREACHERS.

## பிரசங்கிமார் கவனிக்கவேண்டிய புஸ்தகங்கள்.

பிரசங்கிமார் சபையாருக்குப் போதிக்கும்போது, இயேசுகிறிஸ்து இவ்வுலகத்துக்கு வந்து ஜீவித்து அங்குமிங்கும் திரிந்து ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்குத் தமது போதனையை அருளித் தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றிப் போனார் என்பதைச் சபையாரின் மனதில் நிச்சயப்படுத்தவேண்டுமானால் அப்பிரசங்கிமார் முன்னரே இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் இருந்த நிலைமை, அவர் நடமாடின இடங்களிலுள்ள பழக்க வழக்கம் ஆதியவற்றை விபரமாய் அறிந்திருக்கவேண்டும். அல்லது போனால் இயேசுகிறிஸ்துவின் திருநாமம் பதமாய்த் தொனிப்பதுபோல் இருக்கலாம். ஆதலால், அவருடைய நிலைமை ஆதியாம் நடபடிகளைக்குறித்து வேத சாஸ்திரிகள் அரும்பிரயாசை யெடுத்து எழுதின புஸ்தகங்களை வாசிப்பது மிகுந்த உபயோகமாயிருக்கும். 0

சில வருஷங்களுக்கு முன்னே கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தார் (*Christian Literature Society*) கனம்: பிடென்டிறிக் அம்மாள் (Mrs. Pittendrigh) அவர்கள் மொழிபெயர்த்த

'JESUS THE CARPENTER OF NAZARETH'

என்னும் பெயருள்ள மூன்று புஸ்தகங்கள் பிரசுரஞ் செய்தார்கள். இந்த மூன்று புஸ்தகங்களும் என்னவென்றால்:

1. இயேசுவின் இளமைப் பருவம். (85 பக்கம்).
2. இயேசு சந்தித்தவர்களில் சிலர். (117 பக்கம்).
3. இயேசுவின் ஜீவிய விருத்தாந்த சம்பவங்கள். (237 பக்கம்).

இவை ஒவ்வொன்றின் விலை, அணா 2.

அங்கிலேய பாஷையில் இப்புஸ்தகங்களை எழுதின ஆக்கியோனின் நோக்கம் என்னவென்றால்: இவைகளைப் படிக்கிறவர்கள் இயேசு தங்கியிருந்த வீட்டையும், அவர் கைத்தொழில் செய்த சாலை

யையும், அவர் நடந்த தெருக்களையும், அவர் போன ஊர்களையும், அவர் ஏறின படவுகளையும், அவர் கடலோரத்தில் சந்தித்த செம்படவர்களையும், அவர் உட்பிரவேசித்த தேவாலயத்தையும், அவருடைய சத்துருக்களையும், கண்ணாரக் கண்டதுபோலத் துலாம்பரமாய் அறிந்துகொள்ளவேண்டும் என்பதே. தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்கள், விசேஷமாய்ப் பிரசங்கிமார், சுவிசேஷகர்கள், அந்த ஆக்கியோனின் நோக்கத்தைக்கொண்டு தங்களுக்குப் பிரயோஜனமாய் முடியுமாறு இப்புஸ்தகங்களை வாங்கி வாசிப்பார்கள் என்பது இவைகளைத் தமிழில் மொழிபெயர்த்த அம்மாளின் நம்பிக்கை.

சென்ற வருஷக் கடைசியில் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தார் சங்: *A. C.* கிலேத்தன் இயற்றின

'JESUS CHRIST AND HIS DISCIPLES.'

'இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும்'

என்னும் புஸ்தகம் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

இதில் நாற்பத்தெட்டு அதிகாரங்கள் உண்டு. இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஆங்காங்கு செய்த நன்மைகளும் சொன்ன போதனைகளும் இதை வாசிப்போரின் மனதில் நன்கு பதியுமாறு இதின் ஒவ்வொரு அதிகாரமும் திருஷ்டாந்த ரூபமாயும், இதின் நடை யாவரும் உணர்ந்துகொள்ளத்தக்க வெளிப்படையாயும் எழுதியிருக்கின்றன.

இதில் வேத சாஸ்திரத்தை யாராய்ந்தறிந்த அனேக வித்துவான்களின் ஞான போதனை அடங்கியிருக்கிறது.

விலை, அணா 3.

மேற்சொன்ன நோக்கத்தோடு எழுதிய புஸ்தகங்கள் இங்கிலீஷில் இருந்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஜீவிய விருத்தாந்தம் முதலியவற்றை நாம் லேசாயும் பிரியமாயும் படிக்கத்தக்க புஸ்தகங்கள் தமிழில் இவைகளைத்தவிர வேறே யிருக்குமோ தெரியாது. *Edersheim, David Smith* முதலிய வேத சாஸ்திரிகள் எழுதிய பெரி



புஸ்தகங்களைப் படிப்பதற்கு எல்லாருக்கும் சிலாக்கியம் கிடைப்பது அரிதாகையால் இச்சிறு புஸ்தகங்களை வாங்கிக் கருத்தோடு வாசிப்போர்க்கு அதிக பலன் விளையாதிராது.

THE TREASURY OF ILLUSTRATIONS.

## திருஷ்டாந்த பொக்கிஷம்.

பிரசங்கம் செய்யும்போது தாங்கள் சொல்லும் புத்தி போதனைகளைப் பெரியோர்களும் சிறியோர்களும் மனதிற் கிரகித்துக் கொள்ளும்பொருட்டு அவைகளோடு திருஷ்டாந்தங்களைக் கலந்து போதிப்பது மிகுந்த பிரயோஜனமாயிருக்கும் என்பது பிரசங்கிமாருக்குத் தெரிந்த காரியமே. இந்தத் திருஷ்டாந்த பொக்கிஷத்தில் கிரேக்கர், ரோமர், அங்கிலேயர் முதலிய அனேகருடைய இதிகாசங்களிலும், கதைப் புஸ்தகங்களிலும், இன்னும் பல சன்மார்க்க நூல்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட எழுநூறு கதைகளும் உவமைகளும் அடங்கியிருக்கின்றன.

விலை, ரூ. 2.

# The New Tamil Biblical Dictionary of the Madras Religious Tract and Book Society

BY THE

REV. A. C. CLAYTON

## A New Work

IT is difficult to define precisely what the new *Tamil Bible Dictionary* will contain. The Editor can only say that the purpose of the new book will be to give accurate modern information on all Biblical topics, with sufficiently full treatment to enable the Tamil Bible student to understand his Tamil Bible.

In the past twenty years the Code of King Hammurabi has been discovered; papyri and ostraca found in hundreds in the dust heaps of Egypt have verified the living character of the Greek of the New Testament; the great Oxford *Hebrew Lexicon* of Brown, Driver, and Briggs, and the *Dictionary of the Bible*, edited by Hastings, have been published; and Harnack, Ramsay, George Adam Smith, and a host of other scholars have done some of their best, most illuminating, and most constructive work.

The *Tamil Bible Dictionary* will attempt to put the Tamil reader abreast of the most recent knowledge.

## But a Compilation

The *Tamil Bible Dictionary* will be professedly a compilation; but it will be compiled with constant reference to the best authorities, and to the original texts. Whether



the articles are long or short, whether the treatment is detailed or brief, the first purpose will be to give facts plainly and exactly. With regard to subjects affected by the 'Higher Criticism,' the *Tamil Bible Dictionary* is too small to include any minute examination of origins, such as characterises many article in Hastings' *Dictionary of the Bible*; nor in these days, when the latest work of Harnack, and the last authoritative discussion of the Decalogue, distinctly confirm the conservative position would it be wise, even if there were room, to expound theories which seldom endure a lustrum and are often forgotten in a few months. While appreciating the immense value of the contributions to the Biblical sciences made by many of the advocates of the Higher Criticism, and making full use of them as far as they add to positive knowledge, the *Tamil Bible Dictionary* will not consider purely destructive critical theories.

## General Principles

The *Dictionary of the Bible* in Five Volumes (1898-1904) and the smaller but equally valuable *Dictionary of the Bible* in One Volume (1909) edited by Dr. Hastings and published by Messrs T. and T. Clark, are recognized as the general authorities for the *Tamil Bible Dictionary*.

Scripture quotations in Tamil are made from the Union Version of the Tamil Bible published by the Bible Society. In the case of translations from the original, Nestle's edition of the Greek New Testament, Swete's edition of the Septuagint, and the Massoretic Hebrew are followed.

The *Dictionary* will be written in a style of Tamil as simple as may be consistent with the subjects dealt with, and only the minimum *sandhi* will be used.

Some thirty-three of the longer articles are written by the Revs. A. Fehlberg, F. Goodwill, J. H. Maclean, M.A., B.D., G. E. Phillips, B.A., H. A. Popley, B.A., L. Reichardt, H. Rice,

H. Schomerus, E. Webster, M.A., and J. H. Wyckoff, D.D. Three or four doctrinal articles written by the late Dr. Bower are included in this volume. The rest of the work is compiled by the Rev. A. C. Clayton.

The *Tamil Bible Dictionary* will be written as far as possible from the Tamil point of view and will try to treat subjects so that the ordinary Tamil Evangelist or Teacher may understand what is said. It is primarily a book for readers who know little or no English, and in compiling information this will be remembered.

## Publication and Price

The Tamil Bible Dictionary will be published in parts, probably four in number, at eight annas a part. Each part will contain about two hundred pages. There will be Maps and Illustrations. It need hardly be said that it would not be possible to publish so large a book at so low a price without special aid from those anxious to put a reliable work of this kind within the reach of all Tamil Preachers and Teachers. It is expected that the first part (அ-கௌதாரி) will appear during 1910.

THE MADRAS RELIGIOUS TRACT AND BOOK SOCIETY

என்னும்

சன்மார்க்க சிறு புஸ்தக சங்கத்தாருக்காக்

சங்: A. C. கிலேத்தன் இயற்றிய

தமிழ்

# வேத அகராதி.

இந்தப் புது வேத அகராதியில் என்ன எழுதப்படும் என்று விபரமாய்ச் சொல்ல முடியாவிட்டாலும் வேதத்தைத் தமிழில் படிக்கிறவர்கள் அதை நன்றாய் விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாய் வேதத்தின் ஒவ்வொரு விஷயத்தையும் கூடியமட்டும் பூரணமாகத் தெரியப்படுத்தித் தற்காலத்தில் நூதனமாய்க் காணப்படுபவைகளைக்கொண்டு திருத்தமான அறிவைக் கொடுப்பதே இப்புஸ்தகத்தின் நோக்கம்.

சென்றுபோன இருபது வருஷங்களுக்கிடையில் கம்முராபி அரசனின் நீதிநூல் ஸ்தம்பமும், அக்காலத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றிக் கற்களில் வரைந்த அட்சரங்களும், பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தையும் சரித்திரத்தையும் விபரமாய்த் தெரிவிப்பதுமல்லாமல், எகிப்து தேசத்தின் மணற்குவியலின்கீழ் கண்டெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கையெழுத்துச் சட்டங்களும் ஓடுகளும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க பாஷையின் தன்மையையும் விளக்கிக் காட்டுகின்றன.

தற்காலத்தில் அக்ஸ்பர்ட் (Oxford) சர்வகலாசாலையின் எபிரெய அகராதியும், ஹேஸ்டிங்ஸ் (Dr. Hastings) பண்டிதரால்

இயற்றப்பட்ட வேத அகராதிகளும் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இக்காலத்தில் வேத சாஸ்திரிகள் விளக்கமான அனேக புஸ்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அவைகளைத் திட்பநுட்பமாய் ஆராய்ந்து அவைகளை ஆதாரமாய்க்கொண்டு எழுதியிருக்கும் இந்த வேத அகராதியை வாசிக்கிறவர்கள் தற்காலத்தில் அதிக திலாம்பரமாய்ச் சொல்லியிருக்கும் இந்த உத்தம வேத அறிவையடையலாம்.

வேத விஷயங்களைக்குறித்து மகா வித்துவான்கள் எழுதிய நூல்களும், மூலாதார வாக்கியங்களும் இந்த அகராதியில் சுருக்கமாய் எழுதப்பட்டிருக்கின்றன. நிபந்தங்களும் அவைகளின் விபரங்களும் பெரிதாயிருந்தாலும் சரி, சிறிதாயிருந்தாலும் சரி, அவைகளிலுள்ள உண்மையைத் தெளிவாய்ச் சொல்லுவதே இப்புஸ்தகத்தின் முதல் நோக்கம்.

ஹேஸ்டிங்ஸ் வேதபண்டிதர் ஐந்து புஸ்தகமாகவும் (1898–1904), ஒரு புஸ்தகமாகவும் (1909) இயற்றின **வேத அகராதிகள்** இந்தத் தமிழ் வேத அகராதிக்கு ஆதாரமாய்க் கொள்ளப்பட்டிருக்கின்றன.

வேதாகம சங்கத்தாரால் பிரசுரஞ் செய்யப்படும் யூனியன் மொழிபெயர்ப்பு (Union Version) என்று சொல்லப்படும் தமிழ் வேதாகமத்திலிருந்து வசனங்கள் மேற்கோளாக இதில் எழுதப்பட்டிருக்கின்றன.

மூலபாஷையின்படி மொழிபெயர்ப்பில் நெஸ்லெ (Nestle) என்பவர் இயற்றின கிரேக்க புதிய ஏற்பாடும், சுவீற் (Swete) என்பவர் எழுதின கிரேக்க பழைய ஏற்பாடும், மச்சொரேத்தியரின் எபிரெய ஏற்பாடும் இதில் ஆதாரமாய்க் கொள்ளப்படும்.

இந்த வேத அகராதி அந்தந்த விஷயத்திற் கடுத்ததாக அதிக தொடர் எழுத்தில்லாமல் கூடியமட்டும் லேசான நடையில் எழுதப்படும்.



இந்த வேத அகராதியில் முப்பத்து மூன்று பெரிய நிபந்தங்கள் [illegible] சொல்லிய பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள்:

சங்: A. பேல்பார்க்.
,, F. குட்வில்.
,, T. H. மக்கிலீன், M.A., B.D.
,, G. E. பிலிப்ஸ், B.A.
,, H. A. பாப்லி, B.A.
,, L. ரைக்கார்ட்.
,, H. ரைஸ்.
,, H. ஸ்கோர்மாஸ்.
,, E. உவெப்ஸ்டர், M.A.
,, J. H. உவைக்காவ், D.D.

காலஞ்சென்ற பௌவர் ஐயர் அவர்கள் வேத சாஸ்திர போதகத்தைப்பற்றி எழுதின நாலைந்து நிபந்தங்கள் திருத்தமாய் எழுதப்பட்டு இந்த அகராதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சங்: A. Ç. கிலேத்தன் மற்ற நிபந்தங்களை எழுதியிருக்கிறார்.

## பிரசுரமும் விலையும்.

இந்தத் தமிழ் வேத அகராதி நாலு புஸ்தகங்களாகப் பிரசுரஞ் செய்யப்படும். ஒவ்வொரு புஸ்தகத்தின் விலை, அணா 8 (சதம் 50). ஒவ்வொரு புஸ்தகத்திலும் ஏறக்குறைய இருநூறு பக்கங்கள் உண்டு. அந்தந்த நிபந்தங்களுக்குரிய படங்களும் வேண்டியமட்டும் இருக்கின்றன.

தமிழ்ப் பிரசங்கிமார் வேத அறிவிலே தேர்ச்சியடையும்படி அவர்களுக்கு உதவிபுரிய விரும்பும் பரோபகாரிகள் சிலர் இதைப் பிரசுரஞ் செய்வதற்காகப் பண உதவி செய்திராவிட்டால் இவ்வளவு பெரிய புஸ்தகம் இவ்வளவு சொற்ப கிரயத்திற்குக் கிடைப்பது அரிது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.